J
V211,31'P01
P01.115.1.31
184 E13

பனியீடு 21-8-2001 Issued 21-8-2001

543.

354/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை ஜனவரி 31, 2001 – தொகுதி 115 – எண் 1

**Vednesday the 31st January, 2001 – Volume 115– No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. *3.00*] [Price Rs. 3.00

31-1-2001

354 — 2002

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| Personnel of the Government of Tamil Nadu | ix-xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| *1.* வினாக்கள்–விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-39 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 9 மற்றும் 10) | 40-110 |
| *2.* சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| (அ) நெல்லை. மாவட்டம், இராதாபுரம் தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினை | 111-115 |
| *திரு. மு. அப்பாவு | 111-113, 113-114,115 |
| *மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 115 |
| (ஆ) மதுரை நகர கூட்டுறவு வங்கி, விதிமுறைகளுக்கு மாறாக நடவடிக்கைகள் எடுத்தது | 116-121 |
| *திரு. கே. சுப்பராயன் | 116-117,117-118,121 |
| *மாண்புமிகு திரு. கா.நா. நேரு | 118-121 |

பக்கங்கள்


3. தகவல் கோரல்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் 121-123

4. விதி 110-ன்கீழ் அறிக்கை—

அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்தும் நிபந்தனைகளைத் தளர்த்தி மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 124-125

5. அறிக்கை அளித்தல்—

மதிப்பீட்டுக் குழு 126

6. இறுதி துணை நிதிநிலை அறிக்கை, 2000-2001, அளித்தல்—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 126-131

7. அறிவிப்பு—

பேரவை மாலையில் கூடுவதற்குப் பதிலாக, அலுவல்களை 2-00 மணி வரை நீட்டித்தல் 132

8. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்—தொடர்ச்சி 132-220

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் 132-135,136-137,138-139, 141-142

டாக்டர் ஆ. ஞானசேகரன் 142-145

*திரு. நா. பெரியசாமி 145-147,148-150,151

திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார் 151-154

டாக்டர் க. கிருஷ்ணசாமி 154-157,158-159,161,162




பக்கங்கள்


8. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்—தொடர்ச்சி

திரு. அ.லெ. சுப்பிரமணியன் 162-167,168

*திரு. லா. சந்தானம் 168-169, 170-171,175, 178-179

*திரு. ந. கருப்பண்ண உடையார் 178,179,180,181-182,183-184

திரு. சி. வேலாயுதன் 184-186, 187-189

*திரு. ஏ. ராசேந்திரன் 190-191, 192-194

*திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் 195-196, 197-201

*திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் 201-207,219

திரு. ஜி.கே. மணி 207-212

*திரு. குத்தாலம் பி. கல்யாணம் 213-216

திரு. டி. அமரமூர்த்தி 217-218,220

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 221-222

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| முதலமைச்சர் | : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.* |
| கல்வி அமைச்சர் | : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.* |
| மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.* |
| ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** *நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.* |
| வேளாண்மைத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** *வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.* |

184813

| | | |
|---|---|---|
| 19. | செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |
| 20. | கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** கால்நடை பராமரிப்பு. |
| 21. | சமூக நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:** மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம். |
| 22. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங் குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர். |
| 23. | சுற்றுலாத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |
| 24. | கதர்த் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம். |
| 25. | மீன் வளத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம். |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | **Chief Minister** | .. **The Hon. Kalaignar M. Karunanidhi:** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes. |
| 2. | **Minister for Education** | .. **The Hon. Prof. K. Anbazhagan:** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen. |
| 3. | **Minister for Health and Electricity** | .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. | **Minister for Rural Development and Local Administration** | .. **The Hon. Thiru Ko. Si. Mani:** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |
| 5. | **Minister for Agriculture** | .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |

| | | |
|---|---|---|
| 6. | **Minister for Public Works and Forest** | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona. |
| 7. | **Minister for Transport and Labour** | .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Chennai Metropolitan Development Authority, Labour, Census, Employment and Training, Iron and Steel Control and Newsprint Control. |
| 8. | **Minister for Highways** | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports. |
| 9. | **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.** | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 10. | **Minister for Food, Public Distribution System and Co-operation** | .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 11. | **Minister for Milk** | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |
| 12. | **Minister for Revenue** | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Wakf. |



| | | |
|---|---|---|
| 13. | **Minister for Law** | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 14. | **Minister for Handlooms** | .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles. |
| 15. | **Minister for Backward Classes** | .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 16. | **Minister for Youth and Pollution Control** | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports and Youth Service Corps and Environmental Pollution Control. |
| 17. | **Minister for Housing** | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 18. | **Minister for Rural Industries and Registration** | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 19. | **Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |
| 20. | **Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |

| | |
|---|---|
| 21. **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 22. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 23. **Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 24. **Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 25. **Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்
2. திரு. சுப. தங்கவேலன்
3. திரு. ஏ.ஜி. சம்பத்
4. திரு. ப. மோகன் கந்தசாமி
5. திரு. பி. வெங்கடசாமி

*செயலாளர்*

திரு. வெ. இராசாராமன்

*22-1-2001 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப் பட்டவாறு.

6. பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன்:
பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

7. போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தொழிலாளர் நலம், மக்கள்தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு மற்றும் பத்திரிகை அச்சுக்-காகிதக் கட்டுப்பாடு.

8. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

9. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

10. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா.நா. நேரு:
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

11. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம்:
பால், பால் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:
வருவாய், வருவாய் நிருவாகம், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியாளர்கள் மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).



13. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா:
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

14. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:
கைத்தறி, துணித் தொழில்.

15. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன் வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

16. இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:
விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

17. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

18. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | - | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 4. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 5. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | - | குழு அலுவலர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | - | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயல |
| 10. | திரு. சு. ராஜகுரு | - | குழு அலுவலர் |
| 11. | திரு. சௌரி அய்யாத்துரை | - | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 12. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 13. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | - | துணை[illegible]ளர் (பதி[illegible]) |
| 14. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 15. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 17. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 18. | திரு. ஜி. அனீஸ் அகமத், | - | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 19. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலசந்தர், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 28. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| 29. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 30. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 31. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 32. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 33. | திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 34. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 35. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| 36. | திரு. தி. உமாபதி, பி.ஏ., | .. தலைமை நிருபர் |
| 37. | திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 38. | திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 39. | திருமதி ச. இரா. சுகுணா | .. தலைமை நிருபர் |
| 40. | திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 4. | அப்பாவு, திரு. மு. | .. இராதாபுரம் |
| 5. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 6. | அய்யலுசாமி, திரு. லி. | .. கோவில்பட்டி |
| 7. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 8. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 9. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 10. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 14. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 15. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 16. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 17. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |
| 18. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 19. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. திருச்செங்கோடு |
| 20. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |

21. ஆனந்தன், திரு. பால. - வந்தவாசி (செ.வ.)
22. இரகுமான்கான், திரு. அ. - இராமநாதபுரம்
23. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. - மேலூர்
24. இராசமாணிக்கம், திரு. பி. - ஒரத்தநாடு
25. இராசன், திரு. வி.பி. - இராஜபாளையம் (செ.வ.)
26. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ - ஆண்டிமடம்
27. இராமசாமி, டாக்டர் வை. - பண்ருட்டி
28. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. சி.இரா. - தொண்டாமுத்தூர்
31. இராமச்சந்திரன், திரு. மா. - திருவோணம்
32. இராமலிங்கம், திரு. ஏ. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
33. இராமலிங்கம். திரு. செ. - திருவிடைமருதூர்
34. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
35. இராமஜெயம், திரு. ந.பூ. - மயிலாப்பூர்
36. இராஜரெட்டி, திரு. ச. - தளி
37. இராஜேந்தர், திரு. டி. - பூங்கா நகர்
38. இளங்கோ, திரு. கோ. - அவினாசி (செ.வ.)
39. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
40. உதயசூரியன், திரு. தா. - சங்கராபுரம்
41. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
42. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி



43. கணேசன், திரு. கே.சி. - ஜெயங்கொண்டம்
44. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
45. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
46. கருப்பண்ண உடையார், திரு. ந. - பாபநாசம்
47. கருப்புசாமி, திரு. டி. - உப்பிலியாபுரம் (ஆவா.)
48. கன்னையன், திரு. க. - தொட்டியம்
49. காஞ்சனா கமலநாதன், டாக்டர் - கிருஷ்ணகிரி
50. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
51. கிருஷ்ணசாமி, டாக்டர் க. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
52. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. - நாங்குநேரி
53. கிருஷ்ணன், திரு. சீ.வெ. - வேடசந்தூர்
54. குண்டன், திரு. டி. - உதகமண்டலம்
55. குத்தாலம் பி. கல்யாணம், திரு. - குத்தாலம்
56. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
57. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. - கும்மிடிப்பூண்டி
58. குழந்தை தமிழரசன், திரு. - விருத்தாசலம்
59. கோதண்டம், திரு. ஏ. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
60. கோபால், திரு. பா. - மேட்டூர்
61. கோபு, திரு. சி. - அணைக்கட்டு
62. கோமதி சீனிவாசன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
63. கோவிந்தன், திரு. ப. - தாரமங்கலம்
64. கோவிந்தன், திரு. வெ. - பேரணாம்பட்டு (செ.வ.)
65. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்

66. சண்முகம், திரு. கோ. - திருப்பத்தூர்
67. சண்முகம், திரு. சி. - ஆலந்தூர்
68. சண்முகம், திரு. ம. - கிணத்துக்கடவு
69. சண்முகம், திரு. வி.சி. - நெல்லிக்குப்பம்
70. சந்தானம், திரு. லா. - சோழவந்தான்
71. சந்திரசேகரன், திரு. சி. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
72. சந்திரசேகரன், திரு. துரை. - திருவையாறு
73. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. - சமயநல்லூர் (செ.வ.)
74. சம்பத், திரு. ஏ.ஜி. - முகையூர்
75. சரஸ்வதி, திருமதி ஆர். - தாராபுரம் (செ.வ.)
76. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
77. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
78. சிங்காரவேலு, திரு. வி.பி. - வால்பாறை (செ.வ.)
79. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
80. சிவராமன், திரு. ஆர். - திருப்பத்தூர்
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். - பனமரத்துப்பட்டி
83. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
84. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருத்தணி
85. சின்னய்யா, திரு. வெ. - திருமயம்
86. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். - விருதுநகர்
87. சுகவனம், திரு. இ.ஜி. - பர்கூர்



88. சுடலைமுத்து, திரு. அ. - போடிநாயக்கனூர்
89. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
90. சுந்தரம், திரு. க. - பொன்னேரி (செ.வ.)
91. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
92. சுந்தரம், திரு. பி.ஆர். - இராசிபுரம்
93. சுந்தர், திரு. கே. - உத்திரமேரூர்
94. சுப்பராயன், திரு. கே. - திருப்பூர்
95. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. - திருவள்ளூர்
96. சுப்பிரமணி, திரு. பி.என். - ஆற்காடு
97. சுப்பிரமணியன், திரு. அ.லெ. - திருநெல்வேலி
98. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி - மொடக்குறிச்சி
99. சுரேஷ் ராசன், திரு. என். - கன்னியாகுமரி
100. செங்குட்டுவன், புலவர் பூ.ம. - மருங்காபுரி
101. செங்கை சிவம், திரு. - பெரம்பூர் (செ.வ.)
102. செல்லக்குமார், டாக்டர் அ. - தியாகராய நகர்
103. செல்வம், திரு. ரெ. - குளித்தலை
104. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. - கொளத்தூர் (செ.வ.)
105. செல்வராஜ், திரு. து. - உடுமலைப்பேட்டை
106. சேகரன், திரு. ஆர்.ஆர். - ஓமலூர்
107. சேதுநாதன், திரு. ரா. - திண்டிவனம்
108. சைதை கா. கிட்டு, திரு. - சைதாப்பேட்டை
109. ஞானசேகரன், டாக்டர் ஆ. - மேல்மலையனூர்

110. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
111. டேவிட் செல்வின், திரு. எஸ். - ஸ்ரீவைகுண்டம்
112. தங்கமணி, திரு. கே. - மானாமதுரை (செ.வ.)
113. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
114. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
115. தங்கவேல், திரு. அ.ல. - சேலம்-2
116. தண்டபாணி, திரு. சி.டி. - கோயம்புத்தூர் மேற்கு
117. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. - இளையான்குடி
118. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். - அரக்கோணம் (செ.வ.)
119. தமிழ்மணி, திரு. வீ. - செங்கல்பட்டு
120. தளபதி, திரு. கோ. - சேடப்பட்டி
121. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. - சேலம்-1
122. தனபால், திரு. வி.ஜி. - குடியாத்தம்
123. தாமரைக்கனி, திரு. இரா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
124. திசைவீரன், திரு. உ. - பரமக்குடி (செ.வ.)
125. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
126. திருவேங்கடம், திரு. பெ.சு. - கலசப்பாக்கம்
127. துரைசாமி, திரு. பா. - வரகூர் (செ.வ.)
128. துரை, திரு. கே. - திருவெறும்பூர்
129. துரைமுருகன், திரு. - காட்பாடி
130. தெய்வநாயகம், திரு. எ. - மதுரை மத்தி
131. தேவராஜன், டாக்டர் மு. - பெரம்பலூர் (செ.வ.)
132. நடராசன், திரு. ஆ - பேரூர்



133. நடராஜன், திரு. த. - செஞ்சி
134. நயினா முகமது, திரு. கோ. - கடையநல்லூர்
135. நன்னன், திரு. கொ.வீ. - செங்கம் (செ.வ.)
136. நாகரத்தினம், திரு. ச. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
137. நாசர், திரு. ஏ.வி.ஏ. - புவனகிரி
138. நிஜாமுதீன், திரு. ஜி. - நாகப்பட்டினம்
139. நேரு, திரு. கா.நா. - லால்குடி
140. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. - சிவகங்கை
141. பத்மா, டாக்டர் - நன்னிலம் (செ.வ.)
142. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
145. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். - மதுரை மேற்கு
146. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
147. பன்னீர்செல்வம், திரு. மு. - சீர்காழி (செ.வ.)
148. பாண்டுரங்கன், திரு. ந. - பெரணமல்லூர்
149. பாலகிருஷ்ணன், திரு. சோ. - முதுகுளத்தூர்
150. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். - பவானி
151. பாலசுப்பிரமணியன், திரு. ப. - பட்டுக்கோட்டை
152. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
153. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
154. புரட்சிமணி, திரு. ச. - மங்களூர் (செ.வ.)
155. பூவேந்தன், திரு. த. - பழனி (செ.வ.)

156. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
157. பெரியசாமி, திரு. என். - தூத்துக்குடி
158. பெரியசாமி, திரு. என்.கே.கே. - ஈரோடு
159. பெரியசாமி, திரு. நா. - பெருந்துறை
160. பெருமாள், திரு. வி. - ஏற்காடு (ஆவா.)
161. பெர்னார்டு, திரு. இரா. - குளச்சல்
162. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - சிங்காநல்லூர்
163. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
164. பொன்முடி, திரு. எஸ்.எஸ். - பல்லடம்
165. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
166. மகேந்திரன், திரு. இரா. - நாட்ராம்பள்ளி
167. மணிக்கல்லணன், திரு. ஆசெ. - திருநாவலூர்
168. மணி, டாக்டர் அ. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
169. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
170. மணி, திரு. டி. - விளவங்கோடு
171. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
172. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்
173 மணிமாறன், திரு. இரா. - திண்டுக்கல்
174. மணிவர்மா, திரு. க. - தண்டராம்பட்டு
175. மதிவாணன், திரு. இரா. - இராயபுரம்
176. மதிவாணன், திரு. செ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
177. மனோகரன், திரு. கு. - தருமபுரி
178. மாயவன், திரு. தி.ப. - ஸ்ரீரங்கம்



179. மாரி அய்யா, திரு. பே. - புதுக்கோட்டை
180. மாரிமுத்து, திரு. அ. - வானூர் (செ.வ.)
181. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். - அரவக்குறிச்சி
182. முகம்மது கோதர் மைதீன், திரு. - பாளையங்கோட்டை
183. முத்து, திரு. வி. - சங்கரி (செ.வ.)
184. முபாரக், திரு. பா.மு. - கூடலூர்
185. முருகேசன், திரு. பொ. - காஞ்சிபுரம்
186. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
187. முனிரத்தினம், திரு. ஆ.மு. - சோளிங்கர்
188. மூக்கப்பன், திரு. இரா. - சின்னசேலம்
189. மூக்கையா, திரு. எல். - பெரியகுளம்
190. மோகனதாசன், திரு. கோ. - பூம்புகார்
191. மோகன் கந்தசாமி, திரு. ப. - பொங்கலூர்
192. மோசஸ், டாக்டர் எம். - நாகர்கோவில்
193. ரங்கநாதன், திரு. எம். - குன்னூர் (செ.வ.)
194. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
195. ரவி அருணன், திரு. கே. - தென்காசி
196. ரவிசங்கர், திரு. கு. - விளாத்திகுளம்
197. ராசேந்திரன், திரு. ஏ. - போளூர்
198. ராணி, செல்வி க. - தலைவாசல் (செ.வ.)
199. ராமசாமி, திரு. ஏ.எம். - ஆத்தூர்
200. ராமச்சந்திரன், திரு. செ. - திருப்பரங்குன்றம்

201. ராஜு, திரு. எஸ். - பொள்ளாச்சி
202. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. - சத்தியமங்கலம்
203. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். - காங்கேயம்
204. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
205. வாசுகி முருகேசன், திருமதி - கரூர்
206. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
207. விஜயகுமார், திரு. கே.எம். - சாத்தூர்
208. விஜயன், திரு. டி.சி. - திருவொற்றியூர்
209. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - வீரபாண்டி
210. வீரப்பன், திரு. கே.கே. - கபிலர்மலை
211. வெங்கடசாமி, திரு. பி. - ஓசூர்
212. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
213. வெங்கடாசலம், திரு. ஜி.எல். - பாலக்கோடு
214. வெங்கடேசன், திரு. ச.க. - மதுராந்தகம்
215. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். - காவேரிப்பட்டினம்
216. வெங்கிடு, திரு. ஜி.பி. - கோபிச்செட்டிப் பாளையம்
217. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். - அரூர் (செ.வ.)
218. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
219. வேலாயுதன், திரு. சி. - பத்மநாபபுரம்
220. வேலுசாமி, திரு. வ. - மதுரை கிழக்கு
221. வேல்சாமி, திரு. க. - நாமக்கல் (செ.வ.)
222. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி



223. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
224. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். - திருச்செந்தூர்
225. ஜோதிகண்ணன், திரு. மு.ந. - முசிறி
226. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
227. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
228. ஆன் டி' மான்டி, திருமதி - நியமனம்
229. வெற்றிடம் - அறந்தாங்கி
230. வெற்றிடம் - சிவகாசி
231. வெற்றிடம் - திருப்போரூர் (செ.வ.)
232. வெற்றிடம் - திருவல்லிக்கேணி
233. வெற்றிடம் - திருமங்கலம்
234. வெற்றிடம் - உசிலம்பட்டி
235. வெற்றிடம் - மயிலாடுதுறை

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. கே.வி. வெங்கடபதி - அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**தை 18, விக்கிரம - திருவள்ளுவர் ஆண்டு 2032**

**2001 ஜனவரி 31, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்
இனநலம் ஏமாப் புடைத்து"*

மனவளம் மிக்க சான்றோராக இருப்பினும் அவர் சேர்ந்துள்ள கூட்டத்தினரைப் பொறுத்தே வலிமை வந்து வாய்க்கும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 121, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**121—**

**பள்ளிக்கு வசதி**

**•18964—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், மருங்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்குக் கழிப்பிட வசதி செய்து தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், மருங்குளம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கழிவறை வசதி ஏற்படுத்திக் கொடுப்பது சார்பான இத்திட்டத்திற்கான

[2001 ஜனவரி 31

நிதி ஒதுக்கீடு இவ்வாண்டு இல்லை. எனவே, சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் இசைவு பெறப்படின், இப்பள்ளிக்குக் கழிவறைக் கட்டட வசதிகள் செய்து தரப்படும்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆட்சிக் காலத்திலேதான் அந்த மருங்குளம் மேல்நிலைப் பள்ளிக்குப் பல்வேறு கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 35 இலட்சம் ரூபாய் செலவிலே அங்கே கட்டடங்கள் கட்டப்பட்டு, இப்போது வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும், 10-வது, பிளஸ் 2 படிக்கிற மாணவியர்களுக்குக் கழிப்பறைகள் மிக அவசியம். ஏன் என்று சொன்னால், பெண்களுக்கு மிக அவசியமாக அது கருதப்படுகிறது. இந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்குகின்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கு ஒதுக்கீடு செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்குகின்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அதைக் கருத்திலே கொண்டு, நிதி ஒதுக்கீடு செய்து கழிப்பறைகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்தால் நலமாக இருக்கும் என்று கருதி, நம்முடைய அமைச்சர் பெருமகனார் அவர்கள் இதை ஆய்வு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அது எவ்வளவு அவசியம் என்பதைச் சட்டமன்ற உறுப்பினர் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்த அரசு அதை உணர்ந்துதான் பல ஆயிரக்கணக்கான பள்ளிகளுக்கு மொத்த நிதி ஒதுக்கீடு செய்து கடந்த ஆண்டிலே கட்டியது. இந்த ஆண்டு அதற்கு நிதியொதுக்கம் செய்யப்படவில்லை. இவ்வளவு அவசியம் தெரிந்த சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய மொத்த தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து முதலில் அதற்கு ஒதுக்கிவிட்டு, பிறகுதான் மற்றவற்றிற்கு ஒதுக்கியிருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 122, திருவாளர்கள் டி. மணி, இரா. பொன்னார்டு மற்றும் சி. வேலாயுதன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



2001 ஜனவரி 31]

**122—**

**மருத்துவக் கல்லூரி**

***28078—திரு. டி. மணி:**
**திரு. இரா. பொன்னார்டு:**
**திரு. சி. வேலாயுதன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆசாரிப்பள்ளம் மருத்துவமனையில் மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு திருத்தத்துடன் விடையளிக்கிறேன்.

(அ) ஆம்.

(ஆ) அரசு ஆய்வு செய்து தனி அதிகாரியை இப்போது நியமித்துள்ளது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசாரிப்பள்ளம் பகுதியில் ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டு வருகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்னால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இன்னொரு கேள்விக்கு பதில் சொல்கின்றபோது, ஜூன் மாதத்திலே அதனுடைய admission ஆரம்பித்து விடலாம் என்ற தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் Medical Council-னுடைய ஒப்புதல் கிடைக்கவில்லை என்றாலும், அதுபோன்று நாம் admission-ஐக் கொடுத்துவிட்டால், மாணவர்களை வைத்து படிக்க வைப்பதற்குத் தேவையான 2,3 Hall-களாவது குறைந்தபட்சம் வேண்டும். அதனுடைய ஆரம்பக் கட்ட பணியை இப்போதிருந்து ஆரம்பித்தால்தான் ஜூனிலே அந்த admission வழங்குகின்றபோது அதை முறையாகச் செயல்படுத்த முடியும். அந்த வகையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

[2001 ஜனவரி 31

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கன்னியாகுமரியிலே பெருந்தலைவர் காமராஜருடைய நினைவு மண்டபத்தைத் திறந்து வைத்தபோது அங்கேயே இதுகுறித்து அறிவித்தார்கள். கன்னியாகுமரிக்கு நிச்சயமாக இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரி அனுமதிக்கப்படும் என்று அவர் அறிவித்த உடனேயே, அவருடைய ஒப்புதலோடு தனி அதிகாரியும் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு மணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஜூன் மாதம் நாம் கல்லூரியைத் தொடங்குவது என்று சொன்னால் Medical Council of India-வைச் சேர்ந்தவர்கள் Inspection-க்கு வரவேண்டும். அதற்காகத்தான் ஒரு தனி அதிகாரியையும் நியமித்து அந்தக் கல்லூரி தொடங்குவதற்கான ஆயத்தப் பணிகளைச் செய்வதற்கான நடவடிக்கைகளையும் இப்போது மேற்கொண்டிருக்கிறோம். Director of Medical Education அவர்களும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. சுரேஷ் ராசன் அவர்களும் அந்த இடத்தை ஆய்வு செய்து, எந்த இடத்திலே கட்டடங்கள் கட்டுவது என்று ஒரு அறிக்கை தந்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. பொன். இராதாகிருஷ்ணன் அவர்களும் மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் திரு சங்கரலிங்கம் அவர்களும், அவரவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து தலா ஒரு கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். அந்த நிதியை வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல 2 அல்லது 3 பெரிய Hall-களைக் கட்டுவதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒட்டுமொத்த மக்களுடைய கோரிக்கை ஆகும். இந்தக் கோரிக்கைக்கான பலன் 50 ஆண்டு காலமாகக் கிடைக்காமல் 5 ஆண்டுகளில் கலைஞர் ஆட்சியில் கிடைத்திருப்பதற்கு மிகுந்த நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு ஏறத்தாழ 105 முதல் 150 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அனைத்துப் பிரிவுகளையும் அமைக்கின்ற வாய்ப்பும் உள்ளது. ஆகவே, எப்போது இந்தப் பணி தொடங்கப்படும். ஆரம்பத்தில் எத்தனை பிரிவுகள் அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.



2001 ஜனவரி 31]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல கன்னியாகுமரி மாவட்டத்திலேயே முதலாவதாகத் தொடங்கவிருக்கின்ற அரசுக் கல்லூரி இதுதான். வேறு எந்தத் துறையின் சார்பிலும் அரசுக் கல்லூரிகளே அந்த மாவட்டத்திலே இல்லை என்று சொல்லி வலியுறுத்திய காரணத்தினால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த விழாவிலேயே இதனை அறிவித்தார்கள். இப்போது அறிவிக்கப்பட்டு தனி அதிகாரியும் நியமிக்கப்பட்டிருக்கிறார். நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டது, விரைவில் திருமணம் நடக்கும் (சிரிப்பு).

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்தபோது இந்த ஆண்டே மருத்துவக் கல்லூரிக்குத் தாங்கள் அடிக்கல் நாட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கருணைகூர்ந்து 'வேலாயுதன் பயப்பட வேண்டாம். அடுத்த ஆண்டு நானே வந்து இந்த மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டுவேன்' என்று அந்த மேடையிலேயே உறுதி அளித்தார்கள். அதனடிப்படையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் ஆலோசனை செய்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி வருவதற்குண்டான சூழ்நிலைகளைத் தற்போது தொடங்கி இருக்கிறார்கள். தனி அதிகாரியும் நியமிக்கப்பட்டுவிட்டார். ஆனால் அது ஆரம்பிக்க இருப்பது எப்போது என்ற கேள்வி தான் இப்போது பொதுமக்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. அந்த அனைத்துச் சூழ்நிலைகளையும், பரிசீலிக்க வேண்டும். அதாவது ஏற்கெனவே ஏராளமான கட்டடங்கள் இருக்கின்றன. தேவையில்லாமல் இருக்கக்கூடிய கட்டடங்களைச் சுத்தப்படுத்தி, சற்றுப் பழுதுபார்த்து, இதற்கு பயன்படுத்தலாம். நமது மத்திய அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன் அண்ணாச்சி அவர்களும் பேராசிரியர் சங்கரலிங்கம் அவர்களும் தலா ஒரு கோடி ரூபாய் கொடுக்கின்றார்கள். அந்த நிதியைப் பயன்படுத்தி இந்தக் கட்டடங்களை ஆரம்பிப்பதற்குண்டான பணிகளை, estimate, sanction இவற்றையெல்லாம் செய்து காலதாமதம் ஆகாத அளவுக்கு விரைந்து ஏற்பாடுகளைச் செய்து அடுத்த ஆண்டே மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்குண்டான வழிவகைகளை மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு பேரும் கேட்ட கேள்வியையே நீங்கள் பெயருக்குக் கேட்க வேண்டுமா?

[2001 ஜனவரி 31

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அடுத்த ஆண்டு அல்ல, இந்த ஆண்டிலேயே அதாவது ஜூன் மாதத்திலேயே அந்தக் கல்லூரியைத் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வந்து அங்கே அடிக்கல் நாட்ட வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தார்கள். மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. பொன். இராதாகிருஷ்ணன் அவர்களும் நம்முடைய முதலமைச்சர் அவர்களை வீட்டிலே சந்தித்து, அவர் அடிக்கல் நாட்டு விழாவிற்கு வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இருந்தாலும், இன்றுள்ள சூழ்நிலையில் முதலமைச்சருக்கு ஏராளமான வேலைகள் இருக்கின்ற காரணத்தினாலே இந்த பிப்ரவரி மாதத்திலேயே நான் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்து அடிக்கல் நாட்டு விழாவிலே கலந்துகொள்ள இருக்கின்றேன். திறப்பு விழாவிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக வந்து கலந்துகொள்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 123, திரு. மு. பன்னீர் செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**123—**

### அவசர சிகிச்சைப் பிரிவு

***36560—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அவசர சிகிச்சைப் பிரிவு அவசியம் என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின் சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழிக்கு அருகில் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் நாகப்பட்டினம் தலைமை மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகள் இயங்கி வருவதால் தற்போதைய நிதி நிதிநிலையில் சீர்காழி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளில்லை.



2001 ஜனவரி 31]

முற்பகல் 9-40

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி நகரம் என்பது சிதம்பரத்திற்கும் மயிலாடுதுறைக்கும் இடையிலே அமைந்திருக்கக்கூடிய நகரம். சீர்காழியிலிருந்து மயிலாடுதுறை 20 கிலோ மீட்டர். சீர்காழியிலிருந்து சிதம்பரம் 20 கிலோமீட்டர். சீர்காழியிலிருந்து நாகப்பட்டினம் 60 கிலோமீட்டர். சீர்காழியிலிருந்து தஞ்சை கிட்டத்தட்ட 100 கிலோ மீட்டருக்கு மேலாக உள்ளது. அதுவும் சீர்காழி என்பது தேசிய நெடுஞ்சாலையிலேயே அமைந்திருக்கக்கூடிய ஒரு பகுதி ஆகும். அந்தப் பகுதியிலே வாகன விபத்துகள் அதிகமாக நடந்துகொண்டிருகின்றன. சீர்காழியிலிருந்து அவசர சிகிச்சைக்காக எடுத்துச் செல்லுகின்ற நேரத்திலே, விபத்திலே காயம் பட்டவர்கள், தஞ்சைக்கு செல்லக்கூடிய வழியிலேயே இறந்துவிடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதேபோன்று நாகப்பட்டினம் செல்ல வேண்டுமென்று சொன்னாலும் இறப்புத்தான் ஏற்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சர் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலேதான் சீர்காழி அரசு மருத்துவமனைக்கே ஒரு சுற்றுச்சுவர் 10 இலட்சம் ரூபாயிலும் அதேபோன்று குழந்தைகள் நலப் பிரிவு 18 இலட்சம் ரூபாயிலும் கட்டிக் கொடுத்தார்கள். அவசர சிகிச்சைப் பிரிவு என்பது சிதம்பரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சைப் பகுதியிலிருந்து வருகிறவர்களுக்கு உபயோகமாக உள்ளது. எனவே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து பொது மக்களுடைய அவசியத்தைக் கருதி அவசர சிகிச்சை பிரிவு ஏற்படுத்திக் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இன்றுள்ள நிதி நிலையைக் கருத்தில் கொண்டு இப்போதைக்கு அது இயலாது என்று சொல்லியிருக்கிறேன். உலக வங்கியிடமிருந்து நாம் ஏறக்குறைய 650 கோடி ரூபாய் நிதியை எதிர்பார்க்கின்றோம். அது கிடைக்கும் என்று மத்திய அமைச்சரும் தெரிவித்திருக்கிறார்கள். அது கிடைத்த உடனே தமிழ்நாட்டிலே உள்ள எல்லா மாவட்ட மருத்துவமனைகளையும் தாலுகா மருத்துவமனைகளையும் மேம்படுத்த திட்டமிட்டிருக்கிறோம். அந்த நேரத்திலே சீர்காழி அரசு மருத்துவமனையும் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

[2001 ஜனவரி 31

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டைக்கு வந்தபோது புதுக்கோட்டை தலைமை மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் இல்லை என்பதை எடுத்துச் சொன்ன போது நவம்பர் 15-ந் தேதி சி.டி. ஸ்கேன் புதுக்கோட்டை தலைமை மருத்துவமனைக்குத் தருவதாக அவர்கள் உறுதி சொல்லிவிட்டு வந்தார்கள். இதுவரையிலும் அந்த சி.டி. ஸ்கேன் தலைமை மருத்துவமனைக்கு வரவில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே வழங்குவார்களா என்பதோடு ராணியார் மருத்துவமனையில் அங்கே பிரசவ வார்டுகூட இல்லாமல், தாய்மார்கள் அவதிப்படக்கூடிய நிலைமையை அமைச்சரிடத்தில் சொல்லியிருக்கிறோம். ஆகவே புதுக்கோட்டை ராணியார் மருத்துவமனைக்கு அதி நவீன வசதி கொண்ட பிரசவ வார்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் சி.டி. ஸ்கேனைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். நமமுடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எல்லா மாவட்ட மருத்துவமனைகளுக்கும் சி.டி. ஸ்கேன் வழங்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்து, டெண்டர்கள் கோரப்பட்டு ஒரு வாரத்திற்கு முன்னால்தான் அந்த டெண்டர்களை எந்த நிறுவனத்திற்குக் கொடுப்பது என்று Tamil Nadu Medical Service Corporation முடிவு செய்திருக்கிறது. அவர்களுக்கு இன்னும் ஓரிரு நாட்களிலே ஆணைகள் பிறப்பிக்கப்படும். அந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பிறகு ஒரு மாத காலத்திற்குள்ளாக சி.டி. ஸ்கேன் கருவிகள் ஏறக்குறைய 18 கருவிகள் தமிழ்நாட்டிற்கு வழங்க இருக்கிறார்கள். அந்த 18 கருவிகள் வந்தவுடன் எங்கெங்கே இன்னும் சி.டி. ஸ்கேன் பொருத்தப்படாமல் இருக்கிறதோ அங்கேயெல்லாம் நிச்சயமாக பொருத்தப்படும் என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். ராணி மருத்துவமனையிலே பெண்கள் வார்டு பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் வந்திருந்தபொழுது மாண்புமிகு உறுப்பினரும், பொது மக்களும் அந்த வேண்டுகோளை வைத்தார்கள். இந்த நிதியாண்டிலே அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.ஜி. தனபால்.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் அரசு மருத்துவமனையில் மயக்க மருந்து கொடுக்கக்கூடிய அந்த டாக்டர் இல்லாமல் அறுவை சிகிச்சை எல்லாம் தடைபடுகிறது.



2001 ஜனவரி 31]

ஆகவே மயக்க மருந்து கொடுக்கக் கூடிய டாக்டர்களை குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு நியமிப்பார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயக்க மருந்து கொடுக்கின்ற டாக்டர்கள் பொதுவாக தமிழ்நாட்டிலே பற்றாக்குறையாகத்தான் இருக்கிறார்கள். அதற்காக Doctors' Association-னோடு பேசி அரசாங்கத்திலே பணியாற்றக்கூடிய மருத்துவர்கள் அந்தப் பிரிவிலே சேர்வதற்கு முன்வருவார்களானால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கலாமா என்பது குறித்தும் பேசிக்கொண்டிருக்கிறோம். இப்படி அரசாங்கத்திலே பணியாற்றக்கூடிய மருத்துவர்கள் விரும்பி அந்தப் பாடத்தை எடுத்துப் படித்தால்தான் தமிழ்நாட்டிலே எதிர்காலத்திலே அந்த மயக்க மருந்து கொடுக்கக்கூடிய மருத்துவர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படும். அதற்கு அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுத்துக்கொண்டிருக்கிறது. குடியாத்தத்திலே மட்டும் அல்ல, பல இடங்களிலே மயக்க மருந்து கொடுக்கக்கூடிய டாக்டர்கள் இல்லை. அது குறித்து முதலமைச்சர் அவர்களேகூட 6 மாதங்களுக்கு முன்னாலேயே தனியாரை நியமிக்கலாமா என்பது குறித்தும் ஒரு ஆலோசனை வழங்கி இருக்கிறார்கள். அது குறித்தும் துறை முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 124, திரு. பி. இராசமாணிக்கம். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**124—**

### கூடுதல் பள்ளிக் கட்டடம்

***8631—திரு. பி. இராசமாணிக்கம்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஒன்றியத்திலுள்ள கல்வி நிதியிலிருந்து கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு அரசு அனுமதி அளிக்குமா?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒன்றியக் கல்வி நிதியிலிருந்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்களைப் பழுது நீக்கம் செய்ய மட்டும் அரசு அனுமதி வழங்கி உள்ளது. தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றிய நிதியிலிருந்து ஒரத்தநாடு தொகுதியில், ஒரத்தநாடு ஒன்றியத்தில், கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் எதிர்காலத்தில் நிதிநிலையை அனுசரித்துக் கட்டுவதற்கு வாய்ப்பு உள்ளது. அப்போது பார்க்கலாம்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு ஒன்றியத்தில் கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய்க்கு மேல் கல்வி நிதி இருக்கிறது. பத்திற்கும் மேற்பட்ட துணைக் கட்டடங்கள் கட்ட வேண்டும் என்று ஒன்றியக் குழுவால் முன்மொழிவு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட சட்டமன்றத்திலே கல்வி நிதியிலிருந்து கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்டலாம் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்த முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு தொகுதியிலுள்ள ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது 17 பள்ளிகளுக்கு மாணவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் தேவைப்படுகின்றன. ஓரளவிற்கு அவர் குறிப்பிடுவதைப் போல ரூபாய் 1 கோடி ஏற்கெனவே நிதி இருந்தது. அதற்குப் பிறகு சில பழுதுபார்க்கும் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுபோக மீதியிருக்கிற நிதியை மாவட்ட ஆட்சித் தலைவரே பொது நிதிக்குக் கொண்டு வருகிற அதிகாரம் அவர்களிடத்திலே இருக்கிறது. அந்த ஒன்றியத்தினுடைய பொது நிதிக்கு அதை மாற்றம் செய்வார்களேயானால் அதற்குப் பிறகு அதைப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 125, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



125—

## அபராதத் தொகை வசூலித்தல்

***36741—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளில் வாழும் மக்களிடம் ஆறு மாதத்திற்கு ஒரு முறை அபராதம் வசூலிப்பதை விடுத்து முதல் வரி விதிப்பின்பொழுதே முழு அபராதத் தொகையையும் ஒரே தவணையில் வசூலிக்க அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு கோவை மாநகராட்சி ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி இருக்கிறது. அதில் அங்கீகரிக்கப்படாத வீட்டு மனையை வரைமுறைப்படுத்தும் அடிப்படையில், கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு சொத்து வரியோடு 6 மாதத்திற்கு ஒரு முறை அபராதம் வசூலிப்பதைத் தவிர்த்து அதை ஒரே தவணையில் வசூலிக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். C.M.D.A.-வில் எப்படி regularise செய்வதற்கு வழிமுறை செய்யப்படுகிறதோ அதுபோல இந்த அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை வரைமுறைப்படுத்தும் அடிப்படையில், கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு 6 மாதத்திற்கு ஒரு முறை அபராதம் வசூலிப்பதைத் தவிர்த்து ஒரே முறையில் வசூலிக்க அரசு உத்தரவிடுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முறை அமல்படுத்தப்பட்டதற்குக் காரணமே இப்படி முறை தவறி கட்டடங்களைக் கட்டாமல் இருப்பதற்காகத்தான், அவர்களை அச்சுறுத்துவதற்காகத்தான். அப்படி இருந்தும்கூட பல கட்டடங்களை இன்னும் கட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஒருவழியாக ஒரு அபராதத்தைப் போட்டுவிட்டால் அதையும் அவர்கள் சேர்த்துக் கட்டிவிட்டு எப்படி வேண்டுமானாலும் கட்டலாம் என்ற முடிவிற்கு வந்துவிடுவார்கள். இது அவ்வளவு அவசரமாகப் பரிசீலிக்கக்கூடிய விஷயம்

அல்ல. இதை நீண்ட காலம் யோசித்துத்தான் செய்ய வேண்டும். பல முறை இவர்கள் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். விதிமுறைகளுக்குப் புறம்பாகத் தீர்மானம் நிறைவேற்றிவிட்டால் அந்தத் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர் குழுமத்திலே கூட இதைப்போல முறையில்லாமல் கட்டப்பட்டிருக்கிற வீடுகளுக்குத் தாங்கள் அதை முறைப்படுத்துவதற்காக நாம் சில வழிமுறைகளை வகுத்து குறிப்பிட்ட அபராதத் தொகையைக் கட்ட வேண்டும், குறிப்பிட்ட காலத்திற்குள் கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதே முறையை இதற்கும் கையாளுவது சிறந்தது; அப்படிச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுமம் பல கட்டடங்களை இடித்தும் இருக்கிறது. அப்படி இடிப்பதற்கு இப்போது notice-உம் கொடுக்கப்பட்டு உத்தரவும் இடப்பட்டிருக்கிறது. அதே முறையை இதில் பின்பற்றுவதற்கு இயலாது. இருந்தாலும் அதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்றால் முதலமைச்சர் அவர்களிடத்திலே தாங்கள் தெரிவித்து அதை ஏதாவது பரிசிலனைக்குக் கொண்டு வந்தால் நானும் கூடுமானவரையில் அரசு அதிகாரிகளைக் கலந்து ஒரு முடிவு எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 126, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**126—**

**மஞ்சள் விற்பனை வளாகம்**

***15873—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் அமைக்கப்படும் மஞ்சள் விற்பனை வளாகத்தைப் பெருந்துறையில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தில் 50 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு மஞ்சள் வணிக வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 9-50

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2000 ஜூலை மாதம் 1-ஆம் தேதி மிகப் பெரும் அரசு விழாவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மஞ்சள் வணிக வளாகத்திற்கான அடிக்கல் நாட்டி வைத்திருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்போது ஈரோடு மாநகரிலே நடைபெறுகிற அந்த மஞ்சள் வியாபாரத்தில் பல இடர்பாடுகளும், சிக்கல்களும் ஏற்படுகின்றன. அங்கே வியாபாரிகள் சில நேரங்களிலே விவசாயிகளை அச்சுறுத்துகின்ற நடவடிக்கையும், அதிலே தவறுகள் ஏற்படுகின்ற நடவடிக்கையும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே, உடனடியாக முழுமையான விற்பனை பெருந்துறை விற்பனை மையத்திலேயே நடைபெறத்தக்க வகையில் Compulsory Marketing System அறிமுகப்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல முதல் கட்டமாக 50 ஏக்கர் நிலம் அந்த சிப்காட் நிறுவனத்திடமிருந்து விற்பனைக் குழுவிற்கு வாங்கப்பட்டிருக்கிறது. பொதுப் பணித் துறையிடம் இப்போது இந்தப் பணியை ஒப்படைத்து, அவர்கள் ரூ. 32.50 கோடிக்கு மதிப்பீடு தயாரித்திருக்கின்றார்கள். இந்த மஞ்சள் வணிக வளாகம் கட்டுவதற்கு அதனுடைய கட்டுமானச் செலவை மஞ்சள் வியாபாரிகளே ஏற்றுக்கொள்வதற்கு அவர்களோடு பேச்சுவார்த்தையும் இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலே சில கருத்து மாறுபாடுகள் இருக்கின்றன. இந்த மாதம் 15-ஆம் தேதிக்கு மேல் நானே நேரிலே அங்கே வந்து, மஞ்சள் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளையும், வியாபாரிகளையும் அழைத்துப் பேசி, விரைவிலே ஒரு முடிவு கண்டு, அந்த கட்டுமானப் பணி தொடங்கப்படும். Compulsory Marketing System-க்கு Notification செய்ய

வேண்டும் என்ற ஒரு கருத்தையும் இங்கே உறுப்பினர் தெரிவித்தார். அது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையாகத்தான் இப்போது இருக்கிறது. விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 127, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**127—**

**விவசாய இயந்திரங்களை வாடகைக்கு விடுதல்**

***34576—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் நெல் அறுவடை மற்றும் நடவு இயந்திரங்களை வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் வாங்கி விவசாயிகளுக்கு வாடகைக்கு விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 13-7-2000 நாளிட்ட வேளாண்மைத் துறை அரசு ஆணை (நிலை) எண் 260-இல் 5 கதிர் அறுவடை இயந்திரங்களும் மற்றும் 2 நாற்று நடும் இயந்திரங்களும் ரூ.42.20 இலட்சம் மொத்தச் செலவில் வாங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டு உள்ளது. இயந்திரங்கள் வாங்கப்பட்டவுடன், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் இவ்வியந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 5 நெல் அறுவடை இயந்திரங்களையும், 2 நாற்று நடும் இயந்திரங்களையும் வாங்கவிருப்பதாகத் தெரிவித்தார்கள். அந்த எண்ணிக்கை திருநெல்வேலி மாவட்டத்திற்குப் போதுமானதாக இருக்காது. ஏனென்றால், கிராமப் பகுதிகளிலே வேலைக்கான ஆட்கள் குறைந்து வருகின்ற நிலையில் கூடுதலாக விவசாயப் பணிகளுக்கு



இயந்திரங்களை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் இந்த அறுவடை இயந்திரங்களும், நடவு நடக்கக்கூடிய இயந்திரங்களும் திருநெல்வேலி மாவட்டத்திற்கு மட்டும் வாங்கப்படவில்லை. மொத்தத்திலே இந்த ஆண்டு, 2000-2001-ஆம் ஆண்டிற்காக அந்த இயந்திரங்கள் வாங்கப்பட்டு, நெல்லை மாவட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்படும். தேவையென்றால், பக்கத்திலே மதுரையிலே இருக்கக்கூடிய அந்த அலுவலகத்தினுடைய செயற்பொறியாளர் அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு அவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய அந்த வாய்ப்பும் இருக்கிறது. இப்போதும் அப்படிப் பெற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 128, டாக்டர் பத்மா, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**128—**

**வடிகால் அமைத்தல்**

***35722—டாக்டர் பத்மா:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர், காவிரிக் கோட்டம், பேரளம் உட்கோட்டத்திற்கு உட்பட்ட கூத்தனூர் வாய்க்கால் கடைமடையாகிய கொத்தவாசல் சகடமங்கலம் வாய்க்கால் பிரிவின் முன்பகுதியில் ஒரு வடிகால் அமைத்து திருமலைராசனாற்றில் விடுவதன் மூலம் மேற்கண்ட கிராமங்களின் வெள்ளப் பாதிப்பைத் தடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் காவிரிக் கோட்டம் பேரளம் உட்கோட்டத்திற்கு உட்பட்ட கூத்தனூர் வாய்க்கால் கடைமடையாகிய கொத்தவாசல் கடமங்கலம் வாய்க்கால் பகுதியில் வெள்ளநீர் வடிய நான்கு வடிகால்கள் உள்ளன. இந்த நான்கு வடிகால்களில் செருவாலூர் வடிகால்-1 இந்த ஆண்டு தூர்

வாரப்பட்டுள்ளது. ஏனைய வடிகால்களை வரும் நிதியாண்டில் தூர் வார உத்தேசிக்கப்பட்டுள்ளது. தூர் வாரும் பணிகள் முடிக்கப்பட்டால் கொத்தவாசல், சகடமங்கலம் கிராமங்களில் வெள்ளநீர் பாதிப்பு ஏற்பட வழியில்லை. இந்த நிலையில் நஞ்சை நிலங்களைக் கையகப்படுத்தி புதிய வடிகால் அமைக்கத் தேவையில்லையென அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் பத்மா இருக்கையில் இல்லை; திரு. வை. சிவபுண்ணியம்.

முற்பகல் 9-55

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னது போலவே, எனது தொகுதிக்கு உட்பட்ட வடவாறு விரிவாக்கப் பாசனக் கால்வாய்ப் பகுதிகளில் இப்படிப்பட்ட பிரச்சினை இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே மனுவாக நாங்கள் கொடுத்து, அதற்குரிய பணிகளைத் தொடங்குவதற்கான ஒரு கடிதத்தைக்கூட அளித்திருக்கிறீர்கள். இருந்தாலும் இந்த ஆண்டு நிதி போதுமானதாக இருக்காது என்ற ஒரு கருத்து அங்கே நம்முடைய அலுவலர்களால் சொல்லப்படுகிறது. அதுபோன்றே இந்த வடவாறு விரிவாக்கப் பாசனக் கால்வாய்ப் பகுதியிலே இருக்கிற திருமேனி ஏரியை இந்த ஆண்டு தூர் வாரினால்தான் ஆண்டுதோறும் அந்தப் பகுதியிலே ஏற்படுகிற விவசாய இழப்பைத் தடுக்க முடியும். ஆகவே, அமைச்சரவர்கள் இதற்குத் தனி முக்கியத்துவம் அளித்து இந்த ஆண்டு நிதியினை ஒதுக்கம் செய்து தூர் வாருகின்ற பணிகளை மேற்கொள்வதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை, எதிர்கால நிலை, நாட்டு நடப்பு, உங்கள் நிலை, என் நிலை, செய்கிற பாங்கு உள்ளத்து நிலை இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு தங்களுடைய கோரிக்கை கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, P.W.D. Tank-லிருந்து கிராமத்திற்குள் தண்ணீர் புகுந்துவிடுகிற மாதிரி டவுன் பகுதியிலேயும் P.W.D. Tank-லிருந்து தண்ணீர் வந்து புகுந்துவிடுகிறது. இதனாலே பல கண்மாய்களுக்குப் போகிற தண்ணீரும் பாதிக்கப்படுகிறது. இப்படித் தமிழ்நாடு முழுவதும் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆய்வு



பண்ணி 7-11-2000 ஆம் தேதி Tamil Nadu Secretary to Government P.W.D.-லிருந்து சுமார் ரூபாய் 20 கோடியே 30 இலட்சத்தில் ரிப்பேர் பார்ப்பதற்கும், தூர் வாருவதற்கும் கருத்துரு வந்து மாண்புமிகு அமைச்சரவர்களும் பரிந்துரை செய்து நிதித் துறைக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை 2001-2002-லே அதாவது இந்த இடைக்கால பட்ஜெட்டிலே சேர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தால் இந்தத் தூர் வாருவது, கண்மாய் மராமத்து எல்லாம் அதிலே பார்த்துக் கொள்ளலாம். அதற்குத் தமிழக அரசு நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற தொகை இந்த ஆண்டு நிதிநிலையில் ஒதுக்கப்பட்ட தொகை அல்ல. சென்ற ஆண்டு தூர் வாருவதற்காக அளிக்கப்பட்ட தொகையில் மிச்சம் இருந்த தொகையைப் பல்வேறு பகுதிகளில், நகரங்களில் ஓடுகிற ஆறுகளைத் தூர் வாருவதற்காகவும் மற்றும் பல பணிகளுக்காகவும் கொடுத்திருக்கிறோம். இது குறித்து ஒரு அட்டவணை தயாரித்து நிதி இலாக்காவினுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நிதிநிலைமைக்கேற்ப நிதி இலாக்கா ஒப்புதல் அளித்த பிறகு இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருமலைராஜன் ஆறு, ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் மிகப் பெரிய வடிகால் ஆறாக வந்து அந்தப் பகுதி விவசாயிகளுக்குப் பயன்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளாகப் பெய்த பெருமழையின் காரணமாக மூன்றாண்டுகளுக்கு முன்பு தூர் வாரப்பட்ட அந்தத் திருமலைராஜன் ஆறு தற்போது கரைகள் இடிந்து, நெய்வேலி காட்டாயணைக்கு முளைத்து மீண்டும் வடிகாலாகப் பயன்பட முடியாத ஒரு நிலைமையிலிருக்கிறது. எனவே, இந்த ஆண்டு மீண்டும் அந்தத் திருமலைராஜன் ஆற்றைத் தூர் வார அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தூர் வாரப்படாத வாய்க்கால்களும், வடிகால்களும் இன்னும் நிறைய இருக்கின்றன. இந்த ஆற்றிலாவது வடிகால் தூர் வாரி இருக்கிறோம். இதைவிட மோசமான நிலையிலே இருக்கிறவற்றிற்குத்தான் முக்கியத்துவம் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா 129, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

129—

## இலவச மரக்கன்றுகள்

***41786—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு இலவச மரக் கன்றுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரம் நடுவோம் மழை பெறுவோம் என்று தமிழகம் முழுவதும் நம்முடைய முதல்வரவர்கள், எங்கு பார்த்தாலும், விளம்பரங்கள் செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, விழுப்புரம், செங்கற்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்கள், ஏரிகள் நிரம்பிய மாவட்டங்கள். அங்கே குடியிருக்கக்கூடிய மக்கள் மிகமிகப் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்கள். (குறுக்கீடு) காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய மக்கள் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்கள்; நெசவு, விவசாயம் ஆகிய தொழில்களையே நம்பி இருக்கக்கூடிய மக்கள். அவர்களுக்கு மழை மிக அவசியம். ஆகையால் வனத் துறை மூலமாக மரக்கன்றுகள் நடக்கூடிய பணியை நம்முடைய அமைச்சரவர்கள் முன்னின்று மேற்கொள்வார்களா என்பதை உங்கள் மூலம் அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, மரக்கன்றுகள் நடுவதிலே பலவகை உண்டு. நீங்கள் இலவசமாகக் கொடுப்பீர்களா என்றுதான் மூலக்கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள். இல்லை என்று நான் பதில் தெரிவித்திருக்கிறேன். காரணம், காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் பல கிராமங்களுக்கு நாங்கள் மரக்கன்றுகள் கொடுக்கிறோம். ஒரு வருஷத்திலே 25,000 செடிகள், 30,000 செடிகள் என்று கொடுக்கிறோம். அவற்றையெல்லாம் நட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒருசில இடங்களிலே தொண்டு நிறுவனங்கள்மூலம் மரக்கன்றுகள் நடுகிறார்கள். இப்போது மரக்கன்றுகள் நடுவதை—மரம் வெட்டுவதை விட்டுவிட்டு—ஒரு முக்கிய



நிலையாக இன்று மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படி மரக்கனறுகள் நடுவதற்கு என்னை அழைத்தால் நிச்சயம் நான் வருவேன்.

முற்பகல் 10-00

**திரு. ஐ. கணேசன்:** அடுத்த கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் என்ன அடுத்த கேள்வி?

**திரு. ஐ. கணேசன்:** மரக் கன்றுகள் வழங்கும் திட்டம் பற்றி, மரம் நடுவதைப்பற்றி நான் கேட்டேன். ஆனால், அமைச்சர் சொன்ன பதில் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு கேள்விகள் கொடுக்கலாம் என்பது என்னுடைய உரிமையைப் பொறுத்து இருக்கிறது. அமைச்சர் உங்களுடைய மூலக் கேள்விக்குப் போதுமான பதில் சொல்லிவிட்டார் என்று நான் நினைத்தேன் என்றால் இரண்டாவது கேள்விக்கு அனுமதி கொடுக்க முடியாது. (குறுக்கீடு) உங்கள் உரிமையில் கேட்க முடியாது. நீங்கள் கேட்பதாக இருந்தால் கேளுங்கள் கட்டாயமாகக் கொடுக்க வேண்டுமென்று நீங்கள் கேட்க முடியாது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கி எழுந்தால் நெருப்பைக் காகிதத்தில் கட்டப் பார்க்கிறார்கள். சுட்டுவிடும் தயவுசெய்து, கொடுக்கக்கூடிய பதிலை நிதானமாகக் கொடுக்க வேண்டும். பசுமைத் தாயகத்தின் மூலமாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன துணைக் கேள்வியா?

**திரு. ஐ. கணேசன்:** அவர் சொன்ன பதில் முறையல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைச் சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மரம் நடுவோம்-மரம் நட வேண்டும் என்பதுதான் கேள்வி. அவருக்கு மரம் வெட்டுவதைப்பற்றி என்ன கேள்வி? அதற்கு நான் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிரு பேரவைத் தலைவர்:** நீங்கள் தேவையில்லாமல் உங்கள் நிதானத்தை இழக்க வேண்டாம். கேள்விக்கு வாருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய டாக்டர் ஐயா அவர்களுடைய அன்பு மகன் அன்புமணி அவர்கள் பசுமைத் தாயகத்தின் மூலமாக ஒரே நாளில் 1½ இலட்சம்

[2001 ஜனவரி 31

எடுக்குமா? சென்னையில் மேலும் பல இடங்களில் இதுபோன்ற காமிராக்களை வைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் காமிராக்களின் மூலமாக பல்வேறு பயன்கள் இருக்கின்றன. குறிப்பாக 4 சாலைகளிலிருந்து வரும் வாகனங்களைக் கண்காணிப்பதற்கு இது வாய்ப்பாக இருக்கிறது. எந்தச் சாலையிலிருந்து அதிகமாக வாகனங்கள் வருகின்றன என்பதைக்கூட அதன் மூலம் அறிவதால் அங்கு போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. போக்குவரத்து விதிகளை மீறி வாகனங்கள் சென்று விடுமானால் அந்த வாகனங்களைக் கண்டுபிடிப்பதற்கும் இதுபோன்ற காமிராக்கள் உதவியாக இருக்கின்றன. அவ்வாறு கண்டுபிடித்ததனுடைய விளைவாக அண்ணா நகரில் அமைக்கப்பட்டுள்ள இந்த காமிராவின் மூலமாக இதுவரை சில குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, ரூ.75,000 வரை அபராதம் வசூலிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இது ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலமாக உருவாக்கப்பட்டிருக்கிற காமிராவாகும். இதுபோன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலமாகவே பல்வேறு இடங்களிலேயும் இதுபோன்ற காமிராக்களை வைப்பதற்கு அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 131, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**131—**

### சிற்றுந்து

***3971—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிற்றுந்துகளின் கிலோ மீட்டர் தூரததை 40 ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?



2001 ஜனவரி 31]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

சிற்றுந்துகள் ஓடும் தூரத்தை 40 கிலோ மீட்டராக உயர்த்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மக்களுடைய அடிப்படை வசதிகளில் ஒன்றாக இருக்கிற போக்குவரத்து வசதி பேருந்துகளின் மூலமாக மிகச் சிறப்பாக ஈடு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது சிற்றுந்துகளின் மூலமாகவும் குக்கிராமங்கள்தோறும் போக்குவரத்து வசதி செய்து கொடுத்த ஒரே மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து கொண்டிருப்பதும் பாராட்டுக்குரியது. ஆனாலும்கூட இப்போது 20 கிலோ மீட்டர் என்று உள்ளது. அது போதவில்லை. 4 கிலோ மீட்டர்தான் பேருந்து வழித் தடம் ஓடுகிற பகுதியாக இருக்க வேண்டும் என்று விதிகள் எல்லாம் இருக்கின்றன. எனவே, 40 கிலோ மீட்டர் அளவிற்கு இந்தத் தூரத்தை உயர்த்தியும் அதேபோல அந்த 4 கிலோ மீட்டர் பேருந்துகள் ஓடக்கூடிய வழித்தடமாகத்தான் இருக்க வேண்டும்; அதற்கு மேலே இருக்கக்கூடாது என்ற விதியையும் கொஞ்சம் தளர்த்தி 10 கிலோ மீட்டர் பேருந்து வழித் தடமாக இருந்தாலும் அனுமதித்து, 40 கிலோ மீட்டர் அளவிற்கு, சிற்றுந்துகளுக்கு அந்த வழித் தட உரிமம் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேருந்து வசதிகளே இல்லாத கிராமங்களுக்கு இந்த சிறிய பேருந்துகளை விட வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம். அந்த அடிப்படையிலேதான் 4 கிலோ மீட்டர் தூரம் முதலிலே பேருந்துகள் இயங்குகிற தடங்களிலேயும், 16 கிலோ மீட்டர் தூரம் இதுவரை பேருந்துகள் இயக்கப்படாத தடங்களிலேயும், ஆக 20 கிலோ மீட்டர் அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. 40 கிலோ மீட்டர் என்று நீட்டித்துக் கொடுப்போம் என்று சொன்னாலும்கூட, 4 கிலோ மீட்டரை மட்டுமே வைத்துக் கொண்டிருந்தால் அதனால் எந்தவிதப் பயனும் இருக்காது. ஏனென்றால், தமிழகத்திலே இந்த 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு இந்த 4 கிலோ மீட்டர் வைத்துக்கொண்டு எந்த அனுமதியையும் யாரும் கேட்க வர மாட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல

4 கிலோ மீட்டரை 10 கிலோ மீட்டராக உயர்த்தலாம் என்று சொன்னால், அதற்கு பல்வேறு துறைகளிலிருந்து எதிர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. Notification என்ற அளவிலேயே இந்த 4 கிலோ மீட்டருக்கு நீதிமன்றத்திலே பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டு அதன் இறுதியிலே இந்த அரசிற்கு உயர்நீதிமன்றமும் அனுமதி அளித்ததால் இந்தத் திட்டத்தை இப்போது நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, முடிந்த வரையில், இந்தத் திட்டத்தின் மூலமாக பல்வேறு பேருந்துகள் இயக்கப்பட்ட பிறகு, வரும் காலங்களில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகளைப் பரிசீலித்து அரசு முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது சிற்றுந்துகள் விடப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பல சிற்றுந்துகள் நட்டத்திலே இயங்குகின்றன. அதற்கு ஒரே காரணம், பஸ் ரூட்டில் 4 கிலோ மீட்டர்தான் போகலாம் என்ற சட்டம் இருப்பதுதான். அதுவும் பல பேருந்துகள் மெயின் ரோட்டில் ஓட்டப்படுகின்றன. கிராமங்கள் பயன்பெறக்கூடிய அளவிற்கு இல்லை. அந்த வாய்ப்பை மாற்ற வேண்டுமென்று சொன்னால், கண்டிப்பாக அதை 10 கிலோ மீட்டராக ஆக்கித்தான் தீர வேண்டும். வேறு வழியே கிடையாது. இல்லையென்றால் இன்னும் 6 மாதங்களில் சிற்றுந்துகளை எல்லாம் நிறுத்தி விடுவார்கள். பழையபடி இந்த போக்குவரத்து வசதி இல்லாத நிலைதான் ஏற்படும். எனவே கண்டிப்பாக 10 கிலோ மீட்டர் தூரம் நீட்டி — mofussil பகுதியில் மேலும் 10 கிலோ மீட்டர் தூரம் நீட்டி --- கொடுத்தீர்கள் என்றால், நிச்சயமாக இந்த சிற்றுந்துத் திட்டம் வெற்றி பெறும். அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது பேருந்து ஓட்டுபவர்களுடைய இலாபத்தை மட்டும் கருதி இயக்கப்படுகிற திட்டம் அல்ல; பேருந்துகள் இல்லாத கிராமங்களுக்கும் இது பலன் அளிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, இதை உயர்த்திக் கொடுப்போம் என்று சொன்னால், பேருந்துகள் இல்லாத கிராமங்களுக்கு அவர்கள் ஓட்டவே மாட்டார்கள். இப்போதே என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், 4 கிலோ மீட்டர் தூரத்தை மட்டும் போக்குவரத்து ஓடுகிற தூரத்தை காண்பித்துவிட்டு, 2 கிலோ மீட்டர் போக்குவரத்து இல்லாத தூரத்தைக்





காட்டி, 6 கிலோ மீட்டருக்கு அனுமதி வாங்குகிறவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலை வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே போக்குவரத்து வசதி இருக்கிற இடங்களிலேயே மீண்டும் இந்தச் சிறிய பேருந்துகள் ஓடினால், அவர்களுக்கு வருமானம் கிடைக்கும் என்ற அடிப்படையிலே அவர்கள் வருவார்கள் என்று சொன்னால் அதற்கு அரசு தயாராக இல்லை. அரசாங்கத்தின் நோக்கம் பேருந்துகளே இல்லாத கிராமங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பதுதான். அதை இந்த அரசு படிப்படியாகச் செய்து கொண்டிருக்கிறது.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 132, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**132—**

### சிறுமலைப் பாதையைச் செப்பனிடுதல்

***16323—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதியிலுள்ள சிறுமலை மலைப்பாதை மிகவும் மோசமாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பாதை எப்பொழுது செப்பனிடப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் தொகுதி, சிறுமலை மலைப்பாதையில் சிறு பாலங்கள் கட்டுகிற பணியும், தடுப்புச் சுவர்கள் கட்டுகிற பணியும் முடிவடைந்திருக்கிறது. பழுதடைந்த சில சாலைப் பகுதிகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் சில சாலைப் பகுதிகளை மேம்படுத்துவதற்கு 9 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நத்தம் சாலையில் இருந்து பிரிந்து செல்லக்கூடிய இந்த சிறுமலை மலைப்பாதை ஏறத்தாழ

[2001 ஜனவரி 31

22, 23 கி.மீ. தூரம் இருக்கிறது. இப்பொழுது சாலை பழுது பார்ப்புப் பணி என்ற நிலையில் அண்ணா நகர்ப் பகுதியிலும், சிறுமலை புதூரிலும் மட்டுமே இந்த வேலை நடைபெற்றிருக்கிறது. ஆனால் சிறுமலையில் கிராமப் பகுதியிலே அந்த வேலை நடைபெறவில்லை. அதேபோன்று இந்த மலையில் ஏறக்கூடிய அந்த entrance place-ல் மிகப் பெரிய ஆறு ஒன்று சென்று கொண்டிருக்கிறது. அந்த சிறு பாலங்கள் கட்டுவதிலே இந்தப் பாலம் இணைக்கப்படவில்லை. எனவே இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாகச் சேர்த்தால்தான் அந்த மலைப்பாதை சீரடையும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே நமது ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட அந்தச் சாலை, அதற்குப் பின்னால் பழுதுபார்க்கும் நிலையில் மட்டும் இருந்து கொண்டிருக்கிறதே தவிர, முழுமையாகப் போடப்படவில்லை என்பதுதான் எங்களைப் போன்றவர்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. எனவே, இதை மறுபரிசீலனை செய்து நத்தம் சாலைப் பிரிவிலிருந்து சிறுமலை புதூர் வரை அந்தச் சாலையை முழுமையாகச் செப்பனிடுகிற நிலையை மாற்றி, புதுச் சாலையாகவே அமைத்தால்தான் சரியாக இருக்கும். ஏனென்றால், செப்பனிட்டுவிட்டு அடுத்த மழை வருகிறபோது செப்பனிட்டது என்பதெல்லாம் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சாலை நீளத்திற்குத் துணைக் கேள்வி கேட்கக் கூடாது. சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிறுமலை மலைச்சாலை ஏறக்குறைய 19.40 கி.மீ. தூரம் இருக்கிறது. அதிலே தடுப்புச் சுவர்களும், சிறு பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அது தவிர, 3 இலட்சம் ரூபாய்க்கு சிறிய சிறிய ரிப்பேர் என்று சொல்லக்கூடிய பழுது பார்க்கின்ற பணி நடைபெற்று முடிந்தது. அதற்குப் பிறகு 'இதர மாவட்டச் சாலைகள்' பராமரிப்புத் திட்டத்தின் கீழ் 17 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதன் மூலமாகவும் ஓரளவுக்கு சீர்செய்யப்பட்டு இருக்கிறது. இப்போது மேலும் 9 இலட்சம் ரூபாய் இரண்டாவது கட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது டெண்டர் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பணியும் செய்யப்படும். ஆக மொத்தம் 29 இலட்சம் ரூபாய் இந்தச் சாலைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த இதர மாவட்டச் சாலைகள் என்பது மொத்தம் 40 ஆயிரம் கி.மீ. இருக்கிறது.



2001 ஜனவரி 31]

அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 400 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தும் அதிலே இப்போது 10 ஆயிரம் கி.மீ.-லிருந்து 12 ஆயிரம் கி.மீ. வரைதான் செப்பனிட முடிகிறது. எனவே, முழுமையையும் சீர்செய்ய வேண்டுமென்பது சற்றுக் கடினமானது. இருந்தாலும் எதிர்காலத்தில் நிதிநிலைக்கேற்ப இவை சீர்செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பொன்னம்மாள், நீங்கள் தினமும் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமா? (குறுக்கீடு) என்ன இல்லை சார்?

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** பாதிக்கப்பட்டவர்களுக்காகக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, கேளுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே கம்பம் பள்ளத்தாக்கு, வருஷ நாட்டுப் பகுதியிலே பெய்கின்ற மழையினால் அது கடினமாகப் பாதிக்கப்பட்டு, என்னுடைய தொகுதியிலுள்ள ரோடுகள் ஒன்றுமே சரியாக இல்லை. நம்முடைய இலாகாவிலிருந்து வந்து patch-work செய்கிறார்கள். அப்படிச் செய்தாலும்கூட அது சீக்கிரமாகப் பழுது அடைந்துவிடுகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று இரக்க சிந்தனையோடு அந்தப் பகுதியிலே எங்கெல்லாம் பஸ் போகாமல் இருக்கிறதோ; பஸ் போவதற்கு இடைஞ்சலாக இருக்கிறதோ; அந்த ரோடுகளையெல்லாம் எடுத்து patch-work செய்யாமல், முழுமையாகப் பழுதை நீக்குவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். இப்போது ஒதுக்கீடு செய்திருக்கிற பணத்தில் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். Other District Roads என்று சொல்லக்கூடிய இதர மாவட்டச் சாலைகள் தமிழ்நாட்டில் மொத்தம் 40 ஆயிரம் கி.மீ. இருக்கிறது. மற்ற State Highways, Major District Roads என்றிருப்பது 20 ஆயிரம் கி.மீ. வருகிறது. ஆக, இந்த 60 ஆயிரம் கி.மீ.-ல், 22 ஆயிரம் கி.மீ. மொத்தம்

[2001 ஜனவரி 31

தமிழ்நாட்டில் இதுவரைக்கும் சீர் செய்திருக்கிறோம். இந்த 40 ஆயிரம் கி.மீ. Other District Roads என்று சொல்லக்கூடிய இதர மாவட்டச் சாலையில் 10 ஆயிரத்திலிருந்து 12 ஆயிரம் கி.மீ. வரை சரிசெய்திருக்கிறோம். இது ஒரே நேரத்தில் இப்போது ஏற்பட்ட தகராறு அல்ல. 18 ஆண்டுகாலமாக சாலைகளெல்லாம் பராமரிப்பில்லாமல் சீரழிந்து போய் இருக்கின்றன. அதை இப்பொழுது சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இந்த O.D.R. என்று சொல்லக்கூடிய இதர மாவட்ட சாலைகள் நாங்கள் தேர்வு செய்வதுகூட மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையோடுதான் எடுக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லி ஏந்தெந்த சாலைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டுமென்று தெரிவிப்பார்களேயானால் மாவட்ட ஆட்சித் தலைவர் அதை சிபாரிசு செய்வாரேயானால் அதை நெடுஞ்சாலைத் துறை முன்னுரிமை கொடுத்து சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 133, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**133—**

### வேங்கைவாசல்-கோவிலாஞ்சேரி சாலை

***33964—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, தாமஸ்மலை ஒன்றியம், வேங்கைவாசல்-கோவிலாஞ்சேரி சாலையை (1.6 கி.மீ.) நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொள்ளும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.



2001 ஜனவரி 31]

(ஆ) வினா எழவில்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேங்கைவாசல்-கோவிலாஞ்சேரி சாலை என்பது நம்முடைய தாம்பரம் வேளச்சேரி நெடுஞ்சாலையையும் மேடவாக்கம்-மாம்பாக்கம் நெடுஞ்சாலையையும் இணைக்கிற இடத்தில் மூன்று கிராமங்களை உள்ளடக்கிய சாலையாகும். இதில் பெரும் பகுதி பேருந்து ஓடுகின்ற சாலையாகும். சென்னையையொட்டி இருக்கக்கூடிய புறநகர்ப் பகுதியில் தற்போது வீட்டுவசதித் துறையின் மூலம் உருவாக்கி உலக வங்கி மூலமாக விற்று இருக்கின்ற நிலப் பகுதியிலே இது அமைந்திருக்கின்ற காரணத்தினால், மிகவும் பழுதடைந்து இருக்கிறது. அந்த ஒன்றியத்திலே நிதியாதாரம் இல்லை. எனவே, போக்குவரத்து பாதிக்கின்ற நிலை ஏற்பட்டிருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, 1.6 கிலோமீட்டர் உள்ள அதை மட்டுமாவது எடுத்துக் கொள்வதற்கு மறுபரிசீலனை செய்வாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையின் நீளம் 1.6 கிலோமீட்டர் தான். ஆனாலும், அது ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருக்கின்றது. ஊராட்சி ஒன்றியச் சாலை, ஏற்கெனவே தார் போடப்பட்ட சாலை. ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தார் போடப்பட்டிருந்தால் அதை கிராமப்புற சாலைத் திட்டத்திலே எடுக்க முடியாது. எனவே, இதை நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொள்ள வேண்டுமானால், ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்து, அரசுக்கு வந்து, அதற்கு ஒரு அரசாணை வெளியிடப்பட்டால்தான் அந்தச் சாலையை எடுக்க முடியும். அதற்குப் பதிலாக இப்போது ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்டு, இந்தச் சாலைகளை எல்லாம் பராமரிப்பதற்கு மத்திய அரசிலேயிருந்து cess fund என்று சொல்லக்கூடிய நிதியிலேயிருந்து இந்தியா முழுவதற்கும் 2,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே தமிழ்நாட்டிற்கு உரிய பங்கும் கிடைத்திருக்கிறது. எனவே, நிதியாதாரம் இல்லை என்று ஊராட்சி ஒன்றியங்கள் சொல்வதிலே பொருள் இல்லை. நிதியாதாரம் இருக்கிறது. இதை அவர்கள் மேம்பாடு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 134, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

[2001 ஜனவரி 31

134—

## அருங்காட்சியகம்

***34540—திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டத்தில் அருங்காட்சியகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டத்தில் உரிய சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து, பின்னர் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சாத்தியக்கூறு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, சாத்தியக்கூறை உடனடியாக அமல் செய்யும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் 21 மாவட்டங்களில் அருங்காட்சியகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் எஞ்சி இருப்பவை 9 மாவட்டங்கள். ஏற்கெனவே தாங்கள், முன்னரே ஒரு வினா கேட்டு அரசு இசைப் பள்ளிக்கு ஓரளவுக்கு உறுதிமொழி வாங்கியிருக்கிறீர்கள். எனவே, இசைப் பள்ளிகள் தொடங்கப்பட வேண்டிய இடங்கள் 9 மாவட்டங்கள். அருங்காட்சியகங்கள் தொடங்கப்பட வேண்டிய மாவட்டங்கள் 9 மாவட்டங்கள். இந்த 18-ஐயும் ஒரே இடத்தில் குவிக்காமல் பரவலாக வாய்ப்பு வழங்கப்படும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். எனவே, அந்த அடிப்படையில் அது முடிவு செய்யப்படும்.



2001 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 135, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

135—

## கூட்டுறவுக் கடை

***37836—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் கருகம்பத்தூர் கிராமத்தில் கூட்டுறவுக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்பொழுது எடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அப்துல்லாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் கருகம்புத்தூர் தாய்க்கடையில் 1,115 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. அதிலிருந்து 450 குடும்ப அட்டைகளைப் பிரித்து கருகம்புத்தூர் கடை-2 என பகுதி நேரக் கடை 1997-ல் பிரிக்கப்பட்டு தொடர்ந்து இயங்கி வருகிறது. ஒரே கிராமத்தில் தற்போது இரண்டு நியாயவிலைக் கடைகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் இக்கிராமத்தில் மேலும் ஒரு நியாயவிலைக் கடையைத் திறக்க அவசியம் எழவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருகம்புத்தூர் காலனி பகுதியிலே ஒரு கடை வேண்டுமென்று நீண்டநாள் கோரிக்கை எழுப்பி ஒரு கிராமத்திலே உள்ள ஒதுக்குப்புறத்திலே நியாயவிலைக் கடையைக் கட்டிவிட்டார்கள். அங்கே இப்போது Part-time shop இயங்கிக் கொண்டிருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது அந்த Part-time shop-ஐயே முழுநேரக் கடையாக — இரண்டாக இருப்பதை — மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2001 ஜனவரி 31

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 400 அட்டைகளுக்கு மேல் இருந்தால் முழுநேரக் கடையாக அறிவிக்கலாம். அங்கே 450 கார்டுகள் இருக்கின்ற காரணத்தால் பகுதி நேரக் கடையை முழுநேரக் கடையாக மாற்றலாம். அதற்குரிய ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 136, திரு. வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**136—**

**கட்டடங்கள்**

***24630—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்குக் குடியிருப்புகள் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவீர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சத்தியமங்கலத்தில் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் ஏதும் நீதித் துறை வசம் இல்லாமையால் அங்கு நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கு குடியிருப்புகள் கட்டும் வாய்ப்பு தற்போது இல்லை.

முற்பகல் 10-20

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் நீதிமன்ற வளாகம் இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது. சத்தியமங்கலமும், பவானிசாகரும் காட்டுப் பகுதியிலே இருப்பதால், அங்கு நீதிபதிகளுக்கு ஒரு பாதுகாப்பான இடம் மிகவும் தேவைப்படுகிறது என்பதை நான் தங்கள் மூலம் வலியுறுத்த விரும்புகிறேன். இப்போது இருக்கின்ற கட்டடத்தில் வெயில் காலத்தில்



2001 ஜனவரி 31]

வழக்கறிஞர்கள் நிற்பதற்குக்கூட இடம் இல்லாமல், மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வழக்குகளை நடத்த வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. நீதிபதிகளுக்குக் குடியிருப்பும், நீதிமன்ற வளாகமும் கட்டித் தருவதற்கு அங்கு அரசு நிலம், விவசாய நிலம் நிறைய இருக்கிறது. அவை பயன்படுத்தப்படாமல் சும்மா இருக்கின்றன. அந்த நிலத்திலே ஓர் இடத்தை ஆய்வு செய்து, அந்த இடத்திலே நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றக் கட்டடம், நீதிபதிகளின் குடியிருப்பு இவைகளுக்குப் புதிதாகக் கட்டடம் தேவை என்பதில் இரண்டுபட்ட கருத்துக்கே இடமில்லை. ஆனால், அரசு சார்பில் நான் தெரிவிப்பதெல்லாம், எங்கள் துறைக்குச் சொந்தமான இடம் தற்போது இல்லை. மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் இதற்காக முயற்சி செய்து, அரசுக்குரிய புறம்போக்கு நிலத்தையோ அல்லது தனியாருக்குரிய நிலத்தையோ, அவை எங்கு இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவாரானால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 137, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**137—**

**கைத்தறித் தொழில்**

***29837—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கைத்தறித் தொழில் நசிந்து வருவதால் அதனை ஊக்குவிக்க அரசிடம் ஏதேனும் செயல் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் 1,382 பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. இவற்றில் 97 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 56,297 பட்டு கைத்தறிகளும், 134 தொழிலியல்

[2001 ஜனவரி 31

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 11,014 கைத்தறிகளும் உள்ளன. ஏழை கைத்தறி நெசவாளர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், கைத்தறித் தொழில் நசிந்து போகாமல் இருக்கவும், அதனை ஊக்குவிக்கவும், நெசவாளர்கள் நலத் திட்டங்களான சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், நல்வாழ்வுச் செறிவுத் திட்டம், ஆயுள் காப்பீட்டுத் திட்டம், மைய சிக்கனத் திட்டம், தறிக்கூடத்துடன் கூடிய வீட்டு வசதித் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம், செறிவுத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு காசுக் கடன் வசதி, தள்ளுபடி மானியத் திட்டம், கைத்தறித் துணி ஏற்றுமதி போன்ற திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள பள்ளியாடி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு பல ஆண்டுகளாக மானியம் வழங்கப்படவில்லையாம். அவர்களிடமிருந்து இலவச வேஷ்டி சேலைத் திட்டத்திற்கு வாங்கிய பொருளுக்கு காசுகூட கொடுக்கப்படவில்லை என்று கூறுகின்றார்கள். அவற்றை விரைவில் கொடுக்க அரசு ஆவன செய்யுமா? அதோடு இந்தக் கைத்தறி என்பது ஒரு மிகப்பெரிய கலையாக ஏழைமக்கள் மத்தியில் போற்றக்கூடிய ஒரு தொழில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொற்பொழிவு ஆற்றுவதற்கு நேரமில்லை. உங்கள் கேள்வி, சொசைட்டிக்கு பணம் வரவில்லை என்பதாகும். அதை மட்டும் கேளுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** விசைத்தறி மில்லோடு போட்டியிட முடியாமல் கைத்தறித் தொழில் நசிந்து கொண்டே இருக்கிறது. அதற்குக் கொடுத்து வரக்கூடிய மானியத்தைக் கூட்டுவதோடு, அதைத் தொடர்ந்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா எனக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி, மானியம் அளிக்காத சங்கங்கள் இருப்பதற்கே வாய்ப்பு இல்லை. அதுவும் குறிப்பாக இலவச வேஷ்டி சேலை உற்பத்தி என்று சொல்கிறார்கள். அந்த அடிப்படையிலேயும் நிச்சயம் அவர்களுக்கு அந்த மானியம் பாக்கி இருப்பதற்கே வாய்ப்பு இல்லை. அப்படி ஏதாவது இருந்தால் அதுபற்றி எனக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நான் பிரதான பதிலிலேயே நெசவாளர்களுக்கு என்னென்ன நலன்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன என்பதைத்



2001 ஜனவரி 31]

தெரிவித்து இருக்கின்றேன். தமிழகத்தில் அடையாள அட்டை மூலம் நெசவாளர்கள் அடையாளம் காட்டப்பட்டுவிட்டனர். இனி யாரும் அதிலே ஏமாற்றியோ அல்லது வேறு எந்த முறையிலோ அணுகுகின்ற வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில், நேரடியாக நெசவாளர்களுக்கு நான் தெரிவித்த அத்தனை நலன்களும் செல்லக்கூடிய வாய்ப்பை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 138, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**138—**

**சத்துணவுக்கூடம்**

***30892—திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மறறும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆரம்பப் பள்ளி அமைந்துள்ள கொரத்தக்குடி, வேட்டக்குடி, திருமானூர், வேப்பங்குழி ஆகிய கிராமங்களில் சத்துணவுக்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேட்டக்குடி மற்றும் திருமானூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் முறையே 16-11-1999 மற்றும் 18-11-1999-ல் சத்துணவு மையங்கள் தொடங்கப்பட்டன. கொரத்தக்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சத்துணவு மையம் தொடங்க 17-12-1999-ல் உத்தரவுகள் வழங்கப்பட்டு தற்போது மையம் செயல்பட்டு வருகிறது. மற்றும் வேப்பங்குழி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் ஏற்கெனவே சத்துணவு மையம் செயல்பட்டு வருகிறது.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி போட்டபோது, அந்தப் பள்ளிக்கூடத்திலே சத்துணவு மையம் இல்லை. பக்கத்திலே 4 கிலோமீட்டர், 3 கிலோமீட்டர் தூரத்திலிருந்து

[2001 ஜனவரி 31

குழந்தைகளுக்குச் சத்துணவு கொண்டு வந்தார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடங்கப்பட்டுவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குத் தெரியாதா தொடங்கியது?

வினா எண் 139, திரு. இரா. பெர்னார்டு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**139—**

**தொழிற்பேட்டை**

***43222—திரு. இரா. பெர்னார்டு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, அம்மாண்டிவிளை-வெள்ளைமோடி கிராமங்களுக்கு இடையே தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதியில் நீண்டகரை கிராமத்தில் மற்றும் கடியபட்டினம் கிராமத்தில் தொழிற்பேட்டை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொழிற்பேட்டை அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டு தொழில் முனைவோர்களின் தேவைக்கேற்ப விரைவில் முடிவெடுக்கப்படும்.

**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய அறிவிப்பிற்கு நன்றி. குமரி மாவட்டம் தொழில் வளர்ச்சி இல்லாத மாவட்டம். தற்போதுதான், மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆட்சியில்தான் மருத்துவக் கல்லூரியும், குளச்சல் துறைமுகமும் அமையவிருக்கின்றன; வேறு பல நலத் திட்டங்களும் நிறைவேற்றப்படுவதற்கு நன்றி பல கூறுகிறேன். குமரி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் படித்து, பட்டம் பெற்று, பல்வேறு துறைகளில் பயிற்சிகள்



2001 ஜனவரி 31]

பெற்று, வேலையில்லாமல் அவதிப்படுகின்ற இந்த நிலையில் இதுபோன்ற தொழிற்பேட்டைகள் அமைத்தால் பேருதவியாக இருக்கும். ஆகவே, பொது நலன் கருதி இது எப்போது அமைக்கப்படும்? எவ்வளவு முதலீட்டுத் தொகை ஒதுக்கப்படும்? எத்தனை பேர் வேலைவாய்ப்புப் பெறுவார்கள் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே தன்னுடைய தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்று கேட்டு, தொழிற்பேட்டை அமைப்பதற்குக் கருத்துரு பெறப்பட்டு, நிலம் கையகப்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. நிலம் கண்டறியப்பட்டு, உடனே வழங்கினால் நாங்கள் தொழிற்பேட்டை தொடங்குவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்திருக்கின்றேன். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி, அந்த நிலத்தைக் கண்டறிந்து எங்களுக்கு அனுப்பி வைத்தால், அங்கே தொழில் மனைகளாகப் பிரித்துத் தந்து, தொழில்கள் தொடங்குவதற்கு உடனே ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பென்னாகரம் தொகுதி என்பது மிகவும் பின்தங்கிய பகுதி; தொழில் வளம் இல்லாத பகுதி. இங்கே வாழக்கூடியவர்கள் எல்லாம் தமிழகத்தினுடைய பல்வேறு மாவட்டங்களுக்கு நெல் அறுவடை செய்வதற்கும், கரும்பு வெட்டுவதற்கும் செல்கின்ற நிலை இருக்கிறது. கர்நாடக மாநிலம் பெங்களூருக்குச் சென்று, அங்கே தள்ளுவண்டிக் கடை வைத்து சிப்ஸ், பொரிகடலை விற்பது மற்றும் கூலி வேலை செய்வது என இப்படி வாழக் கூடியவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே ஒரு தொழிற்பேட்டை வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும், நம்முடைய துறையினுடைய அமைச்சர் அவர்களிடத்திலேயும் சொல்லி, வாக்குறுதி எல்லாம் அளிக்கப்பட்டது. இருந்தாலும்கூட, இதுவரையிலே அங்கே ஆவன செய்யப்படவில்லை. ஆகவே, அந்தப் பகுதியினுடைய பொருளாதாரத்தை மேம்படுத்தவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், எங்களுடைய பென்னாகரம் தொகுதியிலே கூடிய விரைவிலே தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2001 ஜனவரி 31

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருமபுரி மாவட்டத்திலே பெண்ணாகரம் தொகுதியிலே தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே, அவர் குறைந்த விலைக்கு அரசு நிலங்களைக் கண்டறிந்து எங்களுக்குத் தெரிவிப்பாரேயானால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏற்கெனவே அவரிடத்திலே நேரடியாகத் தெரிவித்திருக்கின்றேன். ஏற்கெனவே தருமபுரி மாவட்டத்திலே பர்கூர் தொகுதியிலே 20 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு, ஒன்றுகூட இதுவரை விற்பனையாகவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். பலமுறை பேப்பரிலே விளம்பரம் கொடுத்து ஏலத்திற்குகூட ஏற்பாடு செய்தோம். ஆனால் ஒரு தொழிற்கூடம்கூட ஏலத்தில் எடுக்கப்படவில்லை. இருந்தாலும், பெண்ணாகரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அரசு நிலத்தைக் கண்டறிந்து தெரிவித்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 140, திரு. ஜி. நிஜாமுதீன். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**140—**

### வேளாங்கன்னிக்கு வசதி

***30403—திரு. ஜி. நிஜாமுதீன் :**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாங்கன்னிக்கு சுற்றுலாத் துறை மூலம் அடிப்படை வசதி செய்து தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**(அ) ஆம்.**

**(ஆ) வேளாங்கன்னியில் சுற்றுலாத் துறை மூலமாக மத்திய மாநில அரசு நிதியுதவியுடன் ரூ.16.35 இலட்சத்தில் நவீனக் கட்டணக் கழிப்பறை கட்டுவதற்குத் திட்டம் உள்ளது.**



2001 ஜனவரி 31]

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், இந்தச் சட்டமன்றத்திலே வழங்கப்பட்டு, கிட்டத்தட்ட இரண்டாண்டுகளுக்கு மேலாகிறது. இன்னும் நாகூரிலும், வேளாங்கன்னியிலும் இந்தத் திட்டம் தொடங்கப்படவில்லை. ஏன் இந்தக் காலதாமதம் என்று தெரியவில்லை. கேட்டால் இடம் தேர்வு செய்கின்றோம், இடம் தேர்வு செய்கின்றோம் என்று கூறிக்கொண்டே இருக்கிறார்கள், அங்கேயுள்ள பேரூராட்சியிலும், நகராட்சியிலும். இன்னொன்று என்னவென்றால் 16 இலட்ச ரூபாய்க்குக் கழிப்பறை ஒரே இடத்திலே கட்ட வேண்டுமென்ற விதி வைத்து இருப்பதால் கிட்டத்தட்ட 10, 15 கழிப்பறைகள் கட்ட வேண்டிய இடத்திலே இப்போது கட்டுவது சுருங்கிக் கொண்டே வந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டம் விரைவுபடுத்தப்படுமா? மேலும் வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு இந்தப் பணத்தை பயன்படுத்திக் கொள்ளலாமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டு மத்திய அரசின் முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ், வேளாங்கன்னிக்கு பொதுக் கழிப்பிட வசதி ஏற்படுத்துவதற்காக 16.35 இலட்சம் ரூபாயில் திட்ட மதிப்பீடு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய அரசின் பங்காக 12 இலட்சம் ரூபாயும், மாநில அரசின் பங்காக 4.35 இலட்சம் ரூபாயும் என்ற அடிப்படையில் இத்திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு முதல் பங்குத் தொகையாக 3.6 இலட்சம் ரூபாய் விடுத்துள்ளது. இத்தொகையினை சுற்றுலாத் துறை ஆணையர் மூலமாக மாநில பொதுப்பணித் துறைக்கு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக பணிகள் தொடங்கப்பட இருக்கின்றன.

[2001 ஜனவரி 31

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

## (பட்டியல்கள் ஒன்பது மற்றும் பத்து)

## ஒன்பதாம் பட்டியல்

1—

### கூடுதல் கட்டட வசதி

**வினா 19218—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ஏனாதிகரம்பை, நடுவிக்கோட்டை, ஊமத்தகாடு ஆகிய அரசினர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டட வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ஏனாதிகரம்பை, நடுவிக்கோட்டை மற்றும் ஊமத்தகாடு ஆகிய அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டட வசதி செய்ய நடப்பாண்டில் நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கம் பெறப்படின், இப்பள்ளிகளுக்கு கூடுதல் கட்டட வசதி செய்து தரப்படும்.

2—

### கான்கிரீட் கூரை

**வினா 34501—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

* உடுக்குறியிடாத வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2001 ஜனவரி 31]

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை எஸ்.எம்.எஸ்.எஸ். அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள ஓட்டுக் கூரைகளை காங்கிரீட் கூரைகளாக மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 6-வது மற்றும் 7-வது வகுப்பறைகள் அமைந்த கட்டடத்தில் ஓட்டுக் கூரைக்கு பதிலாக கான்கிரீட் மேற்கூரை அமைக்கும் பணியானது 1998-99 ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட ரூ.2.90 லட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

3—

### அடையாள அட்டை

**வினா 40219—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் புகைப்படம் எடுத்த அனைத்து வாக்காளர்களுக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லை எனில், உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் சனவரி 1, 2000 ஆம் நாள் வாக்காளர் பட்டியலின்படி 2,20,613 வாக்காளர்கள் உள்ளனர். இதில் 1,54,206 வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள விடுபட்ட வாக்காளர்களுக்குத் தற்போது நடைபெற்றுவரும் சுற்றில் புகைப்படம் எடுக்கப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

4—

## வகுப்பறை கட்டடம்

**வினா 41721—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், மாரியம்மன்கோயில் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், மாரியம்மன்கோயில் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறை கட்டுவது சார்பாக இவ்வாண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற/பாராறுமன்ற உறுப்பினர் இசைவு பெறப்படின் இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி செய்து தரப்படும்.

5—

## நிதி ஒதுக்கீடு

**வினா 43363—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆம் ஆண்டில் உயர்நிலை/மேல்நிலைப்பள்ளி கட்டடங்கள் கட்டுவதற்கு சேலம் மாவட்டத்திற்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு?

(ஆ) ஒதுக்கப்பட்ட நிதிக்குக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளனவா?



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1999-2000 ஆம் கல்வியாண்டில் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கான அரசின் நிதி ஒதுக்கீடு இல்லை. இருப்பினும், சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகி நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்படுவதற்கேற்ப கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

6—

## மின் அழுத்தம்

**வினா 23770—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சி, 10-வது வார்டு பகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பது அரசின் கவனத்திற்கு வரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சி, 10-வது வார்டு பகுதியில் ஏற்பட்டு வந்த மின் அழுத்தக் குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்காக ஒரு புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டு 16-6-2000 அன்று இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டு, மின் அழுத்தம் 220 வோல்ட் ஆக இருக்குமாறு மேம்படுத்தப்பட்டுவிட்டது.

[2001 ஜனவரி 31

7—

### மருத்துவர் பட்டம்

**வினா 28534—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வருடந்தோறும் மருத்துவர் பட்டம் பெற்று வெளியே வரும் மாணவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதை கேரளாவுக்கு இணையாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ)

| வரிசை எண் | ஆண்டுகள் | மருத்துவர் பட்டம் பெற்றவர்கள் (எம்.பி.பி.எஸ்.) | பல் மருத்துவம் பட்டம் பெற்றவர்கள் (பி.டி.எஸ்.) | இந்திய மருத்துவ பட்டம் பெற்றவர்கள் |
|---|---|---|---|---|
| 1. | 199[illegible] | 1273 | 368 | 155 |
| 2. | 199[illegible] | 1508 | 364 | 121 |
| 3. | 1998 | 1189 | 389 | 298 |
| 4. | 1999 | 1606 | 362 | 220 |

(ஆ) வருடந்தோறும் மருத்துவப் பட்டம் பெற்று வெளியே வரும் மாணவர் எண்ணிக்கையை கேரளாவிற்கு இணையாக உயர்த்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



2001 ஜனவரி 31]

8—

### மின் இணைப்பு

**வினா 29642—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கும் முறையில் தனி முன்னுரிமை வழங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆதிதிராவிட விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கும் முறையில் தனி முன்னுரிமை ஏதும் இல்லை.

9—

### புதிய மின்கம்பம்

**வினா 34965—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மேற்குப் பகுதி ஊராட்சி, மரியபுரம் தென் பகுதியில் எல்/7 எண் உள்ள மின் கம்பம் சாய்ந்து விழுந்து விடும் நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது மாற்றி அமைக்கப்படும்?

[2001 ஜனவரி 31

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மேற்குப் பகுதி ஊராட்சி, மரியபுரம் தென் பகுதியில் சாய்ந்து விடும் நிலையில் இருந்த எல்/7 எண் உள்ள மின் கம்பம் 29-4-2000 அன்று மாற்றப்பட்டு விட்டது.

**10—**

**மின் இணைப்பு**

**வினா 35032—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதிக்குள் கட்டி முடிக்கப்பட்டும் மின் இணைப்பு வழங்கப்படாமல் உள்ள தொகுப்பு வீடுகள் எத்தனை?

(ஆ) அவற்றிற்கு எப்போது மின் இணைப்பு வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அவிநாசி கோட்டத்தைச் சார்ந்த திருப்பூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு கோரும் விண்ணப்பங்கள் 153 நிலுவையில் உள்ளன.

(ஆ) அவிநாசி கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 1999-2000 ஆம் ஆண்டிற்கான குறியீடு நிறைவடைந்து விட்டது. எனவே, அவிநாசி கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் 2000-2001 ஆம் ஆண்டிற்கான குறியீட்டின் அடிப்படையில் மேற்படி விண்ணப்பங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.



2001 ஜனவரி 31]

**11—**

**மின் கம்பம்**

**வினா 35238—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 15 வேலம்பாளையம் பேரூராட்சி, சாமுண்டிபுரம் தெற்கு ராஜீவ் நகர் 2-வது வீதியில் ஸ்டேகம்பி உடைந்து மின் கம்பம் சாய்ந்து விழும் நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவை எப்போது சரி செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் 15 வேலம்பாளையம் பேரூராட்சி, சாமுண்டிபுரம் தெற்கு ராஜீவ் நகர் 2-வது வீதியில் ஸ்டேகம்பி உடைந்து சாய்ந்த நிலையில் இருந்த மின் கம்பம் 24-5-2000 அன்று சரி செய்யப்பட்டு விட்டது.

**12—**

**மின் இணைப்பு**

**வினா 37121—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி மின்சார வாரிய ரூரல் பிரிவு அலுவலகத்தில் விவசாய மின் இணைப்பு கோரி 1999-2000-ம் வரை நிலுவையில் உள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) மின் இணைப்பு எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி புறநகர்ப் பிரிவு அலுவலகத்தில் விவசாய மின் இணைப்பு கோரி 1999-2000-ம் வரை நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் 485.

(ஆ) விவசாய மின் இணைப்பு வேண்டி பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு வாரியம் நிர்ணயிக்கும் குறியீட்டின் அடிப்படையில் வரிசைக் கிரமப்படி மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**13—**

**விவசாய மின் இணைப்பு**

**வினா 37739—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் மின் விநியோக வட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியப் பகுதியில் விவசாய மின் இணைப்பு கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அதில் இணைப்புக் கொடுத்தது எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியப் பகுதியில் விவசாய மின் இணைப்பு கோரி பெறப்பட்ட விண்ணப்பங்கள் 543.

(ஆ) மின் இணைப்பு வழங்கியது 87.



**14—**

**பம்புசெட் இயக்குதல்**

**வினா 38052—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள விவசாயிகள் தங்கள் கிணற்றில் தற்போதுள்ள பம்புசெட் மின் இணைப்புக்கு "Charge-over switch" வைத்து இன்னொரு பம்புசெட் இயக்க அரசு தொடர்ந்து அனுமதி அளிக்க ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

விவசாயிகள் தங்கள் கிணற்றில் தற்போதுள்ள பம்புசெட் மின் இணைப்பில் "Charge-over switch" வைத்து இன்னொரு பம்புசெட் இயக்க அளித்த உத்தரவு இப்பொழுதும் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது.

**15—**

**முன்னுரிமை**

**வினா 39945—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, கல்லணைக் கால்வாயில் கடைமடைப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதில் முன்னுரிமை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, கல்லணைக் கால்வாயில் கடைமடைப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதில் முன்னுரிமை வழங்கும் உத்தேசம் எதுவும் இல்லை.

**16—**

**பம்புசெட் மின் இணைப்பு**

**வினா 41876—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பம்புசெட் மின் இணைப்பு வேண்டி விவசாயிகள் விண்ணப்பித்து பல ஆண்டுகளாகியும் வழங்காமல் ரூ.25,000 பணம் கட்டியவர்களுக்கு மட்டும் வழங்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

விடை—

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அரசு ஆணை எண் 88, நாள்: 5-6-2000-ன்படி கீழ்க்கண்ட இலக்கு 2000-2001 ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது :

| | குறியீடு |
|---|---|
| 1. இலவச மின்சாரம் | |
| (அ) வழக்கமானது (Normal) | 5000 |
| (ஆ) ஜீவன்தாரா | 2000 |



| | குறியீடு |
|---|---|
| 2. சுயநிதித் திட்டம் | |
| வகை-1 | |
| (அ) மதிப்பீட்டின் அளவு ரூ.50,000-க்குள் இருக்கும்போது விண்ணப்பதாரர் ரூ.10,000 கட்ட முன்வந்தால் | 15,000 |
| (ஆ) மதிப்பீட்டின் அளவு ரூ.50,000-க்குள் இருக்கும்போது விண்ணப்பதாரர் ரூ.25,000 கட்ட முன்வந்தால் | 17,750 |
| வகை-2 | |
| (இ) மதிப்பீட்டின் அளவு ரூ.50,000-க்கு மேல் இருக்கும்போது விண்ணப்பதாரர் மதிப்பீட்டின் தொகையினை கட்ட விரும்பினால் | 250 |

மேலே கூறப்பட்ட சுயநிதித் திட்டத்தில், விண்ணப்பதாரர் விருப்பப்பட்டால் மட்டுமே ரூ.10,000 (அ) ரூ.25,000 கட்டி விவசாய மின் இணைப்பு பெறலாம். இல்லையெனில் இலவச மின்சாரத் திட்டத்தின் கீழ் விண்ணப்பதாரர் அவரது முன்னுரிமைப்படி மின் இணைப்பினை பெறலாம். மேலும், விவசாய விண்ணப்பங்கள் அதிக அளவில் இருப்பதன் காரணமாகவும், அதிக அளவு விவசாய பெருமக்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டும் என்ற அரசின் ஆர்வத்தின் காரணமாகவும் இச்சுயநிதித் திட்டத்தினை அரசு அமல்படுத்தியுள்ளது.

**17—**

**தெருவிளக்குகள் அமைத்தல்**

**வினா 26538—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அரகாசனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த அரகாசனஅள்ளி கிராமத்தில் (1) நாயக்கர் தெரு, (2) வள்ளார் தெரு, (3) முனியம்மன் கோவில் தெரு, (4) வெட்டுராயன்காட்டுகோம்பை ஆகிய பகுதிகளுக்கு இதுவரை தெருவிளக்குகள் அமைக்காமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

[2001 ஜனவரி 31

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அங்கு தெரு விளக்குகள் அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அரக்காசனஅள்ளி ஊராட்சியில் போதுமான நிதிவசதி இல்லை. எனவே, வினாவில் கூறப்பட்ட இடங்களில் தெருவிளக்குகள் அமைக்க வழிவகை இல்லை.

**18—**

**விற்பனைக் கூடம்**

**வினா 20701—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஏற்படுத்துவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

**19—**

**குளிர்பதனக் கிடங்கு**

**வினா 22069—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 31]

சேலம் மாவட்டம், எடப்பாடியில் வேளாண்மை விளை பொருள்களுக்கு என குளிர்பதனக் கிடங்கு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

குளிர்பதனக் கிடங்கு அமைத்து பாதுகாக்க வேண்டிய வேளாண் விளைபொருட்கள் எடப்பாடி பகுதியில் போதிய அளவு உற்பத்தி செய்யப்படவில்லை. வெண்டை மட்டுமே எடப்பாடி பகுதியில் அதிக அளவில் பயிரிடப்படுகின்றது. தலைவாசல், சேலம், போன்ற இடங்களில் உள்ள காய்கறி விற்பனை சந்தைகள் போல் எடப்பாடியில் சந்தை ஏதும் இல்லை. மேலும் இங்கே குளிர்பதனக் கிடங்கு அமைத்தால் பயனடையும் விவசாயிகளும், வியாபாரிகளும் மிகவும் குறைவேயாகும். எனவே, எடப்பாடியில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**20—**

**மானியம்**

**வினா 33863—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் துறையின் பல்வேறு திட்டங்களின் மூலம் மானியம் பெறும் விவசாயிகள் முகவரி மற்றும் மானியம் பெறும் விவரங்களை அடங்கிய குறிப்புகளை ஒவ்வொரு ஆண்டும் தொகுத்து மாவட்ட வாரியாக மக்கள் சாசனமாக வெளியிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

[2001 ஜனவரி 31

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மக்கள் சாசனம் என்பது அரசினால் செயல்படுத்தப்படும் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களின் விவரங்கள் மற்றும் திட்ட செயல்பாட்டினை (Procedure) மக்கள தெரிந்துகொள்ளும் வண்ணம் தொகுத்து வெளியிடப்படும் ஒரு அறிக்கையாகும். வேளாண்மைத் துறையின் மூலமாக பல்வேறு மானியத் திட்டங்கள் மூலம் மானியம் பெறும் விவசாயிகளின் முகவரி மற்றும் மானியம் பெறும் விவரங்கள் போன்றவை வட்டார அளவில், வேளாண்மை வளர்ச்சி அலுவலகத்தில் தனித்தனி திட்டங்களுக்கு உரிய பதிவேடுகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதனை ஆண்டுதோறும் மாவட்ட அளவில் தொகுத்து வெளியிடும் சாத்தியக்கூறு இல்லை. மேலும் பல்வேறு நலத் திட்டங்கள் வட்டார அளவில் ஊராட்சிமன்ற பிரதிநிதிகளின் ஆலோசனைப்படியும் நடைமுறை திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டும் செயல்படுத்தப்படுகின்றன. தேவை ஏற்படும்போது மானிய விவரங்கள், அவற்றைப் பெறுவதற்காகக் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் போன்ற விவரங்களை அறிய தாலுகா அளவில், வேளாண்மை உதவி இயக்குநர் (பலதொதி) அவர்களையும் வட்டார அளவில், வேளாண்மை வளர்ச்சி அலுவலரையும், மாவட்ட அளவில் வேளாண்மை இணை இயக்குநர் (பலதொதி) அவர்களையும் அணுகி விவரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

**21—**

### பன்றிப் பண்ணைகள்

**வினா 37951—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உழவர் சந்தைகளில் உள்ள காய்கறிக் கழிவுகளை பயன்படுத்தி பன்றிப் பண்ணைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



2001 ஜனவரி 31]

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) உழவர் சந்தைகளுக்கு விவசாயிகள் காய்கறிகளைக் கொண்டுவரும் பொழுது சுத்தம் செய்து எடுத்து வருவதால், காய்கறிக் கழிவுகள் ஏற்பட வாய்ப்பு இல்லை. காய்கறிக் கழிவுகள் ஏதேனும் உழவர் சந்தைகளில் இருப்பின் அது தினசரி சுத்தம் செய்யப்பட்டு அப்புறப்படுத்தப்படுகிறது. எனவே பன்றிப் பண்ணைகள் அமைக்கும் உத்தேசம் எதுவும் இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

**22—**

### நவீன வசதிகள்

**வினா 40499—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும், தொலைபேசி, கணினி போன்ற நவீன வசதிகள் செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களிலும் தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது. மேற்படி அலுவலகப் பணிகளை கணினிமயமாக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. விரைவில் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களில் கணினி வசதிகள் செய்யப்படும்.

[2001 ஜனவரி 31

23—

சம்பளம்

**வினா 40512—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் பேருந்துகளில் ஓட்டுநராக மற்றும் நடத்துனராக பணிபுரியும் பணியாளர்களுக்கு அரசே குறைந்தபட்ச சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொது மோட்டார் போக்குவரத்து தொழிலுக்கு அரசாணை (2டி) எண்.102, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 22-9-1999-ன் மூலம் மறுநிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள், இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியான 3-11-1999 முதல் அமலில் இருந்து வருகின்றது. இதன்படி, தனியார் பேருந்துகளில் பணிபுரியும் ஓட்டுநர்கள், நடத்துனர்கள் உள்ளிட்ட பல்வேறு பணியாளர்கள் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியங்கள் மற்றும் அகவிலைப்படி பெறுவார்கள்.

24—

சலுகைகள்

**வினா 40527—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரிய தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்குவதைப் போன்று விவசாயத் தொழிலாளர்களுக்கும் அரசு அனைத்துச் சலுகைகளையும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2001 ஜனவரி 31]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள விவசாயத் தொழிலாளர் நலனுக்காக திட்டங்களை பரிந்துரை செய்யும்பொருட்டு முன்னாள் நிலச் சீரமைப்பு ஆணையர் மற்றும் இயக்குநர் திரு. பி. கோலப்பன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் ஒன்றான விவசாயத் தொழிலாளருக்கு தனி நல வாரியம் அமைக்கப்படும் என்ற பரிந்துரையை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வேளாண் தொழிலாளருக்கு தனி நல வாரியம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி வேளாண்மைத் தொழிலை ஒரு தொழிலாக 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் சட்டப் பட்டியலில் சேர்த்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. நல வாரியம் அமைக்க வருவாய்த் துறையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த வாரியம் பெரிய தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்குவதைப் போன்று விவசாயத் தொழிலாளருக்கும் அனைத்து சலுகைகளையும் வழங்க பரிசிலனை செய்யும்.

25—

சிற்றுந்துகளின் விவரம்

**வினா 41088—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய எத்தனை மினி பஸ்கள் தமிழகத்தில் இயக்கப்பட்டன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய இயக்கப்பட்டு வந்த சிற்றுந்துகளின் எண்ணிக்கை 688 ஆகும்.

**26—**

## இடைநிலை ஆசிரியர்கள்

**வினா 41978—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய எவ்வளவு இடைநிலை ஆசிரியர்கள் வேலைக்காக பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் 1999 ஆம் ஆண்டு முடிய (31-12-1999) 39,630 இடைநிலை ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு வேண்டி வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்து காத்துள்ளனர்.

**27—**

## நிரந்தரக் கட்டடம்

**வினா 42282—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் சாலை போக்குவரத்து அலுவலகத் (ஆர்.டி.ஓ.) திற்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணி எப்போது ஆரம்பிக்கப்படும்?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சேலம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்துக்கு சொந்தக் கட்டடம் கட்டும்பொருட்டு சேலம் வட்டம், கந்தம்பட்டி கிராமத்தில் நிலம் தெரிவு செய்யப்பட்டு, போக்குவரத்துத் துறைக்கு நில மாற்றம் செய்வது குறித்து அரசின் பரிசிலனையில் உள்ளது. நிலம் போக்குவரத்துத் துறைக்கு மாற்றம் செய்தபின், சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**28—**

## துறைமுக மேம்பாடு

**வினா 22034—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி துறைமுகத்தினை மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி துறைமுகத்தின் கப்பல் அமிழளவு ஆழமான 8.24 மீ. (27 அடி)யிலிருந்து 10.7 மீ. (35 அடி)ஆக அதிகரிக்கப்பட்ட துறைமுகம், அத்துறைமுக பொறுப்புக் கழகத்தால் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக இத்துறைமுகத்தின் கையாளும் திறன் 3.4 மில்லியன் டன்கள் வரை உயர வாய்ப்பு உள்ளது.

**29—**

## சாலை மேம்பாடு

**வினா 34354—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம், வட்டம், திசையன்விளை காளிகோவில் சாலை பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா?

[2001 ஜனவரி 31

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) 6/8 கி.மீ. நீளமுள்ள இச்சாலையை சீரமைக்க தோராயமாக ரூபாய் 24.40 இலட்சம் செலவாகும். எதிர்வரும் ஆண்டுகளில் நிதி நிலைக்கு ஏற்ப பகுதி பகுதியாக இச்சாலையை மேம்பாடு செய்வது கருத்தில் கொள்ளப்படும்.

**30—**

**சாலை பழுதுபார்த்தல்**

**வினா 34365—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி எல்லையிலிருந்து சாமுண்டிபுரம் வழியாக காவிலிபாளையம் செல்லும் சாலை பழுது பார்க்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள திருப்பூர் நகராட்சி சாலையிலிருந்து சாமுண்டிபுரம் வழியாக காவிலிபாளையம் செல்லும் சாலை கி.மீ.0/0-3/4 வரையிலான இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையின் பழுதடைந்த பகுதிகள் ரூ.2.75 இலட்சம் மதிப்பீட்டில் பழுதடைந்த சாலைகள் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள பகுதிகள் நொடிகள் போடப்பட்டு சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.



2001 ஜனவரி 31]

**31—**

**சாலை சரிசெய்தல்**

**வினா 34370—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் அனுப்பம்பாளையம் ஆத்துப்பாளையம் சாலை எப்போது பழுதுபார்த்து சரி செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள அனுப்பம்பாளையம் ஆத்துப்பாளையம் சாலை கி.மீ.0/0-1/6-ஐ (இதர மாவட்ட சாலை) ரூ.1.40 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பகுதிகளை புதுப்பிக்க நிதி நிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**32—**

**சாலை பழுதுபார்த்தல்**

**வினா 34371—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நல்லூர் கோவில் வழி சாலை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பழுதுபார்க்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது திருப்பூர் நகர நல்லூர் கோவில் வழிச்சாலை (கி.மீ. 0/0-5/0) எனும் இதர மாவட்ட சாலையாகும். தற்போது இச்சாலையின்

[2001 ஜனவரி 31

கி.மீ. 0/0-¼ பகுதி திருப்பூர் நகர சுற்றுச்சாலை (Ring Road) திட்டத்தில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பகுதிகள் ரூ. 2.20 இலட்சம் மதிப்பீட்டில் பழுதடைந்த சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்பட்டு வருகிறது.

33—

## சாலை பராமரித்தல்

**வினா 34374—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் கஞ்சம்பாளையம், நல்லாத்துப்பாளையம் சாலை பழுதுபார்த்துப் பராமரிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கஞ்சம்பாளையம் நல்லாத்துப்பாளையம சாலை கி.மீ. 0/0-0/6 நீளமுள்ள இதர மாவட்ட சாலையாகும். 2000-2001 ஆம் ஆண்டு பராமரிப்பு திட்டத்தின்கீழ் இச்சாலையில் தார் நொடிகள் போடப்பட்டு வருகின்றது.

34—

## சாலை பழுதுபார்த்தல்

**வினா 34376—திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பெருமாநல்லூர் கள்ளிமடைக்குட்டை சாலை பழுதுபார்க்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2001 ஜனவரி 31]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பெருமாநல்லூர் கள்ளிமடைக்குட்டை சாலை கி.மீ.0/0-6/0 நீளமுள்ள இதர மாவட்ட சாலையாகும். தற்போது இச்சாலையில் 2000-2001 ஆம் ஆண்டு பராமரிப்பு திட்டத்தின்கீழ் தார் நொடிகள் போடப்பட்டுள்ளது.

35—

## நியாயவிலைக் கடை

**வினா 39422—திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சிப் பகுதியிலுள்ள அரசு நியாயவிலைக் கடைகளில் மண்ணெண்ணெய் சரிவர வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சிப் பகுதியிலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு போதிய அளவு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு மாத ஆரம்பம் முதலே விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டது போக நியாயவிலை அங்காடிகளில் முடிவு இருப்பும் அதிக அளவில் உள்ளது. மேலும், மண்ணெண்ணெய் குறைவாக விநியோகம் செய்யப்பட்டதாக எவரிடமிருந்தும் புகார்கள் ஏதும் வரப்பெறவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[2001 ஜனவரி 31

36—

### சிமெண்ட் தளம்

**வினா 39713—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி வட்டாரம், ராமமூர்த்தி நகரிலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு புதிய சிமெண்ட் தளம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி வட்டாரம், ராமமூர்த்தி நகரில் கூட்டுறவு விற்பனைச் சங்கம் இல்லை. ஆனால் சேலம் வேளாண்மை உற்பத்தி கூட்டுறவு விற்பனைச் சங்கம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி வட்டாரம், ராமமூர்த்தி நகரில் பருத்தி அறுவடைக் காலங்களில் (ஜனவரி-மார்ச் மற்றும் ஜூலை-செப்டம்பர்) மட்டும் பருத்தி டெண்டர் நடத்தி வருகின்றது. சேலம் வேளாண்மை உற்பத்தி கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கு ராமமூர்த்தி நகரில் சொந்த நிலம் இல்லை.

மேலும் வேளாண்மை உற்பத்தி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ராமமூர்த்தி நகரில் சொந்த நிலம் இல்லாததால் மாரியம்மன் கோவில் நிலத்தில் வருட வாடகையாக ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு, பருத்தி அறுவடைக் காலங்களில் மட்டும் டெண்டர் நடத்தப்பட்டு வருகிறது. மேற்கூறிய காரணங்களால், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி வட்டாரம், ராமமூர்த்தி நகரில், சேலம் வேளாண்மை உற்பத்தி கூட்டுறவு விற்பனைச் சங்கம் அறுவடைக் காலங்களில் மட்டும் டெண்டர் நடத்தும் மாரியம்மன் கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் அரசு சிமெண்ட் தளம் அமைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை.



2001 ஜனவரி 31]

37—

### கூட்டுறவுச் சங்க பொறுப்பாளர்கள்

**வினா 40814—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுச் சங்கங்களில் வரவு-செலவு வைத்துள்ளவர்கள் வாக்காளர்களாகவும், தலைவர் மற்றும் இயக்குநர் பொறுப்புகளுக்கு போட்டியிட தகுதியானவர்கள் என்று அரசு அறிவிப்பு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையில் உள்ள கூட்டுறவுச சட்டம் மற்றும் விதிகளின்படி, கூட்டுறவுச் சங்கங்களில் வரவு-செலவு வைத்துள்ளவர்கள்தான் வாக்காளர்களாகவும், தலைவர் மற்றும் இயக்குநர் பொறுப்புகளுக்கு போட்டியிடத் தகுதியானவர்கள் என்று அறிவிப்பு செய்ய இயலாது.

38—

### பொருட்களின் எண்ணிக்கை

**வினா 42085—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது விநியோக முறையில் சேர்த்துள்ள பொருட்கள் எத்தனை என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) அதில் வேறு பொருட்களை சேர்க்கவோ, தற்பொழுது உள்ளதில் குறைக்கவோ அரசிடம் உத்தேசம் உள்ளதா என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) பொது விநியோகமுறையின்கீழ் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களான ரவை மற்றும் மைதா, பாமாயில் ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் நியாயவிலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன.

(ஆ) மேற்கண்ட பொருட்களைத் தவிர பொது விநியோக முறையில் வேறு பொருட்களை சேர்க்கவோ, தற்பொழுது உள்ள பொருட்களைக் குறைக்கவோ தறபோது அரசுக்கு உத்தேசம் இல்லை.

39—

## புதிய கட்டடம்

**வினா 42717—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000 ஆம் ஆண்டு மே மாதம் வரை தமிழகத்தில் எத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன கட்டடம் கட்டப்பட்டுள்ளது?

(ஆ) இன்னும் கட்டடம் கட்டப்படாமல் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு உடனடியாக புதிய நவீன கட்டடம கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 2000 ஆம் ஆண்டு மே மாதம் வரை 71 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன கட்டடம் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

(ஆ) வாடகைக் கட்டடத்தில் இயங்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் புதிய கட்டடங்கள் கட்டித்தரும் பணி தொடர்ந்து



நடைபெறுகிறது. சொந்த அடிமனை இருக்கும் வங்கிகளுக்கு, கட்டடம் கட்ட முன்னுரிமை வழங்கப்படுகிறது.

40—

## சொந்தக் கட்டடம் கட்டுதல்

**வினா 36748—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணித் தொகுதி, திருச்சிற்றம்பலம், பூவாணம், பள்ளத்தூர், இரண்டாம் புலிக்காடு ஆகிய இடங்களில் இயங்கிவரும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

திருச்சிற்றம்பலம், பூவாணம், பள்ளத்தூர், இரண்டாம் புலிக்காடு ஆகிய இடங்களில் இயங்கிவரும் கூட்டுறவுச் சங்கங்களில் சொந்தக் கட்டடம் கட்ட அடிமனை இல்லை. திருச்சிற்றம்பலம், பூவாணம் ஆகிய சங்கங்கள் குறைந்த இலாபத்தில் செயல்படுவதால் அடிமனை வாங்க போதிய நிதி வசதி இல்லை. பள்ளத்தூர், இரண்டாம் புலிக்காடு ஆகிய இரு சங்கங்களும் செயலிழந்து உள்ளதால் இவற்றிடம் எந்த நிதி வசதியும் இல்லை. எனவே, மேற்படி சங்கங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்காமல் வாடகை இடங்களில்தான் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

41—

## பால் கூட்டுறவுச் சங்கம்

**வினா 30627—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, நத்தம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பால் கூட்டுறவுச் சங்க கட்டடத்தின் வேலையை பூர்த்தி செய்து பால் கூட்டுறவுச் சங்கம் நடைபெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2001 ஜனவரி 31

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதியில் உள்ள நத்தம்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு 1995-96 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டி 1-8-1997 முதல் மேற்படி சங்கம் புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

42—

**நிலம் கையகப்படுத்துதல்**

**வினா 35703—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டாட்சியர் அலுவலக விரிவாக்கத்திற்கு நிலம் கையகப்படுத்துப் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

43—

**பணி நிரந்தரம்**

**வினா 42479—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-ல் வேலை தேடித்தரும் அலுவலகம் மூலம் அனைத்து நீதிமன்றங்களுக்கும் 394 தட்டச்சர்கள் அரசு நியமித்ததா?



2001 ஜனவரி 31]

(ஆ) ஆம் எனில், அவர்களின் பணி எப்போது நிரந்தரம் செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) 1996ஆம் வருடம் நீதித் துறையில் பணிகளைத் துரிதப்படுத்தும் வகையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தட்டச்சர் வீதம் 394 பணியிடங்கள் அரசு ஆணை (நிலை) எண் 1699, நாள் 11-11-1996-ல் ஏற்படுத்தப்பட்டன.

(ஆ) இப்பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பப்பட வேண்டும். ஆனால் தேர்வுகள் நடத்தி, நிரந்தரப் பணியாளர்களால் 394 தட்டச்சர் பணியிடங்களை நிரப்ப கால அவகாசம் தேவைப்பட்டதால், நிரந்தரப் பணியாளர்கள் நியமனம் செய்யப்படும்வரை, தற்காலிகமாக தட்டச்சர்கள் மாவட்ட நீதிபதிகளால் பணி நியமனம் செய்யப்பட்டனர். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வுகள் நடத்தி தேர்வு செய்யப்பட்ட பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டதும், தற்காலிகத் தட்டச்சர்கள் பணி நீக்கம் செய்யப்பட வேண்டும். இதற்கிடையில் தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் தங்களது பணியை நிரந்தரம் செய்ய வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தனர். இவ்வழக்கு உயர்நீதிமன்றத்தின் டிவிஷன் பெஞ்சினால் விசாரணை செய்யப்பட்டு 28-9-2000 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பில், தற்காலிகத் தட்டச்சர்களைத் தமிழ்நாடு தேர்வாணையத்தின் நிர்வாக வரம்பிற்குள் வராத உயர்நீதிமன்ற நிர்வாக ஆளுகைக்கு உட்பட்ட நகல் எடுப்போர் (Copist) பரிசோதகர் (Examiner) படிப்பவர் (Reader) ஆகிய பணியிடங்களில் பணி நியமனம் செய்யலாம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இத்தீர்ப்பின் அடிப்படையில், உயர்நீதிமன்றத்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

44—

**சிட்கோ நிறுவனம்**

**வினா 39672—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சிட்கோ நிறுவனம் எவ்வளவு நட்டத்தில் இயங்கி வருகிறது?

[2001 ஜனவரி 31

(ஆ) அதை இலாபத்தில் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சிட்கோ நிறுவனத்தில் 1995-96ஆம் ஆண்டில் மட்டுமே ரூ.327.19 இலட்சங்கள் நட்டத்தில் இயங்கியது.

(ஆ) ஆம். 1996-97 ஆம் ஆண்டில் ரூ.55.63 இலட்சங்களும், 1997-98-ல் 186.36 இலட்சங்களும், 1998-99-ல் ரூ.42.96 இலட்சங்களும் இலாபம் ஈட்டியது.

**45—**

## நில மதிப்பீடு

**வினா 40456—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பதிவுத் துறையில் நில மதிப்பீடுகளுக்கு மேல்முறையீடு செய்யும் வசதியினை விரைவாக செயல்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நில மதிப்பீடுகளுக்கு மதிப்பு நிர்ணயம் செய்தலில் வேறுபாடுகள் இருப்பின் அல்லது நில மதிப்பினை கட்சிக்காரர்கள் ஏற்க மறுப்பின் முதற்கட்டமாக கட்சிக்காரர்கள் மேல்முறையீட்டின் மூலம் மனு சமர்ப்பித்து தீர்வு பெற்றுக்கொள்கிறார்கள்.



2001 ஜனவரி 31]

மேல்முறையீட்டின் மூலம் பெறும் மனுக்களை வழிகாட்டி குழு அடங்கிய உறுப்பினர்கள் இடத்தினை நேரில் சென்று பார்வையிட்டு, முரண்பாடுகள் இருப்பின் முரண்பாடுகள் களைந்து ஆணையிடப்படுகிறது. இம்மதிப்பினையும் கட்சிக்காரர்கள் ஏற்காத பட்சத்தில், 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47-எ (1)-ன் கீழ் ஆவணத்தை அனுப்பி தனித் துணை ஆட்சியர் (முத்திரை) அவர்களால் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்துகொள்ள சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**46—**

## பத்திரப் பதிவு

**வினா 40744—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தற்போது பத்திரப்பதிவு செய்ய, கிராம அதிகாரியிடம் சான்று கோருவதால் ஏற்படும் முறைகேடுகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

நிலத்தின் தன்மையை அறியும்பொருட்டு சிட்டா, அடங்கல் போன்ற சான்றுகள் கோரப்படுகின்றன. மேற்படி சான்றுகளின் அடிப்படையில் நிலங்களின் மதிப்பு நிர்ணயம் செய்யப்படுவதால், பொதுமக்களுக்கு நன்மை ஏற்படுகிறதே தவிர எந்த ஒரு இடையூறும் ஏற்பட வாய்ப்பில்லை எனவே, கிராம அதிகாரிகளிடம் சான்று கோருவதால் ஏற்படுகின்ற முறைகேடுகள் குறித்த புகார்கள் ஏதும் பதிவுத் துறையில் பெறப்படுவதில்லை.

[2001 ஜனவரி 31

47—

### விடுதிகளில் வசதி செய்தல்

**வினா 28713—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை காவாங்கரை பகுதியில் அமைந்துள்ள ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் குடிநீர் வசதி செய்யவும் மின் பராமரிப்பு பணிகளை செய்யவும் கட்டட பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், காவாங்கரை பகுதியில் அமைந்துள்ள செங்கோட்டை ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் குடிநீர் வசதி, மின் பராமரிப்பு பணிகள் ரூ. 1.34 இலட்சம் செலவில் 1999-2000 நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டு கட்டடமும் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

48—

### தாட்கோ

**வினா 36227—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மாணவ, மாணவிகளுக்கு கணிப்பொறி பட்டயப் பயிற்சி "தாட்கோ" மூலம் எத்தனை பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது?



2001 ஜனவரி 31]

(ஆ) இதற்காக சேலம் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1999 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மாணவ, மாணவியருக்கு கணிப்பொறி பட்டயப் பயிற்சி தாட்கோ மூலம் 70 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

(ஆ) இதற்காக சேலம் மாவட்டத்திற்கு ரூ.3,36,000 உதவித் தொகையும் ரூ.9,500 பயிற்சித் தொகையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

49—

### விடுதி செப்பனிடுதல்

**வினா 40021—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் பாலசுந்தரம் சாலையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் விடுதி பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

கோவை டாக்டர் அம்பேத்கர் அரசு ஆதிதிராவிட நல கல்லூரி மாணவர் விடுதியில் 2000-2001 ஆம் நிதியாண்டில் ரூ.66,467 செலவில் மின்விசிறிகள் பழுதுநீக்கம், கழிப்பிட வசதி, மேல்நிலைத்தொட்டி குழாய்கள், விடுதியிலுள்ள பழைய மின் மோட்டார் ரீவைண்டிங் ஆகிய பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளுக்கு ரூ.1.20 இலட்சம் திருத்திய மதிப்பீட்டில் கோரப்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப பணிகள் மேற்கொள்ளப்படும்.

50—

### மீன் காட்சியகம்

**வினா 39487—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மெரினா கடற்கரையில் உள்ள மீன்காட்சியகத்தை 1999-2000-த்தில் எத்தனை பார்வையாளர்கள் பார்வையிட்டு உள்ளனர்?

(ஆ) இதன் மூலம் அரசுக்குக் கிடைத்த மொத்த வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மெரினா மீன்காட்சியகத்தில் 1999-2000 ஆம் ஆண்டு மொத்தம் 1,77,507 பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர். இதில் பெரியவர்கள் 1,12,692, சிறியவர்கள் 64,815.

(ஆ) 1999-2000 ஆம் ஆண்டில் மெரினா காட்சியகத்தால் அரசுக்குக் கிடைத்த மொத்த வருமானம் ரூ.4,02,891 ஆகும்.

## பத்தாம் பட்டியல்

1—

### பணியாளர்களை நியமித்தல்

**வினா 31794—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு இரண்டு ஆண்டுகள் ஆகியும் போதுமான அலுவலக பணியாளர்களை நியமிக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் முதலில், நேர்முக உதவியாளர் முதல் அலுவலக உதவியாளர்கள் வரை மொத்தம் 49 பணியாளர்கள் இருந்தனர். 16-11-1999 தேதியிட்ட உள் துறை, ஆணை எண் (நிலை) 1562-ல் புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட கூடுதல் அமைச்சுப் பணியிடங்களில், மதுரை மாவட்டத்திற்கு மட்டும் 9 உதவியாளர்களும், 15 இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பதவிகளும் வழங்கப்பட்டு, தற்பொழுது மொத்தம் 73 பணியாளர்கள் அங்கு பணிபுரிந்து வருகிறார்கள். எனவே, இம்மாவட்டத்தில் அமைச்சுப் பணியாளர்களின் எண்ணிக்கை போதிய அளவில் உள்ளது.

2—

### பணியாளர்கள் எண்ணிக்கை

**வினா 33234—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறையில் எத்தனை அமைச்சுப் பணியாளர்கள் பணி புரிகின்றனர்?

(ஆ) இவர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவல் துறையில் தற்பொழுது மொத்தம் 4906 அமைச்சுப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். அரசால் அனுமதி அளிக்கப்பட்ட, நல்ல தரம் வாய்ந்த மருத்துவமனைகளில் அவர்களுடைய குடும்பத்தினருக்கு முக்கியமான சிகிச்சை/அறுவை சிகிச்சைகளுக்கு செலவான தொகையில் அதிகபட்ச நிதி உதவியாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அயல் நாட்டில் சிகிச்சை மேற்கொண்டால், மேற்கண்ட நிதியுதவியுடன் மேலும் ஒரு இலட்சம் வரை 10% வட்டியுடன் கடனாக வழங்கப்படுகிறது.

[2001 ஜனவரி 31

இது தவிர பள்ளி இறுதித் தேர்வு மற்றும் +2 தேர்வில் மாவட்டங்களில் முதல் மூன்று இடங்களில் வரும் அமைச்சுப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு தலா ரூ.6000, ரூ.4000, ரூ.2000 மற்றும் ரூ.7000, ரூ.5000, ரூ.3000 முறையே பரிசாக வழங்கப்பட்டு வருகிறது.

அமைச்சுப் பணியாளர்களின் குழந்தைகள் மேற்படிப்புக்காக ரூ.500 முதல் ரூ.5000 மானியமாக ஒரு தடவை வழங்கப்பட்டு வருகின்றது.

3—

**ஆரம்பக் கல்வி**

**வினா 42447—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஆரம்பக் கல்வி தரம் உயர்த்த அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்து வருகிறது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :**

தமிழகத்தில் ஆரம்பக் கல்வியின் தரம் உயர்த்த கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கட்டட, குடிநீர், கழிப்பறை வசதிகள் உருவாக்கிட மைய அரசு, மாநில அரசு, யூனிசெப் நிறுவனம் உதவியுடன் ஊரக வளர்ச்சி இயக்கத்தின் உதவியுடனும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தி கட்டமைப்பு வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. தொடக்கக் கல்வி முனைப்பு இயக்கத்தின் மூலம் பள்ளி வயது குழந்தைகளை பள்ளிகளில் சேர்க்க கவனம் எடுக்கப்படுகிறது. தொலைக்காட்சி மூலம் பயன் அடைந்திட வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் கற்றலின் இனிமை என்ற புதிய கல்வி முறையில் கல்வி புகட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



2001 ஜனவரி 31]

4—

**மருத்துவர் பணியிடம்**

**வினா 24770—திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் பணியிடம் நீண்ட நாட்களாக காலியாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை 3 ஆகும். தற்போது இரண்டு மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். காலியாக உள்ள பணியிடம் விரைவில் நிரப்பப்படும்.

5—

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா 27114—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம் அ.புதூர் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், ஒரு மருத்துவரை உடனடியாக பணி அமர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம். எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், அ. புதூர் என்ற பெயரில் துணை

சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இதற்கு மருத்துவ அலுவலர் பதவி ஒப்பளிப்பு செய்யப்படவில்லை.

6—

மருத்துவர் பணியிடம்

**வினா 29003—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை வட்ட மருத்துவமனையில் குழந்தை மருத்துவர் பணியிடம் நிரப்பப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணியிடத்திற்கு மருத்துவரை நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை வட்ட மருத்துவமனையில் குழந்தை மருத்துவர் பணியிடம் என்று தனியாக பணியிடம் எதுவும் உருவாக்கப்படவில்லை. ஒப்பளிக்கப்பட்ட நான்கு மருத்துவர் பணியிடங்கள் போக, கூடுதலாக ஒரு மருத்துவர் வீதம் 5 மருத்துவர்கள் தற்போது பணிபுரிகின்றனர்.

7—

சிறப்புப் பயிற்சி

**வினா 34599—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எல்லா வட்ட மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் பணியாற்றும் டாக்டர்கள், செவிலியர் மற்றும் தொழில்நுட்ப ஊழியர்களுக்கு விபத்து சிகிச்சை குறித்து சிறப்புப் பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?





விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒவ்வோர் ஆண்டும், தொடர் மருத்துவக் கல்வித் திட்டத்தின் கீழ் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தொழில்நுட்ப ஊழியர்களுக்கு விபத்து சிகிச்சை குறித்து சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

8—

சாலை வசதி

**வினா 35580—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனை புதிய வளாகத்தில் காசநோய் பகுதிக்குச் செல்வதற்கு சாலை வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி அரசு தலைமை மருத்துவமனை புதிய வளாகத்தில் காசநோய் பகுதிக்குச் செல்ல, சரல் கற்கள் மூலம் சாலையும் சாலை ஓரங்களில் கழிவுநீர் கால்வாயும் அமைக்கப்பட்டுள்ளது.

9—

மருத்துவர் பணியிடங்கள்

**வினா 36612—திரு. ச. இராஜு ரெட்டி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், தளி தொகுதி, வட்டத் தலைநகரமான தேன்கனிக்கோட்டை 24 மணி நேர மருத்துவமனையில் போதுமான மருத்துவர், செவிலியர் இல்லை என்பதை அரசு அறியுமா?

[2001 ஜனவரி 31

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தர்மபுரி மாவட்டத்திலுள்ள தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் உள்ள மொத்த படுக்கைகள் எண்ணிக்கை 34. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்கள் 2. செவிலியர் பணியிடங்கள் மருத்துவர் பணியிடங்கள் இரண்டில் ஒன்று முதுநிலை குடிமை மருத்துவர். மற்றொன்று உதவி மருத்துவர் பணியிடம். மேற்படி ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்கள் மற்றும் செவிலியர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**10—**

### மருத்துவர்களின் எண்ணிக்கை

**வினா 38625—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒரத்தநாடு அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை நான்கு. அதில் நான்கு மருத்துவர்கள் பணியிடமும் தற்பொழுது நிரப்பப்பட்டு விட்டன.

**11—**

### நிரந்தர மருத்துவர்

**வினா 40326—திரு. டி. த. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 31]

அரசு ரப்பர் கழகத்தில் கீரிப்பாறை என்னுமிடத்தில் செயல்படும் மருத்துவமனையில் நிரந்தர டாக்டரை வைக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், கீரிப்பாறை என்னுமிடத்தில் உள்ள அரசு ரப்பர் கழகம் அரசால் மேற்கொண்டுள்ள (Undertaking) நிறுவனமாகும். மருத்துவத் துறையிலிருந்து வேற்றுப்பணி மூலமாகத்தான் மருத்துவர்களை கீரிப்பாறை அரசு ரப்பர் கழகத்திற்கு பணியமர்த்த இயலும். நிரந்தரமாக மருத்துவர் பணியமர்த்த வேண்டும் என்றால் இது குறித்து ரப்பர் கழகம், கழக விதிகள்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**12—**

### தொலைபேசி இணைப்பு

**வினா 40501—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தொலைபேசி இணைப்பு அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தொலைபேசி இணைப்பு வழங்கவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், 424 பிரதான ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல நிலையங்களுக்கு தொலைபேசி இணைப்பு வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதில் 310 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தொலைபேசி இணைப்புகள் பெறப்பட்டுள்ளன. மீதமுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தொலைபேசி இணைப்பு பெற நடவடிக்கை

[2001 ஜனவரி 31

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இனிவரும் காலத்தில் தேவையின் அடிப்படையில் மற்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொலைபேசி வசதி செய்திட பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

13—

**பணி நியமனம்**

**வினா 40735—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ்நாடு தேர்வாணைக் குழு தேர்வு நடத்தி தகுதி பெற்ற எத்தனை மருத்துவர்களை அரசு மருத்துவமனைகளில் பணி நியமித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ்நாடு தேர்வாணைக் குழு மூலம் தேர்வு நடத்தி, தகுதி பெற்று பணி நியமனம் பெற்ற மருத்துவர்கள் 733. அவர்களில் 612 மருத்துவர்கள் இதுவரை பணியில் இணைந்துள்ளனர்.

14—

**கீழாநெல்லியின் பயன்கள்**

**வினா 41951—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்ப மரத்தின் பயன்களை நல்வாழ்வுத் துறை நூலாக வெளியிடுமா?

(ஆ) அதே போல கீழாநெல்லியின் பயன்களை நாடறியச் செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வேப்பமரத்தின் பயன்களை நூலாக வெளியிடுவது பற்றிய செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.



2001 ஜனவரி 31]

(ஆ) கீழாநெல்லியின் பயன்களை நாட்டு மக்கள் அறிந்துள்ளனர். மஞ்சள் காமாலை நோயை இம்மூலிகை குணப்படுத்துகிறது எனத் தெரிந்து வைத்துள்ளனர். கீழாநெல்லியின் குண நலன்களைப்பற்றி பொதுமக்களுக்கு சித்த மருத்துவர்கள் நல்ல முறையில் விளக்கம் கூறி வருகின்றனர்.

15—

**அரசு விளம்பரம்**

**வினா 42277—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நமது நாட்டிலும், தமிழகத்திலும் மூலிகைகளின் மூலம் உடல் நலத்தை பேணிக்காக்க பொதுமக்கள் தெரிந்துகொள்ளும்வண்ணம் மூலிகைகளின் பெயர்களை அரசு மூலமாக விளம்பரப்படுத்தும் திட்டம் ஏதும் செயல்படுத்தப்பட்டு வருகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அனைத்து மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்களின் கீழ் செயல்பட்டு வரும் இந்திய மருத்துவமனைகளிலும், வெளி நோயாளிகள் பிரிவுகளிலும், பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் தினம் ஒரு மூலிகையின் பெயரையும் அதன் பயன்களையும் வெளிநோயாளிகள் பிரிவில் பலகையில் எழுதப்பட்டு பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு வருகிறது. மற்றும் உள் நோயாளிகள் பிரிவில் மருத்துவம் தொடர்பான திருக்குறள் எழுதப்பட்டு பார்வைக்காக வைக்கப்படுகிறது. மேலும் இலவச சிகிச்சை முகாம்கள் நடைபெறும் இடங்களிலும், அரசு கண்காட்சிகளிலும், "வருமுன் காப்போம்" திட்ட முகாம்களிலும், மூலிகைகளின் மாதிரிகள் வைக்கப்பட்டு அதன் பயன்பாடுகளை பொதுமக்கள் அறியும்வண்ணம் விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. மற்றும் மூலிகைத் தோட்டங்களும் பராமரிக்கப்பட்டு அம்மூலிகைகளில் பெயர் பொறிக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படுகிறது.

[2001 ஜனவரி 31

16—

### மூலிகை மருந்துகள்

**வினா 42279—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மூலிகை மருந்துகள் மூலம் பல்வேறு வியாதிகள் குணமடைவதால் மூலிகைகள் அழிந்து போகாமல் இருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மூலிகைகள் அழிந்து போகாமல் இருக்க மூலிகைப் பண்ணைகள் அமைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்திற்கு தமிழ்நாட்டில் இரண்டு இடங்களில் மூலிகைப் பண்ணைகள் உள்ளன. சென்னை, அரும்பாக்கத்தில் 5 (ஐந்து) ஏக்கர் நிலப்பரப்பிலும், நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் 55 ஏக்கர் நிலப்பரப்பிலும் மூலிகைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு பல்வேறு மூலிகைகள் பயிரிடப்பட்டு வருகின்றன.

17—

### மருத்துவர்கள்

**வினா 43278—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஏற்காட்டில் சுமார் 40,000 மக்கள் வசிக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அங்குள்ள அரசு மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?



2001 ஜனவரி 31]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை 2. அவ்விரு பணியிடங்களும் தற்பொழுது நிரப்பப்பட்டு, இரு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

18—

### மருத்துவர்களை நியமித்தல்

**வினா 43294—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் தொகுதி, போரூரிலுள்ள 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போதிய மருத்துவர்கள் நியமிக்க அரசிடம் உத்தேசம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

வில்லிவாக்கம் தொகுதியில் இயங்கி வரும் போரூர் ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாகும். இதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட மருத்துவ அலுவலர் பதவி 3 ஆகும். இதில் ஒரு முதுநிலைக் குடிமை மருத்துவ அலுவலர் மற்றும் 2 உதவி மருத்துவ அலுவலர்கள் பணியிடம் உள்ளனர். எனவே, மருத்துவ அலுவலர்கள் போதிய அளவில் உள்ளனர்.

19—

### பாதாளச் சாக்கடைத் திட்டம்

**வினா 21513—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 31

(அ) கோயம்புத்தூர் நகரில் பல இடங்களில் பாதாளச் சாக்கடைக்காகத் தோண்டப்பட்ட பள்ளங்கள் சரியாக மூடப்படாததால் போக்குவரத்து பாதிப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகரில் பல இடங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவதற்காக தோண்டப்பட்ட பள்ளங்கள் பகுதி பகுதியாக மூடப்பட்டு போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படாமல் செப்பனிடப்பட்டு வருகிறது.

20—

**நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 26072—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், சோலை அருகாவூர் ஜெயினர் வீதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், சோலை அருகாவூர் ஜெயினர் வீதி குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (1999-2000) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.



2001 ஜனவரி 31]

21—

**அடிப்படை வசதி**

**வினா 40025—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சியில் இராமநாதபுரம் நஞ்சுண்டபுரம் சாலையில் உள்ள மாநகராட்சி மயானத்திற்கு அடிப்படை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாநகராட்சி, நஞ்சுண்டபுரம் சாலையிலுள்ள மயானத்திற்குத் தேவையான வசதிகளான சுற்றுச்சுவர், எரிமேடை, கழிப்பிடம், குளியலறை, சாலைவசதி, தண்ணீர் மற்றும் தெரு விளக்கு ஆகியவற்றை அமைக்க ரூ.15.00 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

22—

**வடிகால் வசதி**

**வினா 40026—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சியின் 25, 22-வது வார்டுகளில் கால்வாயில் செல்லும் கழிவுநீருக்கு வடிகால் வசதியின்மையால் தண்ணீர் தேங்கி சுகாதாரம் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[2001 ஜனவரி 31

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோவை மாநகராட்சியில் 25, 22-வது வார்டுகளிலிருந்து செல்லும் கழிவுநீர் கால்வாய் அங்குள்ள விநாயகர் கோவில் அருகே மூடுகல் போடப்பட்டு மூடப்பட்டுள்ளது. இந்த இடத்தில் அடிக்கடி அடைப்பு ஏற்படுகிறது. இதனைச் சீராக்க மாநகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனை எதிர்த்து கோவில் நிர்வாகம் மாநகராட்சி மீது வழக்கு தொடர்ந்து அவ்வழக்கு நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில் மேற்படி கால்வாய் சீரமைக்கும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

**23—**

## இடம் ஆக்கிரமிப்பு

**வினா 40278—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அம்மாபேட்டையிலுள்ள பலபட்டறை சுடுகாடு பொது மக்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் இறந்தவர்களைக் கொண்டு செல்லவும், புதைப்பதற்கும் பொதுமக்கள் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த சுடுகாட்டை சர்வே செய்து ஆக்கிரமிப்பை அகற்றி காம்பவுண்ட் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை ஜோதி டாக்கீஸ் அருகிலுள்ள பலபட்டறை சுடுகாடு எனப்படும் மாநகராட்சி பொது மயானத்தின் ஆக்கிரமிப்புகள் மற்றும் சமாதிகள் அனைத்தும் தற்போது அகற்றப்பட்டுள்ளன. பொது மக்கள் சவ அடக்கம் செய்வதற்கு இடைஞ்சல் ஏதும் இல்லை. மேற்கண்ட மயானத்திற்கு சுற்றுச்சுவர் கட்டவும், கொட்டகை அமைக்கவும், தண்ணீர் வசதி செய்யவும் அப்பகுதி



மக்களால் குழு ஒன்று அமைக்கப்பட்டு குழுவின் பொறுப்பில் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

**24—**

## பாதையை செப்பனிடுதல்

**வினா 41563—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாநகராட்சி, 39-வது வார்டு சொக்கலிங்கபுரத்திலிருந்து அண்ணாநகர் முதல் தெருவிற்குச் செல்லும் பாதையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பாதையைச் செப்பனிட்டு சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 39-வது வார்டுக்குட்பட்ட சொக்கலிங்கபுரத்திலிருந்து அண்ணாநகர் செல்லும் பாதையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள முள் வேலிகளை அகற்றி பாதை ஒழுங்குபடுத்தப்பட்டு பாதை பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2001-2002 நிதியாண்டில் தார் சாலை அமைத்துக்கொடுக்க மாநகராட்சியால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**25—**

## குடிநீர் குழாய்

**வினா 42225—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் 1-வது வார்டில் நாச்சிப்பாளையம்-முண்டாச்சியூர் பகுதிகளில் குழாய் பதிக்கப்பட்டு விட்டதா?

(ஆ) இல்லையெனில், நடப்பாண்டில் எப்போது?

[2001 ஜனவரி 31

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி-ராசிபுரம் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் கீழ் எடப்பாடி நகரில் 1-வது வார்டு நாச்சியம்பாளையத்திற்கு காவிரி குடிநீர் திட்டத்தில் குழாய் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டு 6/1999 முதல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

முண்டாச்சியூர் குடியிருப்பு, எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதியின் கீழ் வருகிறது. முண்டாச்சியூர் குடியிருப்பின் மக்கட்தொகை 175 ஆகும். இப்பகுதி பூமரத்துக்கொட்டாயிலுள்ள 10,000 லிட்டர் மேல்நிலை நீர்த் தொட்டியிலிருந்து 850 மீட்டர் தொலைவில் உள்ளது. பூமரத்துக் கொட்டாயிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து முண்டாச்சியூருக்கு குடிநீர்க் குழாய் பதிக்க வேண்டுமெனில் இடையிலுள்ள தனியார் நிலத்தின் வழியாகத்தான் அமைக்க வேண்டும். தனியார்கள் யாரும் அவர்களின் நிலத்தின் வழியாக குழாய் பாதை அமைக்க அனுமதி தரவில்லை என்பதால் இப்பகுதியில் குடிநீர்க் குழாய்கள் பதிக்க இயலாமல் போய்விட்டது.

மேலும், எடப்பாடி-ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிவடைந்து 31-12-1998 அன்று எடப்பாடி நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு எடப்பாடி நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. முண்டாச்சியூர் குடியிருப்பு எடப்பாடி நகராட்சியின் நிர்வாக வரம்புக்குள் வருவதாலும் இனி வருங்காலத்தில் முண்டாச்சியூர் குடியிருப்புக்கு தனியாரிடமிருந்து நிலம் பெற்று, பொதுப்பாதை அமைத்து அதன்பின் 850 மீட்டர் நீளத்திற்கு குழாய் பதிக்க குழாய்கள் நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்க எடப்பாடி நகராட்சியே முடிவு செய்து பணி மேற்கொள்ளலாம்.

**26—**

## குழல் விளக்கு

**வினா 43094—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், 25-வது வார்டு பகுதிக்குட்பட்ட டேனியல் தாமஸ் தெருவில் உள்ள மின்



2001 ஜனவரி 31]

கம்பத்தில் எண் எஸ்.5/இ1/ஏ, (புதிய எண் டபிள்யு.25-106) ஏற்கெனவே பொருத்தப்பட்ட குழல்விளக்கு அகற்றப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம் 25-வது வார்டு பகுதிக்குட்பட்ட டேனியல் தாமஸ் தெரு மின்கம்பம் எண் 25-106-இல் இருந்து குழல்விளக்கு அதிவேக காற்றினால் கீழே விழுந்து சேதமடைந்து விட்டது. தற்போது மின்கம்பத்தில் புதியதாக குழல்விளக்கு பொருத்தப்பட்டு மின்விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது.

**27—**

## கடைகளின் விவரம்

**வினா 43475—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான கடைகள் எத்தனை?

(ஆ) வாடகைக்கு விடப்பட்டவை எத்தனை?

(இ) 1999-2000 ஆம் ஆண்டில் இதன் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

| | |
|---|---|
| (அ) சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான கடைகள் .. | 715 |
| (ஆ) வாடகைக்கு விடப்பட்டவை .. | 715 |
| (இ) 1999-2000-ஆம் ஆண்டில் இதன் மூலம் கிடைத்த வருமானம் .. | ரூ91,59,994 |

[2001 ஜனவரி 31

தற்போது ரூ.5.36 கோடியில் புதியதாக 172 கடைகள் மற்றும் 15 அலுவலகங்கள் கட்டப்பட்டு ஏலம் விட நடவடிக்கையில் உள்ளது.

**28—**

### தூர் எடுத்தல்

**வினா 22481—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சென்னிய விடுதி ஊராட்சி, புதுவயல் வாய்க்காலை தூர் எடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம். தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், சென்னியவிடுதி ஊராட்சி புதுவயல் வாய்க்கால், கல்லணை வாய்க்கால் ஆர்டி 28/03 வலது கரையில் நேரடி மதகு மூலம் நீர்பெறும் வாய்க்கால்களில் கீழ்க்கண்டவாறு பாசனப்பகுதி மேன்மைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

| | விவரங்கள் | மதிப்பீடு எண் 47/99-2000-ன் படி | மதிப்பீடு எண் 48/99-2000-ன் படி | சுழற்சிமுறைப் பாசனத் திட்டம் |
|---|---|---|---|---|
| 1. | காரைவாய்க்கால் அமைத்தது | 57 மீட்டர் | 149.50 மீட்டர் | — |
| 2. | தடுப்பணை | 2 எண்கள் | — | — |
| 3. | பிரிவுத் தொட்டி | — | 3 எண்கள் | 2 எண்கள் |
| 4. | பழைய வாய்க்கால் ஆழப்படுத்துதல் | 1200 மீட்டர் | 1315 மீட்டர் | — |
| 5. | செலவு செய்யப்பட்ட தொகை | ரூ.73,000 | ரூ.1,81,000 | ரூ.14,000 |



2001 ஜனவரி 31]

**29—**

### உள்கட்டமைப்பு வசதி

**வினா 33850—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

தென்காசி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்குகீழ் குறிப்பிட்டுள்ளவாறு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்கெனவே செய்து கொடுக்கப்பட்டுள்ளன:—

| | கட்டடங்கள் விவரம் | கட்டி முடிக்கப் பட்ட வருடம் | கட்டடத்தின் அளவுகள் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | அலுவலகத்துடன் கூடிய ஓய்வறை | 1979 | 15.8 x 7.1 | 3.50 |
| 2. | நடவடிக்கை கொட்டகை | 1979 | 36.10 x 12.10 | |
| 3. | காய்வு களம் | 1981 | 20 x 20 | 0.23 |
| 4. | ஊரகக் கிட்டங்கி | 1987 | 30.15 x 15.30 | 4.00 |
| 5. | ஏல மேடை | 1988 | 30.0 x 15.20 | 3.25 |
| 6. | கழிவறை வசதிகள் | 1991 | 10.20 x 3.0 | 0.90 |
| 7. | கடைகள் வளாகம் (5 எண்கள்) | 1997 | 16.20 x 4.45 | 5.00 |

[2001 ஜனவரி 31

30—

### உலர்களம் அமைத்தல்

**வினா 33876—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி பகுதியில் விவசாயிகள் நலன் கருதி உலர்களம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தென்காசி பகுதியில் உலர்களம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

31—

### நிவாரணப்பணிகள்

**வினா 38313—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் தென்னந் தோப்புகளில் ஏற்பட்டுள்ள நோயால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வறுமையில் வாடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நிவாரணப் பணிகள் என்ன?



2001 ஜனவரி 31]

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்தில் 7,20,510 தென்னை மரங்களில் எரியோபைட் என்னும் சிலந்திப்பூச்சி தாக்குதல் காணப்பட்டுள்ளது. இப்பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விளம்பர சாதனங்கள் மூலம் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் மரம் ஒன்றுக்கு ரூ.3 வீதம் பாதிக்கப்பட்ட மரங்களில் 13,000 மாங்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் மானியத்தொகை வழங்க நிதியுதவி வேண்டி மத்திய அரசிடம் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இப்பூச்சியைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் கண்டுபிடிக்கப்பட்ட டிஎன்ஏயூ—அக்ரோ பையோசைட் என்ற பல்கலைக்கழகம் பரிந்துரை செய்துள்ளது. அதன்படி:

1. அக்ரோ பையோசைட் மருந்து:—மரம் ஒன்றுக்கு 30 மில்லி வேர் மூலம் செலுத்தப்பட வேண்டும். 45 நாட்கள் கழித்து கார்போசல்பான் என்ற மருந்தை சம அளவில் தண்ணீருடன் கலந்து (15 மி.லி./15 மி.லி) வேர் மூலம் செலுத்தப்பட வேண்டும். 60 நாட்கள் கழித்து மேலும் 30 மில்லி அக்ரோ பையோசைட் மருந்தினை வேர் மூலம் செலுத்த வேண்டும்.

2. மரம் ஒன்றுக்கு யூரியா:—1 முதல் 3 கிலோவும், சூப்பர் பாஸ்பேட் 2 கிலோவும், பொட்டாஷ் 3.5 கிலோவுடன் 5 கிலோ வேப்பம் புண்ணாக்கும், 50 கிலோ மக்கிய தொழு உரமும் இடவேண்டும். மரம் ஒன்றுக்கு நுண்ணூட்ட உரங்களான போரக்ஸ் 50 கிராம், ஜிப்சம் 1 கிலோ, மக்னீசியம் சல்பேட் 1/2 கிலோ இட வேண்டும்.

வேளாண்மைப் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்தவாறு சோதனைகள் நடைபெற்று வருகின்றன. அக்ரோ பையோசைட் மருந்து உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

[2001 ஜனவரி 31

32—

### உதவி இயக்குனர் நியமித்தல்

**வினா 39167—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணத்தில் தோட்டக்கலை உதவி இயக்குநர் நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கும்பகோணத்தில் தோட்டக்கலை உதவி இயக்குநர் நியமிக்கும் திட்டம் ஏதும் தற்போது தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையில் இல்லை. மாவட்ட தலைமையிடமான தஞ்சாவூரில் மட்டும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம் உள்ளதால், தோட்டக்கலை உதவி இயக்குநர் தஞ்சாவூரில் பணிபுரிந்து வருகிறார். மேலும் தஞ்சாவூரில் தற்போது பணியாற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர் கும்பகோணத்தில் உள்ள தோட்டக்கலை பணிகளையும் சேர்த்து கவனித்து வருகிறார்.

33—

### எண்ணெய் பனை சாகுபடி

**வினா 39826—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டத்தில் எண்ணெய் பனை சாகுபடி செய்வதற்கு அரசு எடுத்துள்ள முயற்சிகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டத்தில் எண்ணெய் பனை சாகுபடி செய்ய திட்டம் எதுவும் தற்போது இல்லை.



2001 ஜனவரி 31]

34—

### தொழிற்கூடம்

**வினா 40340—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் எடப்பாடி நகரில் ஒரு கடலை எண்ணெய் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் கடலை எண்ணெய் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைப்பதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

35—

### அரசு கொள்முதல்

**வினா 42051—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தற்போது தமிழ்நாட்டில் தேங்காய் விலை வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதால் விவசாயிகளிடம் அரசு கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் "டான்பெட்" நிறுவனம் மூலம் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது தேங்காய் விலை வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதால், அரசு தேங்காய்களாக கொள்முதல் செய்யமுடியுமா என்பதைக் கண்டறிய ஓர் உயர்மட்டக்குழு கேரளா சென்று வந்துள்ளது. இந்தக் குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

[2001 ஜனவரி 31

36—

### நெல் உற்பத்தி

**வினா 42713—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி எவ்வளவு டன்?

(ஆ) இதில் சம்பா நெல் எவ்வளவு மெட்ரிக் டன், குறுவை நெல் எவ்வளவு மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆம் ஆண்டில் 72.25 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது.

(ஆ) பருவவாரியாக உற்பத்தி விவரம் பின்வருமாறு:

| | நெல் | அரிசி (இலட்சம் மெட்ரிக் டன்) |
|---|---|---|
| கார்/குறுவை/சொர்ணவாரி | 14.584 | 9.72 |
| சம்பா/தாளடி/பிசர்ணம் | 72.090 | 48.06 |
| நவரை/கோடை | 21.701 | 14.47 |
| மொத்தம் | 108.375 | 72.25 |

37—

### தேங்காய் விளைச்சல்

**வினா 42858—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்சமயம் தமிழகத்தில் தென்னை மரங்களைத் தாக்கி வரும் வைரஸ் நோயால் தேங்காய் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?



2001 ஜனவரி 31]

(ஆ) ஆம் எனில், தென்னை மரத்துக்கு ஏற்பட்ட வைரஸ் நோய் மற்ற இடங்களிலுள்ள மரத்துக்கும் பரவாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் தமிழகத்தில் தென்னை மரங்களில் வைரஸ் நோய் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை. எனினும், எரியோபைட் என்னும் சிலந்திப்பூச்சித் தாக்குதல் காணப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்துள்ள பயிர் பாதுகாப்பு முறைகள் விளம்பர சாதனங்கள் மூலம் தென்னை விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

38—

### கூடுதல் அறைகள்

**வினா 42187—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் வன ஓய்வு இல்லத்தில் கூடுதலாக அறைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குற்றாலம் வன ஓய்வு விடுதி பழுதடைந்த நிலையில் உள்ளபடியால் கூடுதல் அறைகள் கட்ட இயலாத நிலை உள்ளது. நிதி பற்றாக்குறையின் காரணமாக பழைய விடுதியை இடித்துவிட்டு அதே இடத்தில் புதிய விடுதி கட்டும் பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

[2001 ஜனவரி 31

39—

### பணியாளர்களின் எண்ணிக்கை

**வினா 37033—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரிவோரின் எண்ணிக்கை நாடுகள் வாரியாக எத்தனை?

(ஆ) இவர்களில் ஆண்கள் எத்தனை பேர்?

(இ) தமிழகத்தில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்று வேலைவாய்ப்பு தேட அரசு என்னென்ன வழிகளில் உதவி செய்து வருகிறது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :**

(அ) தமிழ்நாடு அரசு நிறுவியுள்ள அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் வாயிலாக வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை நாடுவாரியாக பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| பஹ்ரைன் | .. | 15 |
| போட்ஸ் வானா | .. | 01 |
| கினி | .. | 21 |
| ஈராக் | .. | 769 |
| ஜோர்டான் | .. | 37 |
| கென்யா | .. | 15 |
| குவைத் | .. | 953 |
| லைபீரியா | .. | 02 |
| லிபியா | .. | 605 |
| மலேசியா | .. | 30 |



2001 ஜனவரி 31]

சென்னை-600 008 நூலகம் 184813

| | | |
|---|---|---|
| மாலத் தீவுகள் | .. | 07 |
| ஓமன் | .. | 83 |
| கத்தார் | .. | 05 |
| சவூதி அரேபியா | .. | 85 |
| சிங்கப்பூர் | .. | 37 |
| ஸ்ரீலங்கா | .. | 46 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | .. | 384 |
| யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்கா | .. | 01 |
| ஏமன் | .. | 385 |
| மொத்தம் | .. | **5501** |

(ஆ) இவர்களில் ஆண்கள் 4451 பேர்.

(இ) தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரிய விரும்புவோர்க்காகத் தமிழ்நாடு அரசு "அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்" என்ற அமைப்பைச் சென்னையில் நிறுவியுள்ளது. இந்நிறுவனம் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு கடந்த 22 ஆண்டுகளாக இலாபகரமாக இயங்கி வருகிறது. இந்நிறுவனம் அயல்நாடுகளில் பணிபுரிய விரும்புவோரைப் பதிவு செய்துகொண்டு அவர்களுடைய தகுதிக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற அயல்நாட்டு வேலைவாய்ப்புகளுக்கு அவர்களைப் பரிந்துரைத்து வருகிறது. அவர்களில் அயல்நாட்டு வேலையளிப்போரால் தேர்ந்தெடுக்கப்படுவோரைக் குறிப்பிட்ட அயல்நாட்டுக்கு அனுப்பிவைப்பதற்காக அவர்களுடைய ஒப்பந்தம், விசா மற்றும் விமானச் சீட்டு ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்கிறது. அவர்களுக்குரிய வேலை ஒப்பந்தம் முறையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதையும் கண்காணிக்கிறது. ஒப்பந்த மீறல்கள் பற்றிக் கவனத்திற்கு வந்தால் அதனைத் தீர்வு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்கிறது.

[2001 ஜனவரி 31

தேவையெனில், இது குறித்து அந்நாட்டில் உள்ள இந்தியத் தூதரகத்தின் உதவியையும் நாடிப் பெறுகிறது. தவிர, தமிழ்நாடு அரசுத் துறைகளிலும், அரசு சார்பு நிறுவனங்களிலும் பணிபுரிபவர்கள் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் வாயிலாகவோ, பிற வழிகளிலோ அயல்நாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற நேரிடும்போது, அவர்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதற்கேற்ப அவர்களுக்கு மொத்தம் ஐந்து ஆண்டுகள் வரை சம்பளமில்லா விடுப்பு வழங்கலாம் எனத் தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்தச் சலுகையைப் பயன்படுத்தி எண்ணற்ற அரசு அலுவலர்கள், குறிப்பாக டாக்டர்களும், மருத்துவ சார்புப் பணியாளர்களும் அயல்நாடுகளில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்குரிய அரசின் தடையின்மைச் சான்று, விடுப்பு ஒப்பளிப்பு, விடுப்பு நீட்டிப்பு முதலானவற்றுக்கு அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஏற்பாடு செய்கிறது. சில குறிப்பிட்ட அயல்நாட்டுப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோரின் கல்வி மற்றும் பிற சான்றிதழ்களில் தொடர்புடைய அயல்நாட்டுத் தூதரகத்தின் சான்றொப்பம் பெறப்பட வேண்டும். தவிர, சில குறிப்பிட்ட நாடுகளில் வேலைவாய்ப்பு பெருபவர்களின் விசா பற்றிய விவரங்களும் அவர்களுடைய பாஸ்போர்ட்டில் அந்த நாட்டு தூதரகத்தால் பதிவு செய்து பெறப்பட வேண்டும். இவ்வாறு சான்றொப்பம் பெற்றுத்தரும் பணியையும், விசா பற்றிப் பாஸ்போர்ட்டில் பதிவு செய்து பெற்றுவரும் பணியையும் அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் செய்து வருகிறது. இச்சேவை இந்நிறுவனத்தின் வாயிலாக வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறுவோர்க்கு மட்டுமின்றி தம்முடைய சொந்த முயற்சியின் பயனாக வேலைவாய்ப்பு கிடைக்கப் பெறுவோர்க்குக்கூட அளிக்கப்படுகிறது. மேலும், சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலரின் அதிகார எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களுக்குப் பாஸ்போர்ட் பெற்றுத் தரும் பணியையும் இந்நிறுவனம் செய்து வருகிறது. அத்துடன் இந்நிறுவனம் விமானப் பயணச்சீட்டு முகைமை நிறுவனமாகவும் அங்கீகாரம் பெற்றுள்ளதால் வேலைவாய்ப்பு கருதியோ வேறு காரணம் கருதியோ அயல்நாடுகளுக்குச் செல்வோருக்கு விமான பயணச்சீட்டுக்களையும் விற்பனை செய்து வருகிறது.

40—

## புதிய நியாயவிலைக் கடை

**வினா 25708—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 31]

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், சிந்தாமணி கிராமத்தில் புதிய நியாயவிலைக் கடை அல்லது பகுதிநேரக் கடை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சி, வடக்கு மாசி வீதியில் செயல்பட்டு வரும் டி.ஏ.001 என்ற நியாயவிலைக் கடையில் மொத்தம் 931 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இக்கடையில் தென்காசி நகராட்சியின் 4,5,20 ஆகிய வார்டுகளில் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. 20-வது வார்டாகிய சிந்தாமணி கிராமத்தில் 270 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். வார்டுக்கு ஒரு கடை என்ற விகிதத்தில் மேற்கண்ட நியாயவிலைக் கடையைப் பிரித்தால் அக்கடைகள் அனைத்தும் தனித்தியங்கவல்லதாக இல்லாமல் போய்விடும். எனவே, டி.ஏ.001 நியாயவிலைக் கடைக்கும், சிந்தாமணி கிராமத்திற்குமிடையே 1 கிலோமீட்டர் தூரத்திற்கும் குறைவாக உள்ள நிலையிலும், மொத்தம் 270 குடும்ப அட்டைகளை மட்டுமே கொண்டுள்ள சிந்தாமணி கிராமப்பகுதிக்கு ஒரு முழு நேர நியாயவிலைக் கடையோ அல்லது ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடையோ அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

41—

## நியாயவிலைக் கடை

**வினா 30643—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 31

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாலஜங்கமனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த இராசன் கொட்டாயில் பகுதிநேர நியாயவிலைக் கடை தொடங்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாலஜங்கமனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த இராசன்கொட்டாயின் (இருசன்கொட்டாய்) குடும்ப அட்டைகள் பாலஜங்கமனஅள்ளி நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. பாலஜங்கமனஅள்ளி நியாயவிலைக் கடையில் மொத்தம் 765 குடும்ப அட்டைகள் உள்ளன. பாலஜங்கமனஅள்ளி தாய் நியாயவிலைக் கடையின் கட்டுப்பாட்டில் ஏற்கெனவே ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை எச்சம்பட்டி கிராமத்தில் இயங்கி வருகிறது. மேலும், இராசன் கொட்டாயில் மொத்தம் 114 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், இராசன் கொட்டாய்க்கும் பாலஜங்கமனஅள்ளி தாய் நியாயவிலைக் கடைக்குமிடையே 1½ கிலோ மீட்டர் தூரமே இருப்பதாலும் ஒரு பகுதி நேர நியாயவிலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**42—**

## வருகைப் பதிவேடு

**வினா 32727—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆம் ஆண்டில் எத்தனை கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் வருகைப் பதிவேடு வைக்கப்படாமல் இருந்தது என்பதை அரசு கண்டறிந்துள்ளது?

(ஆ) வரும் காலங்களில் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் வருகைப் பதிவேடு வைக்காதவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?



2001 ஜனவரி 31]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) 1999-2000ஆம் ஆண்டில் வருகைப் பதிவேடு வைக்கப்படாமல் இருந்த கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் ஏதுமில்லை.

(ஆ) வரும் காலங்களில் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் வருகைப் பதிவேடு வைக்காதவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

**43—**

## சொந்தக் கட்டடம்

**வினா 36053—திரு. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், குருங்குளம் மேற்கு ஊராட்சிக்கு உட்பட்ட தோழகிரிப்பட்டி கிராமத்தில் உள்ள கூட்டுறவு அங்காடிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், குருங்குளம் மேற்கு ஊராட்சிக்குட்பட்ட தோழகிரிப்பட்டி கிராம நியாயவிலைக் கடைக்கு நடப்பு நிதியாண்டில் சொந்தக் கட்டடம் கட்டித்தர திட்ட அலுவலர், தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு தஞ்சாவூர் மண்டல இணைப் பதிவாளரால் 18-8-2000 தேதியிட்ட கடிதத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

[2001 ஜனவரி 31

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் அவர்களைத் தொடர்புகொண்டு தக்க நடவடிக்கை எடுக்குமாறு சேலம் மண்டல இணைப் பதிவாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

47—

பதிவுக் கட்டணம்

**வினா 40464—திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஊனமுற்றோர், விதவைகள் வாங்கும் வீட்டுமனைகள்/வீடுகளுக்கு ஆவணப் பதிவுக் கட்டணம் செலுத்திட விலக்கு அல்லது குறைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): விற்பனை ஆவணங்களுக்குச் சொத்து மதிப்பின்மீது 1% பதிவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இது செய்யப்படும் பணிக்கான சேவைக் கட்டணம். உடல் ஊனமுற்றோர், விதவைகள் வாங்குகின்ற மனைகள்/ வீடுகளுக்குப் பதிவுக் கட்டணச் சலுகை வழங்க கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

48—

பதிவு ஆவணங்கள்

**வினா 40740—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 31]

தஸ்தாவேஜுகளை வீடுகள் வாங்குவதற்காக ஆவணங்கள் பதிவுசெய்த பிறகு, ஆவணத் தொகை சரியாக உள்ளதா என்பதை இரு நாட்களில் மதிப்பிட்டு, பதிவு ஆவணங்கள் காலதாமதமின்றி பதிவு செய்தவர்களுக்குத் திரும்பக் கிடைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

ஆவணப் பதிவின்போது சார்பதிவாளர் அலுவலக வழிகாட்டி மதிப்பின்படி முத்திரைத் தீர்வை செலுத்தப்பட்டிருப்பின், ஆவணம் பதிவு செய்யப்பட்டு களப்பணி மேற்கொள்ளும்பொருட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பப்படும். களப்பணி முடிவுற்று ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னர், குறைவு முத்திரைத் தீர்வை வேண்டியிருப்பின், கட்சிக்காரருக்கு குறைவு முத்திரைத் தீர்வை செலுத்த அறிவிப்பு அனுப்பப்பட்டு, கட்சிக்காரர் செலுத்திய பின்னர் ஆவணம் திரும்ப வழங்கப்படும். வழிகாட்டி மதிப்பைவிட கட்சிக்காரர் குறைந்த மதிப்பீடு செய்திருப்பின் நில மதிப்பு செய்யும்பொருட்டு தனித் துணை ஆட்சியர் (முத்திரை)-க்கு ஆவணம் அனுப்பப்படும். பொதுவாக, இப் பணியை மேற்கொள்ள அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதால் மதிப்பு நிர்ணயம் செய்வதில் தாமதம் எழும் வாய்ப்பில்லை.

49—

இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 17303—திரு. மு. ரங்கநாதன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குன்னூர் தொகுதி, குன்னூர் நகராட்சிக்குச் சொந்தமான சத்தியமூர்த்தி நகரில் குடியிருக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனை கொடுக்க அரசு முன்வருமா?

[2001 ஜனவரி 31

44—

## முழுநேரக் கடைகள்

**வினா 39119—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதியில் உள்ள கிராமங்களில் இந்நிதியாண்டில் எத்தனை பகுதி நேரக் கடைகள் முழுநேரக் கடைகளாக மாற்றப்பட உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வேலூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள கிராமங்களில் ஏற்கெனவே தேவையான இடங்களில் பகுதிநேர அல்லது முழுநேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. பகுதிநேரக் கடைகளை முழுநேரக் கடைகளாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் தற்போது இல்லை.

45—

## புதியக் கட்டடம்

**வினா 39198—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வெங்கரை ஊராட்சி, சந்தைப்பேட்டையில் உள்ள நியாயவிலைக் கடைக்கு நடப்பு நிதியாண்டில் (2000-2001) புதியக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?



2001 ஜனவரி 31]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், வெங்கரை ஊராட்சி; சந்தைப்பேட்டையிலுள்ள நியாயவிலைக் கடைக்கு நடப்பு நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து அரசு கட்டடம் கட்டுவதற்கு திட்ட அலுவலர், தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு தஞ்சாவூர் மண்டல இணைப்பதிவாளரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

46—

## சொந்தக் கட்டடம்

**வினா 41837—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியிலுள்ள நியாயவிலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்குவதால், அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் மொத்தமுள்ள 88 முழுநேர நியாயவிலைக் கடைகளில் 11 நியாவிலைக் கடைகள் வங்கிக் கட்டிடத்திலும், 37 நியாயவிலைக் கடைகள் இலவசத் திட்டங்களின் மூலம் கட்டப்பட்ட கட்டடங்களிலும் செயல்படுகின்றன. மீதமுள்ள 40 முழுநேர நியாயவிலைக் கடைகளில் தற்போது 4 நியாயவிலைக் கடைகளுக்கு அரசுத் திட்டத்தின் மூலம் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள 36 முழுநேர நியாயவிலைக் கடைகளுக்கு இலவசமாக கட்டடம் கட்ட சேலம்

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

குன்னூர் தொகுதி, குன்னூர் நகராட்சிக்குச் சொந்தமான சத்தியமூர்த்தி நகரில் குடியிருக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனை கொடுக்க அரசு முன்வர இயலாது.

50—

### தொகுப்பு வீடுகள்

**வினா 41021—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) நெல்லை மாவட்டம், இராதாபுரம் தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, நெல்லை மாவட்டம், இராதாபுரம் தொகுதி மக்கள் குடிநீர் விலை கொடுத்து வாங்குவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே....

**திரு. பி. ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு பேரும் உட்காருங்கள். நான் பேசிக்கொண்டே இருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) என் அனுமதியின்றிப் பேசுவது அவைக்குறிப்பில் ஏறாது. நீங்கள் உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள். திரு அப்பாவு.

***திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் கிடைத்து 53 ஆண்டுகள் ஆன பின்புங்கூட, என்னுடைய இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் பல கிராமங்கள் குடிநீர் இன்றி இருக்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, நானும் சட்டமன்ற உறுப்பினரான பின்பு, பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும் தாமிரபரணி—இராதாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 43 கோடி ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்கப்பட்டது. அவரும் தந்து, அந்தப் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் துரிதமாக நடைபெறவில்லை. அதேபோன்று தாமிரபரணி-பணகுடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 18 கோடி ரூபாய் நிதி தந்து அந்தப் பணிக்கு டெண்டர் விடப்பட்டிருக்கிறது. விரைவிலேயே அந்தப் பணி தொடங்கும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தபோதிலும்கூட, எனது இராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல கிராமங்கள் குடிநீரின்றி வாடுகின்றன. குறிப்பாக கூடங்குளம் அணுமின் நிலையம் அருகில் இருக்கின்ற அந்த கூடங்குளத்திலே பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அந்த ஊரிலே மூன்று நாட்களுக்கு ஒரு நாள் இரண்டு குடம், ஒரு குடம் தண்ணீர் ஒரு வீட்டுக்குக் கிடைக்கிறது. எங்களுடைய மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பீட்டர்

அல்போன்ஸ் அவர்களிடமிருந்து 6 இலட்சம் ரூபாய் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு நிதி பெற்றுக் கொடுத்து பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நீர் ஆதாரம் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். எங்களுடைய பஞ்சாயத்துத் தலைவர் எழிலரசு, அருகில் இருக்கிற சுப்பிரமணியபுரத்தில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்ததில் நல்ல நீர் ஆதாரம் இருக்கிறது. அதைப் பயன்படுத்தி அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதனைத் தொட்டு இருக்கிற கூத்தன்குழி கடற்கரைக் கிராமத்திற்கு வாரத்தில் மூன்று நாட்கள் லாரி மூலம் தண்ணீர் வருகிறது. அந்தத் தண்ணீரை வாங்காவிட்டால் வேறு வழியே கிடையாது. அந்த ஊருக்கும், சற்றுத் தொலைவிலாவது நீர் ஆதாரத்தைத் தேடி எங்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும்.

அதைப்போன்று கூட்டப்பனை கிராமம். நம்முடைய மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திருமதி ஜெனிபர் சந்திரன் அவர்கள் அங்கே மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம் திறக்க வந்தபோதுகூட கூட்டப்பனையைச் சேர்ந்த சங்கைக்குரிய சுவாமி அவர்கள் எங்களுடைய ஊரில் வாரத்திற்கு ஒரு நாள்கூட ஒரு குடம் தண்ணீர் கிடைக்கவில்லை. லாரியிலேதான் தண்ணீர் வாங்குகிறோம் என்று சொன்னார்கள். அதற்கும் நீர் ஆதாரம் தேடித் தண்ணீர் தர வேண்டும்.

அதைப்போன்று உப்பச்சம்பாரு, எலக்கிரிவிளை ஆகிய இரண்டு ஊர்களுக்கும் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு நீர் ஆதாரமும் எடுக்கப்பட்டு டெண்டர் விடப்பட்டது. வேலை விரைவாகச் செய்ய வேண்டும். அதைப்போன்று நம்முடைய வரலாற்றுச் சிறப்புமிக்க கால்டுவெல் அவர்கள் வாழ்ந்த இடையன்குடி நீர் ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. அதற்கும் டெண்டர் விடப்பட்டு வேலை துரிதமாக நடைபெற வேண்டும்.

அருகில் உள்ள பொத்தக்காலன்விளை, அதேபோன்று ரோச் மாநகர் ஆகிய இரண்டு ஊர்களுக்கும் நீர் ஆதாரம் தேடி விரைவிலேயே திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும். தங்கம்மாள்புரத்திலே நீர் ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்டு டெண்டர் விடப்பட்டிருக்கிறது. வேலை விரைவாகச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அதேபோன்று கரைச்சத்துப்புதூர், ஏற்கெனவே tank இருக்கிறது; தண்ணீர் கிடையாது. கரைச்சத்துப்புதூர் கிராமத்திற்குப் புதிய நீர் ஆதாரம் தேடிக் கண்டுபிடித்துத் தண்ணீர் தர வேண்டும். ஆயங்குளம் என்ற கிராமம்; ஒரு ஜி.எல்.ஆர். மட்டும் எங்கள் எம்.பி. நிதியில் உள்ளதாக இருக்கிறது. வேறு எந்த வசதியும் கிடையாது. அந்த ஊருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர வேண்டும். அதைத் தொட்டு இருக்கிற இராமன்குடி பகுதியில் tank கிடையாது; தண்ணீரும் கிடையாது. அங்கே புதிய திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும். இரம்மதபுரம் அணைக்கரை பஞ்சாயத்தில் இருக்கிறது. ஒரு அடி பம்பு மட்டும்தான் இருக்கிறது. எங்கேயும் ஒரு சொட்டுத் தண்ணீர்கூடக் கிடையாது. அதுமாதிரி வடக்குப் பெட்டைக்குளம் தினைக்கரன்குளம்......

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திலா பேசுகிறீர்கள்? சிறப்புக் கவன ஈர்ப்பாகத்தான் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தத்தில் உங்கள் தொகுதியில் இருக்கின்ற எல்லா கிராமங்களின் பெயர்களையும் சொல்லிவிடுவீர்கள் போல் இருக்கிறதே? எப்படிப் பேச வேண்டும் என்பதை முறைப்படுத்திப் பேசுங்கள். ஒவ்வொரு ஊரிலேயும் இப்படி இருக்கிறது. அப்படி இருக்கிறது என்று சொன்னால் இது ஒத்திவைப்புத் தீர்மானமா? முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள், வேலை நடக்கிறது என்று சொல்லுகிறீர்கள். பிறகு வரிசையாக 100 கிராமங்களின் பெயர்களைச் சொல்லிக் கொண்டிருப்பதற்கு நான் அனுமதி கொடுக்க முடியாது. சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** நான் 30 ஊர்களைப் பற்றி மட்டும்தான் சொல்லுகிறேன். அந்த 30 ஊர்களுக்கும் அமைச்சர் சொல்லிவிட்டால் நன்றாக இருக்கும்—முடித்து விடுகிறேன்—வடக்குப்பெட்டை குளத்திற்கும் தெனக்கரை குளத்திற்கும் இடையில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு இருக்கிறது. அதிலிருந்து நீர் ஆதாரம் எடுத்து, வடக்குப்பெட்டை குளத்திற்கு ஒரு tank கட்டித் தாருங்கள். தெற்குப்பெட்டை குளத்தில் நிறைய முஸ்லீம்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியில் நீர் ஆதாரம் கிடைக்கவில்லை. சீக்கிரமாக அதைப்பெற்றுத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல நாலாந்துலா என்ற ஊரிலும், துரைகுடியிருப்பு என்ற ஊரிலும் ஏற்கெனவே ஃபோர் போட்டு tank எல்லாம் கட்டியிருக்கிறார்கள். நீர் ஆதாரம் வற்றிவிட்டது. அதற்குத் தண்ணீர் கொடுங்கள். அதேபோல பெரிய ஊராக,

[திரு. மு. அப்பாவு] [2001 ஜனவரி 31

தெற்குகள்ளிகுளம் பகுதிக்கு வள்ளியூரிலிருந்து நீராதாரம் பெறப்பட்டது இப்போது அது failure ஆகிவிட்டது. இப்போது ராஜாபுதூர் பக்கத்தில் டெஸ்ட் போர் போட்டு நிறையத் தண்ணீர் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அங்கிருந்து தண்ணீரை எடுத்து இந்த தெற்கு கள்ளிகுளத்திற்கு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இளையநயினார்குளம் என்ற ஊரில் போர் போட்டுப் பார்த்ததில் தண்ணீர் கிடைக்கவில்லை. அந்த ஊருக்குத் தென்மேற்குப் பகுதியிலே டானிடா திட்டத்தில் ஒரு போர் போட்டிருக்கிறார்கள். அந்த போரிலிருந்து அந்த இளைய நயினார்குளம் பகுதிக்குத் தண்ணீர் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, பிரகாசபுரம், அழகனாபுரம்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாலைப் பேப்பரில் அத்தனை பெயர்களும் வந்துவிடும். நீங்கள் உங்கள் தொகுதி மக்களுக்கு முறையாக உதவ வேண்டுமென்றால், இந்தப் பட்டியலை மாண்புமிகு அமைச்சர் அவர்களை அவர்களுடைய அறையிலே பார்த்து, இந்த இந்த ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று சொல்லுங்கள். நீங்கள் விளம்பரம் தேடுவதற்கு நான் அனுமதி கொடுக்க முடியாது. நான் மிகவும் கண்டிப்பாக இருப்பேன், உரையை முடித்து விடுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** அந்த பிரகாசபுரத்திற்கும், அழகனாபுரத்திற்கும் நீர் ஆதாரம் தேடுவதற்காக நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் ரூபாயைக் கட்டியிருக்கிறார்கள். அதற்கும் போர் போட்டு சீக்கிரம் செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒட்டுமொத்தமாகச் சொல்லுங்கள். அமைச்சர் அவர்களை அறையிலே பார்த்துச் சொல்லுங்கள், நீங்கள் இப்படி வரிசையாக உங்கள் தொகுதியிலுள்ள கிராமங்கள் முழுவதற்கும் கேட்பதற்கு இங்கே சட்டமன்றம் இல்லை. உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** நான் 30 ஊர்களைப் பற்றிதான் சொல்லுகிறேன். அதற்கு மேல் ஒரு ஊரைப் பற்றிகூடச் சொல்லவில்லை. நான் இதைச் சொல்ல வேண்டும். செட்டிகுளம் என்கிற ஊர், மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு சௌந்திரபாண்டியன் வாழ்ந்த ஊர், அந்த ஊரிலே நீராதாரம் தேடியும் கிடைக்கவில்லை. பஞ்சாயத்துத் தலைவர் திரு. விஜயன் தன்னுடைய சொந்தச் செலவில் வட்டக்கோட்டையில் ஒரு இடம் வாங்கி போர் போட்டு தண்ணீர் கொடுத்திருக்கிறார்.



2001 ஜனவரி 31] [திரு. மு. அப்பாவு]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருக்கு ஒரு பாராட்டு விழா நடத்துங்கள்.

**திரு. மு. அப்பாவு:** அதுபோல, ஆவரைகுளம், பஞ்சாயத்துத் தலைவர், மறைந்த கணபதி நாடார், எம்.பி. வாழ்ந்த ஊர். அந்த ஊரிலே ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு tank கட்டுவதற்கு எம்.பி., பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் 4 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார். ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட tank கட்டுவதற்கு, அந்த ஊரிலே கிணறு தோண்டி நீராதாரம் எடுத்தாகி விட்டது. அதையும் விரைவிலே செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல அழகனேரி, கே.சி.பழவூர், முடித்து விடுகிறேன். வடக்கு வேப்பலான்குளம் தெற்கு வேப்பலான்குளம், வடக்கன்குளம், சுண்டவிளை, மருதப்பபுரம், காய்க்கரை, துலுக்கன்பட்டி கண்ணநல்லூர், சியேன்மலை. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர். (குறுக்கீடு) விளையாட்டு இப்படியே தொடரக்கூடாது. நான் மிகவும் கண்டிப்பாக இருப்பேன். சிறப்புக் கவன ஈர்ப்பில் இப்படிப் பேசக்கூடாது. 5 வருடங்கள் எம்.எல்.ஏ.-வாக இருந்துவிட்டு இப்படித்தான் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசுவதா? ஒட்டுமொத்தமாகக் கவனிக்கப்படும் என்று அமைச்சர் சொல்லலாம்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படித்தான் சொல்லப் போகிறேன். வேறு எப்படிச் சொல்ல முடியும்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்காக இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பைக் கொண்டு வந்தார் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் ஒரு ஆலோசனை சொன்னீர்கள். அந்த ஆலோசனையை ஏற்று ஏற்கெனவே பலமுறை அவர் என்னுடைய அலுவலகத்திற்கு வந்து, பல தடவை சொல்லப்பட்டு, ஏறத்தாழ, 34 கோடியே 86 இலட்சம் ரூபாய்க்கு உண்டான பணிகள் அவருடைய தொகுதியில் இரண்டு ஒன்றியங்களில் மட்டும் முடிக்கப்பட்டு இருக்கின்றன. பல பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மற்றவை பரிசீலிக்கப்படும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லி முடித்தாகிவிட்டது. இனிமேல் நீங்கள் பேசினாலும் அவர் பதில் சொல்லப் போவதில்லை. இனிமேல் அனுமதிக்க முடியாது.

[2001 ஜனவரி 31

**(ஆ) மதுரை நகர கூட்டுறவு வங்கி, விதிமுறைகளுக்கு மாறாக நடவடிக்கைகள் எடுத்தது**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மதுரை நகர கூட்டுறவு வங்கி விதிமுறைகளுக்கு மாறாக நடவடிக்கைகள் எடுத்தது குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு, திரு. சுப்பராயன்.

முற்பகல் 10-40

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகர கூட்டுறவு வங்கி பற்றி நான் கடந்த இரண்டு வருடங்களாக பேசிக் கொண்டிருக்கிறேன். அந்த வங்கியினுடைய நடவடிக்கைகள் வாடிக்கையாளர்களுடைய நலன்களையும், வங்கியின் நலன்களையும், ஊழியர்களுடைய நலன்களையும் கடுமையாகப் பாதித்திருக்கிறது. அதுபற்றிய விரிவான விவரங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. 22-1-1999, 18-9-2000, 25-9-2000 ஆகிய தேதிகளில் மதுரை நகர கூட்டுறவு வங்கி நிர்வாகத்தின்கீழ் என்னென்ன ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்கின்ற விவரங்களை விரிவான பட்டியலோடு, சம்பந்தப்பட்ட எம்.டி. அவர்களுக்கு அந்த ஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இன்று வரையிலும் அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை வங்கியிலே என்னென்ன நடைபெறுகின்றன என்பதைப் படித்துப் பார்த்தால் உண்மையிலேயே பேரதிர்ச்சி ஏற்படுகிறது. அவ்வளவு கொடுமையான முறைகேடுகள்; அதாவது, ஊழல் புதர் மண்டிக் கிடக்கிற ஒரு இடமாக இப்போது மதுரை நகர வங்கி நிர்வாகம் மாறியிருக்கிறது. வங்கிச் செயலாளர் வங்கி உறுப்பினர்களுக்கு விதிமுறைகளுக்குப் புறம்பாக வேலை நியமனம் செய்திருக்கிறார். வங்கியின் நிதியைத் தவறான முறையில் பயன்படுத்தி வருகிறார்கள். கடன் வழங்குவதில் கடுமையான முறைகேடுகள் நிலவுகின்றன. அதேபோல, வங்கியின் செயலாளர் திரு. எம். மாயன், வங்கியின் பணத்தைத் தற்காலிகமாகக் கையாடல் செய்துள்ளார் என்பது பற்றியும் ஆதாரபூர்வமாகப் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்வே கட்டணம் வழங்குவதில் கடுமையான முறைகேடுகள் நடந்துகொண்டு இருக்கின்றன. தவறான புள்ளிவிவரங்களைக் கொண்டு ஆண்டறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. நான் நேரம் கருதி அந்த விவரங்களுக்குள்ளே போக விரும்பவில்லை. இந்த நிலை எதைத் தெரிவிக்கிறது? இந்த வங்கியினுடைய தலைவரும் இயக்குநர் குழுவும் வங்கியின் செயலாளரான திரு. மாயன் செய்கின்ற எல்லா முறைகேடுகளுக்கும் உடந்தையாக இருந்து வருகிறார்கள். வங்கியின் பாதுகாவலராகச் செயல்பட வேண்டிய



2001 ஜனவரி 31] [திரு. கே. சுப்பராயன்]

செயலாளரே வங்கியின் முறைகேடுகளுக்கு முக்கியக் காரணியாக இருந்து கொண்டிருக்கிறார். எனவேதான், செயலாளர் பல தவறான நடவடிக்கைகளின் மூலம் வங்கியின் பணத்தைக் கையாடல் செய்துள்ளதாலும், இயக்குநர் குழுவும், செயலாளரும் கைகோர்த்துக் கொண்டு அந்த வங்கியினுடைய நிர்வாகத்தை முடக்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தாலும், ஒரு மிகப் பெரிய ஆபத்து என்ன ஏற்படுகிறது என்றால், நான் இந்த மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, அதாவது, டெபாசிட்தாரர்களுடைய வைப்பு நிதி பாதுகாப்பாக இருக்குமா என்பது கேள்விக்குறியாக ஆக்கப்பட்டிருக்கிறது. நான் மிகுந்த பொறுப்போடு இன்றைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இரண்டு ஆண்டுகளாக அந்த நிர்வாகத்தைப் பற்றி நான் தொடர்ந்து சட்டமன்றத்தில் வலியுறுத்தியும்கூட, அந்தச் செயலாளருடைய வேலையைப் பறிக்க பாசக் கயிற்றை வீசச் சொல்லி நான் கோரிக்கை வைத்தால், அவருடைய வேலையைப் பாதுக்காக்கிற பாச உணர்வோடுதான் மாநிலஅரசு நடந்து கொண்டிருப்பதாக நடைமுறை அனுபவம் எனக்கு உணர்த்துகிறது. எனவே,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில், மாநில அரசுக்கும், அங்கே இருக்கிற இயக்குநர்களுக்கும் என்ன தொடர்பு? இயக்குநர்கள் தப்புப் பண்ணுகிறார்கள். நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பேசுங்கள். திடீரென்று, அந்தச் செயலாளரைக் காப்பாற்றுவதற்கு மாநில அரசு அக்கறையாக இருக்கிறது என்றால் அரசு எப்படிப் பொறுப்பாகும்?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கேட்கிற கேள்வி நியாயம்தான். ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மதுரை என்பதனாலே எனக்கு விவரம் தெரிந்ததனால் நான் சொல்கிறேன். நீங்கள் சொல்கிற குற்றச்சாட்டிலே உண்மை இருக்கலாம். ஆனால், அரசுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. நீங்கள் குற்றச்சாட்டுச் சொல்லுங்கள். அமைச்சர் பதில் சொல்வார்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, அந்த வங்கியில் பொதுமக்கள் போட்டிருக்கிற பணத்திற்கு யார் உத்தரவாதம் தருவது? அந்தப் பணம் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதைப் பார்த்து, தீதைத் தடுக்கிற திறமையில்லாத பீஷ்மராக மாநில அரசு உட்கார்ந்து கொள்ளமுடியுமா? அதற்குத் தீர்வளிக்கிற கடமை, பொறுப்பு மாநில அரசுக்கு இருக்கிறது

[திரு. கே. சுப்பராயன்] [2001 ஜனவரி 31

என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு கமிஷன் போட்டு அல்லது ஒரு விசாரணைக் குழுவைப் போட்டு, நேர்மையான அதிகாரிகளைக் கொண்டு அங்கே இந்த புகார்களில் உண்மை இருக்கிறதா என்பதைக் கண்டறியுங்கள். கண்டறிந்து, அதற்கு எந்த வழிமுறைகளில் நடவடிக்கை எடுக்க இயலுமோ அந்த வழிமுறைகளில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத்தான் நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். அதற்குரிய வழிமுறை என்ன என்பதை மாநில அரசு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இத்தகைய புகார்களைக் கொடுத்ததால், எல்லா ஊழியர்களிடமும் வெற்றுப் பேப்பரில் கையெழுத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இந்தப் பிரச்சினையை நான் எழுப்பிக் கொண்டிருக்கிற இந்த நேரம் வரையிலும் வெற்றுப் பேப்பரிலே கையெழுத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இதில் மிகக் குறிப்பான குற்றவாளியாக மிகத் தெளிவாகத் தெரிவது, அந்தச் செயலாளர் மாயன், ஆகவே அவரைக் காப்பாற்றுவது சரியல்ல. உரிய நடவடிக்கை எடுப்பதற்கான வழிமுறைகளில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதைக் கேட்டு, அதை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே, பல இடங்களிலே இதேபோன்று முறைகேடுகள் நடக்கிறது என்று.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே உங்களுக்குச் சம்மந்தமே இல்லை.

**திரு. ஜே.ஹேமச்சந்திரன்:** ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேறு. உங்களுக்கு அனுமதி கொடுத்தால் அப்போது பேசுங்கள். இதில் ஒரு குறிப்பிட்ட சொசைட்டி பற்றிச் சொல்லப்பட்டு இருக்கிறது.

***மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரக் கூட்டுறவு வங்கியின் தலைவர், இராமசுப்பிரமணியன், வழக்கறிஞர், அதுவும், மூத்த வழக்கறிஞர். இவர் 1966-ல் இருந்து 1976 வரை அதிலே தலைவராக இருந்திருக்கிறார். மீண்டும் 1996-லே அவர் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிறார். பொறுப்பேற்றுக் கொண்டபோது, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற நகரக் கூட்டுறவு



2001 ஜனவரி 31] [திரு. கா.நா. நேரு]

வங்கிகளிலே, நிலவள வங்கிகளிலே புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட அந்தத் தலைவர்கள், அரசு அலுவலர்களை அதிலே நியமிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து— 6 மாத காலம் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து—வந்த காரணத்தால், அந்த வங்கியிலே அரசு சார்பாக மேலாண்மை இயக்குநரை நியமிக்கமுடியாமல் இருந்தது. அவர்கள் ஒத்துக்கொண்டால் தான் நியமிக்க முடியும். அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. அப்படி ஒத்துக்கொள்ளாத நேரத்திலே, அவர்கள், 172 ஆட்களை எடுத்து இருக்கிறார்கள். 80 ஆட்களை, நமது வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து கேட்காமல் நேரிடையாக நியமனம் செய்திருக்கிறார்கள். அப்படி, வங்கியியல் மற்றும் பணம் வரவு செலவுகளில் ஒழுங்குமுறைப்படி சட்டப்படி இந்த வங்கிகள் செயல்படவேண்டும். இதில் ஒழுங்கீனங்கள் இருந்தால் வங்கிகளுக்கு வழங்கிய உரிமம், licence இரத்து செய்யப்படும்.

முற்பகல் 10-45

பணியாளர் நியமனம், நிர்வாக சபை தேர்ந்தெடுத்தல், மேலாண்மை இயக்குநர் நியமித்தல் போன்றவை கூட்டுறவுச் சங்க சட்டப்படி செயலாக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு பொறுப்பேற்றுக்கொண்டவுடன், அரசு அதிகாரிகள் மேலாண்மை இயக்குநர்களாக நியமிக்கப்பட்டதற்கு 1996-ல் பல நகர வங்கித் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். இவ்வங்கியும் எதிர்ப்புத் தெரிவித்தது. மேலாண்மை இயக்குநர் இந்த வங்கியில் இல்லாத நிலையில், பணியாளர் நியமனத்திற்கு அரசாணை 2-டி 135, உணவு, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின், 13-11-1997-ன்படி நியமிக்கப்பட்ட, நியமனக் குழுவில் மேலாண்மை இயக்குநர் இடம் பெறவில்லை. அதற்குப் பதிலாக வேறு ஒரு நிர்வாகக் குழு உறுப்பினர் இடம் பெற்றிருந்தார். வங்கியின் தலைவர் நியமனக் குழுவின் தலைவராகச் செயல்பட்டார். மதுரை கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர் அனுமதித்த பணியாளர் எண்ணிக்கைக்கு அதிகமாக நியமனக் குழு மூலம், ஜாதி, சுழற்சி பின்பற்றப்படாமல் இந்நியமனம் செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 172 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் 80 பேர் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்ந்தெடுக்கப்படாமல் நேரிடையாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்த முறையற்ற நியமனங்களை, ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க கூட்டுறவுச் சட்டப் பிரிவு 82-ன் கீழ் ஆய்வுக்கு உத்தரவிடப்பட்டது. ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் முறையற்ற நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களை நீக்கிவிடுமாறு, மதுரை சரக துணைப் பதிவாளர்

[திரு. கா.நா. நேரு] [2001 ஜனவரி 31

கடிதம் நகஎண் 3369/1997-ல் நாள் 8-4-1999 மற்றும் 16-12-1999 ஆகியவற்றில் தெரிவித்துள்ளார். இதற்கு நிர்வாகக் குழு எதிர்ப்புத் தெரிவித்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை 14367/2000-ல் வழக்குத் தொடர்ந்ததில், வழக்கு முடியும் வரை நிரந்தரத் தடையாணை பெறப்பெற்றுள்ளது. இத்தடையை நீக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வங்கியின் முறைகேடு மற்றும் கடன் வழங்கியது தொடர்பாக கூட்டுறவுச் சட்டப்பிரிவு 81-ன்கீழ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, விசாரணையில் சேமிப்புக் கணக்கில் காலதாமதமாக, வரவு-செலவு செய்ததில் ரூ. 7,635 வட்டி நட்டம் ஏற்பட்டது தெரியவந்தது. இத்தொகையை சம்பந்தப்பட்ட பணியாளர்கள் ஈடு செய்துள்ளனர். இவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும், வங்கி நிர்வாகம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையின் முன்னனுமதியின்றி வங்கியின் பராமரிப்புச் செலவுகள் 2.42 இலட்சம், திருப்பரங்குன்றம் வேளாண்மை மற்றும் சேவை கூட்டுறவு மையம் மூலமாக நடைபெற்றுள்ளன. கூட்டுறவுத் துறையின் முன் அனுமதியின்றி இத்தகைய செலவு செய்யக்கூடாது என வங்கி நிர்வாகத்தினை சரக துணைப் பதிவாளர் அறிவுறுத்தியுள்ளார். மேலும் கடன் வழங்குவதில் விதிமுறை மீறப்படவில்லையெனவும் காலதாமதம் ஏதுமில்லை என்றும், மதுரை மண்டல இணைப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இந்த வங்கிகளிலே ஒரு குற்றம் செய்தால் அரசு நேரிடையாகத் தலைவரை நீக்கவோ, செயலாளரை நீக்கவோ இயலாது. அதற்காகத்தான், இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, செயலாளர்களை Common Cadre ஆகக் கொண்டு வந்தது. ஒருவர் ஒரு குற்றம் செய்தால், உடனடியாக நடவடிக்கை எடுத்து, மாற்றிடத்திற்கு மாற்ற வேண்டுமென்று விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துக் கொண்டதற்கிணங்க, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே Common Cadre ஆகக் கொண்டு வந்திருக்கிறோம். நகர வங்கியிலே செயல்புரிகின்ற, செயலாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால், அந்த வங்கியினுடைய தலைவர் அல்லது நிர்வாகக் குழுதான் நடவடிக்கை எடுத்து நீக்க முடியும். ஆனால் அரசு சில அறிவுரைகளை அவர்களுக்கு வழங்கியிருக்கிறது. அந்த அறிவுரைகளை ஏற்று அவர்கள் நடக்கவில்லையென்று சொன்னால், அவர்கள்மீது நடவடிக்கை எடுப்போம். அப்படி நடவடிக்கை எடுத்ததற்காக, அவர் நீதிமன்றத்திலே தடையாணை பெற்றிருக்கிறார். அந்தத்



2001 ஜனவரி 31] [திரு. கா.நா. நேரு]

தடையாணையை நீக்க, நடவடிக்கை எடுக்க இந்த அரசு முனைந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால்; தொடர்ந்து மூன்று ஆண்டு காலமும் அந்த வங்கி, இந்த 172 பேர் நியமனத்திற்குப் பிறகும் இலாபகரமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. 14% dividend வழங்கிக்கொண்டு வருகிறார்கள். எந்தத் தவறு செய்தாலும், இந்த அரசு அனுமதிக்காது. அவர்கள்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, இலாபகரமாக நடைபெறுவதாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நான் இங்கே எழுப்ப விரும்புவது தகவல்களையே, ஆவணங்களையே முறையற்ற முறையில் தயாரிக்கிறது அந்த நிர்வாகம். எனவே, தொழிற்சங்கத் தரப்பிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிற புகார்களின் அடிப்படையில் நேர்மையான அதிகாரி செல்லவில்லையென்றால், அங்கே அவர்கள் செல்வாக்கு செலுத்திவிடுவார்கள் என்பதால் ஒரு நேர்மையான அதிகாரியைப் போட்டு, தொழிற்சங்கப் புகார்களின் மீது விசாரணை நடத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கூட்டுறவுச் சட்டப் பிரிவு 81-ன்கீழ் ஆய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. அப்படி தவறு இருக்குமானால் நிச்சயமாக இந்த அரசு சும்மா இருக்காது; நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

**திரு. பி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கூட்டத் தொடரில் மிக முக்கியமான, சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன். உதாரணத்திற்கு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு, ஒத்தி வைப்புத் தீர்மானம் இவையெல்லாம் என்னை ஆலோசித்து என்று எந்த உறுப்பினரும் அவையிலே எழுந்து நின்று கேட்கக்கூடாது. என்னுடைய அறையிலே வந்து கேட்க வேண்டும். நான் அனுமதி கொடுக்கின்றேனா, இல்லையா என்று தெரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்த தீர்மானத்திற்கு அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள்.

[2001 ஜனவரி 31

**திரு. பி.ஆர். சுந்தரம் :** தலைவர் அவர்களே...

பிற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நீங்கள் கேட்டதனாலே சொல்கிறேன். நான் அனுமதி கொடுக்கவில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அப்படி ஒரு வரியில் தலைவர் சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு வரியிலே சொல்லாமல் 4 வரிகளிலே சொல்லவா? மாண்புமிகு உறுப்பினர் கோரிய தீர்மானங்களுக்கு பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் அனுமதி மறுக்கின்றேன். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் 5 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். ஐந்துமே முக்கியமானவை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் சொல்லிவிட்டேன் இல்லையா? நாளைக்கு உங்கள் கட்சி உறுப்பினர் கொடுத்திருக்கிற ஒரு முக்கியமான ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைப் பதில் சொல்லச் சொல்லி இருக்கிறேன். அதனாலே எனக்கு கட்சிக் கண்ணோட்டம் கிடையாது. நீங்கள் கொடுத்த தீர்மானங்களுக்கு அனுமதி கிடையாது. நீங்கள் உட்காருங்கள். இதற்கு மேலே என்ன?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தீர்மானத்தை நான் படிக்கிறேன், நீங்கள் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் படிப்பதற்கு அனுமதி கிடையாது. (குறுக்கீடு) நீங்கள் பேசுவது அவைக் குறிப்பிலே ஏறாது. திரு. ஞானசேகரன். (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம் :** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிப்பதற்கு ஒன்றும் கிடையாது. இதை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். இங்கே ஒன்றும் சொல்ல முடியாது.

**திரு. பி.ஆர். சுந்தரம் :** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2001 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எவ்வளவு முக்கியமாக இருந்தாலும், அனுமதி மறுக்கப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) திரு. சுந்தரம் பேசுவது அவைக்குறிப்பிலே ஏறாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சொ. கருப்பசாமி, திரு. இரா. தாமரைக்கனி, திரு. இரா. விசுவநாதன் ஆகியோர் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நாளைக்கு விசுவநாதனுடைய ஒத்திவைப்புத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை. அதற்கும் இப்பொழுதே சேர்த்து வெளிநடப்பு செய்துவிடுங்கள் திரு. ஞானசேகரன், நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்?

**திரு. சி.ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எதுவாக இருந்தாலும், என்னிடம் வந்து கேட்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன் :** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேப்பரிலே உங்கள் பெயர் வர வேண்டும் என்பதற்காக முறைகேடாக நடக்காதீர்கள். அதுவும் உங்களைக் கொண்டுவந்து முதல் வரிசையிலே உட்கார வைத்திருக்கிறார்கள். எடுத்ததற்கெல்லாம் இப்படி எழுந்து நின்று பேசினால் எப்படி? மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரே என்னுடைய அறையிலே வந்து கேட்டார்; பதில் சொன்னார். அதற்கு நீங்கள் தீர்மானம் கொடுங்கள். நான் consider பண்ணுவேன். இப்பொழுது அதை எழுந்து நின்று பேசுவற்கு அனுமதி கிடையாது.

**திரு. சி. ஞானசேகரன் :** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இங்கே பேசுவது record-லே ஏறாது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2001 ஜனவரி 31

## 4. விதி 110-ன்கீழ் அறிக்கை

### அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்தும் நிபந்தனைகளைத் தளர்த்தி மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் இந்த அறிக்கையை இந்த மாமன்றத்திலே வழங்குகிறேன்.

நகர்ப்புறப் பகுதிகளில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்தி அப்பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் ஏற்படுத்த வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். மேலும், இதுபோன்று பொதுமக்களிடமிருந்தும் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அதுபற்றி நல்ல முடிவு காணப்படுமென்று நேற்றையதினம் இந்த அவையில் அறிவித்ததையொட்டி, அதிகாரிகளோடு கலந்து பேசி எடுக்கப்பட்ட முடிவினைத் தெரிவிக்கின்றேன்.

இந்தப் பிரச்சினை குறித்து ஏற்கெனவே ஆணைகள் பிறப்பித்தும், விளக்கங்கள் அளித்தும், நிபந்தனைகளைத் தளர்த்தியும், அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுதாரர்களிடமிருந்து பெருமளவில் விண்ணப்பங்கள் வரப்பெறாததால், இந்தத் திட்டத்தால் பெருமளவில் மக்கள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்த சில நிபந்தனைகளை மேலும் தளர்த்தி பின்வரும் ஆணைகள் வழங்கப்படும் :—

1. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியைத் தவிர, இதர மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் 22-9-2000-க்கு முன்பு குறைந்தது 50 விழுக்காடு மனைகள் விற்கப்பட்டோ அல்லது கட்டடங்கள் கட்டப்பட்டோ இருக்கும் மனைப் பிரிவுகளுக்கு அனுமதி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. இம்மனைப் பிரிவுகளில் உள்ள சாலைகளின் மொத்த நீளத்தில் குறைந்தது 75 விழுக்காடு சாலைகள் 20 அடி அகலத்திற்குக் குறையாமல் இருந்தால் போதும்.



2001 ஜனவரி 31] [கலைஞர் மு. கருணாநிதி]

3. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய அபிவிருத்திக் கட்டணமாக ஒன்றரை மடங்கு என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவுகளுக்கு கட்ட வேண்டிய அபிவிருத்திக் கட்டணமான ஒரு மடங்கைமட்டும் கட்டினால் போதும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவில் உள்ள மொத்தப் பரப்பளவில் 10 விழுக்காட்டிற்கும் குறைவாக பொதுப் பயன்பாட்டிற்கான நிலம் இருக்குமேயானால், எந்த அளவிற்கு குறைவாக இருக்கின்றதோ அதற்கு ஈடான நிலத்தின் மதிப்பை தற்போதைய வழிகாட்டி பதிவேட்டின்படி 50 விழுக்காடு மட்டும் செலுத்தினால் போதும்.

5. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற முறைப்படுத்தும் கட்டணமாக—Regularisation Fees—மாநகராட்சிப் பகுதிகளில் மனையின் பரப்பளவில் ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 20-ம், நகராட்சிப் பகுதிகளில் ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 10-ம், பேரூராட்சிப் பகுதிகளில் ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 3-ம் செலுத்தினால் போதும்.

முற்பகல் 10-55

6. இத்திட்டத்தின்கீழ் 30-6-2001-க்கு முன்னர் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம். எனவே, இத்திட்டத்தினுடைய சலுகைகளைப் பயன்படுத்தி, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் மனைகளை வைத்திருப்போர் அதனை முறைப்படுத்திக்கொண்டு உள்ளாட்சி அமைப்புகள் மூலம் அடிப்படை வசதிகளைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்தச் சலுகைகள் அறிவிக்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கை மீது clarification கிடையாது.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு உட்பட்ட ஏரியாவில் நிறைய பிரச்சினை இருக்கிறது. C.M.D.A.-வைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கிளாரிஃபிகேஷனைத் தனியாகக் கேட்டுக் கொள்ளுங்கள், விதி 110-ன்கீழ் நான் clarification-னை அனுமதிக்க மாட்டேன்.

## 5. அறிக்கை அளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு. டி. குண்டன்.

**திரு. டி. குண்டன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் வேளாண்மைத் துறை குறித்த அறிக்கைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் 32 மற்றும் 33-வது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 6. இறுதி துணை நிதிநிலை அறிக்கை, 2000-2001—அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதி துணை நிதிநிலை அறிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2000-2001ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின்முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடு ரூபாய் 4,563 கோடியே 55 இலட்சம் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில் ரூபாய் 1,182 கோடியே 74 இலட்சம் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 3,380 கோடியே 81 இலட்சம் மூலதனம் மற்றும் கடன் கணக்குகளிலும் அடங்கும்.

2. இந்த மானியக் கோரிக்கைகளில் இடம் பெறுகின்ற சில முக்கியமான திட்டப் பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

3. வாகன விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்க கூடுதலாக ரூபாய் 5 கோடியே 68 இலட்சம் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது. "மானியக் கோரிக்கை 3: இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்" என்பதன்கீழ் ரூபாய் 5 கோடியே 56 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மறு நிதியொதுக்கம் மூலம் அளிக்கப்படும்.





4. சட்டமன்றப் பொதுத்தேர்தல் நடத்துவதற்கான செலவிற்காகவும், வாக்காளர் பட்டியல் தயாரித்து அச்சிடவும், புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கவும் கூடுதலாக ரூபாய் 24 கோடியே 43 இலட்சம் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது. இத்தொகை, "மானியக் கோரிக்கை 8: தேர்தல்கள்" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

5. மாணவர்களுக்கான இலவச பஸ் பாஸ் திட்டத்தில் இழப்பீட்டு நிலுவைத் தொகை என்ற வகையில் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குக் கூடுதலாக ரூபாய் 75 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இது "மானியக் கோரிக்கை 17: கல்வி" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

6. 'நமக்கு நாமே' திட்டத்திற்குப் பொது மக்களிடமிருந்து அதிக அளவு நிதிப் பங்களிப்பு வரப்பெற்றிருப்பதைக் கருத்தில்கொண்டு, இத்திட்டத்திற்கு மாநிலஅரசின் பங்காக கூடுதலாக ரூபாய் 25 கோடி வழங்க அரசு முடிவெடுத்துள்ளது. "மானியக் கோரிக்கை 27: ஊரக வளர்ச்சி" என்பதன் கீழ் இதற்காக அடையாள நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. மீதித் தொகை மறு நிதியொதுக்கம் மூலம் அளிக்கப்படும்.

7. சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் உதவித் தொகை பெறுவோரின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாலும், மாதாந்திர உதவித்தொகை ரூபாய் 150-லிருந்து ரூபாய் 200-ஆக உயர்த்தப்பட்டுள்ளதாலும், கூடுதல் நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது. இதற்காக ரூபாய் 49 கோடி "மானியக் கோரிக்கை 29: சமூக நலன்" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

8. பதினோராம் நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், இயற்கைச் சீற்ற துயர் துடைப்பு நிதிக்கு கூடுதலாக ரூபாய் 34 கோடியே 1 இலட்சம் வழங்க வேண்டியுள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை 40: இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

9. ஓய்வூதியத்தைத் திருத்தியமைத்த வகையில் ஏற்பட்ட கூடுதல் செலவிற்காக "மானியக் கோரிக்கை 41: ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்" என்பதன்கீழ் ரூபாய் 374 கோடியே 93 இலட்சம் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

10. குஜராத்தில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூபாய் 5 கோடி வழங்கிட அரசு அனுமதித்துள்ளது. "மானியக் கோரிக்கை 42: பல்வகை" என்பதன்கீழ்

அடையாள நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மறு நிதியொதுக்கம் மூலம் அளிக்கப்படும்.

11. பிரதமரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூபாய் 175 கோடி தேவைப்படுகிறது. இதற்காக, "மானியக் கோரிக்கை 60: பல்வகை மூலதனச் செலவு" என்பதன்கீழ் ரூபாய் 133 கோடியே 18 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மறு நிதியொதுக்கம் மூலம் அளிக்கப்படும்.

12. அரசு வாங்கிய பல்வேறு கடன்கள் மீது வட்டிக்கான கூடுதல் செலவினங்களுக்காக ரூபாய் 251 கோடியே 58 இலட்சம் "கடன் செலவுகள்" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

13. இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து அவ்வப்போது பெற்ற வழிவகை முன்பணத்தையும், மிகைப் பற்றையும் திருப்பிக் கொடுக்க ரூபாய் 3113 கோடி "பொதுக்கடன் - திருப்பிச் செலுத்துதல்" என்ற தலைப்பின்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

14. இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து நான் இங்கு மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும், மற்றும் ஏனைய இனங்கள் குறித்தும் உரிய முழு விவரங்கள் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம்பெற்றுள்ளன.

15. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**2000-2001 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் |
|---|---|
| **(அ). வருவாய்க் கணக்கில் செலவு** | |
| 2 மாநில ஆயத் தீர்வைத் துறை | 2 |
| 3. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 5,55,52 |



| | |
|---|---|
| 4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் | 8 |
| 6. ஆவணப் பதிவு | 96,02 |
| 7. மாநிலச் சட்டமன்றம் | 44,84 |
| 8. தேர்தல்கள் | 27,10,78 |
| 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 44 |
| 11. மாவட்ட நிருவாகம் | 33 |
| 12. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 1 |
| 13. நீதி நிருவாகம் | 19 |
| 14. சிறைச்சாலைகள் | 11 |
| 15. காவல் துறை | 80 |
| 16. தீயணைப்புப் பணிகள் | 7 |
| 17. கல்வி | 1,72,12,38 |
| 18. மருத்துவம் | 82 |
| 19. மக்கள் நல்வாழ்வு | 60 |
| 20. வேளாண்மை | 80 |
| 21. மீனளம் | 10 |
| 22. கால்நடை வளர்ப்பு | 26 |
| 23. கூட்டுறவு | 3 |
| 24. தொழில்கள் | 5,45,22 |
| 25. கைத்தறியும், துணித் தொழிலும் | 1,80,64 |

| | | |
|---|---|---|
| 26. | கதர்-கிராமத் தொழில்கள் | 6,18,11 |
| 27. | ஊரக வளர்ச்சி | 18 |
| 28. | தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் | 12 |
| 29. | சமூக நலன் | 65,93,68 |
| 30. | பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 10,63,98 |
| 31. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் | 25 |
| 32. | வீட்டு வசதி | 6 |
| 33. | நகர்ப்பகுதி வளர்ச்சி | 1 |
| 34. | நுகர்பொருள் வழங்கல் | 10 |
| 35. | பாசனம் | 1,44,63,90 |
| 36. | பொதுப் பணிகள்-கட்டடங்கள் | 9 |
| 37. | சுற்றுச்சூழல் | 7,08,81 |
| 38. | சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து | 10,41,09 |
| 39. | சாலைப் போக்குவரத்துப் பணிகள் | 1,26,83 |
| 40. | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 45,98,76 |
| 41. | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 3,74,92,63 |
| 42. | பல்வகை | 18 |
| 43. | எழுதுபொருள்-அச்சுத் துறை | 3 |
| 44. | காட்டு வளத் துறை | 14 |
| 46. | செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் | 7,28,64 |



| | | |
|---|---|---|
| 47. | ஊரகத் தொழில்கள் | 4,26,57 |
| 48. | குடிநீர் வழங்கல் | 33,18,56 |
| 49. | நகராட்சி நிருவாகம் | 7 |
| 50. | சுற்றுலா | 1,18,01 |
| 51. | தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 2,90,54 |
| | **மொத்தம்- அ. வருவாய்க் கணக்கில் செலவு** | **9,29,41,40** |

**ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.**

| | | |
|---|---|---|
| 52. | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 2,02,50 |
| 54. | பாசனம் குறித்த மூலதனச் செலவு | 51 |
| 55. | பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 22,79,16 |
| 56. | சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 12 |
| 58. | காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு | 3,45,72 |
| 59. | ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 12,81 |
| 60. | பல்வகை மூலதனச் செலவு | 1,75,70,52 |
| | **மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | **2,04,11,34** |

**இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்**

| | | |
|---|---|---|
| 61. | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 27,43,64 |
| | **பெரு மொத்தம்** | **11,60,96,38** |

முற்பகல் 11-00

## 7. அறிவிப்பு

**பேரவை மாலையில் கூடுவதற்குப் பதிலாக, அலுவல்களை 2-00 மணி வரை நீட்டித்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றையதினம் நம்முடைய சட்டமன்றம் மாலையிலும் கூடியது. மாலையில் கூடுவதிலே பெரும்பாலான உறுப்பினர்கள் அவைக்கு வருகின்ற சூழ்நிலை இல்லை என்ற ஒரு கருத்து தெரிவிக்கப்படுவதால், காலையிலே பல்வேறு கட்சித் தலைவர்களோடு கலந்தாலோசித்து மாலையிலே அவை கூடுவதற்குப் பதிலாக 2-00 மணி வரையிலே சட்டமன்றத்தை நடத்தலாம் என்ற ஒரு கருத்து கூறப்பட்டு, அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அந்த வகையிலே இன்றும், நாளையும் மாலைக்குப் பதிலாக 2 நாட்களும் 2-00 மணிவரையிலே சட்டமன்றம் நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 8. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று ஏறத்தாழ 18 மாண்புமிகு உறுப்பினர்கள் பேச தங்கள் பெயர்களைக் கொடுத்திருக்கின்றார்கள். அதைக் கருத்தில்கொண்டு முதலில் பேசுகின்ற டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுக்கு 15 நிமிடமும், அதற்குப் பிறகு பேசுகின்ற எல்லோருக்கும் தலா 8 நிமிடம், 10 நிமிடம் என்ற கணக்கிலேயும் நேரம் கொடுக்கப்படும் என்பதை அறிவித்து, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களைப் பேசுமாறு அழைக்கின்றேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின் மீது தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாகப் பேசுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன், வாய்ப்புக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இந்த 11-வது சட்டப்பேரவை தன்னுடைய பருவத்தை நிறைவு செய்கின்ற வேளையிலே இந்தச் சட்டப்பேரவையினுடைய மரபையும், கண்ணியத்தையும் காப்பாற்றியதில், நெறி சார்ந்த அரசிலே நம்பிக்கையுள்ள ஒப்பற்ற தலைவர் எங்கள் அன்புத் தலைவர் ஐயா மூப்பனார்



அவர்களுடைய வழியைப் பின்பற்றி தமிழ் மாநில காங்கிரஸ் அளித்த பங்களிப்பை நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இந்த 5 ஆண்டுகாலத்திலே இந்த அரசு மக்களுக்கு அளித்த நன்மைகள், அளித்த சுமைகள் என்று பார்க்கின்றபோது, இந்த அரசு மக்களுக்கு அளித்த சுமைகள் குறித்து ஒரு ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற வகையிலே நான் பேசுவதற்கு விழைகின்றேன். பொதுவாக பொதுமக்களைப் பாதிக்கின்ற வகையிலே பஸ் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, சமையல் எரிவாயு விலை உயர்வு, மண்ணெண்ணெய் விலை உயர்வு, டீசல் விலை உயர்வு, ஏழை, எளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய 2 ரூபாய் அரிசி விலக்கிக் கொள்ளப்பட்ட நிலை என்று பல்வேறு நிலைகளிலே சாதாரண பொதுமக்கள் இந்தச் சுமைகளையெல்லாம் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள்; தாங்கியிருக்கிறார்கள்.

பொதுவாக, விவசாயிகளைப் பொறுத்தவரையிலே இப்போது அவர்கள் மகிழ்ச்சியாக இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. இப்போது அவர்கள் விளைவிக்கின்ற நெல்லுக்கு விலை இல்லை. இடுகின்ற உரப் பொருட்களெல்லாம், இடுபொருட்களெல்லாம் விலை உயர்ந்திருக்கின்றன. இந்த நிலையிலே அவர்கள் இப்போது தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு மிகவும் கடினமான நிலையிலே உள்ளார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

முற்பகல் 11-05

பொதுவாக, கரும்பு விவசாயிகளைப் பொறுத்தவரையிலே ஒரு டன்னுக்கு 1000 ரூபாய் என்பது பல்வேறு தருணங்களிலே, பல்வேறு உறுப்பினர்களால் இங்கே பேசப்பட்டிருக்கிறது. ஆனால், இருக்கின்ற யதார்த்த நிலையிலே இப்போது ஒரு டன்னுக்கு 760 ரூபாய்தான் தருகிறார்கள். அப்படித் தருகிற நேரத்திலேகூட அவர்களுக்குச் சேரவேண்டிய பணம் உரிய நேரத்தில் சேர்ந்ததா என்றால், நிச்சயமாக இல்லை. என்னைப் பொறுத்தவரையில், எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையிலே அங்கே இருக்கின்ற திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையிலே விவசாயிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய பணம் முழுமையாக ஓராண்டு காலமாகக் கொடுக்கப்படவில்லை. பல்வேறு போராட்டங்கள், பல்வேறு கோரிக்கைகள் எல்லாம் வந்த பிற்பாடுதான் ஓரளவிற்கு அவர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. அதுகூட ஓராண்டு தாமதத்திற்குப் பிறகு இப்போது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 10.2 பிழிவுத் திறன் கொண்ட கரும்புக்கு ஒரு டன்னுக்கு 1000 ரூபாய் அளிக்கலாம் என்று அவர்கள்

உறுதிமொழி அளித்து இருக்கிறார்கள். ஆனால் நான் என்னுடைய பகுதியிலே விசாரிக்கின்றபோது, குறிப்பாக திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையை விசாரிக்கின்றபோது, அங்கு இருக்கின்ற பிழிவுத் திறன் 8.0 தான் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். பொதுவாக தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை ஆலைகளுடைய சராசரியைப் பார்க்கும்போதுகூட பிழிவுத் திறன் 8.5-க்கு மேலாக வருவதில்லை என்று நிபுணர்கள், விற்பன்னர்கள் கூறுகிறார்கள். ஆகவே, இந்த அறிவிப்பினை மறுபரிசீலனை செய்து உரிய முறையிலே நியாயமான முறையிலே, அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக இத்தகைய இழிநிலையிலே இருக்கின்ற விவசாயிகள் வருத்தப்பட்டுக் கூறுகிறபோது சொன்னார்கள், 'பிழியப்படுவது கரும்பல்ல, கரும்பு விவசாயிகள்தான்' என்று அவர்கள் கூறினார்கள். இதை நான் மிக வருத்தத்தோடு கூறுகிறேன். ஏனென்று சொன்னால் திருத்தணியிலே, திருத்தணியைச் சார்ந்த பகுதிகளிலே பல்வேறு போராட்டங்களை எங்களுடைய விவசாயப் பெருமக்கள் நடத்தியிருக்கிறார்கள்.

அதேபோல தென்னை விவசாயிகளைப் பொறுத்தவரையில்கூட கொப்பரைத் தேங்காய்களுக்கு அளிக்கப்படுகின்ற விலையைப் பற்றிப் பல்வேறு சர்ச்சைகள் இடையிலே வந்தன. மத்திய அரசினுடைய NAFED என்ற நிறுவனம் நிர்ணயித்த விலையானது கிலோ ரூபாய் 32.50. ஆனால் அதைச் சாதாரணமாக வியாபாரிகளிடமிருந்து கிலோ 20 ரூபாய்க்கு வாங்கி, இடையிலே இருப்பவர்கள் இலாபம் ஈட்டினார்கள் என்ற குற்றச்சாட்டு மிகப் பலமாக எழுந்தது. இப்போது அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டாலும்கூட மத்திய அரசு நிர்ணயித்த அந்த minimum price என்று சொல்லப்படக்கூடிய குறைந்தபட்ச விலைகூட விவசாயிகளுக்குச் சென்றடையவில்லை என்பதுதான் வேதனையான உண்மை. வாய்க்காலில் வருகிற நீர் வயலிலே போய்ச் சேருவதற்குள்ளாக நடுவிலே சிலர் உறிஞ்சிவிட்டார்கள் என்ற வேதனையான செய்தியைக் கேட்கிறபோது உண்மையிலேயே இந்த அரசு சிந்திக்க வேண்டும்.

அதேபோல, தேயிலை விலை இப்போது மிகப்பெரிய அளவிலே வீழ்ச்சி அடைந்திருக்கிறது. ஐக்கிய முன்னணி ஆட்சி இருந்தபோது கிலோ 19 ரூபாய் என்றிருந்த விலை இப்போது 4 ரூபாய்க்கு இறங்கியிருக்கிறது. தவறான கொள்கை முடிவுகளால், மத்திய அரசு எடுக்கின்ற கொள்கை முடிவுகளால் அல்லது மத்திய அரசு எடுக்கின்ற கொள்கை முடிவுகளுக்கு இந்த மாநில அரசு இசைந்து போகின்ற நிலைகளால் இந்த நிலைமை



ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தேயிலை விவசாயிகள் மகிழ்கின்ற வண்ணம், அவர்களுடைய வாழ்க்கை நிலைபெறும் வண்ணம் சில முடிவுகளை, உறுதியான முடிவுகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். பொதுவாக, முன்பு பாதுகாப்புத் துறைக்குத் தேயிலை வழங்கினார்கள். முன்பு திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் மத்திய அமைச்சராக இருந்தபோது இராணுவத் துறைக்கு அவர்கள் வாங்கினார்கள். அந்த நிலைமையை நம்முடைய மாநில அரசு முனைப்போடு செய்ய வேண்டும். அதுபோல, கூட்டுறவு அங்காடிகள் மூலமாகத் தேயிலையை விற்பனை செய்வதன் மூலமாகவும் நிச்சயமாகத் தேயிலை விவசாயிகளுக்கு ஒரு சிறந்த நிலையை உருவாக்கிட முடியும். தேயிலை விலை வீழ்ச்சிக்குக் காரணமாக நடைபெற்ற போராட்டங்களின்போது நடைபெற்ற சேதங்களுக்கு—Human Rights Commission—தேசிய மனித உரிமை ஆணையம் ரூ.31 இலட்சம் நஷ்டயீடு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் இதுகாறும் அந்த நஷ்டயீடு வழங்கப்படவில்லை. அந்த நஷ்டயீடு வழங்கப்பட வேண்டும் என்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பொதுவாக இலவச மின்சாரத்தை இந்த அரசு மிகப் பெரிய நன்மையாகச் சொல்லிக்கொள்கிறது. மிகப்பெரிய சாதனையாகச் சொல்லிக்கொள்கிற இந்த இலவச மின்சாரத்தைப் பொறுத்தவரையிலேகூட 30-9-1990-க்குப் பிறகு 10 ஆயிரம் ரூபாய் கட்டிய விவசாயிகளுக்கு இன்னும் மின் இணைப்புத் தரப்படவில்லை. உண்மையைச் சொல்லப்போனால் 1990-க்குப் பிறகு இந்த இலவச மின்சாரமே தரப்படவில்லை என்பதுதான் உண்மை. 10 ஆயிரம் ரூபாய் கட்டிய விவசாயிகள் இன்றைக்கும் மின் இணைப்புபெறக் காத்திருக்கிறார்கள். என்னுடைய பகுதியிலே எனக்குக் கிடைத்த புள்ளிவிவரங்களின்படி செப்டம்பர் மாதம் 1990 ஆம் ஆண்டு முடியத்தான் அந்த 10 ஆயிரம் ரூபாய் கட்டியவர்களுக்கான மின் இணைப்பு தரப்பட்டிருக்கிறது. பிறகு கட்டியவர்களுக்கு அந்த மின் இணைப்பு தரப்படவில்லை என்று சொல்கிறார்கள். இதை ஏன் என்று நான் கேட்க விரும்புகிறேன். விவசாயிகளுக்கு நன்மை செய்கிற அரசு, இதிலே நன்மை செய்வதாகக் கூறிக்கொள்கிற அரசு......

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செப்டம்பர் 1990 ஆம் ஆண்டு 10 ஆயிரம் ரூபாய் செலுத்தியவர்களுக்கு இதுவரையிலே கொடுக்கவில்லை என்கிறார்கள்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2001 ஜனவரி 31

மாண்புமிகு உறுப்பினர் பலமுறை என்னைச் சந்திக்கிறார். என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தால் உடனடியாக அந்த இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால் உறுதியாகச் சொல்கிறேன், 1997 ஆம் ஆண்டு வரையிலே யார், யார் 10 ஆயிரம் ரூபாய் செலுத்தினார்களோ அவர்களுக்கு எல்லாம் மின் இணைப்பு வழங்கியாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல 1990 ஆம் ஆண்டில் யாருக்காவது 10 ஆயிரம் ரூபாய் கட்டி, அது கொடுக்கப்படாமல் இருக்குமானால், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் ஒரே வாரத்தில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

முற்பகல் 11-10

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மிக்க நன்றி, சென்னையைப் பொறுத்தவரையில் குடிநீர்ப் பஞ்சம் கடுமையாக வரவிருக்கிறது. சித்திரை வெயிலிலே நிச்சயமாகக் குடிநீர்ப் பஞ்சம் வரவிருக்கிறது. இப்போதே பல உயர் அதிகாரிகள் வசிக்கின்ற டவர் பிளாக் போன்ற பகுதிகளிலே மூன்று நாட்களுக்கு ஒரு முறைகூடத் தண்ணீர் வருவது இல்லை என்று குறைபட்டுக் கொள்கிறார்கள். எல்லா இடங்களிலும் அந்த நிலைமை வெகு விரைவிலே வரவிருக்கிறது.

கிருஷ்ணா நதிநீரைப் பொறுத்தவரையிலேயான சர்ச்சை முழுமையாக முடிந்தபாடில்லை. பொதுவாக, மாலுக்கு மருகன் முருகன். திருமாலுக்கு மருகன் துரைமுருகன்; அதுவும் துரைமுருகன்தான். இந்த மருமகனுக்கும் மாமாவிற்கும், இடையே இருக்கின்ற இந்த மர்ம முடிச்சு அவிழவே இல்லை. இதுகுறித்து ஒரு வெள்ளை அறிக்கை கேட்டால், அந்த வெள்ளை அறிக்கை அளிப்பதிலே ஏன் இந்த அரசு சுணக்கம் காட்டுகிறது? இல்லை, வெள்ளை அறிக்கையைப் பெறுவதற்கு இந்த மன்றத்திற்கு உரிமை இல்லையா? யதார்த்த நிலையை நிலை நாட்டுவதிலே அமைச்சருக்கு என்ன கடினம் இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். இதற்காக சட்டமன்ற உறுப்பினர்களை, ஆளும் கட்சியிலே நடுநிலையாக இருக்கின்ற உறுப்பினர்களை, எதிர்க்கட்சியிலே இருக்கின்ற நியாய உணர்வு கொண்ட சிறந்த உறுப்பினர்களைக்கொண்ட ஒரு குழுவை அமைத்து இந்த ஐயப்பாடுகளை தெள்ளத் தெளிவாகப் பத்திரிகையாளர்களுக்கும் விளக்கினால் சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அந்தக் கருத்தினை மிகவும் நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.



2001 ஜனவரி 31]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நீங்கள் என்ன இதிலே குற்றம் கண்டு சொன்னீர்கள். கிருஷ்ணா வாட்டரைப்பற்றிப் பேசினீர்கள். இதிலே இப்படிப்பட்ட குற்றங்கள், number one, two, three, four, five, six என்று இவ்வளவு குற்றங்கள் அல்லது doubts இருக்கின்றன. எனவே, நீங்கள் இதற்கு ஒரு பதில் செல்லுங்கள், வெள்ளை அறிக்கை, பிளாக் அறிக்கை வையுங்கள் என்று கேளுங்கள். பொதுவாகப் பேசும்போது, எல்லோருமே தலைவர் அவர்களே, இந்த கிருஷ்ணா வாட்டர்பற்றி ஒரு பிரச்சினை என்று சொல்கிறார்கள். இதற்கு ஒரு வெள்ளை அறிக்கை வைத்தால் போதும் என்று போகிற போக்கிலே ஏதாவது ஒன்றைச் சொல்லிக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறார்கள். இதுவரையிலே பேசியவர்களிலே உருப்படியாக யாரும் சொல்லவில்லை. திரு. அழகிரியாவது ஒன்றைச்சொன்னார்; 13 கிலோமீட்டர் தூரத்திற்கு கால்வாய் வெட்டப்படவில்லை என்று சொன்னார். ஆக, அதைத் தவிர உருப்படியாக ஒன்று சொல்லியிருக்கிறீர்களா?

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐயப்பாடு என்று வருகிறபோது அந்த ஐயப்பாட்டினை நீக்க வேண்டியது அரசினுடைய கடமை அல்லவா. அதில் உண்மை இருக்கிறதா, இல்லையா என்பது இரண்டாவது பட்சம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் கேட்கிறேன். என்ன ஐயப்பாடு? Tell Me.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** பத்திரிகையாளர்கள், பல்வேறு பத்திரிகை நிருபர்கள், நேரடியாகச் சென்று, அதுவும் பொறுப்பு வாய்ந்த பத்திரிகைகள் —மஞ்சள் பத்திரிகைகள் என்று சொல்லப்படுகின்ற இரண்டாம் தரப் பத்திரிகைகள் அல்ல—சென்று கிருஷ்ணா நதிநீர் என்பது சென்னைக்கு வரவில்லை என்று அவர்கள் கூறுகின்றார்கள். இதுதான் உண்மை என்று அவர்கள் அடித்துக் கூறுகின்றார்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நீங்கள் என்ன சார் சொல்கிறீர்கள்? ஊரிலே அவர்கள் சொல்கிறார்கள்; இவர்கள் சொல்கிறார்கள், சொல்லப்படுகிறது என்று சொன்னால் என்ன அர்த்தம்? மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமன் என்ன சொல்கிறீர்கள்? கிருஷ்ணா தண்ணீர் வருகிறது என்று சொல்கிறீர்களா? வரவில்லை என்று சொல்கிறீர்களா?

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** என்னைப் பொறுத்தவரையிலே திருவள்ளூர் மாவட்டத்தினுடைய குடிமகன் என்ற வகையிலே, அங்கே வருகின்ற நீர் கண்டலேறு ஏரியினுடைய நீர் என்றுதான் நான் நம்புகின்றேன். கிருஷ்ணா வாட்டர் அல்ல என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நீங்கள் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, திருத்தணி மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, கிருஷ்ணா தண்ணீர் என்பது ஸ்ரீசைலத்திலேயிருக்கிற தண்ணீர் சோமசிலாவிற்கு வந்து, சோமசிலாவிலிருந்து கண்டலேறுவிற்கு வந்து, கண்டலேறுவிலேயிருந்துதான் பூண்டி வரும். எனவே, (via) வையம்பட்டி என்பதைப் போல (via) கண்டலேறுதான், தண்ணீர் வருகிறது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** எது எப்படியாக இருந்தாலும், ஒரு யதார்த்தமான நிலைமையை நிலைநிறுத்தும் வண்ணம், அதை இந்த அரசு செய்தால் நன்மையாக இருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். ஏன் என்று சொன்னால்...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** துணைத் தலைவர் அவர்களே, யதார்த்தமே இல்லாமல் ஒரு யதார்த்தம். யதார்த்தம் பொன்னுசாமி என்று ஒருவர் இருந்தார். அவரைத்தான் சொல்ல முடியும். என்ன பிரச்சினை என்று சொன்னால், நான் அதற்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். பேசுவதற்கு வேறு இல்லை, அதனாலே பேசுகிறேன் என்றால் பேசுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** அப்படிப் பேசுபவன் நான் அல்ல. அப்படிப் பேசுகிற இயக்கம் நாங்கள் அல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக 1996 ஆம் ஆண்டு கவர்னர் உரையிலே கிருஷ்ணா நதி நீர் வரும் என்று குறிப்பிடப்பட்டது. மறு ஆண்டு உரையிலே கிருஷ்ணா நதி நீர் வந்துவிட்டது என்றும், மகிழ்ச்சியாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். இதிலே ஏறக்குறைய 4 ஆண்டுகாலம் முடிந்த பிறகும் அந்த ஐயப்பாடுகளும், சர்ச்சைகளும் இருப்பது நியாயம்தானா? அதைத் தெளிவுபடுத்துவது அரசினுடைய கடமை இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி. இதிலே வெள்ளை அறிக்கை வைப்பதிலே என்ன சிரமம் இருக்கிறது என்று புரியவில்லை. இதிலே குழுவை அமைத்துப் பார்ப்பதிலே என்ன தவறு என்றும் புரியவில்லை. பல குழுக்கள் மூலம் பல மாநிலங்களுக்குச் சென்று பல்வேறு நிலைகளை நாம் கண்டு வருகின்றோம். அப்படி இருக்கின்றபோது ஒரு குழுவை அமைத்து convice-



ஆகாமல் இருக்கின்ற ஐயப்பாடுகளை நீக்குவது பொறுப்புள்ள ஒரு அரசினுடைய கடமை என்று நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோல நெசவாளர்களைப் பொறுத்தவரையிலேகூட கைத்தறி, விசைத்தறி என்ற இரு துறைகளிலே இருக்கக்கூடிய நெசவாளப் பொதுமக்கள் அல்லலுக்கு ஆளாகியிருக்கிறார்கள்....

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நான் திருப்பித், திருப்பிச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர், மரியாதைக்குரிய திரு. இராமன் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே, மெம்பர்களை அழைத்துக் கொண்டுபோய்க் காட்டவேண்டியது ஒன்றும் இல்லை. நான் சொல்வதை நானே நம்பவில்லை என்றால்தானே உங்களை நான் கூப்பிட வேண்டும். இந்தப் பொறுப்பு வாய்ந்த பேரவையில் ஒரு பொறுப்பு வாய்ந்த அமைச்சர் என்ற முறையில், அந்தத் துறையை வகிக்கிறவன் என்ற முறையிலே நான் சொல்கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஒரு team-ஐ அழைத்துக்கொண்டு போய், இல்லையென்று சொன்னால் என் மேலேயே privilege கொண்டு வரலாம். நான் சொன்னதை நானே நம்பாமல், வாங்க காட்டுகிறேன் காட்டுகிறேன் என்று சொல்லியா உங்களை அழைத்துக்கொண்டு போவேன்?

முற்பகல் 11-15

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்வதிலே எங்களுக்கு நம்பிக்கை இல்லாமல் இல்லை. ஆனால், கிருஷ்ணா நதி நீர் திட்டத்தின் மூலம் 15 டி.எம்.சி. தண்ணீர் வர வேண்டுமென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். 3 டி.எம்.சி. போய்விட்டால்கூட மீதி 12 டி.எம்.சி. வரவேண்டும். ஆனால் 12 டி.எம்.சியிலே நீங்கள் இரண்டு தினங்களுக்கு முன்பு சொன்னது, 4 டி.எம்.சி.யோ., 5 டி.எம்.சி.யோ தண்ணீர்தான் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். 12 டி.எம்.சி., எப்பொழுது வரும்? திட்டம் முழுமை பெற்றுவிட்டதா? முழுமையான தண்ணீர் வருகிறதா? எங்காவது பிரச்சினை இருக்கிறதா? பத்திரிகைகளில் இதுமாதிரி செய்திகள் வருகிறதே, அந்தச் செய்தி உண்மையா? உண்மையே இல்லாத ஒரு செய்தியைப் பத்திரிகைகள் தொடர்ந்து எழுத முடியுமா? ஏன் 12 டி.எம்.சி. தண்ணீர் இதுவரை வரவில்லை?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 12 டி.எம்.சி.யும் ஒன்றாக வந்துவிடாது, அதைத்தான் நான் உங்களுக்குச் சொல்கிறேன் மொத்தம் 15 டி.எம்.சி.யிலே 3 டி.எம்.சி. ஆவியாகிப் போக, மீதியிருக்கிறது 12 டி.எம்.சி. அந்த 12 டி.எம்.சி.யிலே நாம் கண்டலேறுவில் ஒரு 5 டி.எம்.சி.யை வைத்திருக்கிறோம். நம் தண்ணீர் அங்கேதான் இருக்கிறது. இரண்டாவது, 12 டி.எம்.சி.யிலே 2 டி.எம்.சி. தண்ணீரை திருத்தண்டலத்திலேயும், மேலும் ராமஞ்சேரியிலே ஒரு டி.எம்.சி. தண்ணீரையும் அணையைக் கட்டி அங்கே தேக்க வேண்டும். நாம் திருத்தண்டலம், ராமஞ்சேரி அணைகளைக் கட்டவில்லை. ஏன் கட்டவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். அங்கே இருக்கிற மக்கள் உள்ளே விட மாட்டேன் என்கிறார்கள். அதனாலே அந்தத் தண்ணீரை நாம் கொண்டு வர முடியாது. ஆகையினாலே 5 டி.எம்.சி. தண்ணீரை இப்பொழுது கண்டலேறுவிலேதான் நாம் தேக்கி வைத்திருக்கிறோம். ஆகையினாலே ஒவ்வொரு நாளும் தண்ணீர் அங்கே இருக்கவிட்டு அந்தக் கால்வாயினுடைய தாங்குகிற வேகத்திற்கு ஏற்ப தண்ணீர் இங்கே வந்துகொண்டிருக்கிறதே தவிர, ஒரே நாளிலே 12 டி.எம்.சி.யும் வர முடியாது. அதை நாம் கொண்டு வந்தாலும், வைப்பதற்கு இடம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிஷம்தான் இருக்கிறது. டாக்டர் அ. செல்லக்குமார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே அமைச்சரவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், அந்தக் கிருஷ்ணா கால்வாயிலே 13 கிலோமீட்டர் வெட்டப்படவில்லை என்று. இருந்தாலும் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது என்று இதற்கு முன்னர் வரவு-செலவுத் திட்ட அறிக்கை தாக்கல் செய்த அந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேசுகிறபொழுதே சொன்னார்கள். அந்த 13 கிலோமீட்டர் வெட்டப்பட்டுவிட்டதா? அதற்காக என்ன முயற்சியை இந்த அரசு எடுத்திருக்கிறது என்று நாங்கள் அறிய விரும்புகிறோம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த 13 கிலோமீட்டர் இன்னும் வெட்டப்படவில்லை. காரணம், அந்த நிலத்துக்காரர்கள் அதிக நஷ்ட ஈடு தேவை என்று நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறார்கள். வழக்கு நிலுவையிலே இருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மேல்மலையனூர் டாக்டர் ஆ ஞானசேகரன். (குறுக்கீடு.)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** உரையை முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கட்டடத் தொழிலாளர்களைப் பாதித்திருக்கிற மிக முக்கியமான ஒரு அம்சம் சிமென்ட் விலை. பல்வேறு தருணங்களில் பல்வேறு உறுப்பினர்கள் இதைப்பற்றிக் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். நேற்றைக்குக்கூட நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் பேசும்போது பக்கத்து மாநிலங்களிலேகூட விலை அதிகம் என்று சொன்னார்கள். நான் பக்கத்து மாநிலத்திலே, ஆந்திரா மாநிலத்துக்குப் பக்கத்தில் இருப்பவன் என்ற காரணத்தால் நான் கேட்டேன், அங்கே என்ன விலை என்று. ஆந்திராவில் மூட்டைக்கு 165 ரூபாய் என்றும் நம்முடைய ஊரில் 197 ரூபாய் என்றும் அவர்கள் சொல்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்பது குறித்து நான் இங்கே விரிவாகப் பேசி உள்ளே செல்ல விரும்பவில்லை. ஏலம் எடுக்கின்ற வியாபாரிகள், குறிப்பாக கள், சாராய வியாபாரிகள் எப்படி ஒரு சிண்டிகேட் அமைத்துச் செயல்படுகிறார்களோ அதுபோல ஒரு சிண்டிகேட், சிமென்ட் தொழில் அதிபர்களிடையே இருக்குமானால், அதை உடைத்து எறிய வேண்டியது இந்த அரசினுடைய கடமை என்பதை நான் மிக வலிமையாகவும், அதேநேரத்தில் அழுத்தமாகவும் வலியுறுத்த விரும்புகிறேன். ஏனென்று சொன்னால் இப்போது ஒரு சாதாரண மனிதனுக்கு இருக்கின்ற ஆசையெல்லாம் உணவு, உடை, இருப்பிடம், இந்த இருப்பிடத்திற்கு ஆதாரமாக இருப்பது சிமென்ட் மிகப்பெரிய தனவந்தர்கள் மட்டும் அல்ல; சாதாரணமான ஏழை எளியவர்கள்கூட தன்னுடைய இருப்பிடத்தை அமைத்துக்கொள்ள ஆசைப்படுகின்ற நிலையிலே இப்போது கட்டடப் பொருளாக இருக்கின்ற சிமென்டினுடைய விலையைப்பற்றி மாநில அரசு நிச்சயமாகக் கவலைப்பட வேண்டும். மத்திய அரசு இதற்குக் காரணம் என்று சொன்னாலும்கூட மத்திய அரசிலே அங்கம் வகிக்கின்ற, பங்கு பெற்றிருக்கின்ற நம்முடைய அரசு அதை வலியுறுத்திச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு இருக்கின்ற மிகப்பெரிய வருத்தமெல்லாம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தைப் படிக்கின்றபொழுது 11-வது நிதி ஆணையம் அளிக்க வேண்டிய பங்கினைத் தமிழக அரசுக்கு உரிய முறையில் அளிக்கவில்லை

என்று வருத்தத்தோடு குறிப்பிட்டார்கள். மத்திய அரசிலே பங்கேற்றிருக்கிற நம்முடைய அரசு அல்லது நம்முடைய அரசைச் சேர்ந்தவர்கள் வலியுறுத்தி, அதைப் பெற்றிருக்க வேண்டும் என்பதை நான் இங்கே பணிவோடு குறிப்பிட விரும்புகிறேன். Incentive என்ற வகையிலே ஊக்கத் தொகையாக அவர் அளித்திருந்தாலும்கூட அது போதாத நிலையிலே மிகவும் வலியுறுத்தி நம்முடைய மாநிலத்து நலனைக் காப்பது முதல் கடமை என்ற வகையிலே அவர்கள் அதைச் செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்ய வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** ஒரேயொரு நிமிஷம், நெசவாளர்களைப் பொறுத்தவரையில் (மணியடிக்கப்பட்டது).

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு சட்டப்பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, 2001-2002 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இந்தச் சாதாரண, சாமான்ய, எளியேனுக்கு இந்த அரிய வாய்ப்பை நல்கிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த கோடானுகோடி வணக்கங்களையும், நன்றிகளையும் இந்த அவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

2001-2002 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் வருவாய்க் கணக்கில் வரவு ரூ.20,635 கோடி ஆகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.24,294 கோடி ஆகவும், ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூ.996 கோடியாகவும் இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பதினோராவது நிதி ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நிதி கிட்டாத ஒரு துர்பாக்கிய சூழ்நிலை இருக்கிறது என்கிற ஒரு நிலை இந்த நிதிநிலை அறிக்கையில் விளக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்தின் சார்பாக மைய அரசினுடைய மொத்த வரி வசூலில் 40 விழுக்காடு மாநிலங்களுக்குப் பங்காக வழங்க வேண்டும் என்கின்ற கோரிக்கைக்கு மாறாக, ஆணையம் 29.5 விழுக்காடு அளவுக்கு பங்காக வழங்க முடியும் என்கின்ற பரிந்துரையை மைய அரசுக்கு வழங்கியுள்ளது. அதுமட்டுமல்லாமல், பின்தங்கிவிட்ட மாநிலங்களுக்கு முன்னுரிமை, முக்கியத்துவம் அளிக்கப்படும் என்கின்ற ஒரு விதிமுறையையும் மைய அரசுக்கு அந்த ஆணையம் நிர்ணயம்





செய்துள்ளது. சிறப்பாகச் செயல்பட்டுவரும் மூன்று மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. அந்த அடிப்படையில் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய முறையான நிதி இந்த நிதி ஆணையத்தின் பரிந்துரையின் காரணமாகக் கிடைக்கவில்லை என்கின்ற ஒரு நிலை இந்த நிதிநிலை அறிக்கையில் விளக்கப்பட்டிருக்கிறது.

பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தமட்டில், தமிழகம் இன்று மேலோங்கி இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் நேற்று உரையாற்றுகையில், பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் பின்தங்கியிருக்கிறது; வீழ்ச்சியடைந்திருக்கிறது என்கின்ற ஒரு நிலையைக் குறிப்பிட்டார்கள். நான் அவருக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் 1996 ஆம் ஆண்டு ஓர் இடைக்கால நிதிநிலை அறிக்கையை அளித்தார்கள். அந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் வருவாய்க் கணக்கில் வரவு ரூ.10,543.52 கோடி என்றும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.11,505.61 கோடி என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆகவே, இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கைக்கும், கடந்த காலத்தில் அவர்கள் வழங்கிய இடைக்கால நிதிநிலை அறிக்கைக்கும் உள்ள வேறுபாட்டை நீங்கள் சிந்தித்துப் பார்ப்பீர்களேயானால், எந்த அளவுக்குத் தமிழகம் இப்போது பொருளாதாரத் துறையில் வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடியும் என்கிற ஒரு நிலையை உங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அதுமட்டுமின்றி, மாநிலத்தினுடைய மொத்த உற்பத்தியினுடைய விகிதம் 1996 ஆம் ஆண்டிற்கும், 1997 ஆம் ஆண்டிற்கும் இடையில், அதாவது, ஆண்டுக்கு சராசரியாக 6.05 என்ற அளவுக்கு இருந்தது, நம்முடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுடைய சீரிய முயற்சியின் விளைவாக, சீரிய சிந்தனையின் விளைவாக, அயராத உழைப்பின் காரணமாக இப்போது 7.04 என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், 1995-96 ஆம் ஆண்டு தமிழகத்தினுடைய தனி நபர் வருமானம் ரூ.11,894 என்று இருந்தது. நம்முடைய அன்புத் தலைவர் அவர்களுடைய சீரிய முயற்சியின் காரணமாக இன்று தமிழகத்தினுடைய தனி நபர் வருமானம் ஆண்டுக்கு ரூ.18,786 என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தமட்டில், கல்வித் துறைக்கு நடப்பு நிதி ஆண்டில், 4,949 கோடி என்ற அளவுக்கு ஒதுக்கீடு செய்திருந்த நம்முடைய அரசு, வரும் நிதி ஆண்டிற்கு ரூ.5472 கோடி என்ற அளவுக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

அதுமட்டுமல்லாமல், கடந்த 4½ ஆண்டு காலத்தில் கல்வித் துறையின் மூலமாக ஏராளமான பள்ளிக்கூடங்களுக்கு கட்டட வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் பள்ளிகள் இல்லாத கிராமங்கள் இருக்கக்கூடாது என்ற இந்த அரசினுடைய கொள்கையின் அடிப்படையில் கடந்த 4½ஆண்டு காலத்தில் 1039 தொடக்கப் பள்ளிகளை இந்த அரசு நிறுவியிருக்கிறது. 512 தொடக்கப் பள்ளிகளை இடைநிலை பள்ளிகளாகவும், 380 இடைநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 283 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் இந்த அரசு தரம் உயர்த்தியிருக்கிறது. அதோடு நின்று விடவில்லை இந்த அரசு; 7038 தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டிடத்தை வழங்கியிருக்கிறது; 1323 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டட வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இவற்றைப் பார்க்கின்றபோது எந்த அளவிற்கு இந்த அரசு பொருளாதாரத்தில் மேலோங்கி நல்ல பல திட்டங்களைத் தமிழகத்திற்கு வழங்கியிருக்கிறது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த கால ஆட்சியை நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தால் ஏறத்தாழ 6000 பள்ளிகளுக்குக் கட்டட வசதி கிடையாது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். அதுமட்டுமல்லாமல், இந்த நல்ல ஆட்சியில், கல்வித் துறையில் நேர்மையாக மூப்பு அடிப்படையில் ஏறத்தாழ 60,000 இடைநிலை ஆசிரியர்களைப் பணி நியமனம் செய்து இருக்கின்றது இந்த அரசு. ஆக, இப்படி நல்ல பல பணிகளைச் கல்வித் துறையில், செய்து வருகிறது இந்த அரசு.

மக்கள் நல்வாழ்வுத் துறையை எடுத்துக்கொள்வோமேயானால், கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ரூபாய் 689 கோடி அளவிற்குத்தான் அவர்கள் நிதியொதுக்கீடு செய்திருந்தார்கள். ஆனால் நம்முடைய நல்ல ஆட்சியில் படிப்படியாக இப்பொழுது ரூபாய் 1311 கோடி அளவிற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு. இந்த மக்கள் நல்வாழ்வுத் துறையில் இந்த 4½



ஆண்டு காலத்தில் 613 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டட வசதிகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறது இந்த நல்ல அரசு. அதுமட்டுமல்லாமல் 400 துணை சுகாதார நிலையங்களுக்கு கட்டட வசதியை ஏற்படுத்தித் தந்திருக்கிறது.

அதோடு நின்று விடவில்லை, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் இந்திய அளவில் முதல் இடத்தை வகிக்கிறது இந்த அரசு. போலியோ நோய்த் தடுப்புத் திட்டத்தில் இந்திய அளவில் முதல் இடத்தை வகிக்கிறது இந்த அரசு. எய்ட்ஸ் என்கிற கொடிய நோயைத் தடுக்கின்ற முயற்சியில் இந்த அரசு இந்திய அளவில் முதல் இடத்தை வகிக்கிறது என்று சொன்னால், எந்த அளவிற்கு இந்த அரசு மக்கள் நலன்பால் பற்றுக்கொண்டு, மக்களுடைய நலத்தில் அக்கறை கொண்டு செயலாற்றி வருகிறது என்பதை நான் உங்களுக்கு இந்த அவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பினை வழங்கியமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இம்மாமன்றத்தில் பல உறுப்பினர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இது இடைக்கால நிதிநிலை அறிக்கை என்பதை கவனத்திற்கொண்டு இதில் எந்த அளவிற்கு என்னென்ன விவரங்களைச் சொல்ல முடியுமோ அந்த அளவிற்குச் சொல்லப்பட்டிருப்பதாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கை சில திட்டவட்டமான பிரச்சினைகள் மீது கவனம் செலுத்தியிருக்கிறது.

குறிப்பாக, தமிழ்நாடு அதிகமான முதலீட்டைப் பெற்று தொழில் வளர்ச்சியிலே பெருமிதம் கொள்ளத்தக்க அளவிற்கு வளர்ச்சி அடைந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வளர்ச்சி அடைந்து வருகிற முதல் 3 மாநிலங்களில் நம்முடைய தமிழ்நாடு ஒன்றாக இருப்பதும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனுடைய மறுபக்கத்தை நாம் ஆய்வு செய்து பார்த்தால், தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிற முதலீட்டைப் பார்க்கும்போது வளர்ச்சி அடைந்திருக்கக்கூடிய நிலையிலேயும் சமூக, பொருளாதார

அடிப்படையிலேயும் மக்களுடைய வாழ்க்கைக்கு நம்பிக்கையூட்டுவதாகவும் ஊக்கம் அளிப்பதாகவும் அது அமைந்திருக்கிறதா என்று கருதிப் பார்க்கிறபோது வேதனையைத்தான் வெளிப்படுத்துவதாக அமைகிறது.

1996 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 36 இலட்சம் பேர் என்ற அளவில் வேலையின்மைப் பட்டியலில் இருந்தவர்களுடைய எண்ணிக்கை தற்போது 47,70,000 என்ற அளவிற்கு உயர்ந்து இருக்கிறது. இதிலே குறிப்பாகப் பெண்கள் 14,90,000 பேர் வேலையில்லாதவர்களாக இருக்கிறார்கள். பொறியியல் பட்டப் படிப்பு முடித்தவர்கள் மட்டும் ஏறத்தாழ 40,000 பேர் என்ற அளவிலே இருக்கிறார்கள். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கக்கூடிய அளவிற்கு தமிழ்நாட்டிலே செய்யப்பட்ட முதலீடுகள், வளர்ந்துள்ள தொழில் வளர்ச்சி, வாய்ப்பு அளித்திருக்கிறதா என்று கருதிப் பார்க்கிறபோது நாம் திருப்தி கொள்ள முடியவில்லை; அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வேலையில்லாதோருடைய வேதனையைக் கருத்திலே கொண்டு ஒரு குறிப்பான திட்டத்தை முன்வைத்திருக்கிறார்கள். 'ஊக்குவிப்பு மையம்' ஒன்று அமைக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டம் என்ற அடிப்படையில் மத்திய அரசின் திட்டம் மாநிலத்திலே செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதிலே படித்தவர்கள் கடனுதவி பெற்று எப்படி வேலையைத் தொடங்கியிருக்கிறார்கள், தொடங்கப்பட்ட வேலையில் அவர்கள் இலாபகரமாக இருக்கிறார்களா என்பதைப் பற்றியெல்லாம் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு கவனத்திலே எடுத்துக் கொண்டதா அதனுடைய பலாபலன்களை ஆய்வு செய்ததா என்ற விவரங்கள் இங்கே தெரிவிக்கப்படவில்லை. இந்த ஊக்குவிப்பு மையம் என்பது எந்த அளவிற்குச் செயல்படும் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை.

முற்பகல் 11-30

அடுத்து, நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1990-91 ஆம் ஆண்டில், புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட நேரத்தில், அந்நிய முதலீடு நம்முடைய நாட்டுக்கு அதிகமாக வரும் என்று தெரிவிக்கப்பட்ட நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு அந்நிய முதலீடு இங்கே வருவது என்பதும் நம்முடைய கழுத்திலே விழக்கூடிய பூமாலையாக இருக்க வேண்டுமே தவிர, கழுத்தை நெருக்கக்கூடிய சுறுக்குக் கயிறாக மாறிவிடக் கூடாது என்ற எச்சரிக்கையை 10 ஆண்டுகளுக்கு முன்பே தெரிவித்திருக்கிறது. இந்த 10 ஆண்டுகால அனுபவத்தை நாம் பரிசீலித்துப் பார்க்கிறபோது, பொருளாதாரத் துறையில் நாடு கடைபிடித்து வந்த அந்த புதிய பொருளாதாரக் கொள்கையைக் கருத்திலே கொள்கிறபோது, இரண்டாம் கட்ட சீர்திருத்தம் என்ற அடிப்படையில் நடைபெற்று வருகிற இந்தச் சூழ்நிலையில் நாட்டிலே கடைபிடிக்கப்பட்ட இந்த நடவடிக்கை, கழுத்திலே விழுந்த சுறுக்குக் கயிறாக மாறியிருக்கிறது என்பதை வேளாண்மைத் துறை மிக நிதர்சனமாக நமக்கு எடுத்துக் கூறிக் கொண்டிருக்கிறது.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய மூலதனம் நம்முடைய கழுத்திலே விழுகின்ற மாலையாக இருக்கவேண்டுமே தவிர, சுறுக்குக் கயிறாக மாறிவிடக்கூடாது என்று உறுப்பினர் சொல்கிறார். இது அவருடைய கொள்கையாக இருந்தால், மேற்கு வங்கத்திலே வெளிநாட்டு முதலீடுகள் வருகிறதா இல்லையா, புதிய பொருளாதாரக் கொள்கை அங்கே அமல்படுத்தப்படுகிறதா இல்லையா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்கத்திலே புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் மாநில அரசு இயங்கி வருகிறது. உலகம் தழுவிய அளவில் மாறி வருகின்ற சூழ்நிலையை சீனம் போன்ற நாடுகளும் ஏற்றுக்கொண்டு செயல்படுத்தி வருகின்றன. அங்கெல்லாம் நாம் பரிசீலித்துப் பார்க்கிறபோது, அனுபவம் அவ்வளவு கசப்பாக இருப்பதில்லை. வேறு மாதிரியாக சூழ்நிலை அங்கே இருக்கிறது. அந்த அடிப்படையில் தமிழ்நாடு அரசும் கவனம் செலுத்தியிருந்தால் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருப்பேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்ற நேரத்திலே குறுக்கிடுவதாகத் தவறாக நினைக்கக் கூடாது. மேற்கு வங்காளத்திலேதான் மின்சார விநியோகத்தைக்கூடத் தனியாருக்குக் கொடுத்துவிட்டு, அந்தத் தனியார் ஏறக்குறைய 800 கோடி ரூபாயை அரசுக்குத் திருப்பிச் செலுத்தாத காரணத்தாலே உயர்நீதிமன்றம் வரை போய் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நிலைமைகளெல்லாம் இங்கே இல்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மிக எச்சரிக்கையோடு வெளிநாட்டு மூலதனத்தைக் கொண்டு வருவதிலே இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 ஜனவரி 31

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கை உணர்வு இல்லாதவர்கள் என்ற கருத்திலே நான் எந்தப் பிரச்சினையையும் அணுகவில்லை. ஆனால் இங்கே வந்திருக்கிற முதலீடு நம்முடைய சமூகப் பொருளாதார வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு உதவி செய்திருக்கிறதா என்ற கருத்தோட்டத்திலேதான் நான் பார்க்கிறேன். மேற்கு வங்க மாநிலத்தை நம்முடைய தமிழ்நாட்டோடு ஒப்பிடுவது எல்லா வகையிலும் ஒன்று சேர்ந்து வந்துவிடாது. நம்முடைய மாநிலத்தினுடைய கொள்கை, அணுகுமுறை நீண்டகாலமாக வேறு மாதிரியாக இருக்கிறது. அந்த மாநிலத்தினுடைய கொள்கை, அணுகுமுறை வேறு மாதிரியாக இருக்கிறது. அந்த மாநிலத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சில நிகழ்வுகளை இந்த மாநிலத்து மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற அடிப்படையிலேகூட சில திட்டங்களை அரசு வகுத்துக்கொள்ளும் கட்டாயம் இங்கே இருக்கிறது. எனவே அவற்றையெல்லாம் கருதிப் பார்க்க வேண்டிய அவசியம் என்ற அடிப்படையிலேதான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே வேளாண்மைத் துறையிலே வந்திருக்கக்கூடிய விபரீதம் மிக மோசமான விபரீதமாக இருக்கிறது. தேயிலை விவசாயிகள் பட்ட துயரம் நம் அனைவருக்கும் தெரியும். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இரண்டு முறை ஆய்வு செய்து மாண்புமிகு முதலமைச்சருக்கு விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம். அந்த விண்ணப்பத்தின் அடிப்படையில் சில நடவடிக்கையையும் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் தேயிலை விவசாயிகள் நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடியபோது பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. நிர்தாட்சண்யமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். மனித உரிமை ஆணையமே விசாரித்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு தரவேண்டுமென்று சொல்லி தீர்ப்பை வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பை அமல்படுத்துவதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். வழக்குப் பதிவு செய்யப்பட்ட விவசாயிகள்மீது உள்ள வழக்குகளை வாபஸ் பெற்று, அவர்களை விடுதலை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேயிலைக்கு வந்த நெருக்கடி இரப்பருக்கு வந்தது, இரப்பருக்கு வந்த நெருக்கடி தென்னைக்கு வந்தது, தென்னைக்கு வந்த நெருக்கடி இப்போது மஞ்சளுக்கு வந்திருக்கிறது. மஞ்சள் ஈரோடு மாவட்டத்தினுடைய



2001 ஜனவரி 31] [திரு. நா. பெரியசாமி]

பொருளாதார நடவடிக்கையில் மிக முக்கியமான ஒன்று. ஏறக்குறைய இப்போது 15 இலட்சம் குவிண்டால் மஞ்சள் தேக்கம் அடைந்து கிடக்கிறது. 1999 ஆம் ஆண்டிலே விற்பனை செய்த விலையினைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது ரூபாய் 3500, 4000 என்ற அளவிற்கு இருந்த விலை இன்றைக்கு ரூபாய் 1,400, 1,300 என்ற அளவிற்கு வீழ்ச்சி அடைந்திருக்கிறது. எனவே, அதுபோன்று, விவசாயத் துறையை நாம் கணக்கிட்டுப் பார்க்கின்றபோது தமிழ்நாட்டிலே 60 இலட்சம் ஹெக்டேர் என்ற அளவிற்கு (மணியடிக்கப்பெற்றது) விவசாயம் செய்து வந்த சாகுபடி நிலப்பரப்பு இப்போது படிப்படியாக 7 இலட்சம் ஹெக்டேர் சாகுபடி அளவிலேயே குறைந்திருப்பது விவசாயத்திற்கு வந்திருக்கக்கூடிய நெருக்கடியைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது.

முற்பகல் 11-35

அதுபோல, எங்கள் பகுதியிலே, ஈரோடு பகுதியிலே இருக்கக்கூடிய சில முக்கியமான கோரிக்கைகளை இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். அத்திக்கடவு அவிநாசி திட்டம் என்பது 15 ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வந்த ஒரு கோரிக்கையாக இருக்கிறது. அந்த அத்திக்கடவு அவினாசி திட்டத்தைப் பொறுத்தவரையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பல்வேறு ஆய்வு முடிவுகள் பெறப்பட்டிருக்கின்றன. இப்போதும், நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படும் என்ற உறுதி என்பது விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது; ஏற்றம் அளிப்பதாக இல்லை. தேர்தல் வருகிற இந்த ஆண்டில் இப்படியான ஒரு வாக்குறுதியை எதிர்பார்க்கவில்லை. (மணியடிக்கப்பெற்றது)

ஒரு குறைந்தபட்ச நிதி ஒதுக்கத்தைப் பெற்று இந்தப் பணி தொடங்கப்படும் என்று அறிவிப்பீர்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறு எதுவும் இதில் அறிவிக்கப்படவில்லை.

கடைசியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை குறித்து ஒரு சில விவரங்களை இங்கே தெரிவிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. பெருந்துறை வட்டத் தலைநகரத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக உயர்த்திக் கொடுத்தார்கள். ஆனால், அதிலே எந்த அடிப்படை வசதியும் இதுவரையிலும் செய்யவில்லை. அதை நீங்கள் கவனிக்க வேண்டும். அமைச்சர் உத்தரவிட்டதுகூட, சில நேரத்திலே அதிலே நடைபெறவில்லை என்பதையும் நான் இங்கே வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னை அரசினர் பொது மருத்துவமனைக்கு கடந்த டிசம்பர் 3 ஆம் தேதி நேரடியாக நானே இரவு நேரத்தில் சென்றேன். வைத்திய வசதி எப்படியிருக்கிறது என்று பார்ப்பதற்காகச் செல்லவில்லை, எங்களுடைய கட்சியின் மூத்த தலைவர், பீகாரைச் சேர்ந்த போகேந்திரஜா என்ற முன்னாள் மக்களவை உறுப்பினர், திடீரென்று உடல்நலம் பாதிக்கப்பட்ட நேரத்திலே அழைத்துச் சென்றேன். அங்கேயிருந்த நிலைய மருத்துவர்களும் உருப்படியான வேலையைச் செய்யவில்லை. ஒரு மணி நேரம் காத்திருந்து பார்த்துவிட்டு திரும்பவும் அவரைத் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நெருக்கடிக்கு ஆட்பட்டுவிட்டேன். நான் சட்டமன்ற உறுப்பினர் என்று அவருக்குச் சுட்டிக்காட்டியும், அவர் பீகாரிலே மக்கள் தலைவர் என்று சுட்டிக்காட்டியும் அங்கேயிருக்கின்ற மருத்துவர்கள் அதுகுறித்து எல்லாம் கவலைப்படவில்லை. இவ்வளவு சொன்னதற்குப் பிறகும் அவர்கள் கவலைப்படவில்லையென்றால் சாதாரண மக்களை எப்படி அணுகுவார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நான் ஒன்றும் அதை குறையாகச் சொல்லவில்லை. நடந்துவிட்ட அனுபவத்தை, நாமே சென்று பார்க்கிறபோது கிடைக்கின்ற அனுபவத்தை நான் எடுத்துச் சொல்கிறேன்.

அடுத்து, எம்.ஆர்.ஐ. ஸ்கேன் என்பது மாநகரங்களிலே உள்ள மருத்துவமனையில் வைக்கப்படும் என்ற அறிவிப்பு நம்முடைய அரசால் வெளியிடப்பட்டது. இதுவரையிலும், எந்த மருத்துவமனையிலும் வைக்கப்பட்டதாக தகவல் இல்லை. சி.டி.ஸ்கேன்கள் பல மருத்துவமனைகளில் வைக்கப்பட்டது. வைக்கப்பட்ட இடங்களிலேகூட பழுதடைந்திருப்பதாகச் சொல்லி ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள். அந்தப் பழுதினை நீக்கி மக்களுக்கு அதில் நன்மை வருமானால் அரசுக்கு மக்களுடைய ஆதரவைப் பெருக்கிக்கொள்கிற வாய்ப்பு ஏற்படும். அப்படியான வாய்ப்புக்கு அங்கே சூழல் இல்லை. ஊழலற்ற ஒரு நிருவாகத்தை அமைப்பதற்கு, குறிப்பாக மருத்துவமனைகளில், ஒரு முன்னணி மருத்துவர் - ஜூனியர் விகடனிலேகூட அந்தச் செய்தி வந்திருந்தது ஒரு நல்ல உபாயத்தைக் கடைபிடித்திருப்பதாகச் செய்தி வந்திருந்தது. அதை அரசு பின்பற்றுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) மருத்துவமனையிலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சி.டி.ஸ்கேனைப் பொறுத்தவரையிலே எல்லா இடங்களிலும் ஒழுங்காகச் செயல்படுகிறது. புதியதாக 18 இடங்களில் சிடிஸ்கேன் பொருத்தப்படும். எல்லா மாநகரங்களிலும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன்



பொருத்தப்படுவதாக அரசு அறிவிக்கவில்லை. ஒரு எம்.ஆர்.ஐ. ஸ்கேனுடைய விலை கிட்டத்தட்ட 5 கோடியிலிருந்து 6 கோடி ரூபாய். சென்னை பொது மருத்துவமனைக்கும், மதுரை பொது மருத்துவமனைக்கும் இரண்டு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வாங்குவதாக இருக்கின்றோம். அதுவும் டெண்டர் விட்டு அனைத்து ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டு இந்த பிப்ரவரி மாதத்திற்குள்ளாக இரண்டு எம்.ஆர்.ஐ. ஸ்கேன்களும் பொருத்தப்படும்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசியாக ஒன்றே ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். தென் மாவட்டங்களை வறட்சி பாதித்திருக்கிறது. அங்கே வேலைவாய்ப்பு உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள் என்றால், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கட்டவேண்டிய கடனைக் கட்ட முடியாத நெருக்கடிக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். எனவே, அபராத வட்டியில் செய்யப்படுகிற சலுகையோ அல்லது வட்டிக்காக வழங்கப்படும் ஊக்கத் தொகையோ அவர்களுக்கு முழுமையான நிவாரணமாக அமையாது என்ற காரணத்தால் அனைத்து வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டும். விவசாயம் பாதித்த ஆண்டுகளில் வரித் தள்ளுபடியே அரசாங்கம் செய்திருக்கிறது; நில வரியையே தள்ளுபடி செய்திருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட ஆண்டுகளில் உள்ள கடன் தொகையையும் முழுமையாகத் தள்ளுபடி செய்வதற்கு அரசு முன்வர வேண்டுமென்று வலியுறுத்தி வார்த்தையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

முற்பகல் 11-40

**திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். 11-வது தமிழக சட்டமன்றப் பேரவையின் இறுதிக் கூட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தில் பங்கேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்த தங்களுக்கும் என் உயிரினும் மேலான கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய இதயம் கனிந்த நன்றியினை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய உரையில், 2001-2002 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை இப்பேரவைமுன் வைப்பதாகவும், தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் புதிய சட்டப்பேரவையில் முழு அளவிலான வரவு-செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்கள். வரவிருக்கின்ற தமிழக சட்டமன்றத்திற்கான தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் மாபெரும் வெற்றியினை மீண்டும் பெறும் என்பது உறுதி. கலைஞர் அவர்கள் 5-வது முறையாக முதல்வராகப்

பதவியேற்று முழு அளவிலான நிதிநிலை அறிக்கையை 12-வது சட்டப்பேரவைக்கு அளிப்பார்கள். இது 'நன்றி மறப்பது நன்றன்று' என்பதற்கு இலக்கணமாக வாழும் இலட்சோப இலட்ச தமிழர்களின் அவா மட்டுமல்ல; எதிர்பார்ப்பும்கூட.

இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் அவினாசி-அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்திற்கான கலந்தாலுநர் பரிந்துரை பெறப்பட்டுள்ளது என்றும், அதனைப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ள வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது. அக்குழுவின் அறிக்கையை விரைவில் பெற்று, நிதி ஒதுக்கி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கோவை, ஈரோடு மாவட்டங்களின்-காங்கேயம் தொகுதியையும் சேர்த்து—7 சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட 10 ஒன்றியங்களில் உள்ள குளம், குட்டைகளை பவானி ஆற்று உபரிநீரைக் கொண்டு நிரப்பி, நிலத்தடிநீர் வளத்தைப் பெருக்கி, அங்கு நிலவும் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் அவினாசி-அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் என்ற அறிவிப்பு, அப்பகுதிகளில் வாழும் சற்றொப்ப 15 இலட்சம் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக, தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதற்கு ஏற்ப அமைந்துள்ளது. இத்திட்டத்தினை இந்நிலைக்குக் கொண்டுவர எனக்கு உறுதுணையாக இருந்த, குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்க்க குளம் குட்டையை நீர் நிரப்பக் கோரும் இயக்கத்தின் சார்பாகவும், பயன்பெறும் பகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். சொன்னதைச் செய்யும், செய்வதைச் சொல்லும் சொல்லேர் உழவனே! இப்பகுதி மக்களும் அவர்களுடைய சந்ததியர்களும் உலகம் உள்ளவரை தங்களை நீங்கா நினைவில் நிறுத்துவர் என்பது திண்ணம்.

அடுத்து, கீழ்பவானி பாசனத் திட்ட ஆயக்கட்டு நில விவசாயிகளின் இடர்பாடுகளைக் களைவதற்கு, பயிர் வாரித் தண்ணீர் தீர்வைக்குப் பதிலாக, ஏக்கர் வாரித் தீர்வையைக் கொண்டுவந்து, 35 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வந்த இந்தக் கோரிக்கையை நிறைவேற்றி உள்ளீர்கள். பயிர்க் கட்டுப்பாட்டின் காரணமாக விதிக்கப்பட்டு வந்த தண்டத் தீர்வையின் குறைபாடுகள் மற்றும் குளறுபடிகளை முன்வைக்க எனக்கு ஒரு வாய்ப்பு அளித்து, தீர்வை முறையை மாற்றியமைத்தது மட்டுமல்லாமல், விவசாயிகள் செலுத்த வேண்டிய தண்ணீர் தண்டத் தீர்வை நிலுவைகளையும் தள்ளுபடி செய்து கொடுத்து உதவியமைக்கு விவசாயிகள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது, கீழ்பவானி விவசாயிகளுடைய அபரிமித



அன்பைக் கழக அரசுக்குப் பெற்றுத் தந்துள்ளது. இதே ஏக்கர் வாரித் தண்ணீர் தீர்வை முறையை பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டப் பகுதியிலும் நடைமுறைப்படுத்தி உதவ வேண்டுமாய்த் தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் இத்திட்டப் பகுதியில் விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று ஒரு மடை விட்டு ஒரு மடை பாயும் பாசன முறையை அமல்படுத்தி உள்ளீர்கள். இது விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. ஆனால், தற்போது இத்திட்டம் ஆயிரம் ஏக்கர் கொண்ட பிளாக்குகளுக்கு மட்டுமே சோதனை முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. இத்திட்டத்தை மீதமுள்ள விவசாய பூமிகளுக்கும் கிடைக்கச் செய்தால் நன்மை பயக்கும் என்பதைத் தெரிவித்து, அதனை நிறைவேற்றிக் கொடுக்குமாறு தங்களை வேண்டுகிறேன்.

மாண்புமிகு கலைஞர் அவர்களே, அவினாசி-அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கைக்கு அனைவருடைய பாராட்டுதல்களைப் பெற்ற முடிவினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளீர்கள். நன்றி, அதேபோல், காங்கிரஸ் மற்றும் அ.தி.மு.க. அவர்கள் செய்ய முன்வராத கீழ்பவானி பாசனத் திட்டப் பகுதியில் ஏக்கர் வாரித் தண்ணீர் தீர்வையையும் அமல்படுத்தி என்னுடைய மற்றொரு கோரிக்கையையும் நிறைவு செய்து கொடுத்துள்ளார்கள். விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணத்தை இரத்து செய்தமைக்கு எனது நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், கடந்த 4½ ஆண்டுகளாக நான் அடிக்கடி தங்களைக் கேட்டு வந்துள்ள மற்றொரு கோரிக்கை நிறைவேற்றப்படாமலேயே உள்ளது. கீழ்பவானி பாசன ஆயக்கட்டில் உள்ள 2 இலட்சத்து 7 ஆயிரம் ஏக்கரில் உள்ள 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிலங்கள் வீட்டுமனைகளாகவும், தொழிற்சாலைகளாகவும் மாறிவிட்டபடியால், அதற்குப் பதிலாக 23,000 ஏக்கர் நிலங்கள் ஆயக்கட்டில் எப்படிப் புதியதாக சேர்த்துக்கொள்ளப்பட்டனவோ, அதுபோல் பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்தின்கீழ் காங்கேயம் தொகுதி, குண்டடம் ஒன்றிய வறட்சிப் பகுதிகளான சிங்கோடம்பாளையம், பெருமாள்பாளையம், ஆரத்தொழுவு, சிறுகிணறு ஊராட்சிகள், புங்கன்துறை மற்றும் சங்கரண்டாம்பாளையம் ஊராட்சிகளிலுள்ள ஆற்றுப் பாசன பகுதி அல்லாத வறண்ட பகுதிகள் ஆகியவற்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பது நாளது வரை நிறைவேறாத என்னுடைய கோரிக்கையாகும். பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்தின்கீழ், ஏற்கெனவே பயன்பெற்றுக் கொண்டிருந்த சுமார் 7 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் வீட்டுமனைகளாகவும், தொழிற்சாலைகளாகவும், காற்றாலைகளாகவும் மாறிவிட்ட நிலையில், அந்த நிலங்களுக்கு

[திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்] [2001 ஜனவரி 31

ஒதுக்கப்பட்ட நீரைக்கொண்டு என்னுடைய கோரிக்கையினை நிறைவேற்றிட வாய்ப்புள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-45

நல்ல குடிப் பிறப்பு, அண்ணா கற்பித்த அன்பு வழியில் வந்த வாழ்க்கை முறை, எந்த உயிரையும் வெறுக்காத தூய நட்பு முறை, எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் போற்றும் குணம், ஒப்புரவு, நாண், கண்ணோட்டம், உயர்வு, ஒழுக்கம், ஈத்துவக்கும் இன்பம் அறிதல் இத்தகைய அரிய நற்பண்புகளுடன் வரலாறாய் வாழும் அன்புத் தலைவர் கலைஞர் அவர்களே, தங்களுடைய ஆட்சி மீண்டும் மலரும்; தமிழகம் தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் வெற்றி நடை போட, உதயசூரியன் உதிப்பான்; ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணும் பாங்கில் 5-வது முறையாக முதல்வராகப் பதவியேற்க வேண்டும் என்பதே காலத்தின் கட்டாயம். நல்லதையே நினைப்போம், நல்லதே நடக்கும் என்று கூறி, என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். வாழ்க கலைஞர், வளர்க தமிழ்நாடு, நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான இடைக்கால பட்ஜெட் மீது என்னுடைய புதிய தமிழகம் கட்சியின் சார்பாக கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்புக் கொடுத்த உங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி, நான் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 5 ஆண்டு காலமாக இந்தச் சட்டமன்றத்திலே, இரண்டு மிக முக்கியமான விஷயங்களை நான் தொடர்ந்து வலியுறுத்தி வந்தேன். ஒன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு பற்றியது. இரண்டாவது, திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களிலே வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய, பல்லாயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தமான பிரச்சினை பற்றியும் நான் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்தேன். இந்த இரண்டு பிரச்சினைகளிலேயும் இந்த அரசு முதலிலே நான் எடுத்து வைத்த வாதங்களை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தாலும்கூட, கடைசியாக, குறிப்பாக மாஞ்சோலைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினையிலே, நான் அந்த நிருவாகத்தின் மீது சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் உண்மை; அங்கே மனித உரிமை மீறல்கள் நடந்து கொண்டிருக்கின்றன; எனவே, மாஞ்சோலை தேயிலைத் தோட்டங்களை, அரசுக்குச் சொந்தமான நிலங்களை அரசே கையகப்படுத்தும் என்று அறிவித்திருப்பதை அங்கு 2



2001 ஜனவரி 31] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

அமைச்சர்களை அனுப்பி நேரடியாக மக்களுடைய குறைகளையெல்லாம் கண்ட தமிழ்நாடு அரசை, முதல்வரை, அங்கு சென்ற 2 அமைச்சர்களை நான் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் அந்தப் பிரச்சினையை அதோடு விட்டுவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. அந்த நிலத்தைக் கையகப்படுத்தி மேலும் அந்த மக்களை முழுமையாக விடுவிப்பதற்கு, மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தால்தான், அது முழுமையாக முற்றுப்பெறும் என்ற காரணத்தினால் அதை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அறிக்கையோடு விட்டுவிடக் கூடாது என்பதை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

அடுத்தது இட ஒதுக்கீடு பற்றியது. சுதந்திரம் பெற்று ஏறக்குறைய 50 ஆண்டுகள் ஆகியும்கூட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு, அரசாங்கத்தினுடைய 145 துறைகளில் முறையாக அமல்படுத்தப்படவில்லை. எனவேதான், எந்த அளவிற்கு நிரப்பப்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசு வெள்ளை அறிக்கையாகச் சமர்ப்பிக்க வேண்டுமென்று 1996 ஆம் ஆண்டு முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நான் பேசிய கன்னிப் பேச்சிலேயிருந்து வலியுறுத்தியதன் விளைவாக அரசு ஒரு நல்ல நடவடிக்கை எடுத்து, இறுதியாக கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது வெள்ளை அறிக்கையைச் சமர்ப்பித்தது. ஆனால் இடையிலே இப்போது ஒரு இடர்பாடு ஏற்பட்டிருப்பதைப் போலத் தோன்றுகிறது. அரசாணை எண் 44, அரசாணை எண் 33 என்ற இரண்டும், இப்போது அரசியலாக்கப்பட்டு விட்டதால் ஒட்டுமொத்தமாகத் தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலன் எங்கே பறிபோய்விடுமோ என்று நான் அஞ்ச வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் இந்த சட்டமன்றத்திலே மீண்டும் அதைப் பரிசீலனை செய்வோம் என்று சொன்னாலும்கூட, புதிய தமிழகம் கட்சியின் சார்பாக, அரசாணை எண் 44 என்ன சொல்லியது, எதற்காகப் போடப்பட்டது. அரசாணை எண் 33-ன் மூலமாக என்ன தீய விளைவுகள் வரும் என்பதை இந்த மாமன்றத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக அரசாணை எண் 44 போடப்பட்டதனுடைய முக்கியமான நோக்கம், அன்றைய நோக்கம் என்ன என்றால், உயர் பதவிகளிலே தாழ்த்தப்பட்டோருக்கு அனைத்து மட்டங்களிலேயும் அவர்களுக்கு உரிய பங்கை அளிக்க வேண்டும் என்பதுதான். உதாரணத்திற்கு 'A' கேட்டகரி, 'B' கேட்டகிரி என்று எடுத்துக்கொண்டால் 'A' கேட்டகரியிலே தமிழ்நாடு

அளவிலே ஒரு துறையிலே 1000 பேர் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று எடுத்துக்கொண்டால், அந்த 'A' கேட்டகரியிலே ஒன்றிரண்டு என்று பத்து பணியிடங்கள் இருக்கலாம். பத்து பணியிடங்களை ஒட்டுமொத்தமாகக் கணக்கிட்டு 1000 என்று வந்தால், அதிலே பல பதவிகள் பணி உயர்வின் மூலமாக—சில பணியிடங்கள் நேரடி நியமனமாக இப்போது நடைபெற்று வருகிறது. இதிலே பணி உயர்வின் காரணமாக—கொடுக்கக்கூடிய இடங்களில், பெறக்கூடிய இடங்களில் தாழ்த்தப்பட்டோருக்கான பங்கு இல்லாத காரணத்தால்தான் அரசாணை எண் 44 பிறப்பிக்கப்பட்டது. அந்த இடங்களையும் தாழ்த்தப்பட்டோருக்கு மட்டும் நேரடி நியமனங்கள் மூலமாகவும் கொடுக்கப்பட வேண்டும் என்று அன்று அந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது வெறும் நேரடி நியமனங்கள் மூலமாகக் கொடுக்கப்படக்கூடிய அல்லது இருக்கக்கூடிய இடங்களிலே மட்டுமே இட ஒதுக்கீடு என்று வந்தால் நிச்சயமாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். இன்று இருக்கக்கூடிய இடைவெளி தொடர்ந்து இன்னும் நீண்டுகொண்டே போவதற்கே வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதிலே அரசு கௌரவம் பார்க்காமல்—நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருப்பதை வரவேற்கிறேன். அதேசமயத்தில்—அதற்கு காலம் தாழ்த்தாமல் உடனடியாக விடை காண வேண்டும் என்பதும் என்னுடைய வேண்டுகோள் ஆகும். ஏனென்றால் 1000 பணியிடங்களிலே 20 பணியிடங்களுக்கு மட்டும் நேரடி நியமனம் இருக்கிறது. மீதியுள்ள இடங்களுக்கு Promotion என்று வைத்துக்கொண்டால் அதிலே இட ஒதுக்கீடு இல்லை. வெறும் நேரடி நியமனங்கள் மட்டுமே இட ஒதுக்கீடு என்று வருகின்றபோது ஒன்றோ, இரண்டோ இடங்கள் தான் வரும். எனவே, மிகப் பெரிய பாதிப்பை நிச்சயமாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அது ஏற்படுத்தும். எனவே, அதிலே அரசு உடனடியாக ஒரு நல்ல தீர்வு காண வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதுபோல, நீண்ட நெடுங்காலமாக தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலேகூட ஒரு குமுறல் இருக்கிறது. ஒரு பிரிவுக்கு அதிகமாகப் போகிறது. இன்னொரு பிரிவுக்குக் குறைவாகக் கிடைக்கிறது என்ற மனப்புழுக்கங்கள் இருக்கின்ற காரணத்தால் பல பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன. அண்டையில் இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டில்கூட உள் இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதைப்போல தமிழ்நாட்டிலும், உள் இட ஒதுக்கீடு கொடுப்பதன் மூலமாக சமுதாயங்களுக்குள் இருக்கக்கூடிய முரண்பாடுகள் தவிர்க்கப்படுவதற்கும், அந்தந்தச் சமுதாய மக்கள் அவரவர்களுடைய பங்கைப் பெறுவதற்கும் வாய்ப்புக் கிடைக்கும்.



குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களிடையே மூன்று முக்கியமான பிரிவினர் அதிகமான ஜனத்தொகை கொண்டிருக்கிறார்கள். தேவேந்திர குல மக்கள், ஆதிதிராவிட மக்கள், அருந்ததியர் மக்கள். அதிலே அருந்ததியர் மக்கள் தொடர்ச்சியாக பல நூறு ஆண்டு காலமாகத் துப்புரவுத் தொழிலில் ஈடுபட்டதன் காரணமாக அவர்களுடைய குழந்தைகள் கல்வி, வேலைவாய்ப்பு இவற்றிலே பங்கேற்க முடியாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக இப்போதுகூட 1-லிருந்து 2 சதவீதம் வேலை வாய்ப்புக்குக் கூட அவர்கள் இல்லை. அதைப்போல விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வந்த தேவேந்திர குல மக்களும் அதிகமாகப் பங்கேற்க முடியாமல் இருக்கிறார்கள். எனவே, இந்த வேறுபாடுகளை எல்லாம் களைவதற்கு ஆந்திராவைப்போல உள் இட ஒதுக்கீடு செய்வதற்கு உண்டான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான பட்டியல் இனத் துறையை 1996 ஆம் ஆண்டு இந்தச் சட்டமன்றத்திலே நான் கேள்வி எழுப்பியபோது அமைச்சர் மாண்புமிகு திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள்கூட பட்டியல் இனத் துறை என்ற பெயரே தொடரும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது அது ஆதிதிராவிட நலத் துறை என பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சமுதாயமும் தன்னுடைய அடையாளத்தோடு வாழ விரும்புகிறார்கள். ஒட்டுமொத்தமாக 77 ஜாதிகள் கொண்ட பிரிவுக்கும் ஒரு சாதியினுடைய பெயரை..

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரிசனங்கள் என்று அவர்கள் எல்லோரும் அழைக்கப்பட்டார்கள். டாக்டர் கிருஷ்ணசாமி இங்கே குறிப்பிட்ட அந்த மூன்று பிரிவினரும் சேர்த்து அரிசனங்கள் என்றே அழைக்கப்பட்டார்கள். அதனால் தந்தை பெரியார் அவர்கள் அரிசனங்கள் என்று இருக்கின்ற பெயரை ஆதிதிராவிடர் என மாற்ற வேண்டுமென்று பல கூட்டங்களில் வலியுறுத்தினார்கள். எழுதி வந்தார்கள். இருந்தாலும்கூட அதனால் என்ன விளைவுகள் ஏற்படுமோ என்ற காரணத்தினால், வந்த அரசுகள் தயக்கம் காட்டின. ஆனால், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலே, அவர் முதலமைச்சராக இருந்தபோது, ஆதிதிராவிடர்கள் என்கின்ற அந்தப் பெயர் பொருத்தமாக இருக்கும். அதையே வைக்கலாம் என்று எங்களை எல்லாம் கலந்து ஆலோசித்து அந்த முடிவை—எம்.ஜி.ஆர். அவர்கள்—அன்றைக்கு எடுத்தார்கள். அதற்குப் பிறகு அதையேதான் நாம் இன்றைக்கு வழக்கத்திலே கொண்டிருக்கிறோம். திடீரென்று அதை

இப்போது மாற்றுவது என்பது நல்லது அல்ல என்பதுதான் என்னுடைய கருத்து. இதை நான் ஏற்கெனவே திரு. கிருஷ்ணசாமி அவர்களிடத்திலேகூட நேரிலே பேசும்போது குறிப்பிட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-55

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து, மாணவர்களுக்கான கல்விக் கடன் வசதி சம்பந்தப்பட்ட விஷயம். அதிலே கடந்த சில தினங்களுக்கு முன்பு மதுரையிலே மாணவர்கள் போராடி, தடியடி நடந்தது. அதற்குப் பிறகு இப்போது 5 கோடி ரூபாய் அரசாங்கத்தினுடைய சார்பில் கொடுக்கப்பட்டதாக அறிகிறேன். இதிலே அரசினுடைய தெளிவான விளக்கம் ஒன்று தேவைப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எத்தனையோ சலுகைகள் வழங்கப்படுகின்றன. ஒரு ரூபாயை நாம் ஒதுக்குகிறோம் என்றால் அதை அமல்படுத்துவதற்கு 50 பைசா தேவைப்படுகின்றது. ஆனால் அரசு திட்டம் ஏதாவது முழுமையாக தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் போய்ச் சேருகின்ற திட்டம் என்று சொன்னால் அது இந்தக் கடன் உதவித் திட்டம்தான். இந்தக் கடன் உதவி மூலமாக எண்ணற்ற ஏழை மாணவர்கள் உயர் கல்வி பட்டப் படிப்புக்கு, முதுகலைப் பட்டப் படிப்புக்கு, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., First Group போன்ற தேர்வுகளை எழுதுவதற்கு, அவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்வதற்கு, இது மிகவும் உதவிகரமாக இருக்கிறது. எனவே அரசு இதில் சிறிதும் தளர்ந்துவிடாமல், சில கோடி ரூபாயை ஒதுக்குவதற்குத் தயங்காமல், எத்தனை மாணவர்கள் முதுகலைப் பட்டப் படிப்பு படித்தாலும், அத்தனை பேருக்கும் இந்தக் கடன் உதவியை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

கடந்த 6-ஆம் தேதியன்று நான் மதுரை சென்றிருந்தபோது சில ரௌடி கும்பல்கள் காவல் துறையினருடைய துணையோடு பக்கபலத்தோடு நான் குடியிருந்து, என்னுடைய கட்சிப் பணியை ஆற்றிவந்த அலுவலகத்தை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது சம்பந்தமாக நீங்கள் ஏற்கெனவே ஒரு உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறீர்கள். அது பேரவைத் தலைவர் அவர்களுடைய ஆய்வில் இருக்கும்போது, மறுபடியும் அதை இங்கே இப்போது பேசுவது நன்றாக இருக்காது. நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.



**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** காவல் துறையின் துணையோடு, கட்சியினுடைய விலைமதிப்பற்ற ஆவணங்கள், மினிட்ஸ் புத்தகங்கள், கேசட்டுகள், கம்ப்யூட்டர்கள், லேப்-டாப் கம்ப்யூட்டர் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை எல்லாம் கொள்ளையடித்து ஏறக்குறைய இன்றோடு 3 வாரங்களுக்கு மேல் ஆகின்றது. அதுவும் அந்த இடம் தமிழ்நாட்டினுடைய சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றக்கூடிய தலைசிறந்த நிர்வாகி என்று பெயரெடுத்து இருக்கக்கூடிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய இல்லத்திற்கு மிக அருகில் இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. ஆனால் எந்தப் பொருளும் இன்றுவரை மீட்டெடுக்கப்படவில்லை. என்ன காரணத்தினால் இதிலே மெத்தனம் காட்டப்படுகிறது? இதிலே நடவடிக்கை எடுப்பதற்குத் தயக்கம் ஏன் என்பதுதான் என்னுடைய கேள்வி. ஒரு சட்டமன்ற உறுப்பினராகிய எனக்கே இந்த நிலை என்று சொன்னால், ஒரு கட்சியை நடத்தக்கூடியவருக்கே இந்த நிலை என்று சொன்னால், சாதாரண மக்களுக்கு எப்படி என்ற ஐயப்பாடு மற்றவர்களுக்கு ஏற்பட்டு அவர்கள் கேள்வி எழுப்பக்கூடிய நிலை வரும் அல்லவா?. இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேரிலே சந்திப்பதற்காக எங்களுடைய கட்சிக்காரர்கள், 30-க்கும் மேற்பட்டவர்கள் சென்று மனு கொடுத்திருக்கிறார்கள். என்னுடைய குற்றச்சாட்டு, முழுக்க முழுக்க இந்தச் சம்பவம் மாநகரக் காவல் துறையின் ஓர் உயர் அதிகாரியினுடைய பக்க பலத்தோடு வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்ட செயல் என்பதுதான். அதிலே என்னுடைய வேதனை; நான் உங்களுடைய நண்பர் என்று பரவலாக எல்லோராலும் பேசப்படுகிறேன். எனக்கே இப்படிப்பட்ட சம்பவம் வந்தபிறகு, இதில் முதலமைச்சர் ஏன் அமைதியாக இருக்கிறார் என்பது மற்றவர்களுடைய கேள்வி. ஏனென்றால், நீங்கள் நினைத்திருந்தால் அல்லது காவல் துறை நினைத்திருந்தால் அதைக் கைப்பற்றிக் கொடுத்திருக்க முடியுமா? முடியாதா? காலை 10-30 மணிக்கு பத்திரிகைகளுக்கெல்லாம் தகவல் கொடுக்கப்படுகிறது. காவல் துறைக்குத் தகவல் தெரிந்திருக்கிறது. 10-30 மணிக்கு, 11-00 மணிக்கு வந்தவர்கள் ஒரு மணி நேரத்திற்கு மேலாக கொடும்பாவியை எரித்திருக்கிறார்கள். மறியல் செய்திருக்கிறார்கள். அவற்றைப்பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை. நான் குடியிருந்த வீட்டிற்குள் புகுந்து அத்தனையையும் நொறுக்குகின்ற பொழுது, காவல் துறை கையைக் கட்டிக்கொண்டு இருந்திருக்கிறது. அவர்கள் பொருட்களை எல்லாம் வாரிக்கொண்டு போய் வேனிலே ஏறுகின்றபொழுதும், அவர்கள்—

நண்பகல் 12-00

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி குறித்து பல அறிக்கைகளை டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள், நிருபர்களுக்குத் தந்து அவை ஏடுகளிலே வெளிவந்திருக்கின்றன. அவர் இங்கே பேசும்போது, சில ரௌடிகள் புகுந்து, இந்தச் சேதத்தை விளைவித்தார்கள் என்று குறிப்பிட்டார். ஆனால், அவருடைய மனசாட்சியே அதை ஒத்துக்கொள்ளாது என்று கருதுகின்றேன். ஏனென்றால், ரௌடித்தனமான வேலைகளில், வந்தவர்கள் ஈடுபட்டார்கள் என்று சொல்வது பொருந்தும். ஆனால், வந்தவர்கள் அல்லது அவர்களைத் தூண்டிவிட்டவர்கள் எல்லாம் ஏற்கெனவே அவருடைய கட்சியிலே இருந்தவர்கள். அவரால் நடவடிக்கைக்கு ஆட்படுத்தப்பட்டவர்கள். நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, ஆத்திரமுற்று, ஒரு கும்பலாக வந்து, இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். இது காவலர்களுடைய ஒத்துழைப்போடு நடைபெற்றதாகச் சொல்கிறார். இது உட்கட்சித் தகராறு என்ற காரணத்தால், அந்த இடத்திலேயிருந்த ஒரு சில காவலர்கள் சிறிது நேரம் ஒதுங்கியிருந்தார்கள் என்பது உண்மை. அதற்காகக்கூட, அவர்கள் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று உரிய அதிகாரிகளால் கேட்கப்பட்டிருக்கின்றார்கள். ஒரு கட்சித் தகராறு நடைபெறும்போது, எந்தக் காவலர்களாக இருந்தாலும் சற்று ஒதுங்கிக் கொள்வது தமிழ்நாட்டில் கடந்த காலத்திலே இருந்து கடைபிடிக்கப்பட்டு வருகின்ற ஒரு முறை என்பதை அனைவரும் அறிவீர்கள். பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களுடைய கொடும்பாவிகூட ஒரு கட்சி அலுவலகத்திலே, கட்சி அலுவலகத்திற்கு முன்னால் எரிக்கப்பட்டது. அதை அப்பொழுதிருந்த ஆட்சியிலே, காவலர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். ஏனென்றால், அது உட்கட்சித் தகராறு என்ற காரணத்தால் எந்த உரிய நடவடிக்கையையும் வேகமாக எடுக்க முடியவில்லை. கட்சித் தகராறு, அதில் நாம் ஈடுபட வேண்டாம் என்று இருந்து விட்டார்கள். அதேபோலத்தான், இது ஒரு கட்சித் தகராறு என்ற முறையிலே காவலர்கள் ஒதுங்கியிருந்தார்கள். ஆனால், மதுரைக்கு விமானம் மூலம் சென்ற திரு. கிருஷ்ணசாமி அவர்கள் செய்தியைக் கேள்விப்பட்டு, உடனடியாக சென்னைக்குத் திரும்புகிறார் என்ற செய்தி எனக்கு வந்தவுடன் நான் போலீஸ் அதிகாரிகளோடு தொடர்புகொண்டு, நடந்தது என்ன என்பதை விசாரித்தறிந்து, உடன் நடவடிக்கை எடுக்குமாறு அவர்களுக்கு நான் ஆணை பிறப்பித்தேன். அதற்குள்ளாகவே, மாநகரத்தினுடைய காவல் துறைத் தலைவர் ஆணை பிறப்பித்து, மறுநாள் மாலைக்குள் 11 பேர், கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படி ஒரு



நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. யாரும் கைது செய்யப்படவில்லை என்றோ, நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றோ சொல்ல முடியாது. 11 பேர், அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். இதற்கு மேலே என்ன நடவடிக்கை எடுக்கவில்லையென்று கிருஷ்ணசாமி குறைபடுகிறார் என்றால், காணாமல் போன பொருட்கள் மீட்டுத் தரப்படவில்லை என்று சொல்கிறார். என்னென்ன பொருட்கள் காணாமல் போயின என்ற விவரங்கள் இதுவரையிலே தரப்பட்டதாகத் தகவல் இல்லை. அன்று இரவே, நான், கிருஷ்ணசாமி அவர்களோடு தொடர்புகொண்டு, இவற்றை விசாரிக்குமாறு சென்னை மாநகரக் காவல் துறை ஆணையருக்கு நான் உத்தரவு பிறப்பித்தேன். அவர்கள் இரண்டுமுறை திரு. கிருஷ்ணசாமி அவர்களோடு டெலிபோன் மூலமாகத் தொடர்புகொண்டு பேச முயன்றும்கூட, கிருஷ்ணசாமி அவர்கள், அவர்களோடு பேச முடியாது என்று மறுத்துவிட்டார் என்று நான் கேள்விப்பட்டேன். அந்தத் தகவலும் எனக்கு வந்தது. இதுதான் நிலைமையே தவிர வேறு அல்ல. நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று இல்லை. இப்பொழுதே நடவடிக்கை எடுக்கப்பட்டு 11 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதிலிருந்தே இந்த விஷயத்தை அரசு சாதாரணமாக விடவில்லை என்பது மிகத் தெளிவாகப் புரியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. போதுமான விளக்கம் கொடுத்துவிட்டார்கள். இதற்கு மேலே அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக, மாநகர ஆணையரிடத்திலே சொல்லி, அவர்கள் என்னோடு தொடர்புகொள்ள முயற்சி செய்ததாகச் சொல்லப்படுகிறது. அது முற்றிலும் தவறானது. எந்தக் காவல் துறை அதிகாரியும், அதாவது உயர் அதிகாரிகளும் என்னோடு தொடர்பு கொள்ளவில்லை. Joint Commissioner of Police, ஒருவர் மட்டும் வந்தார். Deputy Commissioner வந்தார். இதிலே வந்து, ஒரு அலுவலகத்திலே ஒரு பிரச்சினை ஏற்பட்டு, உள்ளே போய் உடைத்திருக்கிறார்கள். வெளியே சம்பவம் நடக்கிறது என்பது வேறு. நான் குடியிருக்கிற வீடு; உள்ளே வந்து எடுத்துக்கொண்டு போய் இருக்கிறார்கள்.

உடைத்து எறிவதைக் காவல் துறை அதிகாரிகள் முழுமையாக கைகட்டிக்கொண்டு பார்த்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே எந்த இடத்திலேயும், போலீஸ் அதிகாரிகள், சாதாரண ஒரு இன்ஸ்பெக்டரோ, சப்-இன்ஸ்பெக்டரோ நிச்சயமாக மேலேயிருந்து, அதாவது உயர் அதிகாரிகளிடமிருந்து உத்தரவு வராமல், நிச்சயமாக அவர்கள் கைகட்டிக் கொண்டு இருக்கப் போவது கிடையாது. வேண்டுமானால், கொடும்பாவி எரித்து—

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே, முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். உட்கட்சி விவகாரம் என்பதனால் கொஞ்ச நேரம் அப்படியிருந்து இருக்கலாம் என்கிறார்கள். (குறுக்கீடு) திரு. அ.லெ. சுப்பிரமணியன் (குறுக்கீடு) திரு. அ.லெ. சுப்பிரமணியன். (குறுக்கீடு) நீங்கள் நினைப்பதை எல்லாம் இங்கே ரெக்கார்டு பண்ண முடியாது. திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 2001-2002 ஆம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்தை இந்த அவையிலே வைக்க விரும்புகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, ஏற்கெனவே உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்விலே இருக்கும்போது, முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதினாலே அதற்கு அனுமதி கொடுத்து நீங்கள் பேசியதற்கான முறையான பதில் கொடுக்கப்பட்டு, எடுக்கப்பட்ட நடவடிக்கையை எல்லாம் சொல்லி விட்டார்கள். இதற்கு மேலே அனுமதிக்க இயலாது. தயவுசெய்து அமருங்கள். திரு. அ.லெ. சுப்பிரமணியத்திற்கு மைக் கொடுங்கள். நீங்கள் தொடருங்கள்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** சென்ற வாரம் இங்கே ஆளுநர் உரை இருந்தது. (குறுக்கீடு).

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பட்டியல் நான் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பட்டியல் இப்போது கொடுத்தால்கூட, அதைப்பற்றி ஆலோசிக்கப்படும், கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவ்வளவுதான். திரு. அ.லெ. சுப்பிரமணியன்.



**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற வாரம் ஆளுநர் உரை இந்த அவையிலே வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. தவறாமல் சட்டமன்றத்திற்கு வருகின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல்நிலை காரணமாக வர முடியாமல் போனதால் நாமெல்லாம் மிகவும் பதறிப் போனோம். இறுதியிலே பதிலுரைக்காவது வருவார்கள் என்று எதிர்பார்த்தோம். பேராசிரியர் அவர்கள் நகைச்சுவையோடு ஆழமாகப் பதிலுரை தந்தாலும்கூட கலைஞருடைய கம்பீரமான அந்த கரகரப்பான குரலைக் கேட்க முடியவில்லையே என்ற ஆதங்கம் எல்லோருக்கும் உண்டு. அதைப் போக்குகின்ற விதத்தில் 29-1-2001 அன்று நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே படித்திருக்கிறார். அமர்ந்துதான் படித்தார். உங்களுக்குத் தெரியும், பார்த்தாலே பசி தீரும் என்பார்கள். கலைஞரைப் பார்த்தாலே நமக்கெல்லாம் மகிழ்ச்சி. அதுமட்டுமல்ல, எங்களுக்கு இந்தப் பக்கத்திலே இருக்கின்றவர்களுக்கு அவரைப் பார்த்தால் ஒரு எழுச்சி என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, நேற்று பேசிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திருவோணம் திரு. இராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அமர்ந்து பேசியதனாலேயே எல்லோரும் கலங்கிப் போனோம், கிராம மக்கள் எல்லாம் மிகவும் கண்ணீர் விட்டார்கள் என்றார்கள். உண்மைதான். இருந்தாலும்கூட, அவர் எழுந்து பழைய கம்பீரத்தோடு உரையாற்ற வேண்டும் என்று இந்த அவையே வாழ்த்துகிறது. ஆனாலும்கூட ஒன்று அவர் அமர்ந்திருந்தாலும் அவர் நீண்ட காலம் வாழ வேண்டும் என்ற நல்லெண்ணத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். ஏனென்றால், தந்தை பெரியார் அவர்கள் என்றைக்குமே எழுந்து நின்று பேசியது கிடையாது. அமர்ந்துதான் பேசினார்கள். காலங்காலமாக அமர்ந்து தந்தை பெரியார் பேசினாலும் அவர் உட்கார்ந்து பேசினாலும் தமிழ்நாடு எழுச்சியுற்றது. அதைப்போல நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுந்து நின்று பேசினாலும், உட்கார்ந்து பேசினாலும், நிச்சயமாகத் தமிழகம் எழுச்சியுறும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டும் அல்ல, அதனாலேதான் அவரைப்பற்றி கவியரங்கத்திலே கவி பாடிய கவிஞர் வாலி அவர்கள் கலைஞரைப் பார்த்து, "தலைவா, நீ தாடி இல்லாத பெரியார்; பொடி போடாத அண்ணா" என்று புகழ்ந்து அதிலே பாடினார். அப்படிப்பட்ட கலைஞர் நீண்ட நாள் வாழ வேண்டும் என்று நான் முதலிலே வாழ்த்திக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. அ.லெ. சுப்பிரமணியன்] [2001 ஜனவரி 31

இந்த இடைக்கால அறிக்கையைப் பற்றிப் பலர் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

'Presenting a highly deficit budget would impose immense burden on the Government that would take over after the elections.'

எதிர்க்கட்சித் தலைவர் சொல்லுகின்றபோது தேர்தலுக்குப் பிறகு வருகின்ற ஆட்சிக்கு இப்போது நீங்கள் போட்டிருக்கிற இந்த ஒரு பற்றாக்குறை பட்ஜெட் மிகுந்த சுமையாக இருக்குமே என்று மிகவும் ஆதங்கப்பட்டிருக்கிறார். அவர் ஏதோ காமராஜர் ஆட்சி வருவதைப் போலவும் அல்லது வருகிற ஆட்சியில் பங்கிருப்பதைப் போலவும், பங்குபெறப் போவதைப் போலவும், ஆகவே நாங்கள் ஆட்சிக்கு வருகின்றபோது இந்தச் சுமையை எங்கள்மீது வைக்காதீர்கள் என்று ஆதங்கப்படுகிறார் என்று கருதுகிறேன். அவர் அச்சப்பட வேண்டாம். அவருடைய தலைவர் எங்களுடைய தலைவர் கலைஞரின் நெருங்கிய நண்பர். ஆகவே, நண்பருக்கு அந்தத் தொல்லையைத் தராமல் இவரே மீண்டும் நிதியமைச்சராக வந்து நிச்சயமாக இந்த அவையிலே நிதிநிலை அறிக்கையை வைப்பார் என்று நான் இதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத்தட்டும் ஒலி).

பிற்பகல் 12-10

இன்னும் இங்கே பல்வேறுபட்ட கருத்துக்களை நம்முடைய நண்பர் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. சுப்பராயன் அவர்கள் நேற்று தெரிவித்தார்கள். அவர் சொல்கின்றபோது, 1995-96-ல் ஆட்சி ஆரம்பித்தபோது சில துறைகளில் பணத்தைச் செலவு பண்ணியிருக்கிறோம். இப்போதும் 3 மடங்கு, 4 மடங்கு அதிகம் என்று நீங்கள் ஒரு கணக்குக் காட்டுகிறீர்கள். பார்த்தால் இது ஏதோ ஒரு பெரிய சாதனை போலத் தோன்றும். ஆனால் அப்போது இருந்த பணத்தினுடைய மதிப்பைவிட இப்போது பணத்தினுடைய மதிப்பு குறைந்து போனது. ஆகவே நீங்கள் அதைப் பெரிய சாதனையாகக் காட்ட வேண்டாம் என்று அவருக்கே உரிய பாணியில் அதைத் திசை திருப்புகின்ற முறையில் அவர் ஒரு வாதத்தை எடுத்து வைத்தார். நானும் பட்ஜெட்டைப் படித்துப் பார்த்தேன். 28 உள் தலைப்புகள் இருக்கின்றன. ஒவ்வொரு தலைப்பும் உள்ளாட்சி மன்றம், மக்கள் நல்வாழ்வு, ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், சமூகப் பாதுகாப்பு என பல உள் அமைப்புகளில் அல்லது உள் தலைப்புகளில் அல்லது பல்வேறு துறைகளில் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று



2001 ஜனவரி 31] [திரு. அ.லெ. சுப்பிரமணியன்]

பார்க்கின்றபோது - நேரம் இல்லாத காரணத்தால் பட்டியல் தரவில்லை - ஒவ்வொன்றிலும் 3½ மடங்கு, 2 மடங்கு, 3 மடங்கு, 4 மடங்கு என்று 1995-ல் இருந்ததைவிட இப்பொழுது அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள்—சாலை பாதுகாப்பு போன்றவற்றுக்கு எல்லாம்.—ஆனால் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் சென்ற முறை 1995-ல் வருவாய்க் கணக்கிலே என்ன இருந்ததோ அதைவிட 3 மடங்கு இப்பொழுது வருவாய்க் கணக்கில் பணம் கூடியிருந்தால்தான் இப்படி 3 மடங்கு 4 மடங்கு என அதிகமாகப் பணம் ஒதுக்க முடியும். அப்படிக் கூடியிருக்கிறதா என்று பார்த்தால் சென்ற 1999-2000-ல் ரூபாய் 18,000 கோடிதான். இப்பொழுது கிட்டத்தட்ட ரூபாய் 20,000 கோடியைத் தொடுகிறது. ஆகவே ரூபாய் ஆயிரம் கோடிக்கு உள்ளேதான் அதிகப்படியான வருவாய்க் கணக்கு வருகின்றபோது ஒவ்வொரு துறைக்கும் 3 மடங்கு, 4 மடங்கு எப்படி நிதியை அதிகமாக ஒதுக்க முடிகிறது என்பதை நான் படித்துப் பார்த்தேன். எனக்குப் புரியவில்லை. திரு. சுப்பராயனுக்குப் புரிகிறதோ என்னவோ? அதுதான் கலைஞருடைய திறமை என்பதை நான் இங்கு மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவே அவர் சொன்ன வாதம் நியாயமான வாதம் அல்ல என்பதைத்தான் நான் இப்போது தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னொரு குற்றச்சாட்டுச் சொல்கிறார்கள். பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை என்று சொல்லுகிறார்கள். நான் சொன்னவர்களுடைய முகவரியைத் தேடிப் பார்த்தேன். அதிலே யாராவது விவசாயிகள் இருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை என்றுதான் நான் இங்கே குறிப்பிட வேண்டும். என்னைவிட இந்த அவையிலே வேறு ஒரு பெரிய விவசாயி இருக்க முடியாது என்பதை நான் இந்த நேரத்தில் ஆணித்தரமாக தெரிவிக்க விரும்புகிறேன். நான் படித்துப் பார்த்தேன். இங்கே பார்த்தால் தண்ணீர் விவசாயத்திற்கான 9 அணைக்கட்டுகளில் 5 முடிந்து விட்டன. 4 அணைக்கட்டுகள் முடிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கின்றன. அந்த 9-ல் 4 நெல்லை மாவட்டத்தில்; 1 கன்னியாகுமரியில்; சடையனேரி கால்வாய் தூத்துக்குடியில். இது என்ன விவசாயத்திற்கு உறுதுணை இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். தாமிரபரணியில் 9 கால்வாய்; 12 கோடி ரூபாயில் 40 ஆண்டு காலமாகத் தூர் வாரப்படாத அந்தக் கால்வாய் தூர் வாரப்பட்டிருக்கிறது. தொகுதிக்கு ஒரு மானாவாரிக் குளம் தூர் வாரப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தொகுதியிலும் 3 குளங்கள் தூர் வாரப்பட்டிருக்கின்றன. பாலாறு, வைகையாறு, தாமிரபரணி ஆகிய நதிகளின் வடிநிலங்களில் உள்ள 620 கண்மாய்களைப் புதுப்பிக்கும் பணிக்கு 106 கோடி ரூபாய் உலக வங்கி சார்பாகப் பெறப்படும் என்று

இந்த அறிக்கையிலே தந்திருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு நீர்த்தேக்கத் திட்டங்கள், அணைக்கட்டுகள், கால்வாய் தூர் வாருகின்ற பணிகள் இந்த ஆட்சியில் 4½ ஆண்டு காலத்தில்தான் நடந்திருக்கின்றன என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல வட்டி தள்ளுபடியைப் பற்றிச் சொன்னார்கள். அபராத வட்டி 13 கோடி ரூபாய்க்குத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். 3% அபராத வட்டித் தள்ளுபடி; 2½ இலட்சம் பேருக்கு ஊக்குவிப்புத் தொகை; 7% ஊக்குவிப்புத் தொகை; கூட்டுறவு வட்டியை ஒழுங்காக கட்டினால் 3% வட்டியிலிருந்து 1% வட்டியாகக் குறைப்பு; ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பல சீரமைப்பு; இதற்கு மேலாக, காய்கறி பயிரிடுகின்றவர்களுக்கு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு உழைக்கின்றவர்கள், விவசாயிகள், உழவர்களுக்கும் இலாபம் வருகின்ற விதத்தில், வாங்கி உண்பவர்களுக்கும் இலாபம் கிடைக்கின்ற விதத்தில் உழவர் சந்தையைத் தோற்றுவித்த ஒரே முதலமைச்சர் இந்தியாவில் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முன்பெல்லாம் மின் வெட்டு அடிக்கடி இருக்கும். இப்பொழுது மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். பகலில் 6 மணி நேரம் இரவில் 8 மணி நேரம் தொடர்ந்து தடை இல்லாமல் மின்சாரம் தரப்படும் என்கிறார்கள். இவையெல்லாம் விவசாயிகளுக்கு அல்லாமல் வேறு யாருக்குத் தரப்பட்ட (மணியடிக்கப்பெற்றது) நன்மைகள் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒன்றே ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். மொகலாய சக்ரவர்த்தியினுடைய வரலாற்றைப் பார்த்தால் ஷாஜஹான் என்ற மன்னன்; அவன்தான் அங்கே ஜும்மா மசூதியைக் கட்டியவன்; தாஜ்மஹாலைக் கட்டியவன்; செங்கோட்டையைக் கட்டியவன். அதனாலேதான் அவனைக் கட்டடப் பிரியர் ஷாஜஹான் என்று பெருமையாகச் சொல்கிறோம். நம்முடைய ஆட்சிக் காலத்தில் பார்த்தால் தொடக்கப் பள்ளி 7,000, உயர்நிலைப் பள்ளி 1500; நியாயவிலைக் கடை 8,000-க்கு மேல்; Primary Health Centre 400-க்கு மேல்; கிராமப்புறங்களில் 3 இலட்சம் பேருக்கு வீடு; புதிய பாலங்கள் 601; தரமணியில் தொழில் பூங்கா; நாங்குனேரியில் தொழில் பூங்கா; தமிழ் பண்பாட்டு மையத்தின் மூலமாக வள்ளுவருக்குச் சிலை, அம்பேத்கர் உட்பட 14 தியாகிகளுக்கு மணி மண்டபம், இன்னும் காயிதே மில்லத்துக்கும் வீரன்



அழகுமுத்துக்கோனுக்கும் அவர் இன்னும் மணி மண்டபம் அமைக்க இருக்கிறார். ஆகவே, நம்முடைய பேரப் பிள்ளைகள் நாளைக்கு வருகின்றபோது, வரலாற்றைப் படிப்பார்கள். ஷாஜஹான் கட்டடப் பிரியர் என்றால், இத்தனைக் கட்டடங்களைக் கட்டிய கலைஞர் என்று ஒருவர் இருந்தார். அவர்தான் தமிழ்நாட்டின் ஷாஜஹான் என்று வரலாறு சொல்லத்தான் போகிறது என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) துணைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-15

அதைப்போல, சாலைகள். 480 கிராமங்களுக்கு 714 கோடி ரூபாயில் சாலைகள்; 120 கிராமங்களுக்கு 70 கோடி ரூபாயில் சாலைகள் அதுமட்டும் அல்ல, நானும் ஒரு கிராமத்திலே பிறந்து வளர்ந்தவன் என்ற முறையில் இப்போது அங்கே போனால்—என்னுடைய சொந்தக் கிராமத்தில் அந்தக் காலத்தில் தெரு கூடச் சரியாகப் பராமரிக்கப்படாமல் இருந்தது. இப்போது ஊருக்குப் போனால்—சிமெண்ட் சாலை போட்டு அதிலே சோடியம் விளக்குப் போடப்பட்டிருக்கிறது. அங்கே உட்கார்ந்து இளைஞர்களெல்லாம் சீட்டு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இது எந்தக் காலத்திலாவது நடந்தது உண்டா? தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படிப் பல விதத்தில் இப்போது முன்னேற்றம் இருக்கிறது.

எதிர்க்கட்சியிலே இருந்து, சாதனை உண்டா என்று கேட்கின்றவர்களுக்கு, நம்முடைய அரசுக் கொறடா மூலமாக நான் ஒரு விண்ணப்பம் வைக்கின்றேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆட்சி என்னென்ன செய்தது என்பதைப் பட்டியல் போட்டு....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே,......

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** என்ன வேண்டும்....?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விளக்கம். இங்கே முன்பு பேசிய உறுப்பினர்களெல்லாம் இந்த கான்கிரீட் சாலையைப் போட்டு அதிலே கிராம மக்களெல்லாம் நெல் காய வைக்கிறார்கள். இன்னும் மற்றவைகளுக்கெல்லாம் உபயோகப் படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் உறுப்பினர் சீட்டு ஆடுவதற்குப் பயன்படுகிறது என்று சொல்கிறார்கள். அவருடைய தொகுதியில் சீட்டு ஆடுவது அதிகமாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஆகையினாலேதான் அதைச் சொல்லியிருக்கிறார் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** துணைத் தலைவர் அவர்களே, நான் துட்டு வைத்து சீட்டு ஆடுகிறார்கள் என்று சொல்லவில்லை. பொழுது போக்கிற்காகச் சீட்டாடுகிறார்கள் என்று தான் சொல்கிறேன். வேண்டுமானால் தாயம் புலியும் ஆடினார்கள் என்று அதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

நம்முடைய அரசுக் கொறடா அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஆட்சியினுடைய சாதனை என்று ஒவ்வொரு துறையாகத் தொகுத்து அவர்கள் முரசொலியில் எழுதிய கடிதத்தைத் தொகுத்து ஒரு புத்தகமாக சாதனை என்று போட்டிருக்கிறார்கள். அருள்கூர்ந்து நம்முடைய அரசுக் கொறடா அவர்கள் எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்களுக்கு அப்படி ஒவ்வொரு நூலையும் தர வேண்டும். ஓய்வாக வீட்டிலேயாவது படித்துப் பார்த்து மனச்சாட்சிக்கு நீங்கள் பதில் சொல்லிக்கொள்ளுங்கள். ஆகவே, வருகின்ற காலங்களிலும் சாதனை தொடர வேண்டுமானால், கலைஞருடைய கரத்தைத்தான் தமிழ்நாட்டு மக்கள் வலுப்படுத்துவார்கள் என்று கூறி, விடை பெறுகின்றேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு அனுமதித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளுக்கோ, தொழிலாளர்களுக்கோ படித்த இளைஞர்களுக்கோ எந்தவிதமான ஆக்கபூர்வமான திட்டமும் சொல்லப்படவில்லை என்பதுதான் எங்களுடைய வாதம். எனக்கு முன்னால் பேசிய நண்பர் ஏ.எல்.எஸ். அவர்கள்கூட என்னைக் காட்டிலும் ஒரு பெரிய விவசாயி இருக்க முடியுமா என்று கேட்டார்கள். நாங்கள் பெரிய விவசாயிகளைப் பற்றிக்கூட கவலைப்படுவதில்லை. எங்களைப் போன்ற சிறு விவசாயிகளைப் பற்றித்தான் இப்போது நாங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இப்போது இந்த அரசு அபராத வட்டியை மட்டும் 3 சதவீதமாக இருப்பதை, 2 சதவீதமாகக் குறைத்திருக்கின்றோம் என்று அறிவித்திருக்கிறது. அதை அறிவிக்க முன்வந்த இந்த அரசு, இந்த விவசாயிகள் பட்டிருக்கின்ற கடனுக்கான முழுமையான வட்டித் தொகையையும் தள்ளுபடி செய்யவேண்டுமென்று நாங்கள்



வைக்கின்ற கோரிக்கையை ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது என்பதுதான் எங்களுக்குப் புரியவில்லை. ஒரு நேரத்திலே பாரதப் பிரதமராக இருந்த திரு. வி.பி. சிங் அவர்கள் எல்லா விவசாயிகளுக்கும் 10,000 ரூபாய் அளவுக்கு அவர்கள் கடன் தள்ளுபடி செய்தார்கள். அது இப்போதும் விவசாயிகளினுடைய மனதிலே நின்று கொண்டிருக்கிறது. அப்படி இந்த அரசு எல்லா விவசாயிகளினுடைய மனதிலேயும் நிற்கின்ற அளவுக்கு ஒரு திட்டத்தைச் சொல்ல வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அதைப்போல, கரும்பு விவசாயிகள் சென்ற வாரம்கூட கரும்புகளோடு வந்து......

பிற்பகல் 12-20

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் மற்ற அனைத்து உறுப்பினர்களும், அண்ணன் திரு. பழனிசாமி போன்றவர்கள் அனைவருமே வட்டியை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்தச் சட்டமன்றத்திலே தங்களுடைய உரையிலே பதிவு செய்து கொண்டு வருகிறார்கள்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி. வெங்கடசாமி-தலைமை)**

இதே முதலமைச்சர் மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்த காலகட்டத்தில் ஒவ்வொரு விவசாயி வாங்கிய கடனையும் 10 ஆயிரம் ரூபாய் தள்ளுபடி செய்து தந்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான். நான் சொல்லிய பதிலையே மீண்டும் சொல்லுவதாக தயவுசெய்து யாரும் கருத வேண்டிய தேவையில்லை. இடையிலே 1996 ஆம் ஆண்டுக்கு முன்பு நமக்குக் குறைந்த வட்டியிலே மறு கட்டமைப்பு நிதியைத் தருகின்ற நபார்டு நிறுவனத்தோடு ஒரு ஒப்பந்தத்தை தமிழ்நாடு அரசு செய்திருக்கிறது. அப்படி ஒப்பந்தம் செய்திருக்கின்றபடியால் அசலையோ, வட்டியையோ எதையும் தள்ளுபடி செய்ய இயலாது. அதுதான் இப்போது இருக்கின்ற நிலைமை. அப்படி மீறித் தள்ளுபடி செய்த நமது கேரள மாநிலம், அருகிலே இருக்கின்ற பாண்டிச்சேரி மாநிலத்திலே மீறி வட்டியைத் தள்ளுபடி செய்து தந்தபோது மறுபடியும் குறைந்த வட்டியிலே பணம் தருவதை நிறுத்திவிட்டார்கள். அவர்களுக்குப் பரவாயில்லை. பாண்டிச்சேரி மாநிலத்திற்கு மொத்தமே 40 கோடி ரூபாய். கேரள மாநிலத்திற்கு மொத்தமே 200 கோடி ரூபாய். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் 1200 கோடி ரூபாயை நாம் விவசாயிகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதைக் குறைவான வட்டிக்குத் தருகின்றபோது, விவசாயிகளுக்கு நாம் குறைவான வட்டிக்குத் தருகிற அதனை,

அவர்களுடைய ஒப்பந்தத்தை மீறி நாம் தருவோமேயானால் அந்தப் பணம் வராது; அதிக வட்டிக்குத்தான் மீண்டும் கொடுக்கக்கூடிய சூழ்நிலை வரும். இப்போதுகூட இந்த 3 சதவிகித தவறுதல் வட்டியை முழுவதுமாகத் தள்ளுபடி செய்வதற்காகத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்தார்கள். நபார்டு நிறுவனம் ஒத்துக்கொள்ளவில்லை. அதனால்தான் 3 சதவிகிதத்தை 1 சதவிகிதமாகக் குறைத்துத் தந்திருக்கிறார்கள். எனவே, எப்படி எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு விவசாயிகள்மீது அக்கறை அதிகமாக இருக்கிறதோ அதே அக்கறையோடுதான் இந்த அரசும் செயல்படுகிறது. சங்கடங்கள் ஏற்கெனவே செய்து கொண்ட ஒப்பந்தங்களால்தான் இருக்கின்றனவே தவிர, எங்களிடத்திலே தவறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் 1990 ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் 10 ஆயிரம் தள்ளுபடி செய்த பிரதமர் வி.பி. சிங் அவர்கள் மக்களுடைய உள்ளத்திலே இடம் பிடித்தார்கள். அதுபோல இந்த அரசு செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அந்த 10 ஆயிரம் ரூபாய் விவசாயக் கடன் தள்ளுபடி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு அதற்கான அனுமதியைப் பெற்று அந்தச் சுமையையும் தாங்கிக் கொண்டவர் கலைஞர் அவர்கள்தான் என்பது நாட்டு மக்களுடைய உள்ளத்திலே பதிந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). திரு.வி.பி. சிங் அவர்கள் அனுமதி தந்தார்கள். முன்பிருந்த பிரதமர்கள் திரு. ராஜீவ்காந்தி அவர்களோ, மதிப்பிற்குரிய அன்னை இந்திராகாந்தி அவர்களோ கடன் தள்ளுபடி செய்வதற்கு அனுமதி தர மறுத்தார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு எடுத்த முயற்சி தோற்றது; ஆனால் 1990 ஆம் ஆண்டு எடுத்துக் கொண்ட முயற்சி திரு. வி.பி. சிங் அவர்களால் வெற்றிபெற்றது என்பது உண்மை. ஆனால் விவசாயக் கடன் தள்ளுபடி செய்தது கலைஞர்தான் என்பது விவசாயிகளிடத்திலே, அவர்கள் உள்ளத்திலே, பதிந்திருக்கிறது.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த 10,000 ரூபாய் கடன் தள்ளுபடி என்பது தமிழகத்தில் மட்டும் அல்லாது பல்வேறு மாநிலங்களைச் சார்ந்தவர்களுக்கும் வழங்கப்பட்டது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தது. இப்போது நமது மாண்புமிகு



அமைச்சர் அவர்கள் சென்ற அரசு செய்து கொண்ட ஒரு ஒப்பந்தத்தின் மூலமாகத்தான் இதைச் செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். சென்ற அரசு செய்த எத்தனையோ திட்டங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. அதைப்போல, இதையும் மாற்றுவதற்கு ஏன் இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. அப்படி மாற்ற....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் பல முறை நபார்டு நிறுவனத்திடத்திலே வேண்டுகோள் வைத்தது. அவர்கள் அசலையும், வட்டியையும் நீங்கள் தள்ளுபடி செய்வதாக இருந்தால், குறைந்த வட்டியிலே நாங்கள் கடன் கொடுக்க மாட்டோம் என்று கண்டிப்பாக, தெளிவாகத் தெரிவித்துவிட்டார்கள். அதனால்தான் விவசாயிகளுக்கு இப்போது 7 சதவிகித வட்டிச் சலுகை கொடுப்பதைக்கூட தமிழக அரசாங்கம் செலுத்துகிறது. விவசாயிகள் செலுத்த வேண்டிய அந்தக் கடனையும், வட்டியையும் அவர்கள் திருப்பிச் செலுத்துவார்களேயானால் அவர்களுக்கு 7 சதவிகித வட்டிச் சலுகை அளிக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்து அந்த வட்டியை தமிழக அரசாங்கமேதான் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்துகிறது.

(திரு. சி. ஞானசேகரன், திரு. ச. அழகிரி, திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் எழுந்து நின்றனர்.)

**Hon. CHAIRMAN:** (Thiru B. VENKATASAMY) : Thiru C. Gnanasekaran.

பிற்பகல் 12-25

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் முன்பிருந்த பிரதமர்கள் இந்திராகாந்தி அவர்களோ, ராஜீவ் காந்தி அவர்களோ இந்தக் கடன் தள்ளுபடிக்கு ஒத்துக்கொள்ளவில்லை. திரு. வி.பி. சிங் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். அதனால், அந்தக் கடனைத் தள்ளுபடி செய்வதற்கான Proposal-ஐ—முன்மொழிவை—கொடுத்து அனுமதியைப் பெற்றது கலைஞர்தான், மக்கள் மனதிலே இடம் பெற்றவரும் கலைஞர்தான் என்று சொன்னார்கள். அதே பணியை இந்த அரசு ஏன் இப்போதும் செய்யக்கூடாது? அந்த விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்வதற்கு, இப்போது இருக்கக்கூடிய உங்களுடைய கூட்டணியைச் சேர்ந்த பிரதமரை நீங்கள் அணுகி அனுமதியை வாங்க வேண்டியதுதானே, மீண்டும் மக்களுடைய மனதிலே இடம் பிடிக்க வேண்டியதுதானே என்பதுதான் எங்களுடைய கேள்வி.

[2001 ஜனவரி 31

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. வெங்கடசாமி):** One minute.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு நம்முடைய தமிழக முதல்வர் அவர்களின் முன்முயற்சியால்தான் அன்றைக்கு இருந்த பாரதப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் அந்த 10,000 ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்தார்கள் என்று சொன்னார்கள். அன்றைக்கு, நாடு முழுமையும், இந்தியா பூராவிலும், இந்தக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. தமிழகமும் அதிலே ஒரு மாநிலமாக இடம் பெற்றிருந்ததே தவிர, தமிழ்நாட்டிற்கு மட்டும் என்று சிறப்பாக அந்தக் கடன் தள்ளுபடி நடைபெறவில்லை. இப்போது எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், பீகார், உ.பி., ஆகிய மாநிலங்களிலே எல்லாம் இருக்கக்கூடிய பருத்தி விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதனால், மத்திய அரசும் மாநில அரசும் பரிசீலித்து இதுபோன்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுதான் வருகின்றன.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கியோடு நீங்கள் செய்துகொண்டிருக்கிற ஒப்பந்தம் என்பது, ஏதோ இந்திய அரசியல் சாசனத்தைப் போன்று, மாற்றவே முடியாத ஒன்று அல்ல. இந்திய அரசியல் சாசனத்தையே 82 முறை மாற்றியிருக்கிறோம். எனவே, நபார்டு வங்கியோடு ஒப்பந்தம் போட்டுவிட்டோம். இனிமேல் மாற்றவே முடியாது. மாற்றவே முடியாது என்று 5 ஆண்டு காலமாகச் சொல்வது அவையைத் திசைத் திருப்புகிற ஒரு முயற்சி. புதுச்சேரி மாநிலத்திலே மொத்த பட்ஜெட்டே 300 கோடி ரூபாய்தான். எனினும் 40 கோடி ரூபாயை அவர்கள் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். உங்களுடைய பட்ஜெட் 20 ஆயிரம் கோடி ரூபாய். நபார்டிலே நீங்கள் வாங்கியிருக்கிற கடனே 1200 கோடி ரூபாய்தான். தள்ளுபடி என்று வருகிறபோது மிகக் குறைவான தொகைதான் வரும். எனவே, பக்கத்திலே புதுவை மாநிலத்திலே விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்கிறபோது ஏன் தமிழகத்திலே அது முடியாது? நபார்டுடன் ஏன் பேசக்கூடாது? அதை ஏன் மறுபரிசீலனை செய்யக்கூடாது? மறுபரிசீலனை செய்ய முடியாத அளவிற்கு அந்த ஒப்பந்தத்திலே என்ன இருக்கிறது என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,....



2001 ஜனவரி 31]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. வெங்கடசாமி):** Let the Minister reply.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,....

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** நீங்களும் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். உங்களுக்கும் சேர்த்தே பதில் சொல்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. குஜ்ரால் அவர்கள் இந்த நாட்டினுடைய பிரதமராக வந்தபோது, பஞ்சாப் மாநிலத்தினுடைய கடனாக இருந்த ஏறத்தாழ 3 ஆயிரம் கோடி ரூபாயை, அன்றைக்கு மத்திய அரசு தள்ளுபடி செய்து கொடுத்தது. மத்திய அரசிலே இருந்த ஒரு பிரதமர், அந்த மாநிலத்திலே பிறந்தவர் என்ற காரணத்திற்காக தன்னுடைய மாநிலத்திலிருந்து மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய 3 ஆயிரம் கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்ய முடியும் என்று சொன்னால், இப்போது தமிழக அரசு—நீங்கள் அங்கம் வகிக்கின்ற ஒரு அரசு மத்தியில் ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற போது—தமிழகத்தினுடைய இலட்சக்கணக்கான ஏழை விவசாயிகளினுடைய நலனைக் கருத்தில்கொண்டு, ஏன் மத்திய அரசோடு நீங்கள் வாதிட்டு, அந்தக் கடனைத் தள்ளுபடி செய்கின்ற முயற்சியிலே ஈடுபட முடியாது என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். நீங்கள் அதைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே..

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** இது என்ன டிபேட்டா ஆள் ஆளுக்கு எழுந்து பேசுவதற்கு?

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கி விவசாயிகளினுடைய கடனைத் தள்ளுபடி செய்வதற்கு ஒத்துக்கொள்ளவில்லை என்று சொன்னால், விவசாயிகளுக்கு 7% ஊக்கத் தொகை என்ற பெயரிலே அறிவித்திருக்கிற சலுகையை, மாநில அரசே ஏன் 25 சதவீதம், 30 சதவீதம் என்ற அளவுக்குக் கொடுத்து விவசாயிகளுடைய கடன் சுமையை குறைக்கக்கூடாது? அந்த முயற்சியை ஏன் இந்த அரசு எடுக்கக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, திரு. விசுவநாதன் அவர்கள், 7 சதவீதம் நீங்கள் சலுகை அளித்திருக்கிறீர்களே, ஏன் முழுமையாக சலுகை காட்டக்கூடாது என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அரசுக்கு வருகின்ற வருவாயில் எந்த அளவிற்கு நாம் சலுகை அளிக்க முடியும் என்று அரசு பரிசீலிக்கிறது. மின்சார இலாகாவில் இலவச மின்சாரம் கொடுக்கின்ற காரணத்தினாலே ஆண்டுக்கு 2300 கோடி ரூபாய்; அதைப்போல அரிசிக்கு மானியம் 1,700 கோடி ரூபாய்; மாணவர்களுக்குப் பகல் நேர உணவு அளிப்பதிலே 580 கோடி ரூபாய்; இப்படி ஏறக்குறைய 4,000 கோடி ரூபாய்க்கு மேல் மானியமாகவே போய்விட்டால், நாம் என்ன செய்ய முடியும்? பிறகு சாலைகள் போட வேண்டும் என்று நாம்தான் சொல்கிறோம்; கால்வாய்கள் வெட்ட வேண்டும் என்றும் நாம்தான் சொல்கிறோம். மருத்துவமனை கட்ட வேண்டும் என்றும்; பள்ளிக்கூடங்கள் கட்ட வேண்டும் என்றும் நாம் தான் சொல்கிறோம். எங்கேயிருந்து கட்டுவது? அதனாலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுடைய அந்தச் சுமையைக் கொஞ்சமாவது நாம் இறக்குவோம் என்ற நல்ல எண்ணத்தில் 7 சதவீதம் அளவிற்கு சலுகை காட்டியிருக்கிறார்கள்.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே....

பிற்பகல் 12-30

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. வெங்கடசாமி):** இன்னும் 7, 8, பேர் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) திரு. லி. அய்யலுசாமி அவர்கள் ஒரேயொரு கேள்வி கேளுங்கள்.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் மானாவாரி விவசாயத்தைப் பற்றி நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு ஏக்கருக்கு 4000 ரூபாய் வரைக்கும் செலவு செய்து மகசூல் வரக்கூடிய நேரத்தில் மழை, பருவத்தில் பெய்யாததால் (குறுக்கீடு).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. வெங்கடசாமி) :** நீங்கள் பேசுங்கள் ஏழெட்டு பேர் பேச வேண்டியிருக்கிறது. Time இல்லை.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** நாங்கள் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லை.



**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கு நமது சுகாதாரத் துறை அமைச்சர் குறிப்பிடுகின்றபொழுது இந்த அரசு பல்வேறு சுமைகளைத் தாங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினால்தான் நாங்கள் விவசாயிகளுக்கு இதற்கு மேல் சலுகை செய்ய முடியவில்லை என்பதை ஒப்புக்கொண்டதற்கு நான் அவர்களுக்கு . . . . (மணியடிக்கப்பெற்றது).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் கணக்குச் சொன்னதை இவர் திசை திருப்புகிறார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட்டியை முழுமையாக, 12 சதவீதத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றுதான் நம்முடைய அரசு சார்பாக நபார்ட் நிறுவனத்திடம் எடுத்துரைக்கப்பட்டது. ஏற்கெனவே ஒப்பந்தம் செய்துகொண்டபோது நாங்கள் குறைவான வட்டிக்கு உங்களுக்குப் பணம் தருகிறோம்; அதிலேயே 7 சதவீதம் அவர்களுக்கு சலுகை இருக்கிறது. மேலும் பொது மக்களுடைய வரிப் பணத்தை நீங்கள் வீணாகச் செலவு செய்யக் கூடாது என்று பொருளாதார ரீதியாக அவர்கள் கணக்கிட்டு இந்த ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். எதிர்கட்சி உறுப்பினர்களுக்கு நாங்கள் சொல்வது விவசாயிகளுக்காக நீங்கள் எவ்வளவு அக்கறையோடு செய்கிறீர்களோ அதே அக்கறையோடுதான் இந்த அரசு செயல்படுகிறது. இந்த 7 சதவீதம்கூட நம்முடைய அந்த அதிகாரிகள் நேரடியாக நபார்டு அதிகாரிகளோடு பேசி, இந்த 7 சதவீதத்திற்கு ஒத்துக்கொள்ள வைத்தார்கள். நீங்கள் ஏற்கெனவே இருந்த பிரதமரிடம் சொல்லி கடன் தள்ளுபடி செய்ய வைத்தீர்களே, அதுபோல் இப்போதும் நீங்கள் பங்குபெறும் ஆட்சிதானே இருக்கிறது நீங்கள் கேட்டுப் பெறலாமே என்று சொன்னார்கள். அன்றைக்கு இந்த மாதிரி ஒப்பந்தம் எல்லாம் எங்கும் கிடையாது. இப்பொழுது புதிதாக ஒப்பந்தம் இந்தியா முழுவதும் அத்தனை மாநிலங்களிலும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் ஏற்படுகின்ற நஷ்டங்களுக்கேற்ப மத்திய அரசு மூலமாக ஓரளவுக்கு நிதி உதவி செய்து தந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது நம் அரசு 7 சதவீதம் அல்ல, முழுமையாகத் தள்ளுபடி செய்யத்தான் அனுமதி கேட்டது. அவர்கள் 7 சதவீதம் அனுமதி அளித்திருக்கிறார்கள். இப்பொழுதுகூட நம்முடைய முதலமைச்சர் 3 சதவீதம் தவறுதல் வட்டியை ஒரு சதவீதமாகக் குறைத்து இருக்கிறார்கள். இதற்குகூட 4 நாட்களுக்கு முன்பு எங்களுடைய துறை அதிகாரிகள் நேரடியாக நபார்டு அதிகாரிகளோடு சென்று பேசி தவறுதல்

வட்டியை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டபொழுது அவர்கள் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. இந்த 2 சதவீதத்தைத் தள்ளுபடி செய்வதற்கு ஒத்துக்கொண்டதற்கு இணங்கத்தான் இப்பொழுது நாம் இந்த 1 சதவீதம் என்று அறிவித்திருக்கிறோம். இன்னும் ஒன்று சொல்லப்போனால் தமிழ் நாட்டினுடைய மொத்த விவசாயிகளினுடைய கடனில் கிட்டத்தட்ட 50 சதவீதத்தை கூட்டுறவு வங்கிகள் நிறைவு செய்கின்றன. மற்ற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், ஷெட்யூல்டு வங்கிகள் எல்லாம் போல 50 சதவீதம் விவசாயக் கடன்களை முழுமையாகக் கூட்டுறவு வங்கிகள்தான் வழங்குகின்றன. இதிலே அவர்கள் இப்பொழுது 6 சதவீத வட்டிக்குத் தருகிறார்கள். அந்த 6 சதவீதம் வட்டிக்குப் பணத்தை வாங்கித்தான் விவசாயிகளுக்குப் போகின்றபொழுது 12 சதவீதத்திற்குக் கொடுக்கிறோம். மாநில வங்கி அரை சதவீதமும், மத்திய வங்கி 9 சதவீதம் ஆகவும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 12 சதவீதமாகவும் இப்போது கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். இந்த ஒப்பந்தத்தை மீறி, ஏதாவது செய்து திடீரென்று அவர்கள் அந்த 1000 கோடி தருவதை நிறுத்தினால் மீண்டும் நாம் விவசாயிகளுக்குத் தருகின்றபொழுது 18 சதவீதம் வட்டிக்குத்தான் தர முடியும். ஏனென்றால் 13 சதவீதத்திற்கு நாம் வெளியிலிருந்து வைப்பு நிதி பெறுகிறோம். அப்பொழுது விவசாயிகளுக்கு கொடுக்கின்ற வட்டித்தொகை கூடும் என்ற காரணத்தால்தான் அவர்களையும் அனுசரித்து இந்த வேலையைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதனால்தான் இந்த நிலை. ஆனால் எப்படி இங்கு இருக்கின்ற எதிர்கட்சி உறுப்பினர்கள் சொல்லுகின்றார்களோ அதே எண்ணம் இந்த ஆளுங்கட்சியிலேயிருக்கின்றவர்களுக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும்—குறிப்பாக விவசாயிகளுக்கு முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற எண்ணம்—நிச்சயமாக உண்டு. அவர் எடுத்த நடவடிக்கையிலேதான் இவ்வளவு சலுகைகளும் இப்போது பெற்றிருக்கிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** துணைத் தலைவரவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் ஒத்துக்கொள்ள மாட்டார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,......



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் நேரத்தை எடுக்கிறீர்கள். அவர் ஒத்துக்கொள்ளமாட்டார். திரு. சந்தானம், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) அவர் ஒத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அமைச்சரவர்கள் கொடுத்திருக்கக்கூடிய விளக்கம் எங்களுக்கு ஏற்புடையதாகத் தெரியவில்லை. தமிழகத்தை இப்பொழுது ஆண்டு கொண்டிருக்கிற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற இந்த அரசு நபார்டு போட்ட ஒப்பந்தத்தையே சொல்லி, அந்த ஒப்பந்தத்தை எங்களாலே மாற்றவே முடியவில்லை என்று சொல்லிச் சொல்லி, நீங்கள் தமிழக மக்களுக்குத் துரோகம் செய்து கொண்டிருப்பதை ஒருகாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, மீண்டும் மறுபரிசீலனை செய்து நீங்கள் ஏற்கெனவே செய்தது போல பிரதமரிடம் எல்லாம் கேட்டுத் தள்ளுபடி செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்றுதான் நாங்கள் கேட்க விழைகிறோம்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, தமிழக விவசாயிகளுக்கு யார் துரோகம் செய்கிறார்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே தமிழக விவசாயிகளுக்கு எங்கேயெல்லாம் சலுகைகள் காட்ட முடியுமோ, எங்கேயெல்லாம் அவர்களுக்குப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற முடியுமோ அதைச் செய்து கொண்டுதான் இருக்கிறோம். திரு. ஞானசேகரன் சொல்கின்ற காரணத்தினாலே இந்த அரசு விவசாயிகளுக்குத் துரோகம் செய்து விட்டதாக நிச்சயமாக விவசாயிகள் நம்பமாட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. அவர் ஏற்கெனவே அதிக நேரம் பேசியிருக்கிறார். (குறுக்கீடு) 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** ஒரே ஒரு விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் உங்கள் கட்சி உறுப்பினர்தானே? பேசட்டும். (குறுக்கீடுகள்) நேரம் ஆகிவிட்டது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

[2001 ஜனவரி 31

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தஞ்சை, திருவாரூர்......

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 18 நிமிடங்களுக்கு மேல் பேசிவிட்டீர்கள். திரு. ந. கருப்பண்ண உடையார். (குறுக்கீடுகள்) அவர் எவ்வளவு நேரம் பேசியிருக்கிறார் என்று இங்கே குறிக்கப்பட்டிருக்கிறது. 18 நிமிடங்களுக்கு மேல் பேசி இருக்கிறார். அதற்கு மேல் அனுமதிக்க இயலாது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில்....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவருக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் அவர் பேசவில்லை என்பது உண்மை. ஆனால், பலமுறை நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் அவரை, தொடர்ந்து பேசுங்கள் என்று வற்புறுத்திக் கொண்டே இருந்தார்கள். ஆனால், அவர் பேசாமல், மற்ற கட்சி உறுப்பினர்கள் எல்லாம் கேள்வி கேட்பதற்கு அவர்தான் அனுமதித்தார். எனவே, அது அவருடைய குற்றமே தவிர, நம்முடைய அவையின் குற்றமல்ல. இன்னும் 10 பேர் பேச வேண்டியிருக்கிறது. எனவே, நேரத்தின் அருமை கருதி, இரண்டு நிமிடமோ, மூன்று நிமிடமோ, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்களைப் பேச அனுமதித்துவிட்டு, தயவுசெய்து, 2.00 மணி வரையிலே இந்த அவை தொடர்ந்து ஒழுங்காக நடைபெறுவதற்கு, துணைத் தலைவரவர்களே நீங்கள் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்ட காரணத்தினாலேதான் நான் அவர்களுக்கு இடம் கொடுத்தேன். அந்த நேரத்திலே மற்ற கட்சி உறுப்பினர்களும் அதை எடுத்துக் கொண்டார்கள். எனவே, விவசாயிகளுடைய கடன் தள்ளுபடி என்கின்ற நிலை இப்போது 7 சதவிகிதம் என்பதை குறைந்தபட்சம் 10 சதவிகிதமாக அறிவிப்பதற்கு அரசு முன்வர வேண்டும்.



2001 ஜனவரி 31] [திரு. லா. சந்தானம்]

அதுபோல, படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது அறிவிக்கப்பட்டதே தவிர, அது செயல்படுத்தப்படவில்லை என்பதற்கு உதாரணம், காவல் துறையிலே 5,000 பேர்களுக்கு வேலை கொடுப்பதாக அறிவித்து, அதற்குத் தேர்வுகள் நடத்தப்பட்டு, சில பேருக்கு நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு, அது பாதியிலே நிறுத்தப்பட்டிருக்கின்ற நிலை இருக்கிறது. எனவே, அரசு தெரிவித்த அந்த அறிவிப்புகள் செயலற்றதாக இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டி, அதை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதுபோல, நெடுஞ்சாலை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள், எனக்கு நேரம் முக்கியம். நான் அதைப்பார்த்துதான் அனுமதிக்க முடியும். திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. லா. சந்தானம்:** நீங்கள் எங்களுடைய ஜனநாயக உரிமைகளைப் பறிக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்குப் பேசிய உறுப்பினர்களிலேயே அதிக நேரம் எடுத்துப் பேசிய உறுப்பினரே நீங்கள்தான், (குறுக்கீடு) இங்கே வந்து பாருங்கள். பார்த்தால்தான் தெரியும். திரு. ந. கருப்பண்ண உடையார.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்கள் 90 சதவிகிதம் விவசாயத்தை நம்பி இருக்கின்ற மாவட்டங்களாக இருக்கின்றன. அந்த மக்கள் விவசாயத்தைத் தீவிரமாகச் செய்ய ஒரு விவசாயக் கல்லூரி வேண்டுமென்று நான்கு ஆண்டு காலமாக நான் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் கோரிக்கைக் கடிதங்கள் எல்லாம் கொடுத்திருக்கிறேன். கேள்வி மூலமாகவும் கேட்டிருக்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** எனக்குப் பேசுவதற்கு நேரம் அளிக்காததால் நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(உறுப்பினர் திரு. லா. சந்தானம் வெளிநடப்புச் செய்தார்)

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்குரிய போதுமான இட வசதி ஆடுதுறை நெல் ஆராய்ச்சிப் பண்ணையிலே இருக்கிறது. அதற்குரிய நிதியை, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்களிடமிருந்து வசூல் செய்து கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அதை இந்த நிதி ஆண்டிலேயே ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு முதல்வரவர்கள் பதிலுரையிலே அனுமதியை அளிக்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

மேலும், கும்பகோணம் பகுதியிலே 30-1-2001 முதல் வழக்கறிஞர்கள் சங்கம் மேலும் ஒரு குற்றவியல் நீதிமன்றம் வேண்டுமென்று தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அந்த ஒரு நீதிமன்றத்திலே 3,000 வழக்குகள் நிலுவையிலே இருக்கின்றன. ஒரு வருடத்திலே 3,000 வழக்குகள் அங்கே பதிவாகின்றன. அந்த நீதிமன்றத்திற்கு 17 காவல் நிலையங்கள் உட்பட்டு வருகின்றன. இதுபோன்று 17 காவல் நிலையங்கள், ஒரேயொரு குற்றவியல் நீதிமன்றத்திற்கு உட்பட்டு வருவது, தமிழ்நாட்டிலே, கும்பகோணத்திலே மட்டும்தான் இருக்கிறது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் நகரில் மொத்தம் 7 நீதிமன்றங்கள் இருக்கின்றன. Additional District Judge-cum-Chief Judicial Magistrate Court, Additional Chief Justice Magistrate Court, Principal Sub-Court, Additional Sub-Court, Principal District Munsif Court, Additional District Munsif Court, Judicial Magistrate Court ஆகிய நீதிமன்றங்கள் கும்பகோணத்தில் இருக்கின்றன. புதிதாக, இன்னொரு Additional Judicial Magistrate Court வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல—எனக்கு வந்திருக்கின்ற தகவலில்—அங்கே ஒன்றும் 3,000 வழக்குகள் தேங்கிக் கிடக்கவில்லை. 1,325 வழக்குகள்தான் அந்த நீதிமன்றத்தில் இருக்கின்றன. இதனாலே, நான் கூடுதல் நீதிமன்றம் வேண்டாம் என்று வாதாடுகிறேன் என்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனால் புதிதாக நீதிமன்றம் திறப்பதற்கு அரசிடம் போதுமான நிதியில்லாத காரணத்தால்தான் திறக்கப்படாமல் இருக்கிறதே தவிர திறக்கக்கூடாது



என்பதல்ல. 5 ஆண்டு காலத்தில் 104 நீதிமன்றத்திற்கு ஆணை பிறப்பித்த ஒரே அரசாங்கம் இந்தியக் துணைக் கண்டத்திலேயே, தமிழக வரலாற்றிலேயே கலைஞருடைய அரசாங்கம்தான் என்பதை பெருமையோடு இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்று நீதிமன்றங்களில் அதிகமாகத் தேங்கிக் கிடக்கின்ற வழக்குகளை விரைவுப்படுத்துவதற்காக, விரைவாகத் தீர்ப்புகளைப் பெறுவதற்காக மத்திய அரசு புதிதாக ஒரு திட்டம் வகுத்திருக்கிறது. அதன் அடிப்படையில் 50 நீதிமன்றங்கள் திறப்பதற்கான வாய்ப்பிருக்கிறது. அந்த அடிப்படையில் கும்பகோணத்தை உயர் நீதிமன்றம் பரிசீலிக்குமானால் இந்த அரசு அதை ஏற்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, குற்றவியல் நீதிமன்றம், ஒன்றுதான் இருக்கிறது, அதிலே இவ்வளவு வழக்குகள் தேங்கியிருக்கின்றன என்று நான் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மற்ற நீதிமன்றங்களைப் பற்றி எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அந்தக் குற்றவியல் நீதிமன்றத்தில்...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** இல்லை. ஒரே நீதிமன்றம் இருக்கிறது என்பதைத்தான் நானும் சொன்னேன். Judicial Magistrate Court ஒன்று இருக்கிறது என்பதைத்தான் நானும் சொன்னேன். அதிலே தேங்கியிருக்கிற வழக்குகள் 1,300 தான். அதைத்தான் நான் சொல்கிறேன். நீங்கள் 3,000 என்று சொன்னீர்கள். அதற்காகத்தான் நான் சொன்னேன்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை, இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் ஒன்றும் தவறான கருத்தைச் சொல்லவில்லை. 3,000 வழக்குகள் இருப்பதை வேண்டுமானால் நான் ஆதாரத்தோடு எடுத்துக்கொண்டு வந்து காண்பிப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அங்கே குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்படுத்துவதற்குப் போதுமான இட வசதி இருக்கிறது. புதிதாகக் கட்டட வசதி ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. 5 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இது வேண்டுமென்று கோரிக்கையெல்லாம் வைத்திருந்தார்கள். மேலும் அந்த வழக்கறிஞர்கள் சங்கத்தின் மூலமாக அங்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்த அட்வகேட் ஜெனரல் திரு. கே.வி. வெங்கடாசலய்யா அவர்களிடம்கூட வழக்கறிஞர்கள் சங்கத்தினர் நேரடியாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களும் நான் பரிந்துரை செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் அந்த குற்றவியல் நீதிமன்றத்தை அமைக்க அரசுக்கு நிதி வசதி ஒன்றும்

வேண்டியது இல்லை. கும்பகோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் எண் 2 அல்லது வலங்கைமான் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் கூடுதல் எண் 1-ஐ மாற்றி அதே இடத்தில் அதே நீதிபதியின்கீழ் கூடுதல் குற்றவியல் நீதிமன்றமாக அறிவிக்கலாம். மேற்சொன்ன சிவில் வழக்குகள் நீதிமன்றங்களில் வருடத்திற்கு 300 வழக்குகள்தான் இருக்கின்றன. அதனாலே அந்த சிவில் வழக்கு நீதிமன்றத்தைக் கூடுதல் குற்றவியல் நீதிமன்றமாக மாற்றலாம் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** இதுபோன்ற பரிந்துரைகள் எல்லாம் உயர் நீதிமன்றத்திலிருந்துதான் வர வேண்டுமே தவிர, இங்கிருந்து, அரசாங்கம் அதைச் செய்யவே முடியாது. செய்வதற்கு அரசியல் சட்டத்தில்கூட இடம் கிடையாது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த நிர்வாகங்கள் எல்லாம் முழுக்க முழுக்க உயர் நீதிமன்றத்திலே இருக்கின்றன. ஒரு வட்டத்திற்குரிய நீதிமன்றத்தைப் போய் நாம் எடுத்துக்கொள்ள முடியாது. இந்த ஆண்டு, ஒரு வட்டத்தில் இருக்கக்கூடிய நீதிமன்றத்தில் குறைவான வழக்குகள் இருக்கலாம், அடுத்த ஆண்டு அதிகமாக இருக்காலம். ஆனால அதே நேரத்திலே கும்பகோணத்திற்கு Additional Judicial Magistrate Court வேண்டுமென்ற கோரிக்கைகள் தவறானது என்று நான் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் தலையிட்டு, இந்த உண்ணாவிரதம் எல்லாம் வேண்டாம், கலைஞர் அரசு கருணையோடு இந்த பிரச்சினைகளை யெல்லாம் அணுகும், நமக்கு நீதிமன்றத்தைத் தருவதற்கு முயற்சிக்கும் என்று சொல்லி அந்த வழக்கறிஞர்களைச் சமாதானப்படுத்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, நீதிமன்றம் தேவையென்று சொல்கிறார்கள். ஆனால் அதற்கு உயர் நீதிமன்றத்தின் பரிந்துரை வேண்டுமென்று சொன்னார்கள். உயர் நீதிமன்றத்திற்கு வழக்கறிஞர் சங்கத்தின் மூலமாக எழுதவேண்டுமா அல்லது சட்டமன்றத்தின் மூலம் அமைச்சரவர்கள் எழுத வேண்டுமா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அதற்கு போதுமான இடவசதி, நீதிபதிகளெல்லாம் இருக்கிற காரணத்தால் உயர் நீதிமன்றத்தின் அனுமதி தேவையில்லை அதை மாற்றிக்



கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் பாபநாசம் தொகுதி, பாபநாசத்திலே குற்றவியல் நீதிமன்றம் இருக்கிறது. அங்கே ஒரு உரிமையியல் நீதிமன்றம் இல்லை. அதற்குப் போதுமான இடவசதி இருக்கிறது. அந்தக் குற்றவியல் நீதிபதிகளிடமிருந்து, அங்கு அதை ஏற்படுத்துவதற்கு வேண்டிய ஆவணங்களை வாங்கி அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன். ஆகவே பாபநாசத்தில் உரிமையியல் நீதிமன்றம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தஞ்சை மாவட்டத்து மக்கள் விவசாயத்தையே நம்பியிருக்கிற மக்கள். ஒன்றுபட்ட தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டத்திலே நெல்லுக்கு அரசு நேரடி கொள்முதல் நிலையத்தின் மூலமாக குவிண்டால் ஒன்றுக்கு 40 ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதை அதிகமாக உயர்த்தி, 50 ரூபாயாக வழங்கவேண்டுமென்று அன்போடு உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கரும்பை உற்பத்தி செய்து கொடுக்கின்ற விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு 10% பிழிதிறன் இருந்தால்தான் ஆயிரம் ரூபாய் வழங்கலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் 10% பிழிதிறன் உள்ள கரும்பு என்பது தஞ்சை மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. தமிழகத்தில் அந்த 10% பிழிதிறன் உள்ள கரும்பு கிடைக்கக்கூடிய வாய்ப்பு இல்லையென்ற காரணத்தால் 8.5% பிழிதிறன் உள்ள கரும்புக்கு ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரையில் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலமாகப் பெற்ற மத்திய காலக் கடன், நீண்ட காலக் கடன்களுக்கெல்லாம் வட்டியைத்தான் முழுமையாகத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் மற்றும் தோழமைக் கட்சிகளின் சார்பில் நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோமே தவிர, அசலைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற எண்ணத்தில் யாரும் கேட்கவில்லை. ஆனால் வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கு நபார்டு வங்கியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காரணம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் நபார்டைக் காரணம் காட்டாமல் அரசு மூலமாக எல்லாத் துறைகளுக்கும் நிதி

கொடுத்துக் கொண்டு இருப்பதைப் போல விவசாயிகளுக்கும் அவர்கள் படுகின்ற கஷ்டத்தை உணர்ந்து அவர்களுக்கும் வட்டியை முழுமையாகத் தள்ளுபடி செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

அதேபோல் கூட்டுறவு வேளாண்மைத் தொடக்க வங்கிகளில் நகைக் கடன்களை விவசாயிகள் வாங்கும்போது, 18% வட்டி விதிக்கப்படுகிறது. அதை மாற்றி தேசிய வங்கிகளில் விதிப்பதைப்போல 12% வட்டிக்குக் கடன் கொடுக்க வேண்டும். அதை 12% ஆகக் குறைத்துக் கொடுப்பதற்கு நமது அமைச்சரவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல நமது விவசாயிகள் டிராக்டர், பவர் டில்லர், கதிர் அறுக்கும் கருவி, பொக்லின் போன்ற இயந்திரங்களையெல்லாம் வாங்கும்போது தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் சலுகை மானியம் கொடுப்பதைப் போல, சிறு விவசாயிகளுக்கும் 50 ஆயிரம் ரூபாய் வரை கடன் வாங்கும்போது தள்ளுபடி சலுகை மானியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அந்த மானியம் அவர்களுக்கும் வழங்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல நமது.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** பாபநாசம் சட்டமன்ற தொகுதியிலேயுள்ள பூதங்குடியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்று நான்காண்டு காலமாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கடிதம் கொடுத்திருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தினுடைய துணை இயக்குநரும் கருத்துருவெல்லாம் அனுப்பியிருக்கிறார். மத்திய அரசிடமிருந்து அனுமதி கிடைத்தவுடன் கொடுக்கிறேன் என்று சொலல்லியிருக்கிறார்கள். அதை இன்னும் கொடுக்கவில்லை. அவர்கள் அதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு சி. வேலாயுதன்.

பிற்பகல் 12-50

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு பெரியவர்



தன்னுடைய குழந்தையை அழைத்துக்கொண்டு திருவிழா பார்க்கச் செல்கின்றார். போகும்போது அந்தக் குழந்தையானது ஒரு அழகான மண் பானையைப் பார்த்தவுடன் வாங்கித்தர வேண்டுமென்று கேட்கின்றது. அந்தப் பெரியவரும் மண் பானையை வாங்கிக் கொடுக்கின்றார். சற்று அப்பால் சென்றவுடன் ஒரு யானை வருகிறது. திருவிழாவல்லவா! யானை வருகிறது. யானையை வாங்கித் தர வேண்டுமென்று கேட்கின்றது. அவரால் முடியவில்லை. ஆனாலும், யானைக்காரனை பார்த்துப் பேசி யானையில் சுற்றியெல்லாம் காட்டிவிட்டார். இந்த யானையைப் பானைக்குள் போக வைக்க வேண்டுமென்று குழந்தை சொல்கின்றது. ஆக முடியாத ஒரு காரியத்தை அந்தக் குழந்தை செய்யச் சொல்கிறது. பானை கேட்டது வாங்கிக் கொடுக்கப்பட்டது. யானையையும் காட்டிக்கொடுத்தாகிவிட்டது, யானையைப் பானைக்குள் செல்ல வைக்க வேண்டுமென்றால் எப்படி முடியும்? ஆகவே, முடியாத காரியத்தைச் செய்யச்சொல்லி குழந்தை கேட்கின்றது. கவர்னருடைய உரைக்கு நன்றி சொல்லி பேசியதற்கு பதில் சொல்லும்போது மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு சிறப்பாகச் செய்திருக்கின்றோம் என்று அழகான பதிலைச் சொன்னார்கள். நம்முடைய இந்த அரசாங்கமானது இந்த தமிழக மக்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய இந்தச் சந்தர்ப்ப சூழ்நிலைகளையெல்லாம் கருத்திலே கொண்டு, எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு பாராட்டத்தக்க வகையில் சிறப்பாகச் செய்திருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இந்தக் குழந்தை நிலையில் இருக்கக்கூடிய சிலர் யானையையும் பானையையும் போல பேசக்கூடிய சந்தர்ப்பங்கள் ஆங்காங்கே நடந்துகொண்டிருக்கின்றன. இது இயற்கை. ஆனாலும்கூட, முடிந்ததைச் செய்திருக்கின்றது என்பதில் யாரும் சந்தேகம் எழுப்ப முடியாது என்று கூறி இந்த நிதிநிலை அறிகையை வரவேற்றுப் பாராட்டி ஒருசில கருத்துகளைச் சொல்லி அமையலாம் என்று கருதுகின்றேன்.

சுயநிதி உதவிக் குழுவானது, பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. மத்திய, மாநில அரசாங்கங்கள் அதற்கு நல்ல முதலீடு கொடுக்கின்றன. இதை மேலும் ஊக்கப்படுத்த வேண்டும். காரணம், மக்களுடைய மனநிலை இனாமாக வாங்குவதற்கும் கையேந்தக்கூடிய அளவுக்கும் சென்றுவிட்டது. இந்த நிலையில்லாமல் சாதாரண ஏழைகள்கூட நல்ல உறுதிப்பாட்டோடும், தன்மானத்தோடும் வாழக்கூடிய ஒரு சூழ்நிலை சுயநிதி உதவிக் குழுவின் மூலம் பாமர மக்களுக்கு வந்திருக்கிறது. இது மிகப் பாராட்டத்தக்க ஒரு காரியம். இதை அரசாங்கம் ஊக்கப்படுத்த வேண்டும். நாம் ஆயிரம்தான் சொன்னாலும் அதிகாரிகள் நம்மோடு

ஒத்தாசை செய்யாத காரணத்தால், உள்ளூரில் இருக்கக்கூடிய சில அரசியல்வாதிகளுடைய குறுக்கீட்டால் சில நியாயமான காரியங்களைக்கூடச் செய்ய முடியாமல் போகின்றது என்பதை நான் 12-11-2000 அன்று சட்டமன்றத்தில் பேசியிருந்தேன். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும்கூட ஊருக்குச் சென்றவுடன் என்னுடைய தொகுதியிலுள்ள அழகிய மண்டபம் பக்கத்திலுள்ள கண்ணங்கோணம் என்று சொல்லக்கூடிய ஊரில் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கும் என்று பேசினார். நீதிமன்றத் தடை வாங்கிய காரணத்தால் முடியவில்லை என்பது உண்மைதான். அதற்குப் பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட மின் வாரிய அலுவலகம் திறக்கும்போது மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், மத்திய அமைச்சர் திரு. பொன். ராதாகிருஷ்ணன் அவர்களும் இருக்கும்போது சட்டமன்றத்தில் பேசிய அத்தனையும் அப்படியே கோடிட்டுக் காட்டினேன். அதிகாரிகள் சொல்லும்போது நீதிமன்ற ஆணை தீர்ந்தவுடன் அதை நாங்கள் செய்து தருகிறோம் என்று சொல்கின்றார்கள். இதிலே ஒரு சிறிய பிரச்சினை என்னவென்று சொன்னால் சட்டமன்றத்தில் பேசியபோது மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஊருக்குச் சென்றவுடன் மின் இணைப்புக் கிடைக்கும் என்று சொல்லியிருந்தார். ஆனால், ஒரு வார கால அவகாசம் கோர்ட்டுக்குச் செல்வதற்கு அதிகாரிகள் வழங்கிவிட்டார்கள். அதில் ஒரு சிறிய அரசியல் குறுக்கீடு. எந்த அளவிற்கு அரசியல் நாகரிகம் இருக்கிறது என்பதை நான் நாசுக்காகச் சுட்டிக்காட்டுகின்றேன். என்னுடைய தொகுதியில் ஒரு ஊருக்கு மின் இணைப்பு வேண்டுமென்று நான் கேட்கிறேன். 15 வீடுகளில் ஒயரிங் செய்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. ஓர் அரசியல் தலைவர்....

**திரு. ஜி. பழனிசாமி:** Point of Order. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது அனைத்துமே நிறைவேறிவிட்டன; தமிழ்நாட்டிலே வேறு பிரச்சினையே கிடையாது. பானைக்குள்ளே போய் யானை பூரலாமா என்று ஒரு கேள்வியைக்கூட கிளப்பினார்கள். இப்போது உடனே கோரிக்கை வைக்கிறாரே, அது என்ன என்று எங்களுக்கு விளக்கம் புரியவில்லை என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியிலே எல்லாமே நடந்துவிட்டது என்று சொன்னாலும், 40 லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது, இன்னும் ஒரு 10



லிட்டர் தண்ணீர் வேண்டுமென்று கேட்பது குறையல்ல. அதைப்போல உறுப்பினர் அவருடைய கிராமத்திலே மின்சாரம் இருக்கிறது, அரசியல் கட்சிக்காரர்கள் அதிலே வேண்டுமென்றே தலையிட்டு 15 வீடுகளுக்கும் மின்சாரம் கொடுக்காத அளவிற்கு இடையூறு செய்கிறார்கள் என்று என்னிடத்திலே சொன்னார்கள். நானும் உடனடியாக அதிகாரிகளைக் கூப்பிட்டுச் சொன்னேன். அதற்கிடையில் அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய்த் தடையாணை பெற்று, அந்த இணைப்பு கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவரும் மின் வாரியத் தலைவரை நேரிலே போய்ச் சந்தித்துப் பேசியிருக்கிறார். நாங்களும் அந்த வழக்கை உடனடியாக நீதிமன்றத்திலே சந்தித்து அந்தத் தடையாணையை vacate செய்து விரைவிலே அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க இருக்கின்றோம்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முடிந்ததைச் செய்திருக்கின்றது. நல்ல காரியங்கள் செய்யும்போது சில அரசியல் குறுக்கீடுகள் வந்து, செய்ய முடியவில்லை என்றுதான் சொன்னேன். அந்த குறுக்கீட்டைத்தான் சுட்டிக்காட்டினேன். ஆக, என்னுடைய தொகுதியில் ஒரு ஊருக்கு மின் இணைப்பு வேண்டும் என்று நான் கேட்கலாம். ஆனால், ஒரு அரசியல் கட்சியினுடைய தலைவர் என்னுடைய தொகுதியில் நான் கேட்கக்கூடிய அந்த மின் இணைப்பைக் கொடுக்கக்கூடாது என்று சொல்லியதால், எங்களால் கொடுக்க முடியவில்லை, ஒரு வார காலதாமதம் ஆகிவிட்டது, அதனால் அவர் நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டார் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள் என்று சொன்னால், நான் எதற்காக சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால், அதிகாரிகள் சிந்திக்கவேண்டும். எம்.எல்.ஏ. அல்லது யார் கேட்டாலும், நியாயமான காரியமாக இருந்தால் செய்ய வேண்டும். நியாயத்திற்கு விரோதமான காரியம் என்றால், நாங்கள் செய்ய முடியாது என்று மறுக்கக்கூடிய தைரியம் அதிகாரிகளுக்கு வர வேண்டும். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அரசியல் நாகரீகத்திற்கு அப்பாற்பட்டு இந்தக் காரியம் நடக்கின்றது. அதை நியாயமாகச் செய்யக்கூடிய தைரியம் அதிகாரிகளுக்கு வரவில்லை. காரணம் சில அதிகாரிகள் நேர்மையாக இல்லையோ என்று எனக்கு சந்தேகம் ஏற்படுகிறது. எனவே, அதிகாரிகளைப் பொறுத்தமட்டில், அவர்கள் அரசாங்கத்திடமிருந்து மக்களுடைய வரிப் பணத்தை சம்பளமாக வாங்குகின்றார்கள். எந்த அரசியல் தலைவர் வந்தாலும்கூட, நியாயத்தைத்தான் செய்வேன் என்று சொல்லக்கூடிய தைரியம் அவர்களுக்கு இருக்க வேண்டும். அதற்காகத்தான் நான் இந்த

விஷயத்தைச் சுட்டிக்காட்டினேன். தடையாணை இன்று முடிகின்றது என்று அறிகின்றேன். அந்த தடையாணையை இன்று எப்படியாவது விலக்கி, 3 வருடங்களாகக் காத்திருக்கக்கூடிய கண்ணங்கோணம் மக்களுக்கு மின் இணைப்புக் கிடைக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.

பிற்பகல் 12-55

அதோடு இன்னொரு கோரிக்கையையும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் வைக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் கப்பியறை பஞ்சாயத்து என்று சொல்லக்கூடிய ஒரு பஞ்சாயத்து இருக்கிறது. அங்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று பொது மக்கள், மாவட்ட சுகாதார இணை இயக்குநருக்குக் கடிதம் எழுதினார்கள். அதறகு பதில், கடித எண் 5005/9B, 7-8-1998 அன்று இணை இயக்குநர் எழுதுகின்றார். 50 செண்ட் இடமும், 10 ஆயிரம் ரூபாயும் தந்தால், உங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருவோம் என்று சொல்லி இருக்கின்றார். 1-9-1998 அன்று 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது; 12-9-1998 அன்று 52 செண்ட் நிலம்—அவர் கேட்டார் 50 செண்ட்தான், 52 செண்ட் நிலம்—வாங்கிக் கொடுக்கப்படுகிறது. இப்போது அவர் சொல்கின்றார், பக்கத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது; அதனால் தர முடியாது என்று. முதலிலேயே இந்த பதிலைச் சொல்லி இருக்கலாமே.

இதற்கு அங்கேயுள்ள அதிகாரிகளுடைய தவறுதான் காரணம். ஆர்வமாக இருக்கக்கூடிய அந்த இளைஞர்கள் இப்போது ஊரில் தலை காட்ட முடியாத அளவிற்குக் கஷ்டமான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அவர்கள் பணம் வசூல் பண்ணி இவ்வளவு காரியமும் செய்து ஆகிவிட்டது. அரசாங்கம் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைக் கொடுக்கவில்லை. (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். தற்போது ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசாங்கத்தின் நிதி நிலை போதாமல் இருந்தாலும்கூட, ஓலைவிளை சந்திப்பில் வாடகை இல்லாமல் கட்டடம் தருகிறோம் என்று எழுதி கொடுத்து இருக்கின்றார்கள். அங்கேயாவது அரசாங்கம் உடனே ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதியில் மாம்பழத்தணையில் அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது. விரைவில் அந்தப் பணியைத் தொடங்க வேண்டும் என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களையும் அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.



கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ரப்பர் தொழில் நெல்லுக்கு அடுத்தபடியான ஒரு தொழில். அதற்கு விற்பனை வரி 8 சதவீதம் வைத்து இருக்கிறார்கள். அதை 4 சதவீதமாகக் குறைக்க வேண்டும். அதாவது அரசாங்கம் வைத்து இருக்கக்கூடிய விற்பனைக் கூடத்திற்கே ரப்பர் செல்வது இல்லை; எனவே சந்தை வரி 1 சதவீதம் இருப்பதை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களுக்கு பஸ் பாஸ் வழங்கப்படுகிறது. அதைப் பயன்படுத்தி விடுமுறை நாட்களில் அவர்கள் பஸ்ஸில் செல்ல முடியாது. அதனால் சுதந்திரதின, குடியரசுதின விழாக்களுக்குக் கூட மாணவர்கள் வர முடியாத அளவிற்கு அந்தத் தடை இருக்கின்றது. எனவே, சுதந்திர தின விழா, குடியரசுதின விழா ஆகிய இரண்டுக்கும் மட்டுமாவது அந்த பாஸ் வைத்திருக்கும் மாணவர்களை பஸ்ஸில் ஏற்றிக்கொள்ளும் அளவுக்கு அரசாங்கம் அனுமதித்தால், அந்த விழாக்களில் மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற வசதியாக இருக்கும். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

இன்னும் ஒன்றே ஒன்று. பல்நோக்கு சுகாதார உதவியாளர்கள் என்று 1990-91-ல் 600 பேரை அராசாங்கம் தேர்ந்தெடுத்து ஓராண்டு பயிற்சி எல்லாம் அவர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. அவர்களுடைய employment card ரத்து ஆகிவிட்டது. அவர்களுக்கு அரசாங்கம் வேலை கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மார்க்கர்கள் 218 பேர்களுக்கு இன்னும் பணி வழங்கப்படவில்லை. அவர்களாகவே பள்ளிக்கூடத்தில் வசூல் செய்த பணம் ரூ. 5 கோடியே 10 இலட்சம் இருக்கின்றது. அவர்கள் ஆண்டுக்கு 5 கோடியே 10 லட்சம் ரூபாயை வசூலித்து வைத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளம் ஆண்டுக்கு 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் தான் ஆகின்றது. இதில் அரசாங்கத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை. எனவே, அரசாங்கம் இதைக் கருத்தில்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்ற கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன். (குறுக்கீடு)

**திரு. சி. வேலாயுதன்:** ஒன்றே ஒன்றுதான்; சொல்லி முடித்து விடுகிறேன். எனது தொகுதியில் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி, வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித் திருநாடு. வந்தே மாதரம்; வந்தே மாதரம். பாரத் மாதா கி. ஜே.

[2001 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

*பிற்பகல் 1-00*

***திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிற கலைஞர் அளித்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் என்னுடைய கருத்துகளைக் கூற வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவராகிய தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நடந்து முடிந்த 5 ஆண்டுகளில் ஜனநாயகத் தூண்களில் ஒன்றான சட்டமன்றம் எப்படித் திகழ வேண்டுமென்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தது இந்தச் சட்டமன்றம். இதற்கெல்லாம் காரணம் அவையில் இருக்கின்ற முதல்வர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும், பேரவைத் தலைவர் அவர்களும், எதிர்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் என்று சொன்னால் நிச்சயமாக அது மிகையாகாது.

என்னுடைய போளூர் தொகுதியில் உள்ள பொதுமக்கள் கடந்த 15 நாட்களாக உறக்கமின்றி பெரும்பீதியுடன் இருக்கிறார்கள். இதுபற்றி ஏற்கெனவே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளேன். இன்னும் அது அவையில் எடுத்துக்கொள்ளப்பெறவில்லை. அவசர, அவசியத்தைக் கருதி இந்த நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அவையிலே இருக்கிற காரணத்தால் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

போளூர் தொகுதி, கிழக்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் உள்ள பகுதியாகும். சுமார் 9 யானைகள் எங்கேயிருந்தோ அங்கு வந்து, இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து, வாழைத் தோட்டங்களை நாசம் செய்வதும், கரும்புத் தோட்டங்களை அழிப்பதுமாக கடந்த 15 நாட்களாக அட்டகாசம் செய்து கொண்டிருக்கின்றன. வனத் துறையினர் வருகிறார்கள்; வெடி வைக்கிறார்கள்; தீ பந்தத்தைக் கொளுத்திக் காண்பிக்கிறார்கள்; இரண்டு நாட்களுக்கு மட்டும் அந்த யானைகளெல்லாம் பயந்து சென்றன. ஆனால் இப்போது அந்த யானைகள் இவற்றிற்கெல்லாம் பயப்படாமல் வெடி வெடிப்பவர்கள் மீதும், தீப்பந்தம் காட்டுபவர்கள் மீதும் பாய்ந்து வந்து தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கின்றன. கடந்த 3 நாட்களாக இந்தத் தீப்பந்தம் கொளுத்திக் காண்பிக்கின்ற பொது மக்கள் மிகவும் தொல்லைக்கு



2001 ஜனவரி 31] [திரு. ஏ. ராசேந்திரன்]

ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். நேற்றையதினம் காலை, போளூர் தொகுதி, ஆத்துவாம்பாடி என்ற கிராமத்தில் யானைக் கூட்டங்கள் வந்தன. ஒருவரை யானை துதிக்கையால் அடித்தது. சந்திரகேசன் என்பவர் முதலிலே அடிபட்டார். அடிபட்ட உடனே அவருடைய மகன் வந்து அவருக்கு தண்ணீர் கொடுத்தார். தண்ணீர் கொடுத்த உடனே, தண்ணீர் கொடுக்கின்ற அவருடைய மகனைத் தள்ளிவிட்டு, அந்த யானை சந்திரகேசனை 10 அடி தூரம் இழுத்துச் சென்று தன்னுடைய காலில் போட்டு மிதித்துவிட்டது. அதேசமயத்தில் அங்கேயிருந்த இன்னும் ஒருவருக்கு காயம் ஏற்பட்டது. இந்த சந்திரகேசன் என்பவர் அந்த இடத்திலேயே இறந்து விட்டார். அங்கு வாழைத் தோட்டங்கள் எல்லாம் நாசம் ஆக்கப்பட்டுவிட்டன; அதேசமயத்தில் கரும்புத் தோட்டங்களும் நாசமாக்கப்பட்டுவிட்டன. அங்கே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் மிகவும் பயத்துடனே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இறந்தவர் குடும்பத்திற்கு தமிழக அரசு குறைந்தது 2 இலட்சம் ரூபாயாவது நிவாரண நிதியாகத் தர வேண்டும். காயமடைந்தவர்களுக்கெல்லாம் 50 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியாகத் தரவேண்டும். அங்கே கரும்புத் தோட்டங்கள், வாழைத் தோட்டங்கள் எல்லாம் நாசமாக்கப்பட்டுவிட்டன. அவற்றுக்கெல்லாம் உரிய நிவாரண நிதி அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல கலசப்பாக்கம் பகுதியிலேயும், போளூர் அணைக்கட்டுத் தொகுதிகளில் இருக்கின்ற பல பகுதிகளிலேயும் காட்டு யானைகள் கீழே வந்து பயிர்களை அழிக்கின்றன என்ற செய்தி அரசுக்கு வந்திருக்கிறது. அவற்றை விரட்டி அடிப்பதற்கு வனத் துறையினர் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து இருக்கிறார்கள். ஆனால் அவற்றையெல்லாம் மீறி நேற்றைக்கு போளூர் தொகுதியிலே ஆத்துவாம்பாடிக்கு பக்கத்திலே ஒருவரை கொன்றிருக்கிறது யானை. இருவருக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறது. காயம் பட்டவர்கள் இருவரும் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இறந்தவர் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் தருவது என்று அரசு ஏற்கெனவே முடிவு செய்திருக்கிறது. அதன் அடிப்படையிலே நேற்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முதல்கட்டமாக 25,000 ரூபாயைத் தந்திருக்கிறார்கள். மற்றவர்களுக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறது. சிகிச்சைக்குப் பிறகு அவர்களுக்கு அளிக்க வேண்டிய பணம் அளிக்கப்படும். பொதுவாக யானைகள் மட்டுமல்ல. பல காட்டு மிருகங்கள் காட்டிலேயிருந்து சில நேரங்களிலே நாட்டிற்கு வந்து விடுகின்றன. அதற்கு இரண்டு காரணங்கள் காட்டிலே நீர் இல்லாவிட்டால் நீர்நிலையை நாடி வரும். இந்த யானைகள்

இருக்கின்றதே, அதற்கு என்று தனி ஒரு குணம் உண்டு. எங்கேயாவது கள்ளச் சாராயம் மாட்டிவிட்டால் யானைகளை என்னதான் திருப்பி விரட்டினாலும் சரி, இந்தக் கள்ளச் சாராயப் பகுதிக்கு வந்து, போலீஸ் அழிக்கிறதோ இல்லையோ, இது அதைக் குடித்துவிட்டு, அழித்துவிட்டுப் போய்விடும். அப்படிப் பலயிடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதைப்போல உப்பு கிடைத்து விட்டால் யானைகள் திரும்பித் திரும்பி வரும். பொதுவாக, நாம் காட்டுக்குப் போகாமல் இருந்தால் காட்டு மிருகங்கள் நம்முடைய ஊருக்கு வராமல் இருக்கும். எது எப்படியிருந்தாலும் வாழைத் தோட்டங்கள் அழிக்கப்பட்டதற்கும், கரும்புத் தோட்டங்கள் நாசப்படுத்தப்பட்டதற்கும் உயிர்கள் இழப்புக்கும் அரசு அவர்களுக்கு வேண்டிய நஷ்ட ஈட்டைத் தரும்.

பிற்பகல் 1-05

**திரு. ஏ. ராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரிகால் சோழன் காலத்திலே கல்லணை கட்டப்பட்டது. ஆனால் இந்த மனுநீதி சோழன் காலத்தில் எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டத்தில் செண்பகத்தோப்பு அணை, குப்பநத்தம் அணை, மிருகண்ட நதி அணை ஆகியவற்றைக் கட்ட ஆணையிட்டார் கலைஞர் அவர்கள். அதுபோலத் தான் வேலூர் மாவட்டத்தில் மோர்தானாவுக்காகவும் இராஜாதோப்புக்காகவும் பத்திரப்பள்ளிக்காகவும் கலைஞர் அவர்கள் பெயரையும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பெயரையும் ஆண்டாண்டு காலமாக மக்கள் சொல்லிக்கொண்டே இருப்பார்கள்.

வேலூர் மாவட்டத்தில், போளூர் தொகுதியில் இன்னும் ஒரு குறை இருக்கிறது. அந்தக் குறையை நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே ஐம்பது ஆண்டுகாலமாக மக்கள் அமிர்தி அணை கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் அந்த அமிர்தி அணையையும் இந்த ஆட்சியில் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேலூர் மாவட்டத்தில் வேலூர் கணியம்பாடி ஒன்றியத்தில் நாகநதியின் குறுக்கே நஞ்சுகொண்டாபுரத்திற்கும், நாகநதிக்கும் இடையிலே ஒரு மேம்பாலமும், மேல்வலத்திற்கும், காட்டுகானூருக்கும் இடையிலே ஒரு மேம்பாலமும் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் எல்லாம் நினைக்கலாம். இந்தக் கோரிக்கைகளை இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் நிறைவேற்ற



இயலுமா? எப்படி இந்தக் கோரிக்கைகளை வைக்கிறார்கள் என்றுகூட நினைக்கக்கூடும். ஆனால் கலைஞர் அவர்கள், வருகின்ற ஜூன் மாதத்தில் நிதிநிலை அறிக்கை அளிக்கின்ற நேரத்திலே இந்தக் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஓய்வு அறியா சூரியன் கலைஞர் காலத்தில்தான் சரித்திர சாதனைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவை எல்லாம் சாதாரண நிகழ்வுகள் என்று நேற்றுப் பேசிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். அங்கே கங்கையையும் காவேரியையும் இணைக்கிறார்களா? மேற்கே செல்லுகின்ற நதிகளையெல்லாம் திருப்பி கிழக்கே விடுகிறார்களா என்று கேட்டார்கள். இவை எல்லாம் மத்திய அரசாங்கம் செய்கின்ற நிகழ்வாக இருந்தாலும், மாநில அரசுகள் முயற்சி செய்யவில்லையே என்று கேட்டார்கள். இருந்தாலும் நான் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரணமாக குடும்பங்களில் இருக்கின்ற பெரியவர்களும் குழந்தைகளும் செஸ் ஆடுவார்கள். ஆனால் விசுவநாதன் ஆனந்த் ஒருவர்தான் செஸ் ஆடி உலகச் சேம்பியன் எனப் பெயர் பெற்றார். அதற்கு உலகமே அவரைப் போற்றுகிறது. சாதாரணமாக எல்லோரும் பளு தூக்குகிறார்கள். ஆனால் மல்லீஸ்வரிதான் ஒரு வெண்கலப் பதக்கத்தைக் கொண்டு வந்து இந்தியாவிற்கே பெருமை சேர்த்தார்கள். அதுபோல இவற்றைப் பார்க்கும்போதும் கேட்கும்போதும் சாதாரண விஷயமாக இருக்கலாம். ஆனால் உண்மையிலே உலகம் போற்றுகிற அப்படிப்பட்ட சாதனைகளைத்தான் சரித்திர நாயகன், மனுநீதி சோழன் இன்று செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் பல மாநிலங்கள் இருந்தாலும், பல மாநிலங்களைவிட தமிழகத்தில்தான் தொழில் புரட்சியில் முதலிடம், நெல் உற்பத்தியிலே முதலிடம், கரும்பு உற்பத்தியிலே முதலிடம், பால் பெருக்குவதிலே முதலிடம், அதுவும் பால் பெருக்குவதிலேகூட வேலூர்-திருவண்ணாமலை ஒன்றியங்களில் திருவண்ணாமலை மாவட்டம் முதலிடம்; இவற்றை எல்லாம் நிறைவேற்றுகின்ற அரசு இந்த கலைஞர் அரசு. இவை எல்லாம் மிக உன்னதமான திட்டங்கள். இவற்றை சாதாரணமான விஷயங்கள் என்று நம்முடைய உறுப்பினர்கள் சொல்கிறார்களா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழகத்தில் இவற்றை, எதிரிலே இருக்கிற எதிர்கட்சி நண்பர்கள் எல்லாம் 'குணம் நாடி, குற்றம் நாடி, அவற்றுள்ளே மிகை நாட வேண்டும்'. உங்களுடைய உள்ளங்களைத் தொட்டுச் சொல்லுங்கள். உங்களுடைய உள்ளங்களிலே கை வைத்துச் சொல்லுங்கள், இவற்றில் எல்லாம் சரித்திர சாதனைகள்

உண்டா? இல்லையா? உங்களுடைய உதடுகள் வேண்டுமானால் பேசலாம், தேர்தல் நெருங்கி வருகிறது என்ற காரணத்தால், நிச்சயமாகச் சொல்கிறேன் (மணியடிக்கப்பெற்றது) இவை எல்லாம் சரித்திர சாதனைகள் ஆகும். கல்வியைப் பொறுத்தவரையில் நீங்கள் நினைத்துப் பாருங்கள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மட்டும்தான் பாராட்டினார்கள். மூப்பின் அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். நிச்சயமாக இந்த ஆட்சியில் பாரபட்சமின்றி அத்தனை ஆசிரியர் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கும் வேலை தரப்பட்டது.

போளூர் பகுதியில், பக்கத்திலே ஒரு கிராமம், மாம்பட்டு கிராமம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் குடும்பமே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான். அவர்கள் குடும்பத்திலே இருக்கிற ஒரு மாணவர், அவருக்கு ஆசிரியர் பணி கிடைத்துவிட்டவுடன் அவருடைய தாய், தந்தை அத்தனை பேரும் என்னிடத்திலே வந்து, "நிச்சயமாகச் சொல்கிறோம், நாங்கள் எல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான். இருந்தாலும் கலைஞருக்காக நாங்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான் வாக்களிப்போம்" என்ற வாக்குறுதி தந்தார்களே அது ஒன்றே போதும் எங்களுடைய சரித்திர சாதனைகளைப் போற்றுவதற்கு. இப்படிப் பல சாதனைகளை நாங்கள் சொல்லிக் கொண்டே செல்லலாம், நேரம் இல்லை. இருந்தாலும் ஒரு சில கருத்துகளைத் தெரிவித்து விடைபெறுவதற்கு முன்பு, கரும்புக்கும், நெல்லுக்கும் அதிக விலை வேண்டுமென விவசாயப் பெருங்குடி மக்கள் எதிர்பார்க்கிறார்கள். கலைஞர் ஆட்சியில்தான் முடியுமென்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள் எனக் கூறி, நன்றி கூறி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள்.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சற்று முன் வந்த செய்தி. மாண்புமிகு உறுப்பினர் யானைகளுடைய அட்டகாசத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். தீப்பந்தம் காட்டினாலும் போகவில்லை என்று சொல்லியிருக்கிறார். எனவே, யானைகள் வராமல் தடுப்பதற்கு வனத் துறையில் ஒரு Team of Officers அங்கே அனுப்பப்பட்டு யானைகளை முழுமையாக விரட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற செய்தியினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள். பேசுங்கள் (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், உட்காருங்கள். இதிலே என்ன இருக்கிறது? Is there any point of order? ஒன்றும் இல்லை. உட்காருங்கள்



***திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இடைக்கால பட்ஜெட் மீது பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததற்காக நான் மகிழ்ச்சியடைகின்றேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய உடல்நிலை சரியில்லாமல் இருந்தும்கூட, இங்கே வந்து அமர்ந்துகொண்டு இந்த பட்ஜெட் உரையை நிகழ்த்தியிருக்கிறார்கள். அவர் நல்ல முறையிலே உடல் நலத்தோடு இருக்க நான் ஆண்டவனை பிரார்த்தனை செய்து என்னுடைய வாழ்த்துக்களை முதலிலே அவருக்குக் கூறிக்கொள்கிறேன். காரணம், எங்களுடைய கட்சியிலேகூட, சிலபேர் இந்த பொன்னம்மா அக்காள் சொல்லுகின்ற வேலைகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன என்று நினைக்கிறார்கள். ஆனால், நான் 1957ஆம் ஆண்டில் typewriting படித்துக் கொண்டிருந்தேன், அப்போது என்னை எம்.எல்.ஏ.வாக போட்டார்கள். எப்படியோ உள்ளே வந்தேன். அன்றிலிருந்து அவரைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஒரு அரிஜன சமுதாயத்தைச் சார்ந்த பெண் நீண்ட காலமாக இந்தச் சட்டசபையில் இருக்கிறார் என்கின்ற ஒரே காரணத்தால் அவர்கள் நான் சொல்லக்கூடிய வேலைகள் அனைத்தையும் செய்து கொடுக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏனென்றால், எங்கேயும் இல்லாத அளவுக்கு என்னுடைய தொகுதிக்குக் கல்லூரியைக் கொடுத்திருக்கிறார்கள். சிறுமலை அருவி, சிறுமலை அருவி என்று சொல்லிக்கொண்டே இருந்தேன். மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் அங்கே வந்து, இப்படிப் பார்த்தார், அப்படிப் பார்த்தார், பார்த்த உடனேயே sanction ஆகிவிட்டது. எங்களுக்கு அந்த வேலை முடிந்துவிட்டது. இதுபோன்ற சூழ்நிலையில் இந்த வேலைகள் எல்லாம் நடந்திருப்பதற்காக நான் நன்றி செலுத்துகிறேன், பாராட்டுகின்றேன். ஆனால் அதேசமயத்தில் கட்சி ஒரு முடிவு எடுக்குமேயானால், அதை விட்டுக்கொடுக்க முடியாது. ஏனென்றால், அந்தக் கட்சியை வைத்துத்தான் நான் வருகிறேன். தனிப்பட்ட பொன்னம்மாள் வரவில்லை. அந்தக் கட்சி என்ன முடிவு எடுக்கிறதோ அந்த முடிவுக்கு நான் கட்டுப்பட்டவள். ஆகையினால், நீங்கள் செய்துகொடுக்கின்ற வேலைகளுக்கு நான் பாராட்டுத் தெரிவிப்பேன். அதை ஏற்றுக்கொள்வேன் என்பதை மட்டும் உங்களிடத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, விவசாயத்தைப் பொறுத்தவரையில் 8.5% பிழிதிறன் உள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் விலை கொடுக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். இப்போது கரும்பு

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [2001 ஜனவரி 31

பயிரிடுவதற்கு முடியவில்லை. கரும்பு பயிரிடுவதற்கு பாத்தி கட்டுவதற்கு மம்மட்டியைத் தொட்டு உள்ளே நுழைந்தாலே 100 ரூபாய் கொடுக்க வேண்டும். 8¼ மணிக்கு போனால் 2¼ மணிக்கு வெளியே வந்துவிடுகிறார்கள். 100 ரூபாய் கொடுப்பதற்கு விவசாயி எங்கே போவான்? இந்தச் சூழ்நிலையில் கரும்புக்கு ஏற்கெனவே அறிவித்த விலையான ஆயிரம் ரூபாயைக் கொடுத்தால்தான் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதுமாத்திரமல்ல, தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் உண்மையிலேயே பாராட்டக்கூடியது, வரவேற்கக்கூடியது. பல இடங்களில் விவசாயம் செய்ய முடியாமல் ஏழையெளிய மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏன் என்னால்கூட 10 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்ய முடியவில்லை, அது சும்மா இருக்கிறது. என்ன செய்வது என்றே தெரியவில்லை. தரிசு நிலங்களை அரசாங்கமே எடுத்து, அதைப் பண்படுத்தி, அதற்குத் தண்ணீர் வசதியை உண்டாக்கிக் கொடுத்து, மரங்களை உண்டாக்கிக் கொடுத்து, பிறகு அந்த மரங்களிலே விளையக்கூடிய காய், கனிகளை எல்லாம் விற்று அரசாங்கம் போட்ட செலவினை எடுத்துக்கொண்டு, அதற்குப் பின்னால் விவசாயிகளுக்கு அதைக் கொடுக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கினால்தான்...

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், புறம்போக்கு நிலங்களாக இருந்தாலும், அரசின் நிலமாக இருந்தாலும் அல்லது சொந்த நிலமாக இருந்தாலும், தரிசு நிலமாக இருந்தால் அதை எடுத்து உழுது, அந்த மண்ணில் என்ன பயிரிடலாம் என்று முடிவு செய்து, பயிர் செய்து மீண்டும் அந்த நில உடைமையாளருக்கே அதை ஒப்படைக்கிறோம். அரசாங்கம் எடுத்துக்கொள்வதில்லை. நில உடைமையாளர்களே அதை எடுத்து பராமரித்துக்கொள்ளக்கூடிய அந்தச் சூழ்நிலையைத்தான் நாங்கள் உருவாக்கியிருக்கிறோம்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. பக்குவப்படுத்தி மரங்களை உண்டாக்குங்கள். நிலம் இருந்து என்ன செய்வது? முடியவில்லையே (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்லுகிறேன். ஆகையினால் அதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிறகு, குடி தண்ணீரைப் பொறுத்தவரையில், எங்களுடைய பேரணையில் இருந்துதான் திண்டுக்கல்லுக்குத் தண்ணீர் போகிறது;



2001 ஜனவரி 31] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

மதுரைக்குத் தண்ணீர் போகிறது; இராமநாதபுரத்திற்குத் தண்ணீர் போகிறது; சிவகங்கைக்குத் தண்ணீர் போகிறது. ஆனால் நான் பார்த்துவிட்டேன் சில கொடுமைகளை. என்னுடைய தொகுதியில் இரண்டு யூனியன்களில் வரக்கூடிய காலங்களில் — முழுமையாக இப்போது தண்ணீர் பிரச்சினை இல்லை — ஏனென்றால் போர் போட்டுத் தண்ணீர் கொடுக்கிறோம். ஆனால் போர் போடும்போது உப்புத் தண்ணீர் வந்துவிடுகிறது. உப்புத் தண்ணீரில் பருப்பு வேகவில்லை, அரிசி வேகவில்லை என்று பெண்கள் எல்லாம் என்னிடம் சண்டைபிடிக்கிறார்கள். ஆக இந்த இரண்டு யூனியங்களுக்கும் பேரணைத் தண்ணீரைக் கொடுத்துவிட்டுதான் வெளியிலே செல்ல வேண்டுமென்று ஒரு கண்டிப்பை நான் உங்களிடத்திலே வைக்கின்றேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று தயவுசெய்து கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

பிறகு, இந்தக் கல்லூரிக்கு நீங்களெல்லாம் ஏதோ கொடுத்திருக்கிறீர்கள். இந்தக் கல்லூரிக்கு ஆங்காங்கே பணம் வசூல் பண்ணி, அதாவது furniture-ஐயே நான்தான் வாங்கிக் கொடுத்தேன். நீங்கள் ஒன்றுமே செலவு பண்ணவில்லை. கல்லூரிக்கு, இந்தக் கட்டடம் கட்டுவதற்குக் கூட, எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 30 லட்ச ரூபாய் கொடுப்பதாக அறிவித்தார். பின் அதை எடுத்துக் கொண்டார். பிறகு எதற்கோ கொடுத்து விட்டார். இப்போது நான்தான் 50 இலட்சம் கொடுத்திருக்கிறேன். அது ஒன்றும் போதவில்லை. டெல்லியிலே யாரையாவது பிடித்து கேட்கலாமா என்று, பிளானிங் கமிஷனுக்கு எழுதியிருக்கிறேன். எனவே, நீங்கள் கொஞ்சம் இரக்கப்பட வேண்டும். கல்லூரிக்கு நான் கொடுத்த, 50 இலட்ச ரூபாய் போதாது. மூன்று ஆண்டு நடந்துவிட்டது. பாக்கிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நம்முடைய முதல்வரிடத்திலே சொல்லி, இல்லையென்று சொல்லாமல்—இது கடைசி அசெம்பிளி இல்லையா; இந்த ஆண்டு; ஐந்தாண்டிலே; இல்லை என்று சொல்லாமல்—இந்தக் கல்லூரிக்குப் பணம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதுமாத்திரம் அல்லாமல்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அக்கா அவர்கள் தன்னுடைய உரையை

ஆரம்பிக்கும்போதே, சொன்னார்கள்; முதலமைச்சர் கேட்டதையெல்லாம் கொடுத்தார்கள் என்று. கல்லூரி கேட்கும்போதே அக்கா அவர்கள் சொன்னார்கள். நீங்கள் கல்லூரிக்கு அனுமதி மட்டும் கொடுத்துவிடுங்கள். என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியோடு சேர்த்து, எனக்கு வேண்டியவர்களிடத்திலேயிருந்து நிதியைத் திரட்டி கல்லூரிக்கான கட்டடங்களைக் கட்டி விடுகிறேன் என்று சொன்னார்கள். கல்லூரிக்கு அனுமதி கொடுத்ததற்குப் பிறகு மறுபடியும் அரசாங்கத்திடம் நிதி கேட்பது நியாயமா என்று அக்காதான் முடிவு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதாவது, முதலிலே கொஞ்சம் சுண்ணாம்பு கொடு என்பது; அப்புறம் சுண்ணாம்பிற்குக் கொஞ்சம் வெற்றிலை கொடு என்பது போல இருக்கிறது.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** நியாயமானதுதான். அடுத்து, பாம்பைப் பிடிக்கக்கூடாது என்று சட்டம் வந்திருக்கிறதே; கொடூரமான கொடுமை ஐயா அந்தச் சட்டம். தோட்டத்திற்கு எங்களுடைய ஆட்கள் வேலைக்குப் போனால், பாம்பு வருகிறது. இவ்வளவு நீளப் பாம்பு. என் வீட்டிற்குள்ளே வந்துவிட்டது. இரண்டு காம்பவுண்டு சுவர் இருக்கிறது. இது மாண்புமிகு அமைச்சர் திரு. பெரியசாமி அவர்களுக்குத் தெரியும். அந்த காம்பவுண்டு சுவரைத் தாண்டி எப்படி வந்தது என்று தெரியவில்லை. இந்த பாம்பைப் பிடித்து அடித்து, ஏதாவது செய்யவில்லை என்றால், பல பேரைக் கடித்து, செத்துவிடுவார்கள். ஆகையினாலே, தயவுசெய்து அந்தச் சட்டத்தை இரத்து செய்து, பாம்பைப் பிடிக்கலாம், அதைப் பிடித்து, அடித்துக் கொல்ல வேண்டும் என்கின்ற ஒரு நிலையை நீங்கள் உருவாக்கினால்தான் விவசாயிகள் கிராமத்திலே தங்களுடைய நிலங்களுக்குச் சென்று பயமில்லாமல் விவசாயம் செய்ய முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எதற்காக இப்படி சட்டம் போட்டீர்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையினாலே, அதை நீங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது எனக்கு வேலை என்றால், இரண்டே இரண்டு வேலைதான்; சொல்லிக்கொண்டே இருக்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இத்தனை வேலைகளையெல்லாம் நீங்கள் செய்து கொடுத்தீர்கள்; தம்பி, எல்லா வேலைகளையும் முடித்துக் கொடுத்து வீட்டீர்கள். ஆனால், ஒவ்வொரு ஆண்டும் வருசநாட்டுப் பகுதியிலே மழை



பெய்தாலும், கம்பம் பள்ளத்தாக்கில் மழை பெய்தாலும் நான் பாதிக்கப்படுகிறேன். என்னுடைய ஏரியா, குருவாலங் கோட்டையிலேயிருந்து, பேரணை வரைக்கும் இருக்கிறது. அந்தக் கரை உடைந்து, தண்ணீர் வெள்ளம் வந்து, சென்ற முறை 1998-லேகூட மாண்புமிகு அமைச்சர் திரு. பெரியசாமி அவர்களும், நானும் சென்றோம், தண்ணீர் மளமளவென்று அதிகமாக வந்துவிட்டது. எனக்கு நீச்சல் தெரியும். ஆனால் இப்போது வயது போய்விட்டதே. நான் நீந்த முடியுமா? வயது போனதாலே இனிமேல் எதிர்த்துப் போக முடியவில்லை. நீங்கள் தயவுசெய்து அதற்கு தடுப்புச் சுவர் கட்ட வேண்டும் அதற்கு எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை. அதை மட்டும் நீங்கள் எங்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தடுப்புச் சுவர் கட்டுவதோடு, பேரணையில் ஒரு பெரிய பாலம் வேண்டும். உங்களுக்கு வருமானம் நன்றாக வரும். அந்தப் பாலத்தைக் கட்டிவிட்டால் கன்னியாகுமரி போகக்கூடியவர்கள், கொடைக்கானலிலே இருந்து, கோயம்புத்தூரிலேயிருந்து, பெங்களூரிலேயிருந்து பம்பாய்க்குச் செல்லக்கூடியவர்கள் மதுரையைச் சுற்றிப் போகவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் இந்த வழியாகச் சென்றால் 50 கிலோமீட்டர் தூரம் குறையும். கன்னியாகுமரி போகின்றவர்களுக்கு, திருவனந்தபுரம் போகின்றவர்களுக்கெல்லாம் தூரம் குறையும். இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு 6 கோடி ரூபாய் செலவு ஆகும் என்று சொல்கிறார்கள். அந்த 6 கோடியைச் செலவு செய்து கட்டி அதற்கு சுங்கவரி போட்டு; விடுங்களேன். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். பல பாலங்களைக் கட்ட வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டு இருந்தோம். ரெங்கப்ப நாயக்கன்பட்டி, இராமைய நாயக்கன்பட்டி இரண்டையும் இணைக்கும் வகையில் வைகை அணையின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்று சொல்லிக் கொண்டேயிருந்தோம். அந்தப் பாலத்திற்கு ஒரு கோடியே, 36 இலட்ச ரூபாயை sanction செய்து அதற்கு அடிக்கல் நாட்டக்கூடிய அளவிற்கு இப்போது இருந்துகொண்டிருக்கிறது. அதற்காகவும் நான் நன்றி செலுத்துகிறேன். ஆகையினாலே, நம்முடைய பேரணையில் இருக்கின்ற அந்தப் பாலத்தையும் கட்டுவதற்கு, 6 கோடி ரூபாய் என்று பார்க்காமல், அதற்கு இந்த ஆண்டிலேயே நீங்கள் தேர்தலுக்கு முன்பாகவே அந்த 6 கோடி ரூபாய் sanction செய்து, அதற்கு அடிக்கல் நாட்ட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது, நிறையப் பெண்களை டீச்சர் வேலைக்கு போடுகிறோம். அதிலே அரிசன பெண்களுக்கு இத்தனை சதவிகிதம் இருக்க வேண்டுமென்று ஒரு நிலைமை இருக்கிறது. அந்தப் பெண்கள் சரியான அளவில் இல்லை. படித்து training முடித்தவர்கள் இல்லை; ஆகையினாலே, இதை நாம் சரிபண்ண வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்துக் கொள்கிறேன்; 10 நிமிடமாவது வேண்டாமா?

நிலக்கோட்டையிலே அரசு பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றை இந்த ஆண்டிலேயே கொடுக்க வேண்டும். பள்ளிக்கூடத்தை இனாமாகக் கொடுக்கிறேன். உங்களுக்கு இடத்தையும் நான் இனாமாகக் கொடுத்து விடுகிறேன். கட்டடத்தையும் இனாமாகக் கொடுக்கிறேன். நீங்கள் ஆசிரியர்களுக்குதான் சம்பளம் கொடுக்கப் போகிறீர்கள். ஆகையினாலே அங்கே ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றை இந்த நடப்பு ஆண்டிலேயே கொடுத்தால் அது நன்றாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து மருதா நதி, அதிலே ஏற்கெனவே பாலம் கட்டிவிட்டோம். ஆனால், அந்த வாடிப்பட்டி பகுதியிலே, அந்த மருதா நதியிலே ஒரு சிறிய பாலம் கட்ட வேண்டியிருக்கிறது. அதற்கு எம்.எல்.ஏ. நிதி கொடுக்கமுடியவில்லை, ஏனென்றால், இந்த வருடம் எம்.எல்.ஏ. நிதியைப் பள்ளிக்கூடத்திற்கு கொடுத்துவிட்டு, பிறகு நான் கல்லூரிக்கு மட்டும் 50 இலட்சத்தை கொடுத்திருக்கிறேன். நம்முடைய எம்.பி. அவர்கள் 30 இலட்சம் கொடுத்தார்கள், அதில் வேலை ஏன் நடக்கவில்லை என்று எனக்குத் தெரியவில்லை, அவர்கள் அதை withdraw பண்ணிவிட்டார்கள். ஆகையினாலே 50 இலட்சம் இருக்கிறது. எனவே, தயவுசெய்து அதையும் நீங்கள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் பற்றி ஏற்கெனவே சொல்லிவிட்டேன் என்று நினைக்கிறேன். பிறகு, ஆஞ்சநேயர் கோவில். அது மிகவும் சக்தி வாய்ந்த கோவில். நீங்கள் என்ன வேண்டினாலும் அந்த எம்பெருமான், ஆஞ்சநேயர் நிறைவேற்றிக் கொடுப்பார். ஆகையினாலே, (மணியடிக்கப் பெற்றது) அதைச் சுற்றுலாத் தலமாக மாற்றித் தர வேண்டுமென்று பலமுறை இங்கே நான் சொல்லியிருக்கின்றேன். அதையும் நீங்கள் செய்துத் தர



வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனை சுற்றுலாத்தலமாக்கி அங்கே நிறைய கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைச் சிறப்பாக செய்து கொடுக்க வேண்டுமென்று கூறி எதிர்க்கட்சிகள் என்று நீங்கள் நினைத்துக் கொள்ளக்கூடாது. நாங்கள் எதிர்க்கட்சிகளாக இருந்தாலும், அரசாங்கம் செய்து கொடுத்திருக்கிற வேலைக்கு நாங்கள் பாராட்டைத் தெரிவிக்கிறோம். நாங்கள் சொல்கிற வேலையை அரசாங்கம் நிறைவேற்றாமல் இருந்தால் நாங்கள் சும்மா இருக்க மாட்டோம் என்று கூறி உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது, தமிழ் பாட்டாளி மக்கள் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

பொதுவாக, நல்லாட்சி என்பதற்கு அடையாளம், ஆட்சியில் இருப்பவர்கள் நல்ல திட்டங்களை விதைக்க வேண்டும். மக்கள் அதனுடைய பயன்களை அறுவடை செய்ய வேண்டும். அதுதான் நல்லாட்சி. ஆனால், திட்டங்களையும் அதனுடைய பயன்களையும் ஆட்சியில் இருப்பவர்களே, அறுவடை செய்தால் அது ஒரு மோசமான ஆட்சி, கடந்த கால ஆட்சியில் திட்டங்களையும், அதனுடைய பயன்களையும் ஆட்சியிலே இருந்தவர்களே அறுவடை செய்த நிலைமை மாறி, இப்போது மக்கள் அந்த நல்ல திட்டங்களுடைய பலன்களை அறுவடை செய்யக்கூடிய ஒரு நல்லாட்சி நடைபெறுவதால் அதற்கு என்னுடைய நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த கால ஆட்சியிலே ஊழல் என்ற வினையை விதைத்தார்கள். அதனால்தான் இப்போது தண்டனை என்ற வினையை அறுவடை செய்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இப்போது இருக்கின்ற கலைஞர் அரசு நல்ல திட்டங்கள் என்கின்ற தினையை விதைக்கின்றது. எனவே, எதிர்காலத்திலே இந்தத் தினை என்கிற நல்ல ஆட்சி முளைத்து எழும் என்பதிலே யாருக்கும் எந்தவித ஐயமும் ஏற்படத் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [2001 ஜனவரி 31

இப்போது பார்க்கிறபோது நல்ல பல திட்டங்கள் நிறைவேற்றப் பெற்றிருக்கின்றன. ஒரு மனிதனுடைய அடிப்படைத் தேவை, உணவு, உடை, இருப்பிடம். இப்படி பார்க்கிறபோது, உணவிலே 1700 கோடி ரூபாய்க்கு மானியம்; மண்ணெண்ணெய் விலை லிட்டருக்கு, மத்திய அரசு விதித்த விலையைவிட 60 காசு குறைப்பு; ஏறத்தாழ 155 இலட்சம் இலவச வேட்டிச் சேலைகள்; கைத்தறி துணிக்கு ஆண்டு முழுவதும் 20 சதவிகிதம் தள்ளுபடி; இப்படி ஒரு ஆட்சியினுடைய மொத்த வருவாயிலே நான்கிலே ஒரு பங்கு மானியமாக, மக்களுடைய நல்வாழ்விற்காக, அளிக்கின்ற ஒரே ஆட்சி, இந்தியாவிலே தமிழகத்தைத் தவிர வேறு எந்த ஆட்சியும் இல்லை என்பதைக் குறை சொல்கிறவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்போது பார்த்தால் ஏறத்தாழ 2,91,551 கான்கிரீட் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. பணக்காரர்கள் மட்டுமே பார்த்து வந்த கான்கிரீட் சாலைகளை இப்போது பாமர மக்கள் வசிக்கிற கிராமப்புறங்களிலேயும் பார்க்க ஒரு வாய்ப்பு அளித்திருக்கிற நிலைமை; அதேபோல, நான்கு ஆண்டு காலத்திலே 9 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியுள்ள திட்டம். மொத்த நாட்டினுடைய உற்பத்தி வளர்ச்சி 7.04 சதவிகித வளர்ச்சி. இவையெல்லாம் வெறும் பிரம்மைகளாக பார்க்கப்படுகின்ற திட்டங்கள் அல்ல. உண்மையிலேயே இவை பிரம்மையை உருவாக்குகிற திட்டங்கள் என்று சொல்கிறவர்கள், ஒருவேளை மறந்திருக்கலாம்; பிரமாதமான திட்டங்கள் என்று சொல்வதற்கு பதிலாக பிரம்மையான திட்டம் என்று வாய் தவறி வந்திருக்கலாம். ஆனால், இந்த நேரத்திலே அப்படிச் சொல்கிறவர்களைப் பார்க்கிறபோது, எனக்கு ஒரு கதைதான் நினைவிற்கு வருகிறது. ஒரு மனிதனுடைய நிதானத்தைப் பற்றிய கதை. அவன் சொன்னான். எவ்வளவுதான் நான் தண்ணீ அடித்தாலும், நிதானம் தவற மாட்டேன் என்று சொல்லி ஆடிக்கொண்டே இடுப்பைத் தடவினான். என்னப்பா தடவுகிறாய் என்று கேட்டபோது, வத்திப்பெட்டி வைத்திருந்தேன், அதை எங்கே வைத்தேன் தெரியவில்லை என்று சொல்லி குழம்பியதைப் போல இப்போது பல பேர்கள் நிதானம் இழந்து, இந்த ஆட்சி எதையுமே செய்யவில்லை என்பதைப் போல ஒரு பிரம்மையை ஏற்படுத்த நினைக்கிறார்கள். அது தமிழக மக்களிடம் எடுபடாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்தநேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மத்திய மாநில நிதி உறவுகள் குறித்து, தமிழக முதல்வர் அவர்களே, மிகவும் வருத்தத்தோடு கடும் தண்டனை என்று கூறியிருக்கிறார்கள். என்ன



2001 ஜனவரி 31] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

காரணம். இப்போது நீங்கள் பார்த்தால் உற்பத்தி வரி, கம்பெனி வருமான வரி, தனி நபர் வருமான வரி, சுங்கவரி அனைத்துமே மத்தியிலே இருக்கிறது.

விற்பனை வரி மட்டும்தான் நம்மிடம் இருக்கிறது மாநிலத்திலே ஆனால், இதற்கெல்லாம் ஒரு தீர்வு வர வேண்டுமானால் மத்தியிலே கூட்டணி கட்சியினுடைய ஆட்சி இருந்தால் மட்டும் போதாது. உண்மையான கூட்டாட்சித் தத்துவம் வருகிறபோதுதான் இதற்கெல்லாம் தீர்வு காண முடியும். மத்தியிலே இராணுவம், நாணயம் அச்சிடுதல், நதி நீர், வெளியுறவு, தகவல் தொடர்பின் ஒருசில பகுதி ஆகியவற்றை மட்டும் வைத்துக்கொண்டு ஏனைய அதிகாரங்கள் அனைத்தும் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறபோதுதான் இவற்றிற்கெல்லாம் தீர்வுகாண முடியும். எனவே உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக் கை கொடுப்போம் என்று சொல்கிற வாசகத்திலேகூட நாம் இனிமேல் உரிமைக்குப் போராடுவோம், உறவுக்கு நிபந்தனை போடுவோம் என்று சொல்லக்கூடிய அளவிற்குக் கூட நாம் நடந்துகொள்ள வேண்டிய சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 1-25

தமிழகத்தினுடைய மிக முக்கியமான பிரச்சினை ஒன்றை நான் இந்த நேரத்திலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். முல்லைப் பெரியாறு பிரச்சினை. இந்த முல்லைப் பெரியாறு பிரச்சினை 999 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் போடப்பட்டது. 1980-லே இருந்து 1997 வரையிலே 25 கோடி ரூபாய் நாம் செலவிட்டு அந்த அணையைப் பத்திரப்படுத்தியிருக்கிறோம். அந்த அணை பாதுகாப்பாக இருக்கிறது என்று வல்லுநர் குழு சொல்லியும், அதைப் பொருட்படுத்தாமல் இப்போது கேரள அரசு பிடிவாதமாக அந்த முல்லைப் பெரியாறு அணையை 156 அடியாக உயர்த்துவதற்குத் தடையாக இருக்கின்றது. சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். கேரளத்திலே ஏறத்தாழ 2,500 டி.எம்.சி. மழை அங்கே பெய்கிறது. ஆனால், அதிலே ஒரு 500 டி.எம்.சி. தண்ணீர்கூட அவர்கள் பயன்படுத்த வாய்ப்பில்லை. அவ்வளவுதான் அவர்களாலே பயன்படுத்த முடிகிறது. ஆனால் இப்போது பார்த்தால், 2000 டி.எம்.சி. தண்ணீர் கடலிலே வீணாகக் கலக்கிறது. ஒரு 156 அடி முல்லைப் பெரியாறு அணையை உயர்த்துவதில் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது. தவறாகச் சில வாதங்களை கேரள மக்களிடம் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த முல்லைப் பெரியாறு அணை உடைந்து விட்டால் எங்களுக்குப் பாதிப்பு வரும்

என்று சொல்கிறார்கள். முல்லைப் பெரியாறு அணையினுடைய கொள்ளளவே 18 டி.எம்.சி. தண்ணீர்தான். ஆனால் அந்த கேரளாவிலே கட்டப்பட்டிருக்கிற இடுக்கி அணையினுடைய கொள்ளளவு ஏறத்தாழ 72 டி.எம்.சி. தண்ணீர். ஆக, வாதத்திற்காகச் சொல்கிறேன், அது உடைந்தால் கூட ஒன்றும் நஷ்டமோ, ஆபத்தோ வராத கேரளாவிற்கு, அவர்கள் எதற்காக இதனைத் தடுக்கிறார்கள்? ஒரு அரசியல் காரணத்திற்காகத் தடுக்கிறார்களா என நான் இந்தநேரத்தில் ஒரு கேள்வியாகக் கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்று. இந்த அணை எல்லாம் ஒரு காலத்திலே நம்மோடு இருக்க வேண்டிய பகுதி. 1954-ல் குன்ஸ்ரு தலைமையிலே அமைக்கப்பட்ட மொழி வழி மாநில சீரமைப்புக் குழுவிலே கேரளத்தை சேர்ந்த கே.எம். பணிக்கர் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் மிகத் தந்திரமாக என்ன செய்தார்கள் என்றால், தமிழகத்தினுடைய பகுதிகளான 80 சதவீதம் தமிழர்கள் வசிக்கக்கூடிய பகுதிகளான தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றின் கரை வட்டம், சித்தூர் வட்டம், செங்கோட்டை வட்டத்தினுடைய பாதியாக இருக்கிற தென்மணல் ஆகிய இந்த 4,5 வட்டங்களையும் கேரளத்தோடு சேர்த்து விட்டார்கள். அப்படி விதிமுறைகளுக்கு மாறாகச் சேர்த்துவிட்டு, இப்போது அடம் பிடிக்கிறாகள், தமிழகத்திற்குரிய பங்குகளைத் தருவதற்கு. அவர்கள் மறுத்தால் நாம் தமிழகத்தோடு அந்தப் பகுதிகளைச் சேர்க்கப் போராட வேண்டும். 300 டி.எம்.சி. தண்ணீர் தந்தாலே தென் மாவட்டங்கள் வளம் கொழிக்கும். கேரளாவிற்கு அரிசி, மின்சாரம் எல்லாம் நாம் தாராளமாகத் தருகின்ற வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தினாலே இந்தப் பிரச்சினையிலே அரசு விழிப்பாக இருந்து, தமிழகத்தினுடைய நலனை மீட்டெடுத்துத் தர வேண்டும். முல்லைப் பெரியாறு அணையை 156 அடியாக உயர்த்துவதற்கு மத்திய அரசின் மூலமாகவோ அல்லது மற்ற வழிகளின் மூலமாகவோ ஆவன செய்ய வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கை கடற்படையானது தமிழக மீனவர்கள் வடமலை, ஜெயந்தன், ஆகிய இருவரைச் சுட்டும், 3 மீனவர்களைக் காயப்படுத்தியும் இருக்கிறது. இது தொடர் கதையாக இருக்கிறது. இதை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு மட்டும் நிற்காமல் மத்திய அரசின் மூலமாக இலங்கை அரசுக்கு ஒரு நெருக்கடியைத் தர வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் இப்போது நஷ்ட ஈடு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த உயிர் இழப்பிற்கும் உடைமை இழப்பிற்கும் இலங்கை அரசுக்கு ஒரு சர்வதேச நீதிமன்றத்தின் மூலமாகவோ அல்லது நம்முடைய மத்திய அரசின் மூலமாகவோ ஒரு நெருக்கடியைக் கொடுத்து, அந்த இழப்பீட்டை இலங்கை





அரசு ஏற்கின்ற வகையிலே ஒரு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் தாருங்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வருடைய கவனத்திற்கு பலமுறை நான் கொடுத்த சிலவற்றை மட்டும் சொல்லி அமைகிறேன். இப்போது கருங்கல் தொழிலானது நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏறத்தாழ 1 கோடி தொழிலாளர்களை உள்ளடக்கிய ஒரு தொழில். இப்போது அது நலிவடைகிறமாதிரி இருக்கிறது. 5 ஆண்டுகாலக் குத்தகை 10 ஆண்டுகாலக் குத்தகை என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், அதிகாரிகள் என்ன ஆணை போடுகிறார்கள்? இந்த 5 ஆண்டு குத்தகைக்காலம் என்பது வருங்காலத்திலே வருகிறவர்களுக்குத்தான் பொருந்துமே தவிர ஏற்கெனவே தொழில் செய்பவர்களுக்குப் பொருந்தாது என்று ஒரு நெருக்கடியைத் தருகிறார்கள். அது எப்படிச் சரியாக இருக்கும்? பிற மாநிலங்களில் நீங்கள் பார்க்கிறபோது 30 ஆண்டுகாலக் குத்தகை, 20 ஆண்டு காலப் புதுப்பித்தல் முறையெல்லாம் இருக்கிறது. ஆனால், தமிழகத்திலே மட்டும் ஏன் இப்படி 10 ஆண்டோடு நிறுத்த வேண்டும் என்பதை அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டு, அந்தக் குத்தகைக் காலத்தை நீட்டித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் முத்தமிழ் அறிஞராக இருந்து, ஐந்தமிழ் அறிஞராகப் பரிணமித்து இருக்கிறார்கள். எனவே தமிழகத்தினுடைய நலனுக்கு எது சரியாக இருக்கும் என்றால் ஐந்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களே, ஐந்தாவது முறையும் தமிழகத்தினுடைய முதலமைச்சராக வருவதுதான் சாலப் பொருத்தமாக இருக்கும் என்று நான் மட்டுமல்ல மக்களும் இப்போது நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயம் நிறைவேற்றுவார்கள் என்று கருதுகிறேன். இந்த நேரத்திலே 'என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம்' என்று சொன்ன வடலூர் வள்ளலாருக்கு தமிழக முதல்வர் அவர்கள் கோட்டம் அமைக்கப்படும் என்று ஒருமுறை சொன்னார்கள். அது ஏனோ விடுபட்டிருக்கிறது. அமைக்கின்ற கோட்டங்களோடு, மணி மண்டபங்களோடு சேர்த்து வடலூர் வள்ளலாருக்கும் கோட்டம் அமைக்க

வேண்டும் என்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். வடலூர் பெருவழியில் வள்ளலார் கண்ட சுத்த சமரச சன்மார்க்க சங்கத்திற்கு இந்து அறநிலையத் துறையிலிருந்து தன்னாட்சி உரிமை வழங்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அதையும் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

24-1-2000லே வெளியிடப்பட்ட கல்வித் துறையினுடைய ஆணையிலே—(மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம் கொடுங்கள். கோரிக்கையைச் சொல்லி முடித்து விடுகிறேன்—பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை நிலவுகிறது. ஏறத்தாழ எழுத்துத் தேர்வுக்கு 150-க்கு 40 மதிப்பெண்கள் கட்டாயம் என்றும், செய்முறைத் தேர்வுக்கு 50-க்கு 30 மதிப்பெண்கள் கட்டாயம் என்றும் சொல்லப்படுகிறது. வெளிப்பார்வைக்கு மாணவர்கள் தேர்ச்சி அடைவதற்கு இது பயன்படுவது போலத் தோன்றினாலும் உண்மையிலேயே அந்த மாணவர்கள் தோல்வி அடைவதற்கு பல வாய்ப்புகளை இது ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது. எனவே தயவுசெய்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த ஆணையை -- ஏனென்றால் தனியார் பள்ளிகளில் அல்லது ட்யூஷனுக்கு வராத பிள்ளைகளை பழி வாங்கும் ஆசிரியர்கள் இப்படிப்பட்டவர்களாலே இந்த மாணவர்களுடைய எதிர்காலங்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுடைய எதிர்காலங்கள் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தினாலே தயவுசெய்து இந்த ஆணையை--இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, அந்த ஆணை பல அடிப்படையான நியாயங்கள் நிலை பெற வேண்டும் என்பதற்காகத்தான் வெளியிடப்பட்டது. இருந்தாலும் அதனுடைய உண்மைகளைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் பல பேர் இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு ஏன் வீண் சந்தேகம் என்பதற்காக அந்த ஆணை கைவிடப்பட்டுவிட்டது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இன்னொரு வேண்டுகோள். தமிழ்நாடு கல்வித் துறையிலே அலுவலகப் பணியாளர் சங்கத்தினுடைய மாநிலத் தலைவராக இருந்தவர் மீது பள்ளிக் கல்வி இயக்குநரகம் நடவடிக்கை எடுத்து இருக்கிறது. அருள்கூர்ந்து 15 மாதமாகச் சம்பளம் இல்லாமல் மிகவும் துயரப்படுகிறார்;



துன்பப்படுகிறார். அவருடைய பணி நீக்க ஆணையை இரத்து செய்து, அவருக்கு ஊதியம் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு——

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) நேரம் இல்லை. இன்னும் 3 பேர் பேச வேண்டும். திரு. தீரன் உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாமன்றத்திலே 5 ஆம் ஆண்டு நிறைவு செய்யக்கூடிய இந்தக் கூட்டத் தொடரிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதார நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். தொடர்ந்து பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இப்படி பாராட்டுகின்ற நேரத்திலே இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி விரிவாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் நிறைய சொல்லக்கூடிய கருத்துக்கள் இருந்தாலும் கூட காலத்தினுடைய அருமை கருதி சுருக்கமாகச் சொல்ல விழைகிறேன். ஒட்டுமொத்தமாக நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்ததிலே இதற்காக மீண்டும் ஒரு முறை நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தந்தை பெரியார் வழியிலே ஆட்சி செய்யக்கூடியவர்கள். இப்படி பெரியார் வழியிலே ஆட்சி செய்யக்கூடிய கலைஞர் அவர்கள் சமூக நீதிப் பிரச்சினையிலே, இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையிலே இந்தியாவிலேயே முதலாவது மாநிலமாக தமிழகத்தை விளங்கச் செய்ய வேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தணியாத ஆசை. அந்த வகையிலே இந்த இட ஒதுக்கீடு நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்தாலும்கூட சில குளறுபடிகள் இருக்கின்றன, கோளாறுகள் இருக்கின்றன என்பதை நான் இங்கே பெரிதும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம்கூட அதுகுறித்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது ஆதிதிராவிடர் மக்களுக்கு இருக்கக்கூடிய அரசு ஆணை எண் 33, எண் 44; இந்த இரண்டுக்கும் இருக்கக்கூடிய பிரச்சினைகளிலே நம்முடைய அரசு தனிக் கவனம் செலுத்தி, அந்த மக்களுக்கு நல்ல

[திரு. ஜி.கே. மணி] [2001 ஜனவரி 31

வழிகாட்டக்கூடிய வகையிலே ஒரு அரசு ஆணை வழங்க வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே இன்று மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டிலே, கல்வியிலே, வேலை வாய்ப்பிலே இட ஒதுக்கீடு இருந்தாலும்கூட, பதவி உயர்விலே இட ஒதுக்கீடு இல்லாமல் இருக்கிறது. அதை வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

இப்போதுகூட, இந்த நிதிநிலை அறிக்கையிலே ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலனுக்காக 626 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அடித்தட்டு மக்களுடைய முன்னேற்றத்திற்காக இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்திலே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினருடைய நலனுக்காக 175 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலே ஏறக்குறைய 70-க்கும் மேற்பட்ட சதவீதத்தைக் கொண்ட மக்கள் தொகையாக அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்காக ரூபாய் 175 கோடி ஒதுக்கீடு என்பது பற்றாக்குறையாக இருக்கும். அது நிர்வாகச் செலவுக்குத்தான் போதுமானதாக இருக்குமே தவிர, முன்னேற்றத்திற்கான திட்டமாக இருக்காது என்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கல்விக்காக 4949 கோடி ரூபாயிலேயிருந்து இந்த ஆண்டு 5472 கோடி ரூபாயாக உயர்த்தி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதை நான் பெரிதும் வரவேற்கிறேன். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குக் கல்வி அடிப்படை என்ற காரணத்தினாலே இன்னும் கூடுதலாக கல்வி வளர்ச்சிக்கு நிதியொதுக்கம் செய்து இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அனைவருக்கும் வேறுபாடில்லாத ஒரே கட்டாயக் கல்வியை, தரமான கல்வியைக் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இட ஒதுக்கீட்டிலேகூட பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று இட ஒதுக்கீடு இருந்தாலும் கூட அது ஒட்டுமொத்தமாக இருக்கிறது. ஆந்திரா மாநிலத்திலே, கேரளா மாநிலத்திலே எல்லாம் தொகுப்பு வாரியான இட ஒதுக்கீட்டு



2001 ஜனவரி 31] [திரு. ஜி.கே. மணி]

முறை 'Compartmental Reservation' என்று சொல்லக்கூடிய அந்த இட ஒதுக்கீட்டு முறை இருக்கின்றது. அதைப்போல இங்கேயும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உண்டான அந்த 30 சதவீத இட ஒதுக்கீட்டையும், அதைப்போலவே 108 ஜாதிகளுக்கு இருக்கக்கூடிய மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டையும், தொகுப்பு அடிப்படையிலே நிர்ணயிப்பதுடன் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று இருக்கக்கூடிய அந்த 18 சதவீதத்தையும் எல்லோரும் கேட்பதுபோல அதை 4 தொகுப்புகளாக, ஆந்திராவிலே இருப்பதைப்போலப் பிரித்து எல்லா வகையிலேயும் அனைத்துத் தரப்பினருக்கும் சமூக நீதி என்று சொல்லக்கூடிய வகையிலே இங்கே 'Compartmental Reservation' கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த இட ஒதுக்கீடு என்பது சமூக நீதிக்கு ஒரு அங்கமே தவிர, எல்லா வகையிலேயும் சமூக நீதி வேண்டுமென்பதுதான் தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கை. அந்த வகையிலே நாடு வேகமாக நாகரீக ரீதியாக, பொருளாதார ரீதியாக, அறிவியல், தொழில் நுட்ப ரீதியாக முன்னேறிக்கொண்டிருந்தாலும்கூட, இங்கே எல்லா வகையிலேயும் சமூக நீதி வேண்டுமென்பதைத்தான் நாங்கள் வலியுறுத்துகிறோம். அது என்ன என்று சொன்னால் ஒரு மனிதனுக்குத் தேவையானது உணவு, உடை, இருப்பிடம், கல்வி, பொருளாதாரம், சமூக அந்தஸ்து என்று இந்த எல்லா நிலைகளிலேயும் சமூக நீதி வேண்டும். ஆகவே, உணவுப் பழக்கங்களிலே வேறுபாடு, உடையிலே வேறுபாடு, பொருளாதார ரீதியாக வேறுபாடு, கல்வியிலே வேறுபாடு, சமூக அந்தஸ்திலே வேறுபாடு, குடியிருப்பு வசதியிலே வேறுபாடுகள் என்று இருந்தாலும்கூட இவற்றையெல்லாம் மாற்றியமைக்கக்கூடிய ஒரு நல்ல சமூக அந்தஸ்தைக் கொண்டு வரக்கூடிய சமூக நீதியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1996 ஆம் ஆண்டிலே பொறுப்பேற்ற நேரத்திலே சொன்னார்கள்; இதற்கு முந்தைய ஆட்சிக்காலத்திலே தொடர்ந்து எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தவர்கள் மீதெல்லாம் வழக்குகள் போடப்பட்டன என்றும் அவை திரும்பப் பெறப்படும் என்றும் சொன்னார்கள். ஆனால் பாட்டாளி மக்கள் கட்சியினர் மீது போடப்பட்ட வழக்குகள் இன்னும் திரும்பப் பெறப்படவில்லை. நான் இதுகுறித்து இந்த மாமன்றத்திலே பலமுறை

வலியுறுத்திக் கூறி வந்திருக்கிறேன். ஒரு சில வழக்குகள் திரும்பப் பெறப்பட்டனவே தவிர, இன்னும் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் நீதிமன்றத்திற்கு அலைந்து திரிகின்றார்கள். எனவே அந்த வழக்குகளை எல்லாம் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாட்டாளி மக்கள் கட்சியினர் சமூக நீதிக்காகப் பல்வேறு போராட்டங்கள் செய்த காலத்திலேகூட, இல்லாத அளவுக்கு இப்போது கடந்த சில மாதங்களிலே மிகுந்த பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் 15 வயது, 17 வயது நிரம்பாத சிறுவர்கள் மீதெல்லாம் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்த வழக்குகளையெல்லாம் திரும்பப்பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் நிறையப் பேச வேண்டி இருக்கின்றன. ஆகவே, இப்போது நம்முடைய அரசு விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். இந்த நாட்டிலே எல்லா நிலையிலும் எல்லா தரப்பு மக்களையும் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய நேரத்திலே, விவசாயிகள் மிகவும் வேதனைப்படுகிறார்கள்; ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது விலைவாசி ஏற்றத்திற்கேற்ப, நாட்டினுடைய முன்னேற்றத்திற்கேற்ப எல்லா தரப்பு மக்களையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்திலே விவசாயிகளின் முன்னேற்றம் தடையாக இருக்கிறது. ஆகவே, அவர்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே, மின் இணைப்புத் தர வேண்டுமென்று விவசாயிகள் விண்ணப்பித்தாலே இணைப்பு வழங்கப்பட வேண்டும். Seniority-யெல்லாம் தளர்த்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போதுகூட வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலேயிருந்து பானாபுரம் பிர்கா பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகளுடைய கரும்புகள் திருவண்ணாமலையிலே இருக்கக்கூடிய எஸ்.சி.எஸ். என்ற தனியார் ஆலைக்கு மாற்றப்பட்டதாக அந்த விவசாயிகள் எல்லாம் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதை எல்லாம் மீண்டும் மாற்றி வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கே கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 1-40

அதைப்போலவே, மேட்டூர் அனல் மின் நிலையத்திலே பெண் தொழிலாளர்கள் நிலக்கரி தரம் பிரிக்கும்போது பாதிக்கப்பட்டார்கள். அங்கு 6 பெண்கள் உயிரிழந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணத் தொகையாக நம்முடைய Contractor-இடமிருந்து வசூல் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அனல் மின் நிலையம் அரசுக்குச் சொந்தமானது என்ற காரணத்தினாலே அரசு அவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்றும், அவர்கள் குடும்பத்திற்கு வேலை வாய்ப்பை அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் நான் முடிக்கவேயில்லை, நிறைய இருக்கிறது.

அதைப்போல, இந்த நாட்டிலே சத்துணவுப் பணியாளர்கள் பகுதி நேரப் பணியாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். வயது வரம்பு கடந்து கொண்டிருக்கிற நேரத்திலே முழு நேர நிரந்தரப் பணியாளர்களாக அவர்களை மாற்ற வேண்டும். இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களின் பாதிப்பை நீக்க வேண்டும்.

காவல் துறையிலே 8 மணி நேரம் பணியாற்றக்கூடிய அளவுக்கும், அவர்களுக்கு மற்றத் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு இணையான சம்பளமும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலேகூட ஆண் காவலர்கள் கிரேடு-1 என்ற நிலையிலே உள்ளவர்கள் காவல் உதவி ஆய்வாளர் பணி முடித்தவர்கள் நீண்டகாலம் பதவி உயர்வு பெற முடியாமல் இருக்கிறார்கள். பெண் காவலர்கள்கூட கிரேடு-1-லிருந்து Head Constable-ஆகத்தான் ஆகியிருக்கிறார்கள். பெண் காவலர்களுக்கும் உதவி ஆய்வாளர் பணி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் தொகுதிப் பிரச்சினையை மட்டும் விரைவில் சொல்லி முடித்துவிடுகிறேன்.

என்னுடைய தொகுதி மாத்திரமல்லாமல் தருமபுரி மாவட்டம் முழுவதும் பயன்படக்கூடிய ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, குறைந்த செலவிலே அதிக மின் உற்பத்தியைப் பெறக்கூடிய ஒகேனக்கல் நீர் மின் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். ஒகேனக்கல் ஒரு சுற்றுலா மையம். அது அடிப்படை வசதி இல்லாத மையமாக இருக்கிறது. அதையும் மேம்படுத்துவதற்காக நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெண்ணாகரம் தொகுதியிலே ஒரு தொழிற்சாலைகூட இல்லை. எனவே தொழிற்சாலை கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, குடிநீர் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரிடத்திலே பட்டியல் கொடுத்திருக்கிறேன். அவற்றையெல்லாம் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே சாலைகள், மிகவும் குண்டும் · குழியுமாக இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) பரந்த பகுதி, மலைப் பகுதிகள், ஓடைகள் நிறைந்த பகுதி அதற்கு அதிக நிதியொதுக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பொதுப் பணித் துறையிலே 5 ஆண்டு காலமாக வலியுறுத்திக் கொண்டிருக்கிற பாப்பாரப்பட்டியைச் சுற்றியுள்ள 16 ஏரிகளுக்கு, பஞ்சப்பள்ளி வாய்க்காலை நீட்டித்துத் தர வேண்டும் என்று மீண்டும் இங்கே வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு, பெண்ணாகரம் அரசு மருத்துவமனைக்கு 4 மருத்துவர்கள் முதலாக 16 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றையும் நிரப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. ஜி.கே. மணி:** ஒரே ஒரு கருத்து மட்டும்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 2 பேர் பேச வேண்டும். 2-00 மணிக்கு அவையை முடிக்க வேண்டும். திரு. குத்தாலம் பி. கல்யாணம். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்தினுடைய அளவுகோல் பெண்கள் என்று சொல்வார்கள். இப்போது பெண்களுக்கு அதிக முன்னுரிமை கொடுக்கிற இந்தநேரத்திலே மகளிர் மன்றங்கள் தமிழ்நாட்டிலேயே அதிகமாக இருக்கக்கூடிய தொகுதி என்னுடைய பெண்ணாகரம் தொகுதியாகும். அங்கே மைராடா பிளான், ஸ்பீடு நிறுவனம், ஐ.ஆர்.டி.டி. நிறுவனம், குப்பாகவுண்டர் அவ்வையார் மகளிர் மன்றம் போன்ற பல்வேறு தொண்டு நிறுவனங்கள் பணிகளைச் செய்து வருகின்றன. பெண்கள் எல்லாம் போய் அதிலே உறுப்பினர்களாகச் சேர்ந்து விழிப்புணர்வு பெற்றிருக்கிற காரணத்தினாலே அந்தப் பெண்கள் எல்லாம் சுய தொழில் செய்வதற்குக் கூடுதலாக அவர்களுக்கு கடன் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு, தொகுதி......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.





***திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் இப்பேரவையில் வைக்கப்பட்டுள்ள இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை ஒட்டி என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

Putting a century into a capsule என்பார்கள். அதைப்போல 4½ ஆண்டு கால சாதனையினுடைய தொகுப்பாக பணிகளின் சுருக்கமாக இந்த நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே வழங்கி இருக்கிறார்கள். நான் என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு முன்னால் நாகை மாவட்டத்தில் குறிப்பாக என்னுடைய குத்தாலம் தொகுதியில் நிறைவேற வேண்டிய ஒரு சில திட்டங்களை மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இதயத்தில் ஒரு நீங்காத நிலையான இடத்தைப் பிடித்த ஒரு இடம் “பூம்புகார்”. அந்த பூம்புகாரில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமையக்கூடிய அளவிற்கு எல்லா வகையான ஆய்வுகளும் முடிக்கப்பட்டு அந்தத் திட்டம் இப்போது நிறைவேற்றப்படக்கூடிய நிலையிலே இருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு நம்முடைய மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு கடிதம் மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டிய நிலையிலே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை விரைந்து அனுப்பி, பூம்புகாரிலே ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைய இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

அதேபோல கொள்ளிடம் பகுதியிலே இருக்கிற பழையாறு துறைமுகம் விஸ்தரிப்புப் பணியிலேயும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய குத்தாலம் தொகுதி, குடவாசலில்—மஞ்சக்குடி தனியார் அறக்கட்டளையின் சார்பில் விண்ணப்பித்திருக்கிற அந்தக் கல்லூரிக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். குத்தாலத்தைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு தனி வருவாய் வட்டத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குத்தாலம் காவலர் குடியிருப்பையும், பாலையூர் காவல் நிலையக் கட்டடத்தையும் வரும் ஆண்டில் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குடவாசலிலே காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் கோட்டம் அமைக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதை துறை மூலமாக

[திரு. குத்தாலம் பி. கல்யாணம்] [2001 ஜனவரி 31

அறிந்திருக்கிறோம். அதையும் விரைந்து ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே வருகிற ஒரு நீண்ட சாலையானது பூந்தோட்டம்-நாச்சியார்கோவில் சாலை. அது நெடுஞ்சாலைத் துறை மூலமாக 3.88 கோடி ரூபாய்ச் செலவில் மேம்பாடு செய்யப்பட இருக்கிறது. ஒரு சில இடங்களில் பொதுப் பணித் துறை மூலமாக ஒரு அரிமானத் தடுப்புச் சுவர் கட்ட வேண்டிய அத்தியாவசியமான நிலை இருக்கிறது. இது குறித்து, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் விண்ணப்பித்திருக்கிறேன். அதையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்வரும் மே ஜூன் மாதங்களில் அமுது கொண்டுவந்து தமிழ்ச் சமுதாயத்திற்கு வயிறார படைக்க மாண்புமிகு முதல்வர் அவர்களால் உருவாக்கப்பட்டுள்ள ஒரு அட்சயப்பாத்திரம்தான் இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகத்தின் அனைத்துத் தரப்பினரையும் ஈர்க்கக்கூடிய அளவிற்கு, ஏன் இன்னும்கூட சொல்ல வேண்டுமானால் இந்த மாநிலத்தினுடைய நிதித் துறைச் செயலாளர் அவர்கள் சொன்னதைப் போல, மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தின் நிதி நிர்வாகம் சிறப்பாக உள்ளது என்று பாராட்டக்கூடிய அளவிற்கு இருக்கிற ஒரு மாநிலம்; இந்தியாவில் பொருளாதார வளர்ச்சியில் உயர்ந்துள்ள மூன்று மாநிலங்களில் ஒன்று என்ற பெருமையைப் பெற்றிருக்கிற மாநிலம்; மேலும், தமிழகத்தின் வளம் குவியும் வகையில் தமிழக மக்கள் நல்வாழ்வு பெறும் குறிக்கோளுடன் போடப்பட்டுள்ள ஒரு முன்னேற்றமான இடைக்கால நிதிநிலை அறிக்கைதான் இந்த அறிக்கை.

வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்றிக்கொண்டு, வரியையும் உயர்த்தாமல், கட்டணங்களையும் அதிகரிக்காமல், அலுவலர்களுக்குச் சலுகைகளை, ஊதியங்களை அதிகமாக்கி, திறமையாக வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆட்சியை நடத்தி வருகிற மாண்புமிகு முதல்வர் அவர்களால் படைக்கப்பட்டிருக்கிற இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையை நான் உளமாற வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசியபோது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார் அவர்கள் சொன்னார்கள் மத்திய அரசின் பணம் வீணாகிக் கொண்டிருக்கிறது என்று. இதிலே ஒரு கருத்தை நான் குறிப்பிட விரும்புவது, இந்தியாவிலேயே மாநில அரசின் திட்டங்களுக்கு மத்திய



2001 ஜனவரி 31] [திரு. குத்தாலம் பி. கல்யாணம்]

அரசு வழங்கும் நிதியை வேறு வகையில் செலவிடாமல் உரிய திட்டங்களுக்கு முழுமையாகச் செலவிடும் மாநிலம் தமிழ்நாடுதான் என்பது ஒரு வரலாற்று உண்மையாகும். இது எல்லாம் தெரியாமல் இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கை ஒரு விட்டில் பூச்சி என்று கூட சிலர் சொல்கிறார்கள். அந்தப் பகட்டுப் பட்டாம்பூச்சிகளுக்கு இவை தெரிவதற்கு நியாயம் இல்லை.

கல்வி, தொழில் வளர்ச்சி, வேளாண்மை, மக்கள் நல்வாழ்வு, ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர் நலன், நெசவாளர் நலன், தொழிலாளர் நலன் என பல்வேறு தரப்பினருக்கான நலத் திட்டங்களை உருவாக்கியிருக்கிற அரசு இந்த அரசு. நான் நேரத்தின் அருமை கருதி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசிலே எப்படித் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன, ஒவ்வொரு திட்டத்திற்கும் என்ன உணர்வு இருக்கிறது என்பதைப்பற்றி நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், எங்களுடைய இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆற்றல் மிக்க பேச்சாளர் மரியாதைக்குரிய வெற்றிகொண்டான் அவர்கள் ஒரு கூட்டத்திலே கலந்துகொள்கிறபோது, அவருக்கு முன்னாலே நான் பேசுகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தபோது என்னுடைய தொகுதியிலே அதிகமான பாலங்கள் கட்ட வேண்டியிருக்கின்றன என்று நான் சொன்னேன். ஒரு பாலத்திற்கு அரசாங்கத்தினுடைய அனுமதி வாங்கி, கட்டத் தொடங்கினால் இன்னொரு பாலத்தில் பழுது ஏற்பட்டு விடுகிறது என்று நான் ஆதங்கத்தோடு பேசினேன். பின்னாலே நிறைவாகப் பேசுகிறபொழுது அண்ணன் வெற்றிகொண்டான் சொன்னார், "சட்டமன்ற உறுப்பினருக்கு ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆட்சியில் பாலங்கள்கூட உணர்வோடு இருக்கின்றன; இப்பொழுது இடிந்தால்தான் கட்டுவார்கள் என்று இடிகிறதே தவிர வேறல்ல. அந்த உணர்வு எல்லோருக்கும் இருக்கிறது" என்று அவருக்கே உரிய பாணியிலே சொன்னார்கள். இதுதான் இந்த ஆட்சியில் இருக்கிற எதார்த்தமான நிலை.

பிற்பகல் 1-50

இன்னும்கூட சமத்துவபுரத்தைப் பொறுத்த அளவில் நான் ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்திய நாட்டினுடைய உச்ச நீதிமன்ற நீதிபதிகளிலே ஒருவராக இருக்கிற மாண்புமிகு மகாஜன் அவர்கள் ஓராண்டுக் காலத்திற்கு முன்பு திருச்சி மணப்பாறை காவல்காரன்பட்டி சமத்துவபுரக் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட வந்தபோது அவர்கள் குறிப்பிட்ட வாசகத்தை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். "இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சமத்துவபுரத் திட்டம் இந்தியாவுக்கே மும்மாதிரியாக விளங்குகிறது. இதுபோன்ற சமத்துவபுரத் திட்டத்தை

[திரு. குத்தாலம் பி. கல்யாணம்] [2001 ஜனவரி 31

டெல்லியிலும் உருவாக்கித் தந்தால் மிக நன்றாக இருக்கும்" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஒரு வால்டேராக இருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள். ஒருமுறை வால்டேர் சொன்னார். "நீங்கள் சொல்லுகிற கருத்தை நூற்றுக்கு நூறு நான் ஏற்றுக்கொள்கிறேனோ; இல்லையோ, ஆனால் சொல்லுவதற்காக உங்களுக்கு இருக்கிற அந்த உரிமையை என்னுடைய உயிரைக் கொடுத்தும் காப்பாற்றுவேன்" என்று சொன்ன வால்டேரினுடைய வார்த்தைகளுக்கு இப்போது அனுபவ பூர்வமான உணர்வை இந்த அவையிலே உருவாக்கிக் கொண்டிருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள்.

நான் இந்த சமத்துவபுரத்தைச் சொல்லுகின்றபோது, நேரத்தின் அருமை கருதி என்னுடைய பேச்சை நான் சுருக்கிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட சாதனை படைத்திருக்கிற இந்த முதல்வரை விட்டுவிட்டு யார் ஆட்சிக்கு வருவார்கள்? வரமுடியும்? 20-1-2001 தினமணி பத்திரிகையிலே வந்த ஒரு தலையங்கத்தில் அழகாக ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது "ஒரு வழக்கில் ஒருவரைக் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பு அளித்துவிட்டால் நிரபராதியாகக்கூட இருக்கலாம் என்ற நிலை அன்றைய பொழுதிலேயே மறைந்துவிடுகிறது'' என்று சொல்லியிருக்கிறார்கள்.

நீதியைப் பற்றிச் சொல்லுவார்கள்.

"Justice knows neither father nor mother, but knows truth alone."

என்பார்கள். நீதி அப்பா என்றும் பார்க்காது; அம்மா என்றும் பார்க்காது; பெரியம்மா என்றும் பார்க்காது; சின்னம்மா என்றும் பார்க்காது என்பதைப் போல இப்போது நீதிமன்றத் தீர்ப்புகள் இந்த நாட்டிலே வெளிவந்து கொண்டிருக்கின்றன. மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி.........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. அமரமூர்த்தி.

**திரு. டி. அமரமூர்த்தி :** மாண்புமிகு.........

**திரு. குத்தாலம் பி. கல்யாணம் :** மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி தோதலிலே நிற்க முடியாது....



2001 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அமரமூர்த்தி, உங்களைப் பேசுங்கள் என்று கூப்பிட்டு ஒரு நிமிஷம் ஆகிவிட்டது. அதிலேயே ஒரு நிமிஷம் போய்விட்டது, சீக்கிரம் பேசுங்கள்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்புப் பெற்றமைக்கு முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையிலே புதிய மாவட்டங்கள் அறிவித்திருக்கிறீர்கள். அதற்காக எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். புதிய மாவட்டம் அறிவித்து ஒரு மாதம் முடியப் போகிறது. எந்த அலுவலும் நடக்கவில்லை. ஒட்டுமொத்தப் பணியும் ஸ்தம்பித்து விட்டது. எந்த அலுவலகத்திற்குப் போனாலும் இதர, சக அதிகாரிகள் வரவில்லை; அந்த அதிகாரிகள் வந்தால்தான் பணி தொடங்க முடியும் என்று திட்டவட்டமாக மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்ற அதிகாரிகளும் சொல்லிவிடுகிறார்கள். இதனால் அன்றாடம் மக்கள் மிக அவதிக்கு ஆளாகிறார்கள். ஆகவே, ஏனைய மாவட்ட அளவிலான அரசு அதிகாரிகளை உடனடியாக நியமிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக எங்கள் அரியலூர் மாவட்டம் அறிவித்து 24 நாட்கள் வரை மாவட்டக் கண்காணிப்பாளரே அறிவிக்கப்படவில்லை. 24-ம் தேதி தலைமைச் செயலாளரைச் சந்தித்து, 26-ம் தேதி மாவட்ட ஆட்சித் தலைவர் குடியரசு தினத்தன்று கொடியேற்ற வேண்டும், எங்களது மாவட்டத்திலே இருப்பதோ ஒரே ஒரு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்தான். அவர் பெரம்பலூருக்குச் செல்வாரா அல்லது அரியலூரிலே கொடியேற்றுவாரா என்று கேட்ட பிறகு, அவசர அவசரமாக 25ஆம் தேதி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் நியமிக்கப்படுகிறார்கள். இதேபோல, ஒவ்வொரு துறையிலும் அன்றாடம் பார்க்க வேண்டிய பணிகள் தேங்கி, மக்கள் மிகவும் அல்லலுறுகிறார்கள். ஆகவே, புதிதாக உருவாக்கப்பட்ட அரியலூர் மாவட்டத்திற்கு மாவட்ட அரசு அதிகாரிகளும், போதிய நிதி ஆதாரமும் உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

அடுத்து, தொழில் துறையைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், இந்தியாவில் தமிழ்நாடு மூன்றாவது இடத்திலே இருப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள். ஜெயங்கொண்டம் அனல் மின் நிலையம் பற்றிய அறிவிப்பு வருடா வருடம் கவர்னர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் இடம் பெறுகிறது. அதுபற்றி நாங்கள் நிதிநிலை அறிக்கையிலும், கவர்னர்

உரையிலும் அறிவிப்பாகத்தான் பார்க்கிறோம். ஆனால் பொதுமக்கள் பேப்பரிலே பார்க்கிறார்கள் ஜெயங்கொண்டம் அனல் மின் நிலையம் பற்றி. அது என்னவாயிற்று? சமீபத்தில்கூட நில உரிமையாளர்களை அழைத்து முதல்வர் அவர்களும், மற்ற அதிகாரிகளும் பேசினார்கள். எப்போதுதான் அந்த ஜெயங்கொண்டம் அனல் மின் நிலையம் தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அமரமூர்த்தி அவர்கள், அந்த விவசாயிகளோடு எல்லாம் பேசி, நிலத்தை அவர்கள் வாங்கிக் கொடுப்பதற்கு முன்வருவார்களேயானால், உடனடியாக அந்தத் திட்டத்தைத் தொடங்கலாம். திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டது. நிதி ஒதுக்கீடும் செய்தாகி விட்டது. P.P.A-வையும் இப்போது நாங்கள் போடுவதற்குத் தயாராக இருக்கின்றோம். நிலம் கிடைக்கவில்லை. நில உரிமையாளர்கள் ஏக்கருக்கு 5 இலட்சம் கேட்கிறார்கள். இதுதான் பிரச்சினை. திரு. அமரமூர்த்தி நினைத்தால் அரசு விலைக்கு வாங்கித் தரலாம்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த நிலத்தைக் கொடுப்பவர்களுக்குப் போதுமான நிதியை வாங்கித்தர அரசு முன்வர வேண்டும். ஏதோ, அடிமாட்டு விலைக்கு, 25 ஆயிரத்திற்குக் கொடு, 10 ஆயிரத்திற்குக் கொடு என்று அரசு சொன்னால் எப்படி? அந்த விவசாயி 4 ஏக்கர் வைத்திருக்கிறான்; 5 ஏக்கர் வைத்திருக்கிறான் அல்லது 2 ஏக்கர் வைத்திருக்கிறான்; 1 ஏக்கர் வைத்திருக்கிறான்......

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அந்தத் திட்டம் வரவில்லை என்றால், அங்கே 1 ஏக்கர் எவ்வளவு விலைக்கு விற்கப்படும் என்ற உண்மையை திரு. அமரமூர்த்தி சொல்ல வேண்டும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த விவசாயிகள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், இதைத் தனியாருக்குத்தானே கொடுக்கிறார்கள், அவர்களிடமிருந்து ஏன் அரசு எங்களுக்கு அதிகமாக பணம் வாங்கிக் கொடுக்கக்கூடாது என்ற கோரிக்கையை வைத்தார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு நியாயமான கேள்வியை





கேட்கிறார்கள். அந்தத் திட்டத்தை கொடுப்பது தனியார் துறைக்குத்தான், ஆனால், அவர்கள் செலவு செய்கின்ற அத்தனையையும் சேர்த்துத்தான் ஒரு யூனிட் மின்சாரம் எவ்வளவு விலை என்பதை நிர்ணயிக்கிறோம். 5 இலட்சம் ஒரு ஏக்கர் நிலம் என்று விலையை நிர்ணயித்து விட்டால் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், ஒரு யூனிட் மின்சாரம் 5 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டுமென்று வற்புறுத்துவார்கள். 5 ரூபாய் கொடுத்து நாம் மின்சாரம் வாங்கினால், அந்த மின்சாரத்தை யாருக்கும் கொடுக்க முடியாது; யாரும் வாங்கத் தயாராக இருக்க மாட்டார்கள். எனவேதான், இந்தத் திட்டம் தனியார் திட்டமாக இருந்தாலும், நிலத்திற்கு 23,500 ரூபாய் என்று அரசாங்கம் விலை நிர்ணயம் செய்திருக்கிறது. நான் உறுதியாகச் சொல்கிறேன், அந்தத் திட்டம் வரவில்லை என்றால், அந்தப் பகுதியிலே பல கிராமங்களிலே ஒரு ஏக்கர் 10 ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்குவதற்குக்கூட ஆட்களே கிடையாது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் நிலக்கரிச் சுரங்கப் பிரச்சினையிலே அங்கே ஒரு சங்கம் வைத்திருக்கிறார்கள், அவர்களை ஏன் தமிழக அரசே நேரடியாக அழைத்துப் பேசி ஒரு சுமுகமான முடிவை ஏற்படுத்தக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால், ஏற்கெனவே பேசியதில் அவர்களுக்கு உடன்பாடு இல்லை. இதில், நடுவில் சில இடைத்தரகர்கள் புகுந்து, அவர்கள் வேறு விளையாடப் பார்க்கிறார்கள். ஆகவே, அரசு நேரடியாக.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்கள் சொல்வதைப்போல, இடைத்தரகர்களை விட்டுவிட்டு, நேரடியாக சங்கத்தை அழைத்து நானே பேசினேன், என்னுடைய அறையில் அரைமணி நேரம் அவர்களிடத்திலே பேசினேன். இப்போது சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 1 இலட்சம் ரூபாயாவது வாங்கித் தாருங்கள் என்று கேட்கிறார்கள். அந்தச் சங்கத்திலே இருக்கின்ற ஒரு பகுதியினர் 50 ஆயிரம் ரூபாயாவது வாங்கித் தாருங்கள் என்றும், இரண்டு விதமான கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். அரசு இருவரையும் மறுபடியும் கூப்பிட்டுப் பேசி, அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருமானூரிலே நவீன அரிசி ஆலை ஒன்று தொடங்கப்படும் என்று சொன்னார்கள். அதுவும் இதுவரையில் தொடங்கப்படவில்லை. இப்படி ஒரு தொகுதியிலே இரண்டு திட்டம் சொன்னீர்கள், இரண்டும் வரவில்லை. அப்புறம் என்ன தொழில் துறையிலே புரட்சி.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருக்கிற இடத்திலே போய்ப் பார்க்க வேண்டும். இல்லாத இடத்தில் போய்த் தேடிவிட்டு காணோம் என்று எங்களிடம் கேட்டால் எப்படி? திருமானூரிலே அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டபோது, அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடமாக அது இருந்திருக்கிறது. அதிலே 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் எங்களுக்கு வேலை தருவது என்றால்தான் அந்த நிலத்தை உங்களுக்குக் காலி செய்து தர முடியும் என்று சொன்ன காரணத்தால் அந்தத் திட்டம் அப்படியே இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, திருமானூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் திரு. அமரமூர்த்தி அந்த விவசாயிகளிடம் பேசி இடத்தைப் பெற்றுத் தருவார்களேயானால் உடனடியாக அறிவிக்கப்படும்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை ஏற்கெனவே என்னிடம் சொல்லியிருந்தால் நானே விவசாயிகளைக் கூப்பிட்டுப் பேசி உடனடியாக அந்த ஆண்டே இடத்தை வாங்கிக் கொடுத்திருப்பேன். இவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், மாற்றி வேறு இடத்திற்குக் கொண்டு போகப் போகிறார்கள், அங்கே போகப் போகிறார்கள், அந்த ஆலை வராது,, தனியார் முதலீடு வேண்டும் என்று பல்வேறு கதைகள் அரசு தரப்பிலிருந்து வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, உடனடியாக அந்த நவீன அரிசி ஆலையைத் தொடங்குவதற்கு, இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1-2-2001) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்:

34. 1998-99ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

35. 1999-2000ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை. வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

36. 1999-2000ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் முப்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

37. 1999-2000ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

38. 1999-2000ஆம் ஆண்டிற்கான சிவகங்கை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

39. 1999-2000ஆம் ஆண்டிற்கான தூத்துக்குடி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

40. 1999-2000ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

[2001 ஜனவரி 31

41. 1999-2000ஆம் ஆண்டிற்கான திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

42. 1999-2000ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

43. 1999-2000ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி-அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பத்தாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

56. 1999-2000ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

57. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து இரண்டாவது அறிக்கை. (2000-2001)

58. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2000-2001).

59. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல். (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

60. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல். (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

184813